
ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

ஸர்வம்விஷ்ணுமயம்ஜகத்.




நன்றாக. குருவாழ்க. குருவேதுணை.

# அயோத்திமாநகரமான்மியம்.

இஃது,
கவித்தலம்,

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41.

ஸ்ரீமாந், துரைசாமிமூப்பனாரவர்களால்
வடமொழியிலிருந்து தென்மொழியில்
செய்யப்பட்டு,

சென்னை,
கொம். பெ. செங்கல்வராய செட்டியாரவர்களது
ஸ்ரீநிலய முத்ராக்ஷரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

விஷு ௵ ஆவணிமீ.

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

# தற்சிறப்புப்பாயிரம்.

கவித்தலம் கல்விச்சாலைத் தமிழ்ப் புலவர்

## ம-௱-௱-ஸ்ரீ, மு. வை. ஐயாத்துரை ஐயரவர்கள்

இயற்றிய

நேரிசையாசிரியப்பா.

பொன்மலைக்கணியாய்ப் பொலிவுறுகைலையில்
நன்மணிகொழித்து நலந்திகழ்கங்கையும்
கூன்பிறைக்கோடுங் கொன்றையுமெருக்கும்
தேன்முரல்கரந்தையுஞ் சென்னியிற்சூடும்
சங்கரன்றன்பாற் றங்கிநன்கமரும்
பங்கயமுகசாம் பவிக்குமுன்னருளிய
உருத்திரயாமள நூலிலுளாப்போர்க்
கருந்தியாமயோத்தி காண்டமென்றும்
ஒப்பில்சாகேதத் தோங்குறுமான்மியம்
செப்பியவடமொழி தேர்வரிதாகலால்
சிந்தையிலெவருந் தெளிந்துவியப்பச்
செந்தமிழ்மொழியிற் சிறப்புறச்சென்னி
திருவளர்நாட்டிற் சிறப்புற்றோங்கிப்
பெருவளஞ்சுரக்கும் பெற்றியதாகி
நீர்வளஞ்செறிந்து நிலவளம்பொருந்திப்
பார்மகணுதலிற் பண்புறுதிலகமாய்ப்
பொன்னியின்கரையிற் பொலிவுற்றோங்குபு
நன்னலம்பெருகி நாமகட்கிடனாய்
மாமகளின்புறு மதிதவழ்மாடமும்
தேமலர்ச்சோலையுஞ் செந்நெலுங்கன்னலும்
பூகமுமோங்கிப் பொலிவுறுநன்னகர்
போகமுமொருங்கே பொருந்தும்பொன்னகர்
புவித்தலமெல்லாம் புகழுமாநகர்
கவித்தலமென்னுங் கடிநகரதனில்
பார்த்திபனென பண்டைச்சுதர்மன்
சீர்த்தியிற்சிறந்த செல்வமுத்தையன்
தொல்குலமதனிற் றோன்றியபுண்ணியன்
செல்வமுங்கல்வியுஞ் சேருமார்கலி
ஆதியானரிவா பூகோபாலமதனில்
நீதிசேர்விசிட்டாத் துவிதமேனிலையாய்

மன்னுலகுய்ய வந்தவதரித்திங்
கன்னால்கொண்டொளிர நம்மாழ்வாரென்னும்
ஒப்பறுதேசிக ருவந்துசங்காழி
வைப்புறமன்னிய மணிவரைப்புயத்தோன்
தன்னுயிர்பேணுத் தாயினுஞ்சிறந்து
மன்னுயிர்போற்று மாட்சிமையாளன்
அராவணைதுறந்தன் றயோத்திமன்னிய
இராமனடியிணைக் கிசைந்தவன்பினன்
உயிரெலாந்தன்னுயி ரொப்பவோம்புவோன்
செயிரறுகுணத்திற் சிறந்தசெவ்வியன்
முத்தமிழுணர்ந்த மூதறிவுடையோன்
பத்துத்திசையினும் பரவும்புகழினன்
அந்தணர்க்கென்று மடிமையாமென்னுஞ்
சிந்தையைக்கொண்டே செயுமுபகாரன்
அருமறைச்சாலையு மன்னசத்திரமும்
மருவியதமிழொடு மன்னர்பாடையைக்
கற்குஞ்சாலையுங் கருதிவளர்த்துச்
சற்குணர்க்கின்னுரை சாற்றுநாவினன்
கற்றோர்க்கென்றுங் கார்முகிலன்னோன்
மற்றோர்க்குந்தரு மாட்சியுமுடையோன்
பூதலத்துள்ள புண்ணியநதியெலாம்
ஆதரத்தோடு மாடியபுனிதன்
சீர்வளர்தாமரைச் செய்யமுகத்தினன்
தார்கெழுதிண்டோட் டண்ணளிவிழியோன்
நின்மலனெற்றி நெடுவிழிகாணா
மன்மதனுமென வாய்த்தவடிவினன்
கோலமுகத்துக் கொய்யுளைப்புரவிகள்
காலெனக்கடுகுங் கனகத்தேரினன்
சந்திரன்போலுந் தரளக்குடையினன்
இந்திரன்பூமிக் கென்னுமிசையினன்
மன்னர்குழாத்தொடு மற்றுளசெல்வரும்
துன்னியமுன்றிலன் றூயமனத்தினன்
பவக்கடல்கடக்கும் பற்றறுமனத்தோன்
எவர்க்குமிதஞ்செயு மிராமதாசர்
சொற்கொளும் புகழ்த்துரைசாமி
விற்பனனுய்த்து விரித்துரைத்தனனே.

## சிறப்புப்பாயிரம்.

மகாவித்துவஞ்ஞானசேகரராகிய

## திரிசிரபுரம். கோவிந்தபிள்ளையவர்கள் செய்த

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

பொன்புனையுமணியெனக் கோசலநாடதிற் புனைமதிலயோத்திநகரப்
பொலிமான்மியந்தன்னை யாவருந்தேர்ந்தினிது போதமேவிக்களிப்பத்

தன்புகழ்தனக்குப்புனைந் தனன்கீர்த்திப்பிரதாப மெங்கெங்குமோங்கித்
தழைமுத்தயன்றலங்குஞ் சுதர்மகுலம்வந்து தன்சுதர்மமீதெனத்தேர்ந்

தின்புதருகல்வியிற் றிங்களொண்கருணைத் திலங்கிரவிமெய்யில்வழுவா
தியலரிச்சந்திரனி ராமதாசன்செய்கையிற்பெருகு தண்ணளியின்மெய்

யன்புமிகுதருமனீ கையில்வளைவுறுதருளு மன்னல்பொன்மலைபொருங்கா
லநூல்வியாகரபண்டிதன் கவித்தலம்விளங் கராசானதுரைசாமியே.

---

ஸ்ரீ

சென்னை இராசதானி சருவகலாசாலைத் தமிழ்த் தலைமைப்புலவர்

## கோமளபுரம். இராசகோபாலபிள்ளை யவர்கள்செய்த

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பூவந்த நான்முகத்துப் புத்தேளிர் திருகோட்டுப் பொருப்பின் மேலோன்
நாவந்த முக்கவட்டுச் சூல மழுமானேந்தி தோமில் வேதம்
நாவந்த நற்றவத்தர் நனிகுழுமி நன்குபராய் நாலைதங்கு
தீவந்த செங்கணிருதர்த் தெறுதிதெருமருவெஞ் செல்ல தீர்த்தி.

என்றனர்நான்மறை கங்கையிமிழ்கழற்கான் முடிதோயவிறைஞ்சிநிற்கும்
துன்றுதிறல்வானவைத்துறுமலர்க்கான்றெருகுவிலங்கலிடனிற்றோன்றிர்
நன்றுணர் கேள்விச்செல்வ னயன்புதல் வனத்தனனு நாமும்வந்து [றி
கொன்றணைநீங்கிழைக்குமடற்கொடுந் தொழிலோர்க்கோறுமெனவருளிற்கூ

அரியபெருங் கருணைவள்ள லவதரித்தவவ னிமகட் கணியதாகிப்
பெரியபொலம் பிறங்கலெனப் பெரிதோங்கு நொச்சிபுடைபிறங்கியோர்க்கும்
தெரியவரு மயோத்திமாத்தெய்வநகர்ச் சிறப்பமைமான்மியம்புத்தேளிர்க்
குரியமொழியிற்பெயர்த்திட்டொப்புயர்விலொருதனிச்செந்தமிழின்மாதோ

கேட்குநர்த முளம்புறஞ்செல்லா தன்புகெழுமிவிழிக் கிளர்நீர்வார
வேட்குறு செந்நாப்புலவர் விழைவினொடு வியந்துவகை விஞ்சயாரே
மீட்குநர்தநெஞ்சமெனவிழுச்சுவையதன்னெணடைவீறிக்கேணி [தம்மா
தோட்குறுநன்னீரூற்றிற்பொருள் பயக்குஞ்சொற்றொடர்பாற்றொடைசெய்

தாம்பெறும்பே றேனையருந்தவா துபெறத் தகப்புரிதல் சால்புமிக்கோர்
ஏம்பலஃதென்ன யாவருமெண்ணமையி னுணர்வா னெழுதலொல்லா
தாம்பொறியிற் பொறித்துலகுக் களித்தனனா லவனீயுவந்தன்றேனுனைப்
பூம்புகழையோவாமைப்புகல்வதன்றிக் கைம்மாறென்புரிவலற்றே. ௫

எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

கற்புடைமகளிரொழுக்கினவ்வேந்தன் காக்குநகாப்பினுன்மரபோர்
நிற்புறுநிலையிற்பருவமாறாமேனீள்கமஞ்சூன்முகில்பெயலால்
தற்புடையேனைத் தலங்களிற்றலைமைசான்று பல்வளனெலாந்தாங்கி
அற்புறுதிருமாலடியர்தநெஞ்சி னளவிலின்பத்ததுமண்ணே.

செக்கர்வான்கமலந்தேம்புனற்பண்ணைச்சேலிணையுகண்டெழீஇமுரணிப்
புக்குமேயாங்கட்புரிகுழன்மாதர்போலிமுகம்புனாவிக்குஞ்சீர்த
மொக்குண்மீமிசைக்கார்ப்புனிற்றிளஞ்சுரும்பர்மூசுபுமுருகுலாஞ்செஞ்சாந்
தெக்கர்வார்கொங்கைக்கிளிவரலதுநீத்தியைவிக்குமெழில்செய்மாண்பிற்று

தொழுகுநர்தொக்கபெருநலந்துய்ப்பான்சொற்சுவைமல்குநூமறையோர்[ல்
ஒழுகொளிவெள்ளிதுகிரியல்வள்ளத்தேந்துமக்கடையெழில்காட்டும்
பழுதறுசூல்கொள்பருவலைபதுமப்பணியிதழ்ப்பூமிசைப்பரிந்தூர்ந்
தெழுகதிர்நிலவுவிரியவீன்முத்தமினமலர்ப்பராகமோடியைந்தே. ௮

தேன்றுறுதெண்ணீர்ச்செய்விலைசெந்நெற் செழுங்கதிர்க்கவரிமீதிரட்டல்
வான்றுறுமாடநிரையுள்வவித்து மதுத்துளிபன்மலர்ச்சிவிறி
என்றுறுகதிர்மண்டிலத்துநாரணனுக் கியறிருப்பணிசெயவேய்க்கும்
தோன்றுறுதுயக்கில்பன்மணிக்கொடிகாறுளக்கவின்மிசையசைதோற்றம்

ஆதலர்க்கிடெனல்லறுசுவையுண்டியட்டிடுதுழனியோடுள்ளத்
தாதரத்தினிதுலாரணர்க்குழுதினறியனவயில்வுறுத்தமலை
போதரிற்பிணியர்க்குறுமருந்தளித்தப்பொருந்துணுத்தருமொலிவழிப்போம்
எதிலர்க்கடவி முகமனன்கியம்பி யினிதருத்தோதை மிக்கியையும். ௧௦

விரிதலைத்தருமங்கையர்குறங்கேய்ப்பவேட்கினீர்சிந்த்தலைசிறுவிப்
புரிதலைத்தவங்காதலிக்கிலீரவமேபோரவேமாப்பதென்னென்று
சரிதலைச்கம்புதுழனிசெய்குறச்செய்த்துள்ளிநெட்டுடல்வராஅறு
பரிதலைத்தகரப்பாயுகீர்மைத்தாற்பலபடப்பகர்வதென்வளனே. ௧௧

புலித்தலந்தன்னி லிலையபொழ்பார்ந்து போகபூமியிற் பொலிந்தவாத்தி
அலித்தலர்தலைமே வாமலைம்பொறியை யடக்குநரமரர் வந்தடர்ந்துற்
பலித்தலர்தயரும் படரொழிதருவான் பலிந்துபன்முறை புகழ்பதிசேர்க்
கலித்தலமென்னக்கழறெழுபிறவிக் கருப்பிணிபாற்றுதொல்பதியே. ௧௨

இன்னமாணகருக்கிறைபவனிருபர்க்கிறையவனியலிருக்காதி
பன்னுவேதியர்செந்தமிழ்த்துறைபோயபனகருபருணிதர்தம்மோ
டுன்னுபேரொண்ணூலைப்பிலபயிலாவொருங்குதேர்விநோதனேனோரின்
முன்னரோதனித்துதன்பொருளினியுமொய்ம்பின்வானவர்குருவொப்பாச்

பூண்டலைகையிற்பூன் புனைமணியன்றுற் புகழெனப் போற்றுறப்பூட்டி
ஆண்டலைகையமரார்சருஞ்சமழுக்கி யாடல்வெஞ்சிலை யகேவினையேய் [ம்
நான்டலைதுளக்குமணிவரைத்தோளான்கடரயிலேறித்தொன்மலைபோ
காண்டலைகமுருகன் வென்குட்டிளமைகலி னவீற்றிருக்கையனம்மா. ௧௪

இலம்படுபுலவ ரேற்றகைர்யாற்று நியல்பினென்னும்புதரு உகீண்ட
பொலம்படுகிரிமிந்பொலிதிறத்தினிதோட்புமானிருபுடைவளைபொன்னங்
கலம்படுகொங்கைக்கருங்குழற்செவ்வாய்க் காரிகையாருளங்வெற்றும்
வலம்படுமதநூம்வட்குறுமடிவன் வளர்குலைசநதிகீர்மதிஞன். ௧௫

பொய்ம்மையாம்புன்மைபொதிபுறச்சமயப்பொருமுரட்கரிக்குழப்பொரும
மெய்ம்மைசால்பூநாமேவிவந்தெழுந்த விறல்கெழுமடங்கலேறுமக்குச்
செம்மைவான்றுணையாமெதிபதிவருத்தசீர்விசிட்டாத்துவிதப்பேர் [பான்
மும்மைசேர்நெறிசேர்முதக்குறைவுடைப்பேர் முதிருருண்முழுமணிமிகர்ப்

பொழுதலில்கிளவிமிறலமென்றுவெடுத்துரையிறையியனென்று
முழுதுணரயனோடான்முனிகணங்கள் முப்பொழுதும்பராய்முடிமேல்
எழுதருகரத்தரிறைஞ்சிராகவனரியற்பெயரிசைக்குபுதுணைக்கண்
பொழிதருகீரான்புளகரும்புடலான் பொதுவறுபத்திமைபுரிவான். ௧௭


அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அறத்திறுக்குமந்தனைக்கு மாறுபெறத்தின்பற்றுக் கோடாயவன்னைய்
மாத்திறுக்கு மகளாக்கும்மன்னைமைபுரிபகைக்கும்மயராவார்மைத்
திறத்திறைகுதிக்களாடுஞாயிறனுன்றிறனிதிதெருள்கூடின்
புறத்தெவனோகுப்பதுபுனிதமநவேயென்னப்போற்றணிந்தே. ௧௮

செந்தமிழ்க்கலிக்கிலக்கேன்றலகர்கனி செப்பவருசெம்மலாங்கோ
விந்தவிதானமுடைப்புலவர்பிரான்வியன்றமிழைவிரிப்பகற்றோன்
முந்துறுமாங்கிலேயமொழிமுற்றுமுணாமூதறிஞன்முனிவுகாமம்
சிந்தையிலாத்தூயனொருதிறன்கோடாச்செப்பமிலைசிறந்துளாருல். ௧௯

சித்தையமின்றியிறைககடிமையெனத்தெளிவருமெய்ந்நிலைசேர்ந்தோ
வித்தையமிரக்குநர்க்குவெறுக்கைபெற வெறுக்கைதவலீகமேலோன் [ன்
ஒத்தையமதமலைதேருறுபடைகொள் சுதன்மருலவுரவோனெல்கா
முத்தையமன்பரபின்முனைத்தலைகாமுழுமதியமாக்குகீரான் ௨௦

ஆன்றபெருநற்குணத்தின்வைப்பாயோனரிறபுவாலறிஞர்தேடிச்
சான்றபெருந்துணைக்கோடறவிறநட்பினெரினதுசமழ்க்குந்தன்மை [த்
என்றபெருமுனைவர்தடித்திடையாரின்னோர்க்கிடரொன்றிலையிறைல்லை
தோன்றவருதுணையைபிறதொல்சிறப்பாந்துனாசாமித்தோன்றன்பாதோ




நன்றாக.    குருவாழ்க.    குருவேதுணை.

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

# அயோத்திமாநகரமான்மியம்.

## நான்முகம்.

நிலைமண்டிலவாசிரியப்பா.

ஐயனிராமனடியிணை தாங்கும்
அஞ்சனைமஞ்சனனிலன் செல்வன்
அடையலரயியவரனென வடர்வோன்
காலனுமஞ்சக்காயும் வலியோன்
கதிரவன்முன் செலீஇக்கலைகள் பயின்றோன்
அவனைக் கனியென் றஞ்சாது பாய்ந்தோன்
நம்புமடியார் நலியாவண்ணம்
நன்கருள்புரியும் வானரநாயகன்
கடலைக்காலெனக் கடந்த காலோன்
மருந்துமலை பந்தென வாங்கியொரு வள்ளல்
மலரடி தொழுது வாழ்கமனனே.

நூல்.

## நாட்டுச்சிறப்பு.

திருமாலுந்திபூத்த மலர்பூத்தபூ, செய்தவத்தாலரிதிற்பெற்ற கோசலமென்னுந் திருநாமமுடைய திருநாட்டுக்கலங்காரமாகியும், உயர்ந்தோர்க்குதவியவுதவியைபொத்துத்தழைத்தும், அவரதுமனம்போலத்தெளிந்தும், சர்வலோகசரண்ணியனான ஸ்ரீ சீதாநாயகனது கருணைபோலவொழுகியும், அவன் திவசந்தோறுமாடப்பெற்றமையால் ஜகத்காரணனான ஸ்ரீமந்நாராயணனது பாதஸ்பரிசத்தான் மன்னுயிர்களைக் கொடிய பாவங்களினின்று நீக்கி, என்று மீளாதபரமபதத்திலுய்க்குங் கங்கையென்னுங் கடவுட்டிருநதி முதலாய புண்ணியதீர்த்தங்களை யிழித்தேற்ற முடையதாகியும், இவ்வுலகின்

கட்டோன்று மன்னுயிர்க்கெல்லாந் தாய்முலை யென்னவும் பெருகாநிற்குஞ் சரயுவென்ற புண்ணியநதி, கால்கடோறும், வயல்கடோறும், மலரையுடைய பொய்கைகடோறும், கனியையுடைய சோலைகடோறு மூலாவாநிற்கும் பொன்னாடொத்த நன்னாட்டில்.—

மரைமலர்களினது வெள்ளிபோன்ற முளைக ளிறவும், பொன்னுமணிகளுஞ் சிதறவும், சலஞ்சலங்கள் புலம்பவும், படைச்சால்களின் மீன்க டுள்ளவும், சேற்றினுள் வராலொளிப்பவும், மள்ளர் உழுகின்ற பகட்டை யுரப்பி நடத்துவார்.

படையுழுவதினா லெழுந்த பொற்சன்னங்களும், இடறுகின்ற பரம்புப் பலகையாற் காந்து மிரத்தினங்களும், நெற்களுமாகிய இவைகளின் மிடைந்த பசுமையான கதிர்கள் கண்ணைகன் றொளிராநிற்கும்.

ஞாலத்திற் சஞ்சரிக்கு மேகங்களெனக் கறுத்த மேதிகள் ஊரினின்ற கன்றையுன்ன, ஒழுகுகின்ற முலைப்பாலே செந்நெல்லையும், கன்னலையும், கமுகையும், தெங்கையும் வளர்ப்பதாகும்.

வயலிலுள்ளவைகளையும், பொழிலிலுள்ளவைகளையும், புறவிலுள்ளவைகளையும், பதிவைக்கின்ற கொடியிலுள்ளவைகளையும், குழியிலுள்ளவைகளையும், மலரிலுள்ள தேனையீட்டுந் தேன்போலக் கொள்ளுமள்ளர், அரிந்த நெல்லரியின் சும்மைகளை யரிதங்கு மரிகளை யொத்த போர்களாகச் செய்தபின் னெற்குவைகளாக்கி வறியவர்க் குதவி விருந்து முண்ண வில்லினுய்ப்பான் நிலவெரி நெளியப் பண்டியிற் செலுத்துவார்கள்.

காம்புகால்பொருதலால் தேனிறாலுடைந்து, மலையினுச்சியினின் றிழிதலாலும், பெருக்கத்தாலும், தூய்மையாலும், இனிமையாலும், அடிமையாண்டானிவ்விருவகைச் சொரூபத்தையுமறிந்த வடியார்க் கெளியனாகி, காண்டற் கினியனாகி, பிரமருத்திரேந்திராதி தேவர் தன்னுள்ளே தோன்றித் தனக்காட்செய்து, தன்னுள்ளே கரக்கு முண்மையை யறியாதார்க் கத்தேவர்களது சிரத்தில், யோகிகள் ஞான நோக்குக்கெட்டாத தனது திருவடியை வைத்தறிவிப்பது போன்று, மண்ணையும்விண்ணையு முள்ளடியிலொடுக்கினவனாகித் திருக்கண் வளரும் ஸ்ரீ ரங்கநாதனை யடிமுதன் முடிகாறுமணைந்தாற் போலவும், பூலோக வைகுண்டமெனப் புலவர் போற்று மரங்கமாநகருக்குத் தரிப்பித்த வாடைபோலவுஞ் சூழ்ந் தவாசிக்கங்கை யெனப் புலவர்போற்ற வொழுகுங்காவிரிமாநதியை யொத்துத் தமக்குணவை வளர்ப்பான் குறிஞ்சி நிலமாக்களாகிய குறவராற் பருவநோக்கித் தினைப்புனத்திற் பாய்ச்சப்பட்டொழுகுந் தேனாறு, விதைத்த விதைகளையும், செந்நெனாறுகளையும், விளைந்த பயிர்களையு மழிக்கப் பொறாமற் புனங்களின் மடைகளையடைக்குந் தொழிலை மேற்கொண் டென்னுங்கள்ளை முனியுமள்ளர்களை, அப்புனத்திற் பூத்திராநின்ற பங்கயம், நீலம், குவளை, ஆம்பல், வள்ளை, குமுதம், சினைவரால், கெண்டை முதலியவைகடேம்ப, வேறுவமையில்லாத

வயவங்களைக்கொண் டக்கியிற்றாக்குந் தெய்வமொன் றுண்டென்னுந் தன்மையரா யுழுதுமுழத்தியரது வெம்முலை யொருபான் முனியாநிற்கும்.

அகிலின்புகையும், ஆலையின்றூமமும், மறைசொல்லும் வேள்வியி னெழுந் தூமமும் அளாவிக் கருமுகிலைப்போல மாகத்திலெழ, அதைக்க ண்டமஞ்ஞை வனத்திலாட, வண்டு பாடும் பொழிலிற் றனியை விரும்பிக் காயத்தைநோக்கிய சாதகம் அத்துனியைப் பெருமறுணை, பழனத்திலுள்ள பங்கயச்செக்கையினின்று பிழிந்த காளை களையக்களையுங் கடைசியரது வான்போன்ற கண்ணிழலைக் கயலெனக் கொத்தி நாளும்.

உச்சியிற் சூட்டையுடைய வாரணம், துணைத்தாளாற் சீக்கு மேட்டி லிமைக்கு மணிகளை மின்மினியெனக் குரீஇக்குழாங் கூட்டிற்சேர்க்கும்.

வருக்கையின் வேரிற் கனிந்திருக்கின்ற கனியினது மாதர் வாய்போ ன்று இத்திக்குஞ் சுளையின்தேனைக் கவருவான்சீங்காரவொலியொடுமொய் த்திருக்குந் தேனை, தோய்ந்த வெண்டயிரை மத்தாற்றூழ்வாயும், சென்று வணங்குமிடை யிறுமிறுமென வளைபுலம்பவும், அங்கை வருந்துவோராகிய வாயமங்கையருடைய வண்பார், கோல்கொண்டோச்சலும், மரத்தின்கிளை யிற் சிறையை விரித்துத் துணையைப் பாடலைத்திருந்த களியன்னம் வெ ருவி யெழுந்துபோய்த் தோலடியா லன்றநட்ட செந்நெலிறுத்து கெடுத்து வைக்கும்; அவ்வன்னத்தைக் கன்றையுடைய பிடியினத்தைநீக்கிக் களிற் றினத்தைப் பிடிக்கு மன்னர் களியாலெடுத்த குழூக்குரலிரிக்கும்.

சாயலைக்கண் டினமென்று கருதித் தொடருமஞ்ஞை, அரம்பை போன்ற தங்கள் குறங்கிற்றூறி வளராநிற்கு மல்குலை யாங்கின்ற யரவின் பணமெனக் கருதி கன்னுறுவதாகப் பயமுற்ற வுழத்திய ருழுவளைத் தழுவிக் கொள்ள, அவ்வுழவர் களிப்பாலெடுத்த யினியவமலையே புன்றலைப் புனங் களைக் காப்பதாகும்.

வாளைதாவவும், கயறுள்ளவும், கமருக்குற் சங்கூரவும், யரால் குதி கொள்ளவும் பள்ளையிற் கமலத்தோடு நெல்லரியு மிருந்தொழுவர், கீளாச் சொரியுமதருகள் முழவுபோலவொலிக்க, வண்டுபாட, தோகை நின்றுடக் கண்டவ்வாட்டத்துக்கிசைவதேதென, செந்நினைக்கு முத்தைச் சரிகோடு க்குதலைச்சியருடைய செவ்வழியையும், அன்னமு மயிலுங் குயிலு மின மெனத்தொடரத்தக்கநடையையுஞ் சாயலையு மொழியையுமுடைய கடை சியரது குரவையையுமொப்புக்காணுநிற்பர்.

வலிய மருப்பினையுடைய செம்மறிக்கடாக்கள் ஒன்றையொன்று தா க்கலா லசனிபோன்றெழு மொலிக்குவெருவி, மால்வரைகளிற் றூங்கியமே கசாலம் அன்னுர்த்து தூரியம்போலொலிக்க, இன்னரம்போலச் சுரும்பு பாட, விளக்கினம்போலத்தோன்றிதோன்ற, காண்போர்விழிபோலக்கரு விளைதயங்க, அயிலையயிலும் விழியையும், துப்பைத் துப்பென வுரைக்கு

மிதழையும், தேர்போன்ற வல்குலேயுங்கொண்டு, கல்வியு நல்லொழுக்கமு மில்லாதாருடைய தனத்துக்குத் தனத்தை விற்குந் தோகையர்போலத் தோகையாட, அதைக்கண்டு கோசலமென்னு நாடாகிய மாது கையை நீட்டிப் பொன்னை யீவதுபோலக் கடுக்கைமலரைச் கொண்டு செங்காந்தள் விரியக் கைவிரித்து வாங்குவதுபோல முல்லைகம் விரியும்.

குளிர்ந்த சந்திரன்போன்றமுகத்தையும், மூளரிபோன்றாகையையும், தேனன்ன மொழியையுமுடைய அரிவைய ரெவருஞ் செல்வமுங் கல்வியுங் கொண்டிருத்தலால், வருந்திவர்தமர்க்கீதலும் விருந்தினரா யாராதித்தலுமன்றிக் கருதுவதெவனோ?

அரசனெனத் தகுதியுடைய பல குடிகளெருங்கி, நான்குவருணத்தாருமுறையினின்றும் வழுவாமற் றத்தமக்குரிய அறங்களை யொல்லும் வகையா லெல்லா மோம்புதலா லிழியுந்தகைமை யொன்றுமின்றி யேற்றமேயுடையதாய்க் கோசலநாடு விளங்காநிற்கும்.

ஸ்ரீராமதாசர்கள்திருவடிகளேசரணம்.

---

## நகரச்சிறப்பு.

சரீரத்தில் வதனமு மவ்வானனத்தி னயனமும்போல வுலகின்கட் கோசலநாட்டிலயோத்திமாநகரம் புண்ணியலோகங்களிற் றலைமைசான்று தேவருமிறங்கித் தங்குவதற் கருத்திபுரியத் தகுதியுடையதாய்ப் பொலியாநிற்கும்.

உலகத்தைச் சூழ்ந்த வண்டபித்திபோன் றம்மாநகரைச் சூழாநிற்கு மதில், விண்புகலாற் றேவரையுமொத்து, வலிமையாகிய பொறிகளையடக்குஞ்செயலான் முனிவரையும் பொருவி, காக்குந்தொழிலாற் காளியையும் போன்று விளங்காநிற்கும். சதுரமாய் விதிப்படி யியற்றி மிகவு முயர்ந்திருக்கின்ற வம்மதில் தனக்கு மேருமுதலாய வரைகளி லொப்பொன்று மின்மையா லுவமை வேறில்லையென நிற்கும்.

அப்பொன் மதிலினிலை பனுவலினளவாய்த் தொடர்ந்து, நட்பமாகிய வுணர்வேபோன்ற வகையினையுடைய தென்பதன்றி, எவ்வுலகத்திலு முயர்ந்திருக்கின்ற பொருள்கட்கெல்லா முயர்ந்ததென்னலுமாம்.

அண்டபித்தியின்புறத்து வலையாநிற்கும் பெரும்புறக்கடலைப்போன்று மதிலைச்சூழ்ந்த வகழி, யாக்கையாலுண்டாகுஞ் சுகத்தைத் தாமுமுண்டு அதற்கு விலையுங்கொள்ளுமகளிரதுள்ளம்போலாழ்ந்தும், உருத்திராமிசனும், சீதாசோகவிநாசனனும், சணப்பொழுதிற்கடலைக்காலாற்கடந்தவனும், பக்தவத்ஸலனும், என்னை யடிமைகொண்டவனுமான அஞ்சனைச்சிங்கமே திரிலோகத்தையுந்திருவடியாலளந்த ஆதிமூர்த்தியுமிரவிபோன்றகதிர்விடு மிருகுழையசையும்வதனத்தைக் காணக்கூடாத தனது விசுவரூபத்தைக் கொண்டுங் கடவாதெனவகன்று மிருக்கின்றதென்னின், எழுகின்றமேக

ங்க ளவ்வகழியை யாழியென நீரைமொண்டு கொண்டெழுந்து விண்ணிலைய
ளக்கும் குன்றமென வம்மதிலின் மிசைப் பெய்யாநிற்கு மென்றல்லியப்பே.

நீலமுதலாய பலவிரத்தினங்களுடன் வைரத்திரளொளி பரவலாற் பாற்
கடன் முதலாகிய மற்ற வேலைகளு மொன்றாய்க் கலந்தனவோ வெனக்கா
ட்டு மவ்வகழி.

சீராம்மகளிரது வதனத்தையும், நயனத்தையும், வாயையும் பொருவா
து வெட்கித்திளாயின் மறையுந் தாமரை, பானல், குமுத முதலாய பூச்சால
முறங்கினு முறங்காமல், அன்னம், நாரை, வண்டானம், அகன்றில், ஆழிப்
புள், சின்னரம், உளில், குரண்டம், சென்னம், புதா, கோழி, சிரல், கிலு
ககம், குருகலம், சீர்க்காக்கை முதலிய பட்சி சாலஞ் சிலம்ப வின்னதாகிய
ளெவியென்றறிய வருமையான கிளர்ச்சித்தாதலால், யாவையும் வழங்குந்
தன்மைபற்றி யவ்வளகையைத் தோற்கச் செய்த வவ்வள நகரின் கூலத்
தை யவ்வகழி கடுக்கும்.

தனமிகுதி யாற் றனதனுலகத்தையும், சர்வ போகத்தையு மெளிதிலு
காச் செய்விக்குந் தன்மையாற் சுவர்க்க லோகத்தையும், ஸ்ரீ ராமதாசர்
ளைறயைப் பெற்றிருப்பதால் சந்தான லோகத்தையும் போன்று பொலியா
நிற்கும் சுடர்தைமாநகரிற் பருப்பதமெல்லாஞ் சூழப்பெற்ற மேருவென்னவு
மலர்ந்த மலர்கள் சூழவலர்ந்த கோகனக மென்னவும், உடுக்க ணடுவிற்சந்
திர னென்னவு மநேக தேவாலயங்களின் மத்தியில் விளங்காநிற்குங்ளோ!
யில் போன்ற கோயிலி லாணிப்பொன்னுலான விமானத்துள் ஸ்ரீ பாதாழ்
வான் வெண்குடைகவிக்க, மற்றிருவருங் கவரிவீச, வாமபாகத்தி லெம்பி
ராட்டியார் வீற்றிருக்க, என்னையாளுடை யதுமான் மருத்து மலையேந்திய
செங்கையிற் புத்தகங்கொண்டு பொலிய, சேவிப்பவர் கண்ணையு மனத்தை
யும்வாங்கக் கூடாத சௌந்தரிய மூர்த்தியா யாராதிக்கப்படுகிறவனுநித்தாச
ரிருதயத்தையே சுக ஸ்தானமாய்க் கொண்ட சிராமபிரானே பரமான்மா
வென்றுணரு மடியார் இருவுள்ளம் போலச் சுற்றிலு முற்றியிருக்கின்றவாணா
யிலு காஞ்சிலிலும் பதிக்கப்பட்டிருக்கிற வைரத்தோடு நீத்திலத்தி னிழல்படு
தலால் விளர்த்தும், மரகதத்துட னீலத்தி னிழல் கறுவலால் அவ்விதமுண
ராதாரது மாசுடை மனமெனக் கறுத்து மவ்வகழிநீர் தோன்றாநிற்கும்.

குளிகையிற் றங்குமேகம், உப்பரிகையின் மேனிலாமுற்றத்தின் மா
தர்களாடிய குங்குமத்தோயத்திற் றோய்ந்து, அகழியிற் றோய்தலா லவாசிக்
கங்கையெனுங் காவிரிமாநதியின் பிரதமப் பிரவாகத்தையொத் தந்நீர்
பொலியாநிற்கும்.

மேகங்கள் பரவுந் தோறு நனைந்து, அகிற்புகை கதுவுந் தோறும் புலர்
ந்தசையாநிற்கும் கொடிகள், ஆகாயகங்கையி னீராடு மரம்பை முதலிய
வர தாடைகளை, கண்ணபிரானைப் போற்றேவர் கவர்ந்து மறையத்திகை
த்துப் பரிவுறு மம்மாதருக்குக் கோலைக்கொண் டயோத்தியான் மடியளிப்ப

தையும், சேதாராயகனே சர்வஜ்ஞன், பரமபுருஷன், தீனபந்து, பக்தவத்ஸலன், பரமான்மா; அவனொருவனைப் பஜித்துச் சமஸ்த தேவதைகளையும் பஜித்த பலனையும், தாரகமாகிய அவனதொரே திருநாமத்தை ஜபித்துச் சமஸ்த தேவதா நாமங்களையு மந்திரங்களையு மனுசந்தித்த பலனையும், ஸ்ரீமத் ராமாயணத்தைப் பாராயணஞ் செய்து வேத முதலியவைகளை யோதிய பலனையும், கோசல நாட்டாரது புண்ணிய முருகினாற் போலொழுகுகின்ற சரயுவில் நீராடி, சாநவியுடன் காவேரிமுதலாய தீர்த்தங்களிலாடிய புண்ணியத்தையும், இந்த வொப்பற்ற திவ்விய தேசத்தைச் சேவித்து மண்ணிலும் விண்ணிலுமுள்ள வெல்லாத் திவ்விய தேசங்களையுஞ் சேவித்த பலனையும், எளிதிற் கொள்ளுவான் அறிவுள்ளவர்களே வாரும் வாருமெனக்கைகளை நீட்டி யழைப்பதையும் போலும்.

மதிவிஞெளி தன்விழியைக் கூசச் செய்யப் பொறுக்காதவனாகி, வானத்தின் றேலுரிந்தாற போலுலுகின்ற கொடிகளினூடு நுழைந்து செல்லுந் தபனன் மகாந்தகாரத்தைப் புறக்கடலுக் கப்புறமு நீக்கவொட்டாமற்றுரத்துஞ் சோதியையுடைய விர்நகரின் மனைகணமுன் றோன்றினால், தன் முன் வின்றும் வாயையுடைய மின்மினியென்னவும் விளங்கோமென்பதை யுன்னி நாணத்தான் மறைந்து செல்கின்றானெனப் புகல்வர்.

பொன்னாற் செய்து மணிகளிழைத் திருப்பதால் வெயிலையும் மின்னலையுங் கொண்டியற்றினாற் போல விளங்குகின்ற மாடங்கள் நாகருலகுந்தம் பக்கத்திலுள்ளவைகளென வோங்கினவாயும், ஈதலைமேற் கொண்டவரது புகழெனச் சோதியையுடையனவாயும், சந்திரனுங் கரிதென வெண்சுதை புனைந்தனவாயும் விளங்கா நிற்கும்.

மின்னென்றும் வெயிற் பிழம்பென்று மோதும்படியான சுவர்ணத்தாலாகிய விந்நகரது சோதி வீசுதலாலல்லவா அப்புலவர் வானம் பொன்னுலகமென லாயிற்று.

பொல்லாங் குழலையிழித்து, தெய்வப் புலமைக்கம்பநாட்டாழ்வா ரினிய பாசுரம்போ லியலிசை பொருந்தி மதுரித்தெழுகின்ற பாடலையும், மகரவீணையையும், தண்ணுமைதழுவ, கையின் வழி நயனஞ் செல்ல, அக்கண்ணின் வழிமனஞ்செல்ல, தனமாகிய மலையைத் தாங்குவதற் கொன்றில்லாவிடி னில்லாதென வநுமானத்தாற் கொள்ளு மிடையை யுடையார் ஆடுமரங்குளிலும், வேல் போன்ற நாட்டஞ்செவியுறாமல், அனியுடை யனகஞ் சோராமல், முருந்துபோன்ற முறுவல் தோன்றாமல், மதனன்விற் போன்ற புருவங்கனெளியாமல், தங்கள் மிடறுட னரம்பை யனைக் தமிர்தமூற, மாதர்மாதர்கள் பாடு மாடங்களிலு மிருளைப் போக்கி விளக்கஞ் செய்வது தீவிளக்குமு மணிவிளக்குமுமல்ல; அம்மகளிர் மேனியேயாம்.

அம்மேனியைப் பார்க்குமாசையோ? சுவர்களிற் தீட்டியிருக்கின்ற சித்திரங்களு மிமையாம லிருக்கின்றன. அச்சித்திரங்களைப் பார்க்குமாசை

சோலை நறக்கத்தினின்று மிழிந்தோமென்று முணர்விலாமற் றங்கள் லோகமென வுலாவுந் தேவர் கண்களிமையாம லிருக்கின்றனர்.

எழுலகுக்கு மேழ்நிலைத் தலஞ்சமைத்ததென வேழ்நிலை யுடனோங்கா நிற்குங் கோபுரத்தினுச்சியிற் றோன்று மணிக்கலசம் பூபிராட்டியாருக்குச் சூட்டிய மௌலியென விளங்கும்.

ஆகாயமுதலாய நான்கு பூதங்களுமஞ்ச வீசும் யுகாந்தக்காற்று, கற்பகக்காவிலுலாவி, இந்திரனந்தனத்து நாண் மலரது கந்தத்தையுந்தி, அந்தர் நடப்பதுபோல மந்தமந்தவருந் தென்றலென வரநிற்கு நிலையையுடைய அக்கோபுரத்துக்கும், மலைகட்கும், வாயுவாலும், இராவணனாலு மிழிவுபடுத்தப் பட்டமையால் மேருவுங் கைலாயமு முவமையாகா. ஆயினும் பஞ்சேந்திரியங்களா லலைக்கப்படாமற் பரம்பொருளை யுணர்ந்தோர துணர்வுபோ லுயர்ந்தும், தூய்மையாயும், அசையாநிலைமையாயு நிற்கின்றன.

கங்கையைச் சடையில் வைத்தவனை யொத்த முனியுண்ட சோதியையுடைய மணிக்கடலையும், பலமீன்களையுடையவானையும் போல, கருமானுலையின் றீயையும் விட நீரையு நெய்யையு முணனாது, ஆடவரதாவினை யுன்றும் வெல்போலுங் கண்ணரும், மலையினெழிலழித்த தோளரும் வெறுத்து நீத்த கலங்க னொளிருந் தெருவும், அங்குசமிமிரச் செய்கின்ற கிரியின்மதம் யாறுயாய், பாய்மாவின் விலாழியாலய்யா றழிந்தொரு விதயாருய்ச் சேறுமாய், தேரகனோடத்துகளுமாய் ஒன்றோடொன்று கணப்பொழுதின் மாறுமாறுகிவோளாகிட யாத மறுகு மநேகம்.

மூன்றாம் பிறையைப் பழித்த நுதலையும், இலவுபோன்ற விதழையும், தரளமொத்தநகையையும், வேய்மானுந்தோளையும், இழைபுரையுமிடையையும், பணத்தைக் கடிக்குமல்குலையுங் கொண்டு, மலைநிகருமுலையம்மவாதமகளிரது கண்ணுகிய வேல், கற்காமலுங் கற்றோரோடிணங்காமலும், தனத்தைக்கொண்டு தவத்தைக்கொள்ளாமல், அளனுந்தொழுந்தனத்தைக்கொண்டு பூதேவிக்குப் பாரமாய்த் திரியும் பூரியர் நெஞ்சிற்றைக்க, அவருயிருமாசையும் போ லம்மகளிர் மருங்குலுந்தனமுந் தேய்தலும் வளர்தலுமாய்ப் பொலியும்.

விளரியெனச்சொற்களை யுடைய மாதர்வாயினுற் பவளக்காடெனவும், படைபோன்ற நெடுங்கண்ணுற் குவளைக்கோட்டகமெனவும், முகக்குழுவான் முளரிக்கானமெனவும் பொலியுமிவ்வயோத்திமாநகரில் வாழுமாக்கள், கல்வியில் வல்லவர் தங்களினும்பிறரின்மையாற் கல்லாதுநிற்பர். கல்வியில் வல்லவரில்லை. அவைக்களத்தில் வல்லவரல்லாதவருமில்லை; எல்லாருமெல்லாப் பெருஞ்செல்வமுமடைந்திருத்தலா லில்லாரென்று முடையாரென்று மில்லை; சிறிதும் வறுமை யென்னும் பெயரேயில்லை யாதலால் வண்மையில்லை; ஆரிருளுக்கும் பொய்ம்மையின்மையால் உண்மையில்லை; எதையும் விரும்பிக் கொள்வாரின்மையிற் கொடுப்பாரில்லை. குற்றமில்லாமையான்

மாதராதுத்தராசங்கத்தின் மறையுங் கூற்றமன்றி, அறையுங் கூற்றம் வேறில்லை. அமிழ்தமென மொழியுடை மகளிரன்பின் வழிநின்றன அறங்கள்; அன்னவர் கற்பின் வழி நின்றன காலமாரி.

அம்மாரியி னோசையை யடக்கு முரசொலி. அவ்வோசையை யடக்கும், செவியினிடத்தி லமுதம் போன்ற கேள்வியைத் தெவிட்டினவராயும், சுரர்களுவி லவியைத் தெவிட்ட வளித்தவராயும், எரியோம்புஞ் செல்வரெனப் பெயர்பெற்று விளங்குகிற சுரர்போற்றும் பூசுரரோதும் வேதகோஷம். அவ்வொலியையடக்கும் இராமாமிர்தசஞ்சீவன பூசுரரும், சிலையினா லிலங்கை செற்ற தேவனே மெய்த்தேவனாவா னெனக் கொண்டு தேவரு மறியாச் செய்கையுடைய திருத்தொண்டரு மற்றவரு மிடைவிடாது நாத்தழும்ப வேத்துவதாகியும், மந்திரங்களுக்கு மேலான அஷ்டாக்ஷர பஞ்சாட்சர மிசிரமாகியும் விளங்கும் இராமநாமமே.

இராமநாமத்தை ஜபித்தலானும், குணமென்னுங் குன்றேறியிருத்தலானும், மாலையின் பாரகமாகிய தூளியையணிதலானும், சிரசின் மௌலியைக் கொளலானும், இம்மாநகரில் வாழு மாந்தர், தாரகமந்திரமாகிய ராமநாமத்தை யுபதேசித்துக் காசிக்ஷேத்திரத்தின் மரிக்கு மூர்வன முதலாய சீவகோடிகளை மீளாது பரமபதத்திற் செலுத்தும் விசுவேசுவரனைப் போல்வார்களெனப் போற்றுவதன்றி, பகுத்தறிவில்லாத மடங்கலெனவுங் கடக்களிறெனவும் பெறுதற்கரியவாகிய வெல்லா நற்செய்கைகளையுங் கணப்பொழுதி லிழிவுபடுத்திக் கல்லாப்புல்லரைத் தன் வசமாக்கி நலிந்து, எரிவாய் நரகத்தினூழி பெயருங் காலத்திலும் பெயராது வசிக்கும்படி விடைகொடுத்தனுப்புமதனனெனக் கூறலிழுக்கே.

பகையஞ்சக் கழலொலிக்கவும், அயிலிமைக்கவும், கதிராயுடைய மணியணி வெயிலைக் காலவும், மான்மதங்கமழவும், முத்தமின்னவும், குஞ்சியின் மதுகரமிசை பாடவும், மைந்தரும் பாங்கருந் தொகுதி தொகுதியாய்ச் செல்லுந் தோரணத்தையுடைய தெருக்கள் திசைகள் சிறியவெனப் பெரியனவே. சேணில் விளங்குந் துணைக்கருவியினும் பெருக்கம் யானைக் கூட்டம். பரவையின் நிரையினு மதிகம் புரவிப்பந்தி. மன்னர் தருந்திறையளக்கு மண்டபமும், ஓதவரிதான வோத்தை யோதுமண்டபமும், அரியவாகிய பலகலைகளைத் தெரியுமண்டபமும், வானுற நிமிர்ந்து சோதியாற்றிசையுறவிளங்கா நிற்கும். அம்மாநகரி லறிவை விளக்கும் பலகலைகளைக்கற்கவும், வீரத்தைவிளக்கும் போர்க்கலைகளைப் பயிலவும், மாதரோ டாடவும், கூடவும், இன்னிசைபாடவும், விறலியர் பாடலைக் கேட்கவும், இரந்தவர தொற்கமாகிய விழுமங்குறைதர வழங்கவுஞ் சிலர்க்குப் பொழுது போம்.

புனலாடவு மலர்சூடவுங் கவிபாடவுங் கரிமாவினூரவும் பரிமாவிலேறவு மரிமாவோ டெதிர்க்கவுங், கரிமாவோடு கரிமாவைப் பொருத்தவுங் கைப்படை முதலியவற்றைப் பயிலவுஞ் சிலர்க்குப் பொழுதுபோம்.

புலானுறு மீனு மணநாறுமாறு மாதராடுங் குளனிலும், புனங்களிலும், கடலன்ன விடங்களிலும், அருவிச்சுனையிலும் மலருடன் பல்லவமே யிருந்திருப்பதினால் வண்டொலியுங்கின்னரத் தொலியு மகரவீணையி னொலியுந் தொனியுடைய கிளையொலியு முழவினொலியு மொலிய வீணை வண்டு பாடாநிற்கும்.

என்றுமென்று மிருளின்றி யொளிரு மயோத்திமா நகரம், பூமிராட்டி திலகம்போலவும், மங்கலம்போலவும், அல்லி பரல்போலுமுறுதது மெனவஞ்சி யம்புயத்தையும், மறுவோடிருத்தன் மறுவெனக் கருதி ஸ்ரீ மந்நாராயணன் மார்பையு நீத்து இலக்குமி தங்குவதற்கினிய தானம் போலவும், கலைமகட்கு வெள்ளைத்தாமரை போலவும் பொலியாநிற்கும்.

முப்பத்திரண்டிலக்கம் யோசனை பரவியிருக்கின்ற பாற்கடலிற் பத்திலக்கம் யோசனை விரிவும், எழிலக்கம் யோசனை உயர்வும், பாலுவெஞ்சவொளிருமாமணிகளா லாகியும், எம்பிரானைச் சேவிக்கவந்து நெருங்குந் தேவர்கடோளில் அந்நெருக்க நீக்குவான் அழிபுண்ட செங்கையிற் கொண்ட பொற்பிரம்பின் முனையடித் தழும்பு கொடுத்து, வணங்கு மத்தேவர் முடித்தழும்பு தனது சிரபாதத்திற் கொள்ளுஞ் சேனையா கோன் காக்கும் வாயிலையுடைய தாகியும் ஒளிராநிற்குங் கோயிலில் சோதிமயமான விமானத்துள் மூன்றிலக்கம் யோசனை நீளமு மொன்றரையிலக்கம் யோசனை யகலமும் பொலிகின்ற ஆயிரஞ்சிரமுடைய அனந்தாழ்வான் மீது பரந்தாமனுகி, பத்தவற்சலனுகி, தனது சங்கற்பத்தாலன்றிக் கருமத்தாற் பிறப்பிறப்பில்லானுகி, அப்பிறப் பிறப்பெனும் விளையாட்டை யினிதுவந்தானுகி, திருவாழி, சங்கு, கதை, சார்ங்கம், சாந்தகமாகிய வைம்படைக டயங்க, பெரிய திருவடிகள் புறத்தினின்றுங் காக்க, இராயன நகரங்க, சனக, சனந்தன, சனத்குமார, சனத்சுசாதனர் சேவிக்க, ஸ்ரீ பூ, நீளையடியருட, உபயவிபூதியிற் றனிக்கோல்செல்ல அறிதுயில்கொடிதமரு மாதிமூர்த்தி எம்பிராட்டியாருடன் பிறந்து, அளப்பருங்கால மீரேழுலகத்தினுஞ் செங்கோல்செல்ல வெழுந்தருளியிருக்கப் பெற்ற இவ்வயோத்திமா நகரமென்னின் அதன் மாண்பு ஒருவரால் முடிவுற வுரைக்குந் தகைமைய தாமே

ஆகத்திற் பாகங்கொண்ட மலைமகள் ஊடவும், அதை மதியாமல், பரந்தாமனுன ஸ்ரீ மந்நாராயணனது பாதோதக மெனப் பரிந்து கங்கை நங்கையைச் சடையிற் றரித்த விடையூருஞ் செல்வனுற் போற்றப் படவும், ஞாலத்திலிருக்கின்ற விர்ககரொக்கும் பொன்னகா அமரர் நாட்டிலுண்டோவெனவும் விளங்கு மிவ்வயோத்திமாநகரி லரசுவீற்றிருந்து, எல்லா வொளிகளையுந் தன்னொளியா லறத்துடைத்துப் பொலியுமிரவி போல விம்மண்ணுலகின் மன்னுகின்ற மற்றை மன்னர்களது கீர்த்தியைத் தங்கள் கீர்த்தியாற்றவிர்த்து, இந்திரனுமும்படி யீரேழுலகத்தினுஞ் செங்கோல் செல்லவும், சந்திரன் வெட்கி விளர்க்கும்படி வெண்குடை கவிக்கவும், தங்கள் பரிகளைப்போற் றங்களுக்கே யமைந்தாயிருப்பதால் பரியெனப் பெயர் கொண்ட

விப்பாரை யாண்ட தேவாமிசமான சக்கரவர்த்திகளது பிறப்பையு மவரது செயலேயும் எத்துவானெடுத்துக் கொண்டேன்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளே சரணம்.

---

## அரசியல்.

சிருஷ்டி, சம்ரட்சணம், சங்காரமென்ற முத்தொழிலே லீலையாய்க்கொண்ட ஸ்ரீ ஹரி, அம்மூன்றினு ளீற்றினிற்குந் தொழிலைப் புரிந்து, சேதன முதலிய யாவையுந் தன்னுளடக்கி, விரிபுனல்நல்கி யோராலிலேயில் சோதிவடிவாகிய பாலனுகி யறிதுயின்மேயினன். பரமான்மாவையடைந்த சிவனது கருமமல்லது மற்ற சிவரது கருமந் தொலேயாது. காரணம் யாதென்றால், வானவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரமென்ற சிருஷ்டி பேதங்களுக் கேதுவில்லே. ஆகலால் அந்நாதனிடத்து லயமான சேதனங்களின் கருமம் பக்குவமடைந்த காலே, சிருஷ்டி செய்யவேண்டுமென நாராயணன் திருவுளம்பற்ற, உந்தித்தாமரையினின்றும் பிரமன் தோன்றிவந்து, நெடும்புனலேயன்றிவேறென்றுங் காணுமல் மீண்டு மவ்வழி புகுந்துழன்றுபோந் தொன்றுந் தெரியாளுகி, நானுரோ? என்னைத் தந்தவ னெவனே? யான்புரியுங் கருமம் யாதோ? எனத் திகைப்புற்றனன். நாரத்தை அயனமாய்க் கொளலாலும், சிவசமூகங் கொளலாலும், நாராயணனென்னுந் திருநாமத்தானது நியமனத்தால் தபதபவென அசரீரி வாக்குப் பிறந்தது. அதைக் கேட்டுக் கமலாசனனுவந் தாயிரந்தெய்வயாண்டருந்தவம்புரிய, பற்பநாபன் பரமாமிச ரூபமாய்த் தோன்றி, அருமறையுணர்த்திப் படைப்புத் தொழிலேக் கற்பித்தனன். அத்தொழிலில் மேவியமலரவன் மானசபுத்திரரான மரீசிமகருஷி பெற்ற காசிபப்பிரஜாபதியினது மனைவிகளி லொருத்தியாகிய அதிதிவயிற்றி லுதித்த விவஸ்வானுக்குக் காதலனுகிய வைவஸ்வதமனுவின் பெருந்தவத்தா லொப்பற்ற சூரியகுலத்துக்கு மூல புருஷனெனத் தேவருமேத்தத் தோன்றிய இக்ஷுவாகுவைப்பிதாவாய்க் கொண்ட குட்சிக்குத் தோன்றிய விகுட்சியென்பவன் புரஞ்ஜயனென்ற மகா வீரனைப் பெற்றனன்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளே சரணம்.

---

## புரஞ்ஜயன் சரித்திரம்.

புரஞ்ஜயனென்பவன் தேவர் முயன்ற அறத்தாலும், அசுரர் செய்த பாவத்தாலுந் தோன்றிப் பகையாகிய வேலையைத்தன்னுடையவாளாகிய தெப்பத்தாற்கடந்தவனுகி, மன்னர்க்கு மன்னனுகி, பகைவரஞ்ச வொலிக்கும் கழற்புடையானுகி, திரிலோகத்திலுஞ் செங்கோலோச்சிச் சிங்காதனத்தில் வீற்றிருக்கையில், விட்புலத்திற் சுரர்க்கு மசுரர்க்கு நேர்ந்த சமரத்திற் சலித்த ஆகண்டலனுட னமரரெல்லாரும் அயோத்திமா நகர்க்கு வந் தம்மன்னனைப் போற்றி, வலிகொண்டு கலியு மசுரரைப் பட்சித் தெம்மை ரட்சிப்ப

துணைக்கே கடனென்று மடைக்கலம் யாமென்று மோலமிட, அதற் கிரங்கி ஆயிரங்கண்ணனை நோக்கித் தேவ ! நின்றே னெமக்கு வாகனமாயின், யாமப்பகைதடிந் தரசளிப்பாமென, அதைச் செவியிலேற் றரசினசையா லொல்லேனெனவும், வெட்கத்தா லுடன்படுவேனெனவு முணர்க்க வொண்ணாது சித்திரம்போல வீற்றிருந்த ஐராணிகாந்தன், அற்ற நோக்கி யியற்றுவதே கருமமென மற்றைத் தேவராற் றேற்றப்பட்டு வருகிக் கைலைமலை நிமிர்தெனவுயர்ந்த வோர்விடை யுருவாயினன். கோசலர் பெருமான் அவ்வெருத்தையூர்ந்து வானோருடன் வானஞ்சென்று போர்புரிந்து, அசுரரை மடித்துத்தேவரது இடையூறகற்றினன். இந்திரனை வாகனமாய்க் கொண்டதா லிந்திரவாகனனென்றும், ககுது என்கிற முசுப்பிலுட்கார்ந்ததாற் ககுஸ்தனென்ற நாமங்கொண்ட அப்புரஞ்சயன் நிக்கிரானுக்கிரக சக்தியுடைய அநரண்ணியனென்ற புண்ணியனைப் பயந்த பாணனென்ற புத்திரனைப் பெற்றான். அப்பாணனைப் பிதாமகனாகக் கொண்ட பிருது சக்கரவர்த்தியால் திரிசங்கு பெறப்பட்டான்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளே சரணம்.

---

## திரிசங்கு சரித்திரம்.

திரிசங்குபூபன் நெடுங்கால மரசுவீற்றிருந்து, சப்த ருஷிகளும் போற்றுந் தகுதியுடையாராகிய பகவான் வசிட்ட மாமுனிவர் தமது பெருந்தகைமைக் குரித்தன்றாயினு நாடோறும் இராம சேவையாகிய பின்வரு மூதிய நோக்கித் தேவர் போற்றும் இட்சுவாகு நான்முதல் புரோகிதத்தொழிலைப்புரிந்து கைக்கொண்டிருத்தலாற் குலகுருவாயினாரை நண்ணி வலம்வந்து வணங்கி, முடிமேற்குவித்தகையனாகி அடிகேள் ! நம்மடியேன் றனுவுடன்றுறக்கமுறுவான் அருளுகவெனப்பிரார்த்திக்க, அம்மாமுனிவர், அரச ! இம்மேனியோ டும்பரேகநினைக்கொல்லாதென்றனர். திரிசங்கு மனம்வருந்தி வசிட்டமாமுனிவரது புத்திரர்பாலணைந்து தாழ்ந்தவ்வாறே கேட்டலுமவர் எமது தந்தையினருளல்லா தொன்றும்புரியோமென்றுரைத்தனர். வேந்தரேந்தல் வசிட்டகுமரரைநோக்கி நுமக்கும், நுமது தந்தைக்குமொல்லாதெனி னெனதுகருத்துமுற்றப்புரிவாரை நாடுவேனெனலும், அவ்வசிட்டரது காதலர் சினந்து, தேசிகராகிய வெம்மிடத்தினீ பிழைத்தமையாலின்னே நீசனாயாதியென்றனர். அவ்வரசர்கோமா னக்கணத்திலேயே அலரியோனு நாணும் வடிவிழந்து, தானிடைச்சென்று, புலாலுண்ணும் புலையனிற்றிரியுங்காலை, யூபத்திலணையும்படி தாயுந் தந்தையும் விலை பெற்று விடைகொடுத்து விடுத்த சுனசேபனுக்குத் தீர்க்காயுளைக் கொடுத்தவராகிய பகவான் விசுவாமித்திரமுனீந்திரரைச் சேவித்து, முன்னிகழ்ந்தவற்றைக் கழற, அம்முனீந்திரர் இற்றதோவென நகைத்து, அஞ்சலென் றபயமளித்தோர்வேள்வியைமுற்றுவித்தனு மவணிழிந்த தேவவிமானமேறிப்போய் வானத்தினிலைபெற்ற புகழுடனென்றும் வாழ்வானாயினன். அவனைப் பிதா

வாய்க்கொண்ட அரிச்சந்திரன் யாவராலுங் காக்கவருமையான வாய்மை நிறுத்துவான் துறக்கத்தகாத பெண்டிரையும், தேவரும் விரும்பு மகண்டமண்டலாதிபத்தியத்தையுந் துறந்து, தானு மிழிதொழிலை மேற்கொண்டு, விண்ணிலுமண்ணிலுமென்று மழியாப்புகழ்நிறுவி, ரோகிதாசுவனென்ற கான்முளையைப்பெற்றான். அவன் குவலயாசுவனையீன்றான்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளே சரணம்.

---

## குவலயாசுவன் சரித்திரம்.

மன்னோர்செய்தவத்தாற் றோன்றிய குவலயாசுவன் குன்றுபோற் புயத்தையும், பலத்தையுங்கொண்டு பகையில்லென உலகாண்டுவருகையில், கடலின் மூழ்கி ரெட்டுயிர்ப்பெறிதலா லச்சாகரத்துமணலை விண்ணுலகு மண்ணுலகாம்படி வீசித்துயர்செய்த துந்து என்கிற அசுரனை யமன் முன்னிறுத்தியபடியால் துந்துமாரனென்றபெயரையுங்கொண்டு யுவனாசுவனென்ற தநயனைப் பெற்றனன்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளே சரணம்.

---

## யுவனாசுவன் சரித்திரம்.

யுவனாசுவன் எண்ணிறந்தகால மகவின்றிவருந்திப் புத்திரகாமேஷ்டி செய்து கருப்பமுறத் தனது மனைவிக்குக் கொடுப்பான் மந்திரபூரிதமாய் வைத்திருந்த வுதகத்தை யுண்ணீர் நசை தெறலூற் றிரவிலறியாமற் பருகி, அசம்பவமான புருடகருப்பமடைந்து, வெட்கமுந் துக்கமு முற்றென்செய்கேனென்றிரங்கி, யாகசாலையிலிருந்த முனிவரைத்தொழுதுவேண்ட, அம்முனிவர் கருவுயிர்ப்பதொழிய வேறுகருமமுளதோ வெனலும், அவ்யுவனாசுவன்வயிற்றின் வாமபாகத்தைப்பீறிக்கொண் டிளஞ்சூரியன்போன்றோர் சிசுஜனித்து, இச்சிசுயாரைத் தனபானஞ்செய்யத்தக்கதென இருடிகணங்கள் சங்கிக்கையில், புமான்கருப்பந்தரித்துக்கருவுயிர்த்தல் திரிலோகத்திலுமில்லாத வியக்கும் புதுமையாதலாற் றேவருடன் போந்திருந்த இந்திரன் என்னுடைய தர்ஜனியைப்பானம்பண்ண வுரியதென்றுரைத்து, நீட்டிய விரலின்வழிபெருகிய அமிர்தத்தைப் பருகியபடியால் மாந்தாதாவென்ற நாமத்தைக்கொண்டு கணக்கிறந்தகால மன்னர்க்கு மன்னனாய் வீற்றிருந்தனன்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளே சரணம்.

---

## அம்பரீஷன் சரித்திரம்.

சூரியகுலம் விளங்கத்தோன்றிய அம்பரீஷன் அரிசங்கீர்த்தன பூரணனாயும், ஸ்ரீமத்பரமபாகவதசிரோமணியாயும், சகலசாஸ்திர சம்பன்னனாயும், வாளாலன்றித் தவத்தாலேயே யுட்பகையைப்போலப் புறப்பகையை

வென்றவனுகியும், எழுலகத்தினும் புகழுடன் செங்கோல்நடாத்தி வீற்றிருந்து, விரதங்களிற் சிறந்த ஸ்ரீ ஹரிதினமாகிய ஏகாதசிதினத்தி லுபவாசமிருந்தும், மறுதினமநேக பிராஹ்மணோத்தமருக்குப் பாரணைசெய்வித்துத் தானுண்டும், ஸ்ரீ ஹரிதரிசனம் ஹரிசங்கீர்த்தனம் பாகவதோத்தமருடன் கூடிச் செய்வதே யுறுதிப்பொருளெனக் கொண்டொழுகுநாளில், ஓர் துவாதசிதினத்தில் பகவான் துருவாச மாமுனிவர்வந்து, இன்று பாரணைக்கு நின்கோயிலுக்கு வருதுமெனத் தாமே வலிய அருளி, நித்தியகருமமுடிப்பான் யமுனுதீரஞ்சேர்ந்து யோகத்திலமர்ந்தனர். அரசன் பாரணைக்குரிய காலங்கழிவதுகருதிக்குருவாகிய வசிட்டபகவானைப் பணிந்தெவன்புரிவதென்று வினவினன். அம்மகருஷி மன்னர்பிரானைக் கண்ணுற்று, பாகவதோத்தம! அதிதியை யிகழ்ந்த குற்றமும் பாரணைக்காலந் தவறுதலு மடையாவண்ணம் ஸ்ரீ ஹரியின்பாதோதகத்தைச் சுவீகரிப்பாயென்றனர். குருவின் வாசகங்கொண்ட பெருமான் அவ்வாறு புரிதலு மம்மாமுனிவர் யோகநீங்கிவந்து, தமது ஞானநோக்கா னிகழ்ந்ததை யறிந்து, புருவங்கணெற்றியிற் சேரவும், கண்கள் சிவக்கவும், இமையோரஞ்சவும், படவாமுகாக்கினிபோற் கிளர்ந்தெழுமுனிவுகொண்டு தாம்முடித்திருந்தமுடியிற் சூரியகிரணம்போன்றவோர்சடையைப்புரியிலோச்ச, அதனினின்றுந்தோன்றிய பூதம் மகாத்தமாவான அம்பரீஷனை வெருட்டிற்று. ஆதிமூலமே அபயமென்றகளிற்றினறையைக்காத்துக் கராவைவதைத்த ஸ்ரீசுதரிசனம் கடிதிற்றோன்றி, அச்சாதகத்தையு முனிவரையுந் துரத்தலு மம்மகாமுனிவர் பயந்தோடிப் பிரமாதிதேவர் பக்கல்சென்று யானபயமபயமென்றபயமிட்டு நிகழ்ந்ததை யுரைத்தனர். விஷ்ணுசக்கரமெனவே யத்தேவர் கைவிரித்தலை நோக்கி, முன்னிலும் பயமுற்ற ஸ்ரீமந்நாராயணன் சிர்பாதத்தைச் சேவித்து, ஆழிவாழ் செல்வனே! நின்னாழியை விலக்கியென்னைக் குறிக்கொள்வது நினது கடனெனப்போற்ற, பத்தவற்சலனுகிய அப்பரந்தாமன், எமது பாகவதோத்தமனிடத்திற் பிழைத்தமையால், அவனையே யடைந் திவ்வருந்துயர் தீர்வாயெனக்குளிர்ந்தவசனத்துடன் விடைகொடுத் தருளலும், மீண்டயோத்திமாநகர்க்கு வந்துகொற்றவேந்தை யணுகி, உத்தம! நின்றகைமை யறியாது பிழைத்தேன் பொறுத்தருளுதி யென்றேத்த, அப்பாகவ தோத்தமன் அம்முனிவரரடியில் முடியைச் சேர்த்துத் திருவுளங்கலங்கன்மினென வாதரித்துக் கோடிசூரியப்பிரகாசமா யொளிவிட்டுக் காலாக்கினிபோலப் பொங்காநிற்கு மப்படைக்கலவரசைச் சேவித்து முடிமேற் குவித்தகையனுகி நின்று பொறுத்தருள வேண்டுமென்று வழுத்தினன். அதனுல் முனிவு நீத்த நேமியை மாதவர் நமஸ்கரித் தச்சந்தவிர்ந்தனர். மன்ன னம்முனிவர்க்குப் பாரணை செய்வித்து விடைகொடுத்தனுப்பி, நெடுங்கால மரசு வீற்றிருந்து பாகவதோத்தமர் மாலையினடுநாயகம் போன்றென்றும் விளங்குவானுயினன்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளே சரணம்.

## முசுகுந்தன் சரித்திரம்.

சுராசுரர் முயன்ற தவத்தாலும், பவத்தாலும் இட்சுவாகு குலமருமா
ருசத் தோன்றி, முசுகுந்தனெனத் திருநாமங்கொண் டிந்திரனுக் கிந்திர
னென வீற்றிருக்கையில், விடந்திரண்டன்ன மேனியராயவசுரர், சக்கர
ம், உலக்கை, வாள், தண்டு, தாரை, பரிகம், முற்கரம், பொற்கரம், குலிசம்,
பாசம், பாலம், சூலம், தோமரம், குந்தம், சங்கு, கழு, எழு, முசுண்டி, பி
ண்டிபாலமாகிய வில்வாயுதங்களைக் கொண்டு யுகாந்த காலத்தி லெழுமேக
மெனத்திரண் டசனிபோலுரப்பி, வானில் வந்து புலவருடன் மலைய, அவ
ர்க்கு நேரில்லாதவராய் வானோர் இந்திரனுடன் போந்து,குவிந்த கோகன
கம் போன்றகையராகி யம்முசுகுந்தனைத் துதித்துக் குறையிரப்ப, தனக்கு
ப்பகையெங்கு மின்மையாற் றினவுறுமுழவுத் தோளினன் களிப்புடன்மாக
மேவிப்போர்புரிந்து, அவ்வசுரர்தம்முயிர்களை யுண்ண நசையுறுங் கூற்றின்
வயிறாரக் கொடுத்து, குமரக்கடவுள் தேவசேனாதிபதியாய் வருகாறும் வா
னுலகைக் காத்திருந்தனன். இந்திராதி தேவர் தனுவிலுறும்பிணிநீங்கினாற்
போன்மனமகிழ்ந்து சக்கரவர்த்தியை நோக்கி, நினக்கு வேண்டும் வரனைப்
பெறுவாயென்றலும், முசுகுந்தன் அவ்விண்ணவரை வணங்கி யாதுங் குறை
யிலேன். அநேகவாண் டிச்சமரத்தில் நான் வருந்தினமையா லெவ்வணிறந்த
காலமுறங்கவருண்மினென, இந்திராதியர் இறையை நோக்கி, அவ்வாறு
துயில்வாயென்றும், நின்னைத் தூக்கத்தினின்று மெழுப்புகின்றவன் யாவ
னோ அவன் நீறுவானென்றும் வரனும் விடையுங் கொடுத்தனர். தராபதி
தரணியின்கண் வந்து, வான்குறுக வுயர்ந்திராநின்ற வோர்மலையின் குகை
யைச் சார்ந்து துயில்வானாயினன். அவ்வாறவனிருக்க, பக்தர் பாவங்களை
யரிக்குந் தன்மையால் ஸ்ரீ ஹரியெனத் திருநாமங்கொண்டவன தமிசமான
கண்ணபிரான் வடமதுரையிலெழுந்தருளி யிருக்குங்காலை, மகாவீரனான கா
லயவனனென்ற மிலேச்சன் வந்து, யோகிகள் தியானத்துக்கு மெட்டாத
வொருவன் புலையனாகிய நங்கைக்குக் கிட்டுவனோ வெனவெண்ணாது, அறி
வின் சிறுமையாற் சுவாமியைப் பிடிப்பான் றுரத்தினான். லீலாவிநோத
னும், கபடநாடக சூஸ்திரதாரியுமான ஆயர் குலக்கொழுந்து, அம்மிலேச்ச
ன்கையி லகப்படுகிறவன்போலக் கிட்டியு மெட்டியு மோடி, சீவனறியாதச்
சீவனுள்ளேயே தான் மறைந்திருப்பது போலக் காலயவனனறியா தம்மு
சுகுந்தன் துயிலுமுழையிற் கரந்தனன். சீவர் தமதுள்ளிருக்கும் பரமான்
மாவை யறியாதுபுறத்துநாடி யுழல்வதுபோல, மிலேச்சனானவன் முசுகுந்த
ன் றுயிலுகிருஞ்சத்திலுள் முகுந்தன் மறைந்திருப்பதையறியாது,மலையின்
புறத்துத் தேடிமுழையினுட் புகுந்து, மோக்கத்துக்கீடான தூக்கத்திலிருந்
தமன்னர்மன்னனைப் பார்த்து, நான் பின்னடைய விரைவாய் முன்னோடி
வந்த தேவகிமைந்தனே யொன்றுமறியாதவனைப்போலத் தூங்குகின்றவனா
ய்ப் பாவனை புரிகின்றனை னெனச் சினந்து, மலை முழைபோன்ற புலானாற
ும் வாயாலும், பனை போன்றகையாலும் பிழைத்தல் செய்தான். உறக்கநீங்கி

முசுகுந்த சக்கரவர்த்தி விழித்தலு மம்முழுமகன் சாம்பராயினன். அக்காலை
அச்சக்கரவர்த்தி தனக்கெதிர் தோன்றிய கோவிந்தனை நீ யாரென்று வின
வலுங் கிருஷ்ண பரமான்மா நோக்கி, பெரும! நான் சந்திர குலத்தைச் சா
ர்ந்த யதுகுலத்திற் பிறந்தவன்; ஸ்ரீ வசுதேவருடைய புத்திரனென்று திரு
வாய்மலர்ந்தருளினன். அது செவிபுகாமுன்பொருக்கென அணையினின்று
மெழுந்து, முன்றனக்குப், பகவான் விருத்தகார்க்கிய மாமுனிவரருளிச் செ
ய்த ஸ்ரீமந்நாராயணனதமிசாவதார மென்பதைக் குறிகளாலு முணர்ந்து
வலம் வந்து தண்டமிட்டுக் கைகுவித் துள்ளமுருகக்கண்ணீர் வார, மெய்யிற்
புளகம் போர்ப்ப, நாக்குழற வேத்தலுற்றனன். அரனுமயனு மறியா அச்சு
தனே! போற்றி; அரியே! போற்றி; அப்பனே! போற்றி; அப்பிரளயமிர்
தந்தன்னை யொப்பவனே! போற்றி; ஒன்றும் பலவுமான உருவனே!
போற்றி யெனப்போற்றி யருள்பெற் றநேகவாண்டு யோகத்தி லெழுந்தரு
ளியிருந்து, ஸ்ரீமந்நாராயணனது திருவடி நிழலி லமர்வானாயினன். பின்பு
பார்புகழுஞ்சுசந்தியும், திருவசந்தியும், பரதனும் அரசர்க்கரசராய் வீற்றி
ருந்தார். இவர் தம்மரபில் அசிதனென்று மரசனுதித்தனன்.

ஸ்ரீராமதாசாரன் திருவடிகளே சரணம்.

## அசிதன் சரித்திரம்.

புரவலர்க்குப் புரவலனாகி வீற்றிருந்த அசிதனுக்குரிய விரண்டு ம
னைவியரி லொருத்தி கருவுற்றுத் திருமுகமன்றிப் பொற்புடையுருவமு ம
திமோடொப்பத் தோன்றுங்காலை, விண்ணுலகைச் சேர்வான் மண்ணுல
கை நீங்கி யம்மன்னனுட னேகத்தலைப்பட்ட அக்கருவினளை, சவன
ரென்ற மகருஷி நோக்குறு, நினது வயிற்றினின்று மிக்குரிய குலம் வி
ளங்க வோர்புத்திரன் தோன்றுமாதலா னீமுயன்ற விக்கருமத்தைத் த
விர்வாயென்றருளலும், அவ்வுரையைக் கடவாது நின்றாள். அவ்வசிதனது
மற்றொரு மனைவியாகிய மாற்றாள் அழுக்காறுற்று, அம்மாது கருவுயிர்க்கா
மலிறக்கும்படி கடுவை உணவிற் கரந்தளித்தனள். அவளஃதறியாது பருகி
யுமம்மாமுனிவர்வரத்தா லிறின்றி யுயிர்த்த சிசு கரமென்கிற விடத்துடனு
தித்ததாற் சகரனெனப் பெயர்கொண்டு செங்கோலேந்தி யென்னிறந்தவே
ள்விகளியற்றிக் கங்கையென்றவாசகத்தாலே கடுவினைகளைக்களையும் பாகீர
தி யிப்புவியின்கண் பெருகக் காரணபுருஷனாகி யரசுபுரிகையில், பகவான்
கபிலமாமுனிவர் நேத்திரத்தால் விண்ணேறிய அறுபதினாயிரம் புத்திரரை
யன்றிமற்றோர் புத்திரனை அசமஞ்சனையும் பெற்றனன். அசமஞ்சன் பூ
ர்வஜன்மத்தின் முயன்றயோகத்தின் குறைவாலிச்சன்மத்தில்வந்தவனாகை
யாலுலகத்தை வெறுத்துத் தாய்தந்தையருந் தன்னிற்பற்றொழிய, நீராடுஞ்
சிறாரை நாடோறுஞ் சரயுமாநதியிலெறிந்து, இசையுற்ற மரபுக்குவசையே
ற்ற, அஃதறிந்த சகரபூபதி வீழ்ந்த துயர்க்கடற்கோர்கலமாகா தழுந்தி, கு

ருவாகிய பகவான் வசிட்டமாமுனிவரருளியபடி, யோகியாகிய அசமஞ்சனுக்கு மாணஞ்செய்வித்து, அவனுற்றனது குலவிர்த்திக்கு அம்சுமானென்ற புத்திரனைப் பெற்றுக்கொண்டவ்வசமஞ்சன் நாட்டைநீத்துக் காட்டுக்சேகவிடைகொடுத்தான். அவ்யோகிதனதுயோகமுற்றுவான் அகமகிழ்ந்து வனஞ்செல்லுகையில், சரயுமாநதியின் முன்னமே தன்னுலெறியப்பட்டிருந்த வச்சிறுரை யவரவர் தாய்தந்தையரடையக்கடவரென வருளிப்போயினன். அச்சரயுவெனு நங்கைசெவிலிபோல வளர்த்துவைத்திருந்த வம்மக்களை விடுத்தாள். அச்சகரபூபதி மன்னுலகைவெறுத்தபின் அம்சுமானரசு வீற்றிருந்து புத்திரனை பார்புகழூந்திலீபனுக்கரசீந்து தவஞ்செய்வான் வனத்துக்கேகினன்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளேசரணம்:

---

## திலீபன் சரித்திரம்.

திலீபன் மகததேசத்தார்கோமான்றநயையாகிய சுதேட்சனையென்பவளை வேட்டு, வேற்றரசரை யடிமைகொண்டு, மழலைச்சொற்கேளாதவனுகிக் குழலும் யாழுமினிதெனவாழுநாளில், அருந்ததிசொழுநரை வலம்வந்து சேவித்தையனே! ஆன்றவிந்தொல்குலம் விளங்கமகவருளுகவென்று பிரார்த்தித்தலும், மாமுனிவர் அரசர்க்கரசனுகிய வுத்தமனே ! நீமுன்னொருகாலத்திற் றேவகாரியமாய் விபுதருலகு சென்று மீளுங்காலை, கற்பகத்தருவினிழலிலமர்ந்திருந்த காமதேனுவைக்கண்ணுற்றும், வலம்வந்து வணங்காது, பூத்துப்புனலாடு நினது மனைவியைப் புணரக்கருதியும், வையத்திலறமெஞ்சமென் றஞ்சியும் விரைந்து நகரஞ்சார்ந்தாய் ; அத்தேனுமுனிந்து நீயென்னை வணங்காது அவமதித்துப்போனமையா லென்வமிசமானவோர் கோவைப்பூசித்தாலன்றி நினக்குச் சந்ததியுண்டாகாதெனச் சாபங்கொடுத்தது. அவ்வுரையாகாயகங்கையினரவத்தாலும், ஐராவதத்தின் பிளிறலாலு நினதுதேரினொலியாலு நின்னுலுணரப்படவில்லை. அவயவங்கடோறுந்தேவதைகளைக்கொண்டிருப்பதாற் சமஸ்ததேவதா சொரூபமான கோவையும் , பிரமசொரூபமான பிராமணரையும், தேவாலயங்களையும், முனிவர்களையும், பெரியோர்களையுமெதிர்ந்தாற் சேவித்து வலமாகவே யேகவேண்டும். மன்னர் மன்ன ! அறியாது செய்யத் தவறினுலுங்குற்றமே. நீ கோவைப்பூசித்தாலன்றி மகவுபெறுய். அக்காமதேனுவையே நீ பூசிக்கவிரும்பினுலது பாதலத்திலவருணன்செய்யும் யாகத்துக்குப் போயிருக்கின்றது. ஆகலானதன்வமிசமான வோர்கோவையாராதித்து நற்புத்திரனை யடைவாயென வருளுங்காலை, பகவான் வசிட்டமாமுனிவர தக்கினிகோத்திரப்பசுக்கிட்டிவர்தது ; நன்னிமித்தமாகத் தானேவந்த வித்தேனுவையே யர்ச்சிப்பாயென் றுராதிக்கும்விதத்தையருளினூர். மறுநாட்காலை வேந்தன்றனது நித்தியகருமங்களை முடித்துச் சுதேட்சையென்ற பத்தினியினுடன் ஆராமலர்தூய்த் தூபதீபாதிகளைக்கொண்டு பூசித் தக்கோசெல்லுங்கா

லையிக்கோ பின்சென்று, நிற்கும்வேலை கூடநின்று, படுக்குங்காலை யுட்கார்ந்து, வயிறாரமேய்ந் துண்ணீருண்டபின்றானுண்டு, மாலைப்பொழுதின் மகருஷியாச்சிரமத்திற் பசுவைச் சேர்ப்பானாயினான். மன்னன் இவ்வாறு திவசந்தோறு மொழுகிவர, இருபத்தொன்றாவதுநாளி லவ்வான் புன்மேய்ந்தபடியேபோ யிமயமலையின்மேலேறி யுலாவிக்கொண்டிருந் தோர்முழைஞ்சினுழைந்த தனிலிருந்தஅரிமா னெனக்கிரையாமெனப் பிடித்துக்கொள்ள, ஆ ஆவென்றோலமிட்டது; மலையினெறியிலேயே கண்ணுற்றிருந்த கொற்றவெண்குடையா னதைக் கேட்டு விரைந்து குகையுட்புகுந் தவ்வியமாவைவதஞ்செய்வான் றூணியினின்றுஞ் சரத்தைவாங்கக் கையெடுத்தனன். அவ்வலதுகை யிறங்காமலாவத்தைத் தொட்டபடியே நின்றவிடலும், அரச னச்சரபியை நோக்கி மனமிரங்கி யினிச்செய்யுங்கருமம் யாதெனத்திகைத்து நிற்றலும், தேவாமிசமான சிங்கம், மானிடவாக்கால் அரசர்க்கரச! நின்படையான்மரியேன். நான் கும்போதனனென்னும் பெயரன், உருத்திரகிங்கரன், பரமசிவனும் பார்வதியும் லீலார்த்தமா யிம்மலையில் வளர்த்திருக்கின்ற தேவதருவின் சாகைகளை வனகரிகளொடித்துடலை நீக்குவான் பிடிகட்களித்துத் தருவையழித்தன! அதையறிந்த கைலையாளியாலேவப்பட்டு விருட்சத்தைக்காத்துக்கொண்டிருக்கின்றனென். எனது கையிலகப்பட்ட வெச்செந்துவையும் வயிற்றிலடக்குவதேயெனக்குத்தருமம். இதைநானன்றுவதிலையில்லையெனக் கூறிற்று. அனையன் ஓஉருத்திரகிங்கர சிங்கமே! கோவின்மகிமையை யறியாயோ? கலைமான்காந்தனும் போற்றுமெனது குலகுருவாகிய பகவான் வசிட்ட மாமுனிவ ரக்கினிகோத்திரத்துக்குரியது, தேவலோகத்திலிருக்கின்ற காமதேனுவின் நேரான மரபிற் பிறந்தது. மகருஷியின் றவபலத்தால் யாவராலு நலியத் தகாதது; உருத்திரகிங்கரனென்ற தருக்காலென்னொடு தொடங்கினை. குருவின் வாசகப்படி நான்பூசித்துவருமிப்பெற்றத்தை யுன்னுணவிடுத்தென்னையுண்ணுதியெனச்சியம் அரசனே! உலகில்வாழுயிரெல்லா நின்னுயிரெனவோம்பு நின்னைக்கோறலாகாது கோவே! இக்கோவைப்பற்றியிரங்கல், மாமுனிவர்க்குக் கொடுஅநேகங்கோவை.இதை யானேயருந்துவேனென்றது.புரவலனந்தோவென்றிரங்கி மன்னர்க்குச் சீர்த்தியே சரீரமானதாற் புகழுடம்பெனக்கிந் துபூதவுடம்பைத் தின்னுதியெனவே, சரபியைவிட்டு வெளியின் மறைந்து, வயமாவினுருவொருவிய அக்கிங்கரன் உத்தமருளுத்தமனே! நினதுநிலையைச் சோதிப்பான்வந்தனனென்றுவாழ்த்திப்போனான். தெய்வத்தன்மையானவத்தேனு நோக்கிப்புரவலர் புரவலனே! உணவுமுண்ணீருமின்றி வருந்துகின்றாய். எனது பாலைக்கறந்து பருகுவாயெனச்சக்கரவர்த்தி ஆவைநோக்குற்றுக் கன்றூட்டி மகருஷியக்கினிகோத்திரஞ்செய்த பின்பு மிருந்தாலன்றி யிப்போது பருகேனென்றான். அதைக் கேட்டுச் சிங்கத்தின் வாயினின்றும் பிழைத்ததினு மனமகிழ்ந் தக்கோவையாச்சிரமத்து விடுத்துக் குலகுரவரது

ளோடுவிடையும் பெற்றரண்மனை சேர்ந்து பிதிர்பத்திமையுள்ளவுத்தமனான பகீரதனைப்பெற் றவற்கரசளித்துத் தவஞ்செய்வான் வனத்துக்கேகினன்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளேசரணம்.

---

## பகீரதன் சரித்திரம்.

பகீரத பார்த்திப னிருநான்கு திசையினும் பகை வென்று வேந்தர்க் கேந்தலாகி யிரப்போராகியசிந்துவை யீந்தே கடந்தவனாகி, கலைக்கடலை யாய்ந்தே கடந்தவனாகி, பகைவேலையைக் காய்ந்தே கடந்தவனாகி, போக பௌவத்தைத் தோய்ந்தே கடந்தவனாகிப் புல்வாயும் புலிப்போத்து மொருதுறையி னீருண்ண வெள்ளமும், விலங்கும், விலைமகளிருள்ளமுமொருவழிச்செல்ல வரசுவீற்றிருக்கையில் பகவான்வசிட்டமாமுனிவனைவலம்வந்து தண்டமிட் டெனது மரபுளாராகிய சாகரர் சரிதையைக் கேட்க விரும்புகின்றனெ னென்று பிரார்த்திக்க வம்மாமுனிவர், மனுமுதல் யாருமொவ்வாதமன்னர் மன்ன! நினது முதாதையின் றந்தையின் றந்தையாகிய சகரனையமகம்புரியத் துரகத்தை விடுத்தலுந் தேவர்கோன் பொறாதவனாகி, அப்பரிமாவைப் பாதலத்தின் மாதவம் வளர்க்கும்பகவான் கபிலமாமுனிவரிடை யொளித்தனன். இவுளியை நாடிக்கொணரும்படி சகரன் றனதுமதலையர்க்குப்பணிப்பச்சகரார் வடவையினும் பொங்கிப் பூவினூடுடிமின்றித்தேடிப்பாதலத்திற்புகுந்துவடகுணதிசையி லம்மாமுனிவர்பக்கல் வாசியைக்கண்டுமுனிவுகொண்டு தருக்கினராகித் தெழித்தனர். பகவான்கபிலர் சினந்துதழலெழுவிழித்தலுஞ் சகரராறயுதருஞ் சாம்பராயினர். அதைக்கேட்டு வேந்தன் வாட்டமீக்கொள நாட்டநீர்தரலமைந்தனது மைந்தனைத்தழுவி, குழந்தாய்! நான்றொடங்கிய வேள்வியை யிழப்பதோவென, அம்சுமா னெழுந்து பாதலஞ்சார்ந்து விண்ணேறியவர துடலின் சாம்பர் கண்டு துன்னெனு மனத்தினனாகிக் கபிலமாமுனிவரது தாடொழுதுற்றது கூற, நினது வாசி கொண்டேகென்றார். அம்சுமான் முனிவனைத் தொழுது வாம்பரியைக்கொணரலுஞ் சகரன் மகத்தை முற்றுவித்து, அம்சுமானுக்கரசீந்து, விண்ணுறுவா னேகினனென்றனர். அரசன்பகவான்வசிட்டனைத்தொழுதுஅடிகண்முனிமுனிவான் மடிந்த வெனது குரவர் நிரயத்தினின்று நீங்குமாறு சொற்றுகவென்றுவேண்ட, பிரமபுத்திரர் வேந்த! பிரமனுலகிலுலவும் வானதியனுகி யென் புதோயுமே லவர்ற்கதிபெறுவரென்றருளினர். மந்தாகினி பூமியின்கண் பெருக வடியேன்புரியுங் கருமம் யாதென்றரசன் வினவவும்மலரவனைநோக்கி யருந்தவம்புரிதி யென்றருளினர். பூணினும் புகழே யமையுமெனக் கொண்டுயிர்களைக் காக்கும் பகீரத சக்கரவர்த்தி ஞாலம் யாவையுங் காவென்று சுமந்திரன்வயந்தந்து வான்சிறிதெனவோங்குமோர் மலைச் சாரல்சார்ந்து நீரொடு பூதியையும், வாயுவையும், சருகையும், கதிரொளியையுந் துய்த்துப் பின்பவற்றையு மருந்தா தருந்தவம்புரியலும், வேதாவெதிர்தோன்றி அரச!நின்றவங்கண்டு வியந்தனம்.நின்கருத்தென்னென்

மனன். தராபதிதாழ்ந்து வரநதிபுவியினண்ண வருளுகவெனப் பிரார்த்தித்தனன். அப்பிரமன் அரசமாதவனை நோக்கி யண்டகோளத்துக் கப்புறத்துச் சென்றுலகளந்த வெம்பிரானது திருவடியின் பெருவிரலினின்றும், முயன்றமாதவத்தால் யான்கொண் டெனதுலகிற்பெருகும் புண்ணியநதி நினதுலகின்கணணுகும், அதன் வேகம் பூமகளாற்றுளாகலான் மலைமகள் பாகனைநோக்கி யருந்தவந் தொடங்கெனவருளித் தனதுலகு புக்கனன். ஏந்தலவ்வாறுதவம்புரிகையில் சங்கரனெதிர்தோன்றி நின்கருத்தினைமுடிப்பான் கங்கையைப் பரிப்பேனென்றருளித் தன்வரைசார்ந்தான். புரவலன் மகிழ்ந்து கங்கையைத் துதித்தனு மவ்விண்ணதி களித்தவளாகி நானில நடுங்கவிரைத்துத் தன்னைத்தரிப்பே னெனவுரைத்த பரமசிவனும் பாதலத்திலபூர்ந்தும்படி யதிர்ந்துவரச் சம்புநோக்கி யொருதிவலையுஞ் சிதறாது தனதோரேசடையினிலடக்கினன். புன்னுனியின் பனியெனமாநதிகரந்து சடையிலொளிர வரசன் றிகைத்துக் கண்ணுதலை வணங்கி வழுத்தலும் மன்னுன் மன்னு!வருந்தல், நஞ்சடையினளெனச் சிறிதுவிட, வந்துமானஸமடுவைநிரப்பியதினின்றும்,கலாதினி,பாவனி,நளினியென்றுநாமங்கொண்டு முப்பிரிவாய் இந்திரதிசையினும்,சுசக்ஷு, சீதை,சிந்து வெனப்பெயர்கொண்டு வருணன்றிசையினுஞ் சென்று, அளகநந்தையென்ற திருநாமத்துடன் கற்றோரைப் போற்றுவோர் புகழென வோங்கிப் பெருகிவர, மன்னர் மன்னன்விரைந்து தேர்மேலேறி முன்சென்றனன். அவ்வளகநந்தை தனது கதியாற் சன்னுமகருஷியினது வேள்வியையழிப்ப, அம்மாமுனிவர்கண்டு வெகுண்டு வேள்வித்தலையிருந்த மற்றமுனிகணங்க ளுவப்பாதியைக் குடங்கையிற்கொண்டுபருகினர்,அதைக்கண்டனைகுருகுலதிமிர்தீர்த்தியுடைத்தரர்பதி யம்முனிவரைவணங்கி முன்னிகழ்ந்தவற்றை மொழியக் கொண்டுபோகென அச்சன்னுமகருஷி தனது செவியினின்றும் விட்டமையால் ஜான்னவியென்ற நாமத்துடன் சென்று, இறந்தோர தென்பிற்றேயவே யச்சகரர் நிரயத்தினின்றும் அயோத்திமாநகரம்போன்ற துறக்கத்திற் குடியேறினார்கள். அவ்வேலை வேலையுமஞ்ச, இந்திராதிய ரொருங்கு கூடிக் களியாலார்ப்பெடுத்துப் பல்லியங்கண் முழக்கி, விரைமலர்தூவி, மன்னர் மன்னனே! நின்னை நிகர்வார் யாருமில்லென வாழ்த்தினர்! பூபாலன் எண்ணிய கருமமுற்றிற்றென மகிழ்ந்து, புலவர்போற்றுந் தடமதிலயோத்திசார்ந்து, சந்திரன்போல வெண்குடைகவிக்க, இந்திரனென வாழ்ந்திருந்தான். இவனெடுமரபில் இரகுவென்பவன் பிறந்தான்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளேசரணம்.

---

## இரகுசரித்திரம்.

இரகுசக்கரவர்த்தி மகாவீரனுகி யிருநான்கு திசையையும்வென் றிந்திரனுக் கிந்திரனுகி வீற்றிருக்கையில், உடுத்திருக்கின்ற துசன்றி மற்ற யாவையும் பூசுரர்க்கு வழங்கவேண்டியதான விசுவஜித்தென்ற வோர்மகத்

தைப்புரிந் தொருசிறுபொருளுமிலனாகிக் கழையரிசியுண்டுவருநாளில், கவசனென்ற வோரந்தணரெழுந்தருளலு முத்தமனான இரகு அவரையெதிர்கொண்டு வலம்வந்துதண்டமிட்டுக் கைந்நீருமடிநீரு முன்னீரு மட்டாண்டத்தாற்கொடுத்து, அர்ச்சித்தனன். அரசன் விசுவஜித்தென்றயாகஞ்செய்தமையா லெளியனாயிருக்கின்றானென் றப்பிராஹ்மணரறிந்து விடைபெறலுற்றனர். கோமான், தவரைவணங்கித் தேவரீரெண்ணி யெழுந்தருளிய கருமத்தையுரைத்தருளவேண்டுமென்றுபிரார்த்திக்க, அக்கவசர் அரசனே! எனக்குக்கலைகளோதுவித்ததேசிகருக்கு நான்கொடுக்கவுடன்பட்ட வீரேழுகோடிப்பொன்னையு நின்வயிற் பெற்றுக்கொடுப்பானடிப்போந்தேன். நின்கட்பொருளொன்று மில்லையென்பதை மட்டாண்டமே யெனக்கறிவித்ததாலேகலுற்றேனெனப் புரவலர் புங்கவன் பிராஹ்மணோத்தமரை நோக்கியென்னிடத்திற் போர்தார்தங்கருத்து முற்றாதுசென்றா ரின்றுகாறுமில்லை. இரண்டு திவசத்திற் பதினான்குகோடிப்பொன்னையுந் தருகேனென வோர்மாதவப்பள்ளியி லவரைவிடுத்துப் பூபாலன் றனம்பெறுவான் றனதேறுடு போர்புரிய வடிவாளார்த்து, மாதரது புருவம்போன்ற விற்றாங்கி, அவரது கண்ணொக்குஞ் சரப்புட்டில் புறத்துவீக்கி, கட்டு நிறைந்த கவசத்தாற்றோளையு மார்பையும் போர்த்து, செவ்வடியிற பொற்கழ லார்கலிராண வார்ப்ப, பொடிதடவி வின்னாணியெலுப்பு மோதை ஞால முடிவிற்குமுறுமழையினு மும்மை முழங்க, அளகைக்கேகத்தொடங்குதலை யரனதுதோழன்கேட்டுத் துண்ணென்று மனத்தினாகி யரசனது நிதிநிறைதருசாலையினும்பர்த் தொலைசெய்து தனம்பெய்து நிரப்புவித்தனன். தனச்சாலை காப்பாளராற்பார்த்திபனஃதுணர்ந்து, தரித்த சமரவேடந்தவிர்த்தவ்வெறுக்கைகளையம்மாமுனிவர்க்கீந்து, இம்பருமும்பரும்போற்ற வீற்றிருந்தனன். இவன்குலனில் மித்திரசகனென்ற வோர்மன்னன் றோன்றினான்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளே சரணம்.

## மித்திர சகன்சரித்திரம்.

திரிலோகத்திலுஞ் செங்கோல்செல்ல வீற்றிருந்த மித்திரசகன் வேட்டை நசையாற் காட்டையடைந் தாங்கு, விலங்கையும் புள்ளையு மவித்தலாற் பிணஞ் சுமையானம் போன்ற வயிற்றைச் சுமந்து, சுரிகையாலரிந்த தசையோருடலின் புன்னெனன் றென்னாது, அமுதினு மினியபொருள் பலவிருப்ப வதைவிட்டுப் புண்ணீர்வடிந்து நாற்றமே மிகும்புலாலை நாயினுண்ணு மிராக்கதரிருவரி லொருவ னோர்கல்லுயிரை வருத்த, அவ்வரசனதைக்கண்டுவெகுண் டவனை யோரம்பால்விண்ணேற்றினான். உடன்பிறந்தவனாகிய மற்றொருவன் சினந்து கிருதர்படிவமொழித் தானமைப்போனெனவுரைத் தப்புரவலனிடத் தமர்ந்து தொழில் புரியுநாளில், பகவான் வசிட்டமாமுனிவர் விருந்தாய்வருஞ் செவ்வியுணர்ந்து மானிடப்புலாலை யட்டுக்கலத்திற்படைப்ப, அம்முனிவர் யோகத்தாலதையறிந்துமுனிவுகொ

ண்டரசனை நோக்கி நீ பன்னிராண்டு நிருதனாய் விடுதியென்றனர். வேந்தன் குற்றமற்ற வென்னைச் சபித்தவும்மை யானுஞ் சபிப்பேனென் றங்கையி னீரை யள்ள, அதைக்கண்ட மன்னனில்லாள் கணவனைத்தொழுது பூதலம் போன்ற பொறையுடையாய்! நமது தாயுந் தந்தையுமான குலகுருவைச் சபியற்கவென்று வேண்டினள். மன்னன் ஆமென்றிணங்கிக் கைக்கொண்டு சபித்த புனல் வெறுமையாகா தாதலாற் றனதடியிற் புனலைவிடுத்துக் கொள்ளத் தாமரையை நிகர்க்கு மவ்வேந்தலடி யக்கணத்திற் பானிறங் கொண்டமையாற் கல்மாஷபாத னெனப்பெயர்கொண்டான். சாந்தருஞ் சாபத்தில் வல்லவனு மம்மன்னன், சாபத்தில் வல்லமுனிவர் மொழியா லிராக்கதனாகி யனத்திறதிரிதருகையி லோரிருபிறப்பாளன் பொருளாசையால் மனையாளோடு புணரா நிற்பவனை யரக்கன் கண்டவ்வேதியனை யருந்துவான் கிட்டினன் அப்பார்ப்பனி கலக்கமுற்று மித்திரசகனை நோக்குற்று நின்னை யயோத்தியர் கோனென் றறிவேன். முனிவர் சாபத்தா லிராக்கதனாகி யிருந்தாலு மன்னுயிரெல்லாந் தீங்கடையாது காக்குமன்னனானநீ யிசகொலை செய்யாது தமியளுக்கு மங்கலநாணளிப்பாயென்று தொழுது மவ்வரக்க னிரங்கா தவ்விப்பிரனைவயிற்றி லடக்கினன் அவ்வேலை விப்பிரமாது மணந்தனர்ந் தாலிலைபோன்ற வயிற்றைக் கைகளாற் பிசைந்து, தளிராண் முண்டகத்தின் மொய்த்திருக்கின்ற வண்டுகளை யோச்சுவான்போற் கைகளான் முகத்தைப்புடைத்து, விழுந்து, ஏங்கி, விம்மி, திகைத்து, ஆ ஆ வென்றழுது அறமெனக் கில்லையோ? அந்தோவிதியே யெனத் துன்பமுறுத் தராபதியை நோக்கி, அடபாவி! மாமுனிவரது சாபமுற்றி நீநகரடைந்து நினதுகாதலியை யணைவாயேலென தாவியை யுண்டநின்னைக் காலன்மென்று தின்பானெனமொழிந்தாள். அச்சாபத்தையுஞ் சுமந்த வேந்தன் ஈராறாண்டு நிரம்பி, நகரஞ்சேர்ந்து ழியர்தளைன் றேவிகொடுத்த சாபத்தைத் தனது தேவிக்குரைத்து நமது மரபு விளங்க வாசிரியராகிய பிரமபுத்திரனைப்புணர்ந் தோர்புதல்வனைப் பெறுவாயென்றுபணித்தலு மம்மடந்தை கணவன் கட்டளைக் குடன்பட்டுக் கருவுற்றாள். ஏழாண்டுவரையிலு மவள் கருவுயிர்க்காம லிருக்க வருந்தி கணவரதை யறிந்தோர்சிலையா லவள்வயிற்றின் மோதலு மிளஞ்சூரியன் போன்ற வோர் சிறுவனுதித்தனன். அவன் அஸ்மாவென்ற கல்லாற் பிறந்தமையால் அஸ்மகனென்ற பெயர்கொண் டரசர்க் கரசனாகி நெடுங்காலம் வீற்றிருந்தனன்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளே சரணம்.

---

## கட்டுவாங்கன் சரித்திரம்.

கட்டுவாங்க சக்ரவர்த்தி மன்னவர் வணங்கிநிற்குங் கடைவாயிலுடையானாகிச் சிங்கம்போன்று சிங்காதனத்தில் வீற்றிருக்கையில், அசுரர்பொருது சமரத்திலெதிர்நிற்க வொண்ணாது கலக்கமுற் றிந்திராதியர்

அயோத்திமா நகரஞ்சார்ந்து மன்னனைப்போற்றிக் குறையிரப்ப, பகை யோட்டி யுலகாளுங் குன்றுபோலும்புயத்தம்மன்னன் பொன்னுலகுற்றுச் சுரருமமறுங் கொண்டாட அசுரரை வென்று, கல்லார் மனத்தினிருண்ட யிருளைப்போக்கி யொளிருந்தினகரனென விளங்கினன். அவ்வேலை யுடலுறு நோயினுங் கொடியவறுமைநோய் நீங்கியதொத்துக்களித்த தேவர், சக்கரவர்த்தியை நோக்கி வேண்டியவரனைப்பெறுவாயென்றுவினவ, மன்னன் தேவரை நோக்கா ஒன்றுங் குறைவில்லேன்; எனது வாழ்நாளினிறுதியை யுரைமினென்றலும், விபுதராய்ந்துணர்ந்து துன்பமுற்று அரச! ஒரு முகூர்த்தத்தி னீமண்ணுலகை வெறுத்தெம்மோடென்று முறப்பெறுவாயென்றனர். வேந்தர் வேந்தன் துண்ணென்று திகைத்து நேற்றிருந்தானின்றில்லை யென்னுஞ் சொல்லையுடைய விப்புவியின்கண் வாழும் வாழ்வு நிச்சயமென் றெண்ணிக் கணப்பொழு தேனுந் தமதுயிரு முடலுங் கூடி யிருத்தலை யறியாது, கோடிக்குமேல் நினைவுகளை நினையு மூடரைப் போ லுயிர்க் குதவி செய்யாதுடலுக்கே யுழைத்து, நாளை வாளாக்கழித்தேன். பொருளனைத்துந் தோய்ந்துந் தோயாது நிற்கும் பரமபுருடனது தாளைப்பற்றாது பெண்டி பிள்ளை தனமுதலியவைகளைப் பற்றாகப்பற்றிய வென்னைக் காலன்பாசத்தாற பற்றுவனே. என்செய்கோவெனக் கலங்கி விண்ணவரைத்தொழு தோர்தேவவிமானம்பெற் றதன்மேற்கொண்டி மைப் பொழுதி லயோத்திமா நகரம்வந்து, ராம, ராம, ராமவென்றுச் சரித்திதயத்து ளெண்ணி யோகம்புரிந் தெண்ணிறந்த நூற்றாண்டருமையாய்முயலும் யோகிகளெல்லாரும்வியக்க நிரதிசயவின்பவீடாகிய பரவாசுதேவனது திருவடிநிழலி லமர்ந்தனன். இவன் மரபிலொருபுறவின் பொருட்டுத்துலையிலேறத் துணிந்த சிவியென்பவன் தோன்றினன்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளே சரணம்.

---

## சிவியின் சரித்திரம்.

சிவிச்சக்கரவர்த்தி அரசென்பது செங்கோலாற் புரியுமாதவமெனக் கருதி, உலகாளுஞ் சிட்டனுகிக் கருணைக்கோர்கோவிலாகி யிரந்தவர்க்குத் தனதுயிரேனு மீவானுகி வீற்றிருக்குங்காலை வனத்திற்றருவின்கிளையி லிருந்தபுறவின்மே லோர்வேடன் அம்பெய்யவதனு லப்புறவுபுண் கொண்டு முயிரிழவாது பிழைத்துப் பறந்துவந்து சிவிச்சக்கரவர்த்தியே! வேடனை யஞ்சினேன். சரணஞ் சரணமென்று மானிடவாக்கா லோலமிட் டவனது கழலணிகழலில்வீழ்ந்தது. அப்புரவலர் புங்கவன்தனதுகமலம்போன்ற கையா லதையெடுத்து மார்பிலணைத்துத்தைவந் தாதரித்துக் கொண்டிருக்கையில், அவ்வேடன் விரைந்து வந்து மனுநூலை நடத்திக் காட்டு மன்னர் மன்ன! எனக்குணவாக்குவான் யான்வருந்தித் தொடர்ந்த விப்புறவை யென்வயினீவது கடனெனலும், பூபதியானவன் கொல்வது முண்பதும் வேடர்க்குரிய தருமமென எண்ணி, பறவையைக்கொ

க்கவும், சரணமடைந்ததைக் கைவிடவுநேராது வேடனைநோக்கி யென்னைப்பற்றுகைப்பற்றிய விப்புறவன்றி நீவிழையுமெவையுமீகுவல்; விரும்பியதை மொழிவாயென்றனன். வனசரனிறையைத் தொழுது நினதுடலினின்று மப்புறவைநிறை தசையரிந்துதருதியேல் விட்டேகுவேனென்றலும், பூபால னகமகிழ்ந்து துலையிலோர்தட்டிற் புறவை வைத்து மற்றோர்தட்டிற் றனதருமைத் திருமேனியி லோரிதழையளவுந் தசையின்றிக் கூசாதரிந்திடலும், புறவையின்றட்டுப் பூமியினின்று மெழவில்லையாகலால் புரவலர் பெருமா னத்துலைமேலேற வெண்ணுகையில், புறவும் வேடனு மந்தரம் புகுந்து தேவராகிச் சக்கரவர்த்தியை நோக்கி பெரும! நின்னை யொப்பார் யாருமில்லென வாழ்த்திப் பூமாரி பெய்துமறைந்தனர். அத்தேவரருளா லுத்தமன் தனது மேனி நிரம்பப்பெற்றீரேழுலகினுஞ் சீர்த்தியுடன் செங்கோல் செல்லவாழ்ந் திரைம்ப தகவமே தம்புரிந்து நான்கா மனுவந்தரத்தில் இந்திரனாக வீற்றிருந்தனன்; அப்புன்னியன் மரபில் அஜனென்பவ னுதித்தனன்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளே சரணம்.

---

## அஜன் சரித்திரம்.

அஜபூபதி மகாசவுரிய சுந்தரனாகி யுலகாளுகையில், போஜபூபதி தனது புதல்வியாகிய இந்துமதியின் சுயம்வரத்துக்குத் திருமுகம்விடுத்தனன். அயோத்தியராண்டகை வேட்கும் வேட்கையா லப்போழனேய நோக்கி நம்மனிக முந்துறச்செல்க வென்றலும், சேனையுலகி லிடமில்லெனவும், கடையுகமுடிவி லெழுங்கடலெனவு மெழுந்து போயது. வில்லினரும், வாளினரும், வல்லியின் மருங்கினரும், காவியின் கண்ணியரும் களிறென்னவும் பிடியென்னவும் போயினர். உலகஞ் சில்லிடமெனாத் தேர்கள் செறிந்தன. மாகத்திற் பரவுமேகஞ் சிறிதென யானைகள் பரந்தன. கடற்றிரையினும் பெரிதெனக் குதிரைகள் நடந்தன. படைவீரர் கடலெனவீ பரந்து சென்றனர். நீர்த்திரையுந்து மன்னமெனவும், மேகத்தில் விளங்கு மின்னெனவும் புரவியினும் பிடியினு மகளிர்செல்ல, மைந்தர் இந்திரன்போலவும், சந்திரன்போலவும், இரவிபோலவும்யானையினும் விமானத்தினு மிரதத்தினுஞ் சென்றனர். அணிகளிற் பதித்திருக்கின்ற வைரத்தாலு நீலத்தாலு முத்தினாலு மச்சேனை செல்லு நெறியிற் பகலு மிரவு நிலவுங்கனப்பொழுதிற் றோன்றும், மறையும். விண்ணிற்சரிக்கு மேகங்கள், முரசினோதை யிடியெனவும், யானைக்கூட்டங் கடலெனவும், தூபம் போன்ற துகிற்கொடி தம்மினமெனவுங்கருதி யணையா நிற்கும். இவள் இம்பர்க்குத் தரமல்லள். உம்பர்கோனுக்கே தகுமென்னின்றநோக்க, மத்தக்களிறு தன்முன்விரைந்து வரலைக் கண்ணுற்று வெருண்டகுதிரை யையமெல்லாவற்றையும் விலைகொண்ட கண்ணுளொருத்தியைச் சுமந்தோடலும், வீழுவி விழதுற்றவனையோர்மன்ன னெழு

விலு நீண்டகரத்தாலேந்தித் தழுவித் தரையினும் விடானாகிப் புல்லினின் றொழியானாகிக் குதிரையினும் வையானாயினன். ஒருத்தியினது கலசம்போன்ற கொங்கையில் வைத்தபார்வை அம்முலைத்தட நெருக்கிலகப்பட்டு வாங்கப்பெறாமற் புடைசெல்லு மோராடவன் அந்தரைப்போ லோர்களிற்றைமுட்ட வக்கரியோர் பிடியின்மேற் கைவைக்க வப்பிடியிலிருந்த மங்கையர் கலங்கி யிருகைகொண்டு கண்ணைப்புதைக்க வக்கரத்திற் சண்ணடங்காமையா லேங்குவதைக்கண்ட மைந்தர் யானையைப்போக்கி யூடலைத்தீர்த்துக் கொண்டார். இத்திறத்தினராகி மாந்தரு மாதரும் வழிக்கொண்டுசெல்ல, இறையவ னிறையாகிய அஜன் மறைவல்லவர்க்கு மணியும், பொன்னும், ஆனும், பாரு நல்கி மங்கலமுகூர்த்தநாளி லெண்ணிறந்த வந்தணர் பூரணகலசமேந்தி யருமறையோதவும், மங்கலமங்கையர் வாழ்த்தெடுக்கவும், மாகதர்பாடவும், முடிமேற்குவித்த கையராகிமன்னரிருமருங்குஞ் செல்லவும், மற்றோரிந்திரனென வெழிலுடைத் தேர்மிசையேறி, சங்கமும் பணைகளுந் தாளமுங் காளமுங் கொம்பு மங்கலபேரியு மழையையோட்ட, சிரசிற்றரித்திருக்கின்ற முடி கதிரவனைத் துரத்த, வெண்குடை சந்திரனைவெருட்ட, நெறியிற்சென்றனன். வேதகீத வோதையும் வலம்புரிமுழங்கு மோசையு மந்தணராசி யமலையு முரசின்றுழனியுங் களிற்றி னரவமு நாலிரண்டு திசையினும் விம்மி யெழுந்தன. இன்னணம் பலகாவதஞ்சென்று, இருகரையினுந் தண்டலைசெறிந்தும், முளரி, காவி, கழுநீர் பானல்முதலான பூச்சாலம் பூத்தும், திரையாற்றுறைகடோறும் பொன்னையு மணிகளையுங்கொழிக்குங் காவிரிமாநதிபோன்று பெருகுகின்ற நருமதா நதியைச்சேர்ந்தனன். மலையினின்று மிழிந்து முழைசேரு மரியெனக் கரியினின்று மிறங்கி யிறையவர் தமது பல்லிய முழங்கவுங் கவரிவீசவும் வெண்படத்தாலாகிய மாடங்களிற் புக்கார். மின்னொடும் பொலியு மேகம் படிசேர்ந்தெனப் பிடிபடிதர, அதனினின்று மிறங்கி நூபுரம்புலம்ப வன்னத்தினொதுங்கிக் கொடிபோனுணங்கிப் படமாடத்திற் சிலமாதர்புக்கார். புரவியினின்றுமிழிந் திழைகளுங் குழைகளுங் கலாபமும்விளங்க, நெருங்கிய மரச்சூழலிற் புகுந்த மாதர்கள் பூத்தகொம்பாமெனப் பொலிந்தார். தாளிற்கழல்களார்ப்ப, தாரிலளிகளார்ப்ப, கட்டியவாள் மருங்கிலிலங்க, தோளில் வலயமின்ன மைந்தரும், பூணுங்குண்டலமுங் கோவையுமின்ன, அளகத்தி லளிகளார்ப்ப, அடியினூபுரமொலிக்க மடந்தையரும் உய்யானங்களிற்சேர்ந்து, மரப்பூ கொடிப்பூ நிலப்பூ நீர்ப்பூமுதலியவைகளைக்கொய்தார். மங்கையர் தமதுநஞ்சினுங்கொடியகாட்டத்தாலமுதினு நயந்துநோக்கிமலர்க்கையாற்றொடலும் பூத்தகொம்பர் சிலம்புடைய வடியின் மென் பூவைச்சொரிந்து தாழ்ந்ததென்றால், வான்போன்ற கண்ணார்மாட்டு வணங்காதார் யாவராவர். மாரனை யேவல்கொள்ளு மங்கையர் தங்கள்கை விரல் தொடலும் மைந்தரது புயமாகிய வரைகள் வந்து தாழுமாயின், தளிர்த்த பூங்கொம்புகள் தாழ்ந்ததென்னுத லருமையாமோ ? நெருங்

இளிளசீரை போர்தோன்றலுக்கி யிவையயில்போன் றுடைவராவிளை யுன்னுங் கண்ணுநுடைய கொங்கைகளாகுமென்னறு மெம்மாதர்முலை க்கொப்பாகுமென் றோங்கை யிம்மாவெதும்பா முகம்வெயராவெய் துயிர்த்தான். போலொணவெ லீங்குக் இளவேடோனையுடைய வோர்செம்மல் மலர்கொய்து கொண்டிருக்க வோர் குயிலன்ன மொழியாள் பின்வந்து கண்ணைப்புதைப்ப, அவனுமொன்னறு மனலென்னவிழித் துயிர்த்தாள். இவ்வாறு பூக்கொய்த அரசரும் அனங்கரும் வனகரி பிடிகளொடு வருவதுபோல நருமதையைச சார்ந்து நீராடினாகள். மயிலன்னார் குழா த்துநின்ற வோர்குரிசில் கன்னகன்ற கான்யாற்றிற் பிடியெல்லாஞ்சூழ நிற்கு மதயானைபோன்றான். அமிர்தமெழக்கடைந்தா ளக்கடலிடைத் தோன்றிய நங்கையொல்லாருஞ் சூழ நடுவினின்ற மந்தரமென நீராடு மங் கையர்குழாம்புடைசூழ வோர்தார்வேந்தனை நின்றான். வென்னுனால் கற்றிய கலசங்கள்மானக் கூருநீராற்சாந்துகழிந்து தெரியுங் கொங்கை களைச்சுமக்கு மோரேரிழை தன் காயததால் வெதும்ப, அயனுடலினது வெப்பத்தா லத்தண்புனல் நீராடும் யாவர்க்கும் வெந்நீரெனலாயிற்று. கண்வெப்புறக் கலவையழியத் துகில்விலக பாருமுலையையுடைய மடந்தை யர் தோய்தலா லந்நீர்த்தய காதற்கொழுநனைப் போன்றது. புனலாடலை வெறுத்துமைந்தரு மாதருந் துகிலொடு பூண்டரித்துக் கோலங்கொண்ட னர். குயிலன்னாருங் கரியன்னாரு மாடிய நீர்விளையாடலைச் சூரியனுங் கித் தானு மன்னது புரிவான் ஆதரித்தானென்ன யிரைவிற் குடகடல் புக் கான். அவ்வேலையிற் செந்தாமரை பூத்ததென யச்சேனை வெள்ளத்திற் றீபம் விளங்கின. ஆற்றலின்மையி னொதிர்நிற்க வொண்ணுதழிந்துந் தமது வெற்றுமன்னர் மேல் மீண்டுவரும் வேந்தர்போல மாதர்முகங்களோடே ற்றுத் தோற்றசந்திரன் வெட்கமில்லாது மீளவுந் தோன்றினன். ஒரு கோலோச்சித் திகிரிகொண் டுலகாண்ட மன்னனிறத்தலுந் தலையெடுத்த குறும்பரையோட்டி யுலகைக் கைக்கொண்டு புரக்கு மற்றோர் சக்கரவர்த் தியெனச்சந்திரன், கதிரவன் கழிதலும் பரந்த யிருளைப்போக்கித் தோன் றினன். ஆதிப்கவனுந்தியுந்திய கமலத்திடையுதித்த பிரம னளித்த வண்டம் பழமையடைந்ததென நிலவாகிய வெண்சுதையைக் கொண்டு கிரணங்களாகிய கைகளாற் புதுப்பிப்பான் போலவும், கொழுநருடன் கூடியவர்க் கினியவன்போலவும், அவரைப் பிரிந்தவர்க் குயிரைச்சுடும் வெண்மையான விடம்போலவும், வடியவர்க் குதவிசெய்கின்ற வோர் து தன்போலவும் விளங்கினன். அக்காலை மடந்தையரு மாடவரு மயிர்தம் போன்ற வுணவையுண்டு மங்கையர் பாடலாடலைக்கேட்டு நோக்கியுமுடி யுங் கூடியுங் கங்குலைகழித்தனர். மீனென்னு மெயிற்றை யுடைய கங்குலாகிய களகினை வெகுண்டு கதிர்களாகிய வாயிரங்கரங்களை யோச்சி யுதயகிரியாகிய தறியுணின்று நரமடங்கலெனக் கதிரவனுதித்தனன். பாயும்பசும்புரவி குரத்தா லுதயகிரியைமிதிப்ப வதனினின்று மெழுந்த துளியடங்க, விப்பிரருடைய கையினின்று நறைமலரு நிறைபுனலும்

பரந்துபாய, நான்மறைகறங்க, மாகதரிசைபாட, வேலையென்னு முழவ
திர, விருந்தினரைக்கண்ட நற்குலத்தோர் முகமெனச் செங்கமல மலர,
கற்றோரைக்கண்ட கல்லாதாரெனக் கூகையடங்க, இனிய தமிழ்ப்பாசு
ரங்களால் மாந்தர தகவிருளைப் போக்குமெமது குலதனமாகிய குலசேக
ரப் பெருமாள் வகுளபானு முதலோரெனக் கிரணங்களா லண்டத்தின்
புறவிருளைநீக்கி வெய்யவன் வேலையிற்றோன்றினன். அரசன் நித்தியவி
திகளை முடித் தந்நதியைக்கடக்கையில், அவ்வாற்றினின்று மோர்மதமலை
யெழுந்து தானையைத் தடிதலும், புரவலனதைக்கண்டு சமரத்திலன்றிக்
கைம்மலையைக் கொல்லவொண்ணாதென்ற விதியையுன்னி யுயிருண்ணாதக்
களிற்றைப்போக்குவான் ஓர்சரத்தை யதன்சிரத்திற் செலுத்தினன். மேக
ம்பூமியிற் படிந்தாற்போல வீழ்ந்த கடகரியினது மெய்யினின்றுமோர்
புருடன் தோன்றி யெந்தலைநோக்குறு நான் பிரியம்பதனனென்ற கந்
தருவன். மதங்கமாமுனிவரது சாபத்தா லிவ்வேழமானேன். இவ்வுருத்
தீருங்காலம் யாதென வினவியவெனக் கம்மாமுனி யருளியபடி நின்னு
லிக்கடைபடு பிறவியைத் தொலைத்தேன். ஆதலானின்னை அயோத்தியர்
கோன் அஜனென்றறிந்தே னெனவாழ்த்திக் கைம்மாறாகச் சம்மோகன
மென்ற வோர்பாணத்தைக்கொடுத்துக் கந்தருவன் றனதுலகுபுக்கான்.
வேந்தன் நெறியைக்கடந்து போந்து மீனினடுவிற் பொலியுஞ் சந்திர
ன்போல அங்கராதிபதி, வங்கநரபதி, கங்கர்கோன், கொங்கர் பூபாலன்
குலிங்கர்வேந்தன், கலிங்கரேந்தல், சேரலர் பெருமான், சிங்களரரசன்
சீனர் கோமான், தெங்கணர் குரிசில், கொங்கணர்கோ, குலிந்தர்நிருபன்,
மராடர் கொற்றவன், விராடர்தலைவன், லிலாடர் காவலன், செஞ்சகரன்
னல், சோமகர் புரவலன், தெலுங்கர் பூபதி, கருநடராண்டகை முதலா
கிய மன்னர்கள் மத்தியில் வீற்றிருக்கும் போஜன்அவையிற் றினகர
னெனத் தோன்றி வீற்றிருந்தான். அவ்வேலை போஜன் தனது தங
யையைமீண்டுத் தருதிறொன்று மடந்தையரையேவ,அவர்சென்று இந்துமதி
யின் தாதியிடத்திற் சொன்னார். குவிந்துவிரியுந் தன்மையாற் செந்தா
மரையையிழித்துப் பாட்டிசைக்கு நூபுரமணிந்துபொலிவு மிணையடி
யையும், புலாறுறலாற் சினைவராலையுஞ் செய்யினுள் வளர்தரா னெற்சி
னையையுங் கொல்லும் பகழியைக் கொண்டிருத்தலா லாவத்தையு மிகழ்
ந்து விளங்குங் கணைக்கால்களையும், கதலியின திளந்தண்டினழகை யழி
த்துப்பொலியுங் குறங்கினையும், பாரைப்பிடரிற்றாங்கும் பாந்தளின்பண
மும் கதிரவன் றேருமொப்பாகாத வல்குலையும், கையாற்றொட்டாலன்றிக்
கட்பொறிக்குத் தோன்றாத இடையையும், மாதவரு மற்றவரும் வானு
ளாரு மனமயங்கி விழுந்தழுந்து முந்திச்சுழியையும், வட்டக்கண்ணடி
போன்ற வயிற்றையும், பூணூற்பொலிந்து புடைபரந்துவீங்கிப்பொலிந்து,
கலசத்தையுஞ் செவ்விளநீரையுஞ் சூதையுந் தும்பிக்கொம்பையுஞ் சக்க
ரவாகத்தையு மிழித்து, மதனன் சிரசிற் கொள்ளத்தரு முடியென விள
ங்கும் கொங்கையையும், சக்கரத்துக்கயனிற்குஞ் சங்கமெனப் பொலி

யுங்கழுத்தையும், சந்திரன்போன்ற வதனத்தையும், குமுதநிகர்த்த செவ்வாயையும், களித்து மதர்த்துநீண்டு தேப்பிணையளர்ந்து வெளுத்துக் கறுத்துச் சிவந்து, கொல்லுங்கூற்றையும், வேலையும் வென்று விளங்கும்விழியையும், வில்லொத்த புருவங்களையும், மேகத்தைக்கழித்திருட் பிழம்பிற்றோய்த்தாற்போல விளங்குகின்ற கூந்தலையுமுடைய இந்துமதியினுருவி னழகினைமறைக்கு மென்றும், மெலியுமிடைக்குத் துன்பமுண்டாகுமென்றுமோராது பேதையர் பூண்களைப்பூட்டி யிரண்டு குவளைபூத்த வோர்தாமரையின்முளைத்தபிறைநாப்ப ணோர் மீனுண்டே லஃதொப்ப நுதலிற்றிலகமு மிட்டனர். மென்னடைக்குத் தோலைந்து அன்னமெழுந்து விழுந்தயர்வபோலச் சாமரைகுலாவப்பலமின்க ளொலிற்றோன்று மின்னரசெனமங்கையர்சூழ இந்துமதியவையில்வந்து, அந்தணரையுந் தந்தையையும் பணிந்து மற்றரசர்முக மதியைக்கண்ட மரைமலர்போலாக அயோத்தியராண்டகை திண்டோளில் வண்டுறைமதுமாலைசூட்டி வணங்கினள். போஜன் விதிமுறைப்படி சீருடன் இந்துமதியெனுந் திருவையல்க, அஜபூபதியம்மாதுகரம்பற்றி மணமுடித்து, இன்பவாரிதியி லாழ்ந்து, அயட்சின்றுட்டங்கித் தனது மாநகரைச்சார்வான் கன்றுளிலெழுந்து சேனைக்கடல்சூழ மறையோராசிகூற, புலவர் செங்கைகூப்ப, அரிவையர்பாட, மாகதரேத்த, பல்லியந்துவைப்ப அயோத்தியா நகரடைந்து, இந்திரனுஞ் சசியும்போல வாழ்க்கையில், ஜெயமூர்த்தியின் பிதாமகனுக்குத் தான் பிதாமகனுவா னருந்தவமுயன்று தசரதசக்கரவர்த்தியைப் பெற்றுப் பெருங்களிச்சலதியின்மூழ்கி வைகுநாளி லோர்நாள் நகர்ப்புறத்திலுள்ள வோராராமத்தி லரசன் தேவியோடு விளையாடிக்கொண்டிருக்குங்காலை கோகர்ண க்ஷேத்திரத்தில் நாரதபகவானது வீணையினின்றுமோர்மலர்த்தொடையல் வந்து இந்துமதியின் தனத்தில்வீழ, அவள் விண்ணுலகேறலு மரசன்வருந்திநிலத்தில்வீழ்ந்துபுரண்டு புலம்பி நாவுலர்ந் தைம்புலனுமலர்ந்தலையுற்றழுங்காலை பகவான் வசிட்டமாமுனிவரெழுந்தருளிமன்னர் மன்ன! அயரேல்; திரணபிந்து வென்ற வோர்கோமான் எரிகாப்பணிருக் தருந்தவ முயற்றலு மதைக்கெடுப்பான் தேவர்கூடி அரிணி யென்ற தேவமாதை யவ்வரசமாதவன்பால் விடுத்தனர். அவ ளவன்மாட்டணுகித் தன்வயமாக்குவான் நடித்துக்காட்ட, அம்மாதவன் யோகத்தா லதினைந்தர் வினையமென்றறிந்து சினந்தவ்வரிணியை நோக்கி மானிடப்பெண்ணாதி யென்று சபித்தனன். அவ ளிவ்விந்துமதியாய்த்தோன்றி நின்னை மணந் தின்ப நுகர்ந்திருந் தக்கோமுனி சாப நீங்கிய வின்று பூமாலை காரணமாகத் தனதுலகுபுக்காள். அவளைப்பற்றி நீ யிரங்கலிற் பயன் யாது? கற்றோயெனத் தேற்றினர். பூபாலன் சிறிதுதேறித் தசரத சக்கரவர்த்தியினது சிரசிலுங் கையிலு முடியையுங் கோலையுந் தந் தருந்தவம் புரிந்து கங்கை சரயுசங்கமத்திலுடலை நீத்து ஸ்ரீபரவாசுதேவனது திருவடி நிழலிலமர்ந்தனன்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளே சரணம்.

## தசரதன் சரித்திரம்.

சூரியகுலமு மண்ணும் விண்ணுமுயன்ற வரும்பெருந்தவத்தாற்றோன் றியதசரதசக்கரவர்த்தி மதியுமறனு மருளு மமைவு மிடனும் வீரமு மீகை யும் வேந்தரும் பணிகேட்ப, விண்ணிடை மதிபோற்றேய்ந்து வளராது, தண்ணிழல் பரப்பி யிருளைப்போக்கி விளங்கும் வெண்குடை மேலிலங்கப் பகைவர தாவியுண்ட வாள்புடையிலங்க மனு நூனெறியைச்செங்கோல் காட்டக் கருணையினியல்பைச் செங்கண் விளக்கக் கொடையின் பண் பைச் செங்கையுணர்த்த அரக்கரும் பிறவியுமாகிய பிணி வேரறுப்பான் ஓர் மருத்துவனைத்தரு நல்லறமூர்த்தியெனத் தேவரு முனிவரு மக்களும் வாழ்த்தக் கோசலை சுமித்திரை கைகேசியென்ற தேவிமாருடன் வா ழுநாளிற் கணிதநூலோர் மன்னனைநோக்கா, சனிபகவான் கார்த்திகை நா ளினின்று முரோகிணியிற் போதப் போகின்றனனுகலி னிம்பருமும்பருந் துயருறப் பன்னீராண்டுவான்வழங்காது. வறுமைநோய் வருமென்றனுஞ் சக்கரவர்த்தி சிறிது கலங்கி, சூரவனுகிய அருந்ததி அன்பனாயர்ச்சித்திரா னுண்டுப் பஞ்சம் பீடியாதொழியுமா றடிகள்சொற்றுகவெனக்கைகூப்ப, பகவான் வசிட்டர் மன்னைப் பாராச் சூரியன் மரபிற்றோன்றிச் சுடர் நே மியாண்ட ஆரிய! அமரர்க்காக அசுரரை யாவி யுண்ட வீரிய! சனியின் செயலைத்தடுக்க வொரதையாலு மவன் றந்தையாலு மாகாதெனக் கைவிரித் தனர். அப்புரவலர் புரவலன் கார்முகமேந்தித் தேர்மேலேறிப் புவிக்குமே லோரிலக்கம் யோசனையுயரத்தில் மார்த்தாண்டமண்டலமு மதற் கவ்வள வுயோசனையிற் சந்திரமண்டலமு மதற் கிரண்டிலக்கம் யோசனையில் நாளின் மண்டலமு மதற்குமேல் நாலைம்பதினுயிரம்யோசனையிற் புதன் மண்டலமு மம்மண்டலத்துக் கவ்வளவுயோசனையிற் சுக்கிரமண்டலமு மதற் கிரண்டிலக்கம்யோசனையி லங்காரகமண்டலமு மதற்கிலக்கம்யோ சனையில் பிரகற்பதிமண்டலமு மதற்குமே லைம்பதினுயிரம் யோசனையி லிருக்கிற சனிமண்டலஞ்சேர்ந்து, உரோகிணி நட்சத்திரத்திலேகுநீலனுக் கெதிர்தோன்றி, அப்பொங்காரத்தான் வெங்காரத்தா லுங்காரத்தோடு வி ன்னுணை மாட்டிச் சங்காரக்கோல்பூட்டிப் பயங்காட்டி நிற்குங்காலை, சாரி பகவான் றன்னெண்ணு மனத்தினனுகி வீர!நீயாவன்? எவன் புரியவிட் போந்தனை? என்று வினவ, மன்னன் றனது பெயரையும் வரலாற்றையும் விளம்ப, அவற்றைக்கேட் டிவட்போத நினக்கன்றி மற்றொருவர்க் கொ ண்ணுமோ. நின் வலிகண்டு மகிழ்ந்தேன். என்னுலென்று நின்னுடு துய ரடையாதென வரனளித்தனன். எந்தல் மகிழ்ந் தவனைத்துதித்தனுங் கதி ரவன்காதல னுள்ள மகிழ்ந்து மன்னர் மன்ன! நீ யேத்திய வித்தோத்தி ரத்தைப் பாராயணஞ்செய்வோரு மென்னுற்பீடிக்கப்படாரென்றகூறி வி டைகொடுத்தனன். விண்ணவர் பூமாரிபெய்தனர். மண்ணவரிறைஞ்சினர். முனிவ ராசிகூறினர். மாகதரோத்தினர். சுமங்கலமங்கையர்வாழ்த்தினர். ஏந்தல்தடமதி லயோத்திவந்து வாழ்ந்தனன்.

அறுபதினாயிர மாண்டாண்டும் புத்தென்னு நரகத்தைப் பிழைக்கப் புத்திரனைப் பெறாமையின் மன்னன்மனம்வருந்தி பகவான் வசிட்டமாமுனிவரைவலம்வந்து தண்டமிட்டு முடிமேற்குவித்தகையனாகி யெனதுதொல்குலத்துக்குத் தாயுந்தந்தையுந் தவமுந் தெய்வமுமாகிய வெந்தை! நீயிவ்வழுவா தறம்வளர யிவ்வுலகை யோம்பினேன். மரபு விளங்கப்புதல்வனைப் பெற்றேனில்லை யாதலா லயமகம்புரிய வெண்ணுகின்றனென். தேவரீர் திருவுளமெவனோவென்று தொழுதும் பிரமபுத்திரர் மனமகிழ்ந்து யாதொருதோஷமுமில்லாத நீ அசுவமேதம்புரியவலக்குமென்றருளிச் சுமந்திரனைக்கூவி மன்னன் மகம்புரிவான் சரயுமாநதியின் வடதீரத்திற் சிற்பரைக்கொண்டு யாகசாலை யமைத்து வேள்விக்குரிய கலப்பைமுதல் யாவும் விரைவிற்சேர்க்கவென்றுச் செப்பித் தமது மாதவப்பள்ளி சார்ந்தனர். சுமந்திரன் தமியனாயிருந்த பிதாமகன் பிதாமகனை நண்ணிக் குவிந்த கோகனகம்போன்ற கையனாகி வாளையுகள, கயல்கள்வாவ, குற்சங்கூர, வரால் குதிகொள் பண்ணை வளநாட! என்னிறந்த காலத்துக்குமுன் பகவான் சனற்குமாரர் பிரமருஷிகளைநோக்கி, விபாண்டகமாமுனிவருக்கு ரிஷியசிருங்கரென்பவர்தோன்றி, ரோமபாதனென்றவேந்தனது அங்கதேசத்தைப் பீடிக்கு மீராறுண்டுப் பஞ்சத்தைநீக்கித் தசரதசக்கரவர்த்திக்கு மகமுற்றுவிப்பர், அதனாலச்சக்கரவர்த்தி வயின் பரம்பொருள் மனிதவடிவா யவதரிக்குமென்றருளினார். அதை யானறிவேன். அம்மகாயோகி யருளியபடி அங்கதேசத்தை வறுமைநோய்கலியனு மரோமபாதன்ரிஷியசிருங்கரைக் கொணர்வான் முனிவர் விப்பிரர் அமைச்சர்முதலியவர்களை யனுப்ப வம்மாமுனிவர் வாராமையுணர்ந்து வீடுற்றவரும் விரும்புமாறெழில் விளங்கு மங்குன் மகளிரை விடுப்ப, அவராந்தவர்பாற்சென்று தமதுழைப்பிறைவராச்கொணர்தலும் வான்பிலிற்றி அங்காடுசெழித்தது. அவ்வங்க ரதிபதிதனைக்குத்தநயனுந் தநயையுமில்லென்று பெரியோய்! நீ யருமையாய்ப்பெற்றெடுத்த சாந்தையென்னுந் திருவைக்கொடுக்குதியென்று நுன்னைப்பிரார்த்தித்தனுநேசத்தாற்கொடுத்தனையன்றோ? உரோமபாதனப்பெண்கொடியை விபாண்டகன் காதலருக்கு நீருடனளித் தம்முனிவரருளாற் றன்புத்திரனையும்பெற்றுவாழ்கின்றனன். பகவான்ரிஷியசிருங்கருமாங்கிருக்கின்றனர். வசிட்டரருள்பெற் றெந்தலைவ! நீயேகி யருந்தவனையீண் டழைத்துவந்துமகமுற்றுவித்தாற் புதல்வர்பிறப்பரெனவுரைத் தச்சுமந்திரன் விடைபெற்றுத் தொழுதுபோந் தருந்தவன் பணித்தவாறு வேள்விக்குரிய யாவையுஞ் சேகரித்தனன். இவ்வாய்மையைக்கேட்ட கோசலர் பெருமானதுள்ளத்தினிலையை யொருவராலுமுன்ன வொண்ணுமே. வாகுவலயங்கள் நிமிர்ந்து நீங்கிடத் தோள்கள் மலையென வளர்ந்தன. தாரகவாச்சியனுன வெனையனைப்பெற்று வளர்த்தெடுத்து மார்பிலணைத்து முத்தமிட் டுச்சிமோந்து மழலைச்சொற்கேட்டுக் களித்தானென வப்போதே யுடல்தடித்தான். அவ்வேலை சக்கரவர்த்தி கந்தேசிகர்வருகென்ன, அன்னமுரு மந்தனன்

போல வெண்சிவிகைமேற் கோடியந்தணரருகுசூழ்வரக் கண்டவர்செங
கைமுடிமேலேற வாயில்களனைருக்கநீங்கப் பகவான்வசிட்டமாமுனிவர்வந்
தார். அறமூர்த்தி யெதிர்கொண்டேத்தி மணித்தவசிட் டருத்தியோட
தனினிருத்தியர்ச்சனைபுரிந்து செங்கையாற் செவ்வாய்புதைத் திவ்வேள்வி
யின்பொருட்டு ரிஷிய சிருங்கமாமுனிவ ரிவணெழுந்தருளப் பிரார்த்திக்க
லாமா? தேவரீர் திருவுளத்தின் குறிப்பறியேனென்று தொழலும், மாதவத்தி
மூவர்மனத்திலெண்ணி மன்ன! நாளுங்கருதியததுவே. அம்மாமுனிவனைக்
கொண்டு புத்திரகாமேஷ்டி முடித்தாற் புத்திரர்தோன்றுவர். நீயேயேகிய
ழைத்துவருவாயென்று விடைகொடுத்தருளினர். அரசன் மகிழ்ந்து வே
தியராசிசொல்ல, அமைச்சர் புடைசெல்ல, பல்லியமுழங்க, நால்வகைச்
சேனை முன்னும் பின்னுமேக வேகி, அங்காடுறைலும் உரோமபாதனநிந்
தெதிர்கொண்டு தயாதனை வணங்கிப் புல்லித் தனது மணித்தேர்மேலேற்
றி நகரங்கொணர்ந் தன்புட னுராதித்தலுந் தசரதன் தான்வந்தபரிசுரைத்
தவ்வங்க ரதிபதி யுதவியாற் கலைக்கோட்டுமாமுனிவரை யவர்பத்தினி
யாகிய தனது புதல்வியுடன் அயோத்திமாநகரங்கொணர்ந்து, பகவான் வ
சிட்டரை முன்னிட்டுக்கொண் டருத்தியுடன் கலைக்கோட்டுமாமுனிவரை
யர்ச்சித்தனன். தேவிமார்மூவருந் தநயையாகிய சாந்தையைப் பால் முலை
பெருகத்தழுவிக்கொண்டார். மகத்துக்காக மகத்துக்களு மந்தணருந் தொ
குதிதொகுதியாய் வேத நவிறரு நாவரராய் வந்தனர். அரசர் திறையொடும்
வந்திறைஞ்சினர். அவ்வேலை புரவலர் பெருமான் இட்சுவாகுமுதலியவரச
ரெண்ணிறந்த மகங்கள் புரிந்த சரயுமாநதியி னுத்தரதீரத்தில் விதிப்படி
யமைத்திருந்த யாகசாலை புகுந்து தேவிமாருடன் தீட்சை செய்துகொ
ண்டு, இலக்கணமமைந்த வோர் பாய்மாவை யோராண்டு பூவைச்சுற்றிவர
மந்திரமோதிவிடுத்தனர். பகவான் வசிட்டரருளா லந்தணர்முழுக்கல்லோடு
காலரை முக்காற்கற்களையுஞ்சேர்த்துப் பெரிய திருவடிவடிவாய் வேதிகை
திருத்தி யோமகுண்டம் வகுத்து, ஒரைந்துடன் மூன்றுபட்டமு மோரோ
ரேழ் முழமுயரமு முள்ள யூபங்கள்பத்துப் பதினொன்று நாட்டித் தாசா
லும் பூவாலு மலங்கரித் தவைகளிற் பசுக்களையணைத்து விதிப்படியாவும்
புரிந்தனர். ஈராறு திங்கள் கழிந்துவந்த பரிமாவையும், பசுக்களையு மந்திர
மோதி மரிப்பித்தலுங் கோசலை சுரிகை கைக்கொண் டவற்றின் வயிற்
றைப் பீற வபையையெடுத்தனர். ஓமத்துக்காக மற்றைத் தசைகளையும்
பாகசாலையி லடுதல் புரியுங்காலை தசரத சக்கரவர்த்தி யவ்வடுசாலை நண்
ணி வாழ்நாள்வளர்ப்பா னட்டிலின் றூமத்தை வாயாலு மூக்காலு முன்
டெலிலும் வூட்டிக்கொண்டனன். பின்பு முனிக்கோவபைமுதலியவைக
ளையும், பலவிதப்பறவைகளையும், வெருட்டியெழும் வியாளங்களையு மாகுதி
செய்து புத்திரகாமேஷ்டியும் புரிந்தனர். ஓம குண்டத்தினின்று மெரிப
ங்கியுஞ் சிவந்த கண்ணுமா யோர் பூதம் பொன்வள்ளத்திற் பாயசங்கொ
ணர்ந் ததைத் தரையில்வைத்துமீண்டும் வன்னிவழிபுக்கது. விபாண்டகன்
காதலராளன் மன்னர் மன்ன னப்பாயசத்திற்பாதி கோசலைக்கு மப்பா

னியிற் சொரிந்து சுமித்திரைக்கு மிருந்ததிற்பாதி கைகேசிக்கு மற்றதை மீண் டுஞ் சுமித்திரைக்களித்துச் சரயுமாநதியி னீராடி யவையில்வந்து, அந்த ணர்க் கன்னஞ் சொன்னங் கோபூ முதலியவைகளைச் சொல்லுடனல்கி யரசர்க்குப் பரியுங் கரியும் வெறுக்கையும் விடையுங்கொடுத்து, மகமுடித்த கோமுனிவரை வசிட்டருடனால்வலம்வந்துவணங்கிக்கைகூப்பி யெந்தை யீர்! நமது நாளா லடியேனுய்ந்தனனெனப் பலமுகமனியம்ப வம்மாமுனி வர் மகிழ்ந் தாசிகூறி யருந்தவர்சூழ முத்தொத்த மெய்யாகையுடன் அங்க காடடைந்தனர்.

தேவர்கட்கருஷிகட்கபிராஹ்மணர்கட்கனைய இராவணன்செய்யுங்கொடுமையால் சாகாமருந்துண்டமருந்தாரேனு முயிரிழக்குந்தன்மையராய்த்தேவர்கட் சிற்றயிலுங்கடல்வண்ணனுகியமுதற்பெருந் தேவையிறைஞ்சி இராவணனிராவணஞ்செய் தெம்மிட ரைப்போக்கிக்காவாயென்றுதொழும்பத்தவற்சலனை அப்பரந்தாமன் அத்தேவரை யாநனால்நோக்காத் தசரதன் மதலைகளென நான்குமூர்த்திகளா யவதரித்து நுங்கருத்தை முடிப்போமென்றருளுந் தேவரெல்லாருந் தொழுதுயர் தவிர்ந்தனராங்கவியுருவெடுத்தொருவருக் குதவிசெய்வான் கருதி வானரங்களாகுவரென மெய்க் காப்புவாயுகல்வர்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளே சரணம்.

---

## இரகுநாதன் சரித்திரம்.

பின்னர்ப் பாயசமுண்ட தேவியர் மூவருங் கருவுற்றுயிர்க்கும் பருவம் வருதலுந் தருமதேவதை நடம்புரிய, மாமறைகள் முரசறைய, பல்லியந் துவைப்ப, விண்ணோரேத்த, மண்ணோரிறைஞ்ச, முனிவரகமகிழ, பரமபதநாதனை, பரந் தாமனை, பத்தவற்சலனை, சர்வலோக சரணியனை, சாவஞ்ஞனை, அரவிலறி துயிலமலனை, ஆதியை, அநாதியை, ஆராவமுதை, அயனரனுக்கரியானை, தெய்வநாயகனை, கற்க இனியானை, உன்னுவாருள்ளத் துவந்துறைசோதி யை, எங்கணாயகனை மேடமாதத்தி னவமிதிதியில் புனர்பூசநாளிற் கற் கடகலக்கினத்திற் கோசலைத்தேவியா ரீன்றார். கைகேசி பூசநட்சத்திரத் தில் மீனலக்கினத்திற் பாரபுகழு மைந்தனையும், சுமித்திரை ஆயிலியத்திற் கடகலக்கினத்தி லோர் மைந்தனையும், மகத்திற் சிம்மலக்கினத்தி லோர் மைந்தனையு மீன்றனர். அவ்வேலை உம்பரெல்லாரு மும்பரிற் பல்லியமுழ க்கி யரக்கரொன்ற தீவினை தம்மைப்பற்று தொழிந்ததெனு மெம்பலாலேழி சைபாடி யாடிக்களித்துப் பூமாரிபெய்தனர். கண்ணிலானொருவன் கண்பெ ற்றனெனச் சக்கரவர்த்திமனமகிழ்ந்து பகவான்வசிட்டமாமுனிவ ருடனா ற் சரயுமாநதியினீராடி, வித்தும் வித்தமு மறையோர்க்கீந்து திருவவதாரஞ் செய்த பரமான்மாவின் திருமுகநோக்கி யவையில்வந் திந்திரனெனப் பொலிந்து புரவலரெல்லாரு மேழாண்வெளாயினு மிறையிறுத்தல் தவிர்க

வென்றும், சிறையிலிருக்கு மன்னர் தம்பதிகளுக்குச்சென்று நாடாள்கவென்றும், தேவாலயங்கள் புதுக்குகவென்றும், பிரஹ்மாலயங்களமைக்கவென்றும், நிதிச்சாலைகளின் குறைநீக்கி முறைகெட யாவருமள்ளிக்கொள்கவென்றும் பறையறைகவெனப் பணித்தனன். வள்ளுவரவ்வாறறைதலு நகரமாந்தரு மாதரு முவகையென்றவளக்கருளாழ்ந்திச் சக்கரவர்த்திக்குத் தோன்றல்கள் தோன்றினரென் றுரைப்போரெல்லார்க்கும் நிதியளித்தனர். அவர்களது பெருவகையையெவனுரைப்பல். ஜனித்தவர் புராணபுருஷோத்தமரென் றந்நகரா ரறிந்தனரோ வஃதறியேம். மெய்யிற்புளகம்போர்ப்ப மனமுருகவென்புருகவன்புகொண்டா ரிஃதென்னையென்னே? இம்மண்ணுலகிலன்றி விண்ணுலகினுங்களிப்புக் கைம்மிகுந்திரா றுவைகல்சென்றபின் பிரமபுத்திரர் தமதுதிருமனத்திலெண்ணி மகாயோகிகள்ரமிக்கும் பரம்பொருளே கோசலைமதலையாயவதரித்தமையால் ராமனென்றும், மற்ற மூவர்க்கும்பரதனென்றும் இலட்சுமணனென்றும் சத்துருக்கினனென்றுந் திருநாமமிட்டனர். பின்னர்ச் சக்கரவர்த்திகுமரர் அமுதூறு குதலையோடிளநடைபயின்று சதுமறையெனவும், வளர்பிறையெனவும் வளருநாள் வசிட்டமாமுனிவர் தாமு மற்றயோகிகளுந் தியானிக்கு மரூபமான பரவஸ்துவை யோர் திவ்விய மங்களரூபத்துடன் தினந்தோறுங் கண்ணாரச் சேவிப்பானிச்சூரியகுலந் தோன்றிய நான்முதலக்குலதேசிகரா யமர்ந்திருக்கின்றுராகலால் இராமன் புதல்வனென்றெண்ணிக் கண்ணாற்பார்த்துக் களிக்குந் தசரத சக்கரவர்த்தியினு மம்மாமுனிவர் மனக்கண்ணால் இராமனை நோக்கிநோக்கி யுள்ளமுவந்து, அருமறைக்குமெட்டாத பரவஸ்து எனக்குக்கிட்டி யுளையாடவெத்தவம் புரிந்தேனோவென்று மகிழ்ந்து சௌளமோடுபநயனமுஞ்செய்வித்து, அருமறையும் பலகலைகளு மோதுவித்தனர். கோசலை மதலை இளைகளுடன்சகலகலைகளையும் பயின்றுபோர்க்கலைகடெரிந்தோங்குநாளிற் சர்வலோகங்களையு நான்முகன்முதலாய தேவர்களையும் படைப்பேனென்று தொடங்கிய பகவான் விசுவாமித்திரமகாருஷி யெழுந்தருளலும், தசரதசக்கரவர்த்தியெதிர்கொண்டு தண்டமிட்டுமணியாசனத்திருத்தியடித்தாமரைகளிலர்ச்சனைபுரிந்தனன். அக்காதிகாதலருவந்துமன்னனைநோக்கி இமையவரு மென்னனையமுனிவரு மூறுடையராலுல் பாற்கடலும் வெள்ளிமலையும் பிரமனுலகும் அயோத்திமாநகரு மல்லாது புகலும் புகல் மற்றுண்டோவென வாழ்த்தித் துதித்தலு மன்னர்பிரானகமகிழ்ந்து தேவரீர்வெழுந்தருளினமையால் அரசெய்திவிருந்த பயனெய்தினேன். அடியேன்புரியுமேவலையுரைத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தலும்பகவான் விசுவாமித்திரர் வேந்தர்வேந்த! தவத்துக் கூறுசெய்யுங் காமமும் வெகுளியும்போல யாணியற்றுமகத்துக் கூறுசெய்யுமாரீசன்சுபாகுவென்ற மகாமாயாவிகளைப்போக்கி யெனது வேள்வி காப்பான் நினது சிறுவர் நால்வரிற் கரு ஞாயிறுபோன்றொளிரும் இராமசந்திரனைத் தருதியென்றனர். புரவலன்றயருற்று மாமுனிவனைநோக்கி அடிகேள்! எனதுமைந்தன் இராமனென்

னுக்தெரியான். போர்செய்தறியான். யான்சேனையுடன்வந்து நுமதுவேள்
வியைக் காப்பேன்; ஐயமில்லையென்றடிதொழுதனன். அதைக்கேட்ட பக
வான் விசுவாமித்திரர் சினந்து நகைத்து அரச! இராமனை யானறிவேன்.
மகாத்துமாவான பகவான் வசிட்டரு மற்ற மகாயோகிகளுமறிவர். நீயறி
யமாட்டாய், யோகத் தேர்ச்சியுள்ள வெங்களாலன்றி நின்போலியரா லறி
யத்தகுந் தரத்தனோ? இராமன். நீயெனக்கேவல்புரியுந் திறநன்று நன்றென்
று நகைத்து முனிவொடு முனியெழுதலும், வசிட்டர் விசுவாமித்திரனைநோ
க்கி அருந்தவ! பொறுத்தியென்றுரைத்து, அரசனுக் குறுதியருளினர். கொற்
றவன் தேசிகர் வாசகத்துக்கிணங்கித் தம்பியுட னம்பியையழைத்துச் சின
ந்த முனிவரடிதொழுவித் திம்மைந்தருக்குத் தாயுந் தந்தையு நீரே. தந்த
னன்கொண்டேகி நும்மகமுற்ற வினையந்தது புரிகவென் றடிதொழலுங் கா
திகாதலர் மன்னனைப்புகழ்ந்தாசிசொல்லி விடையும்பெற்று, இளையோனுஞ்
சக்கரவர்த்தி யின்னுயிரும் பின்றொடரக் கங்கையைக்கான்ற கழலிற்
கழலணிந்து முனரிபோன்றகையிற் கார்முகமேந்திக் கருநாயிறெனவு மா
ன்சிங்கமெனவும் பொலியு மிராகுராதனை யழைத்துக்கொண்டேகியன்றி
ரவு சரயுநிரத்திற்றங்கிப்புலர்ந்தவுடன் மூவரு நித்திய கருமங்களை முடித்து
க்கொண் டங்குநின்றகன்று அங்கோரிடத்திற்சென்று காமனைச்சிரயத்திலன்றிர
வைப்போக்கி மறுநாளையிலெழுந்து செல்லுமளவிற் காதிகாதலர் தயரத
குலரத்தினத்துக்குப் பலை அதிபலையென்னு மிரண்டு மந்திரங்களை யுபதே
சித்தருளி, மலதமென்றுங் கருடமென்றும் பெயர் வழங்காநின்ற நாட்டின்
கட் டாடகாவனத்தி லன்றிரவிருந்து மறுபக லவ்வனத்தில் வெதிர்த்து
வந்த தாடகையை பகவான் விசுவாமித்திரரானைப்படி இராகவனேறுகணை
யால் யமன்கோற்கிடு நிறுவினன். காதிகாதலர் தாசரதியை நோக்குற்று
ஐய! உலகு இனி நலையிழந்ததெனமகிழ்ந்காலை, இந்திராதியர்கூடி விசு
வாமித்திரனைநோக்கி இராமசந்திரனுக்கு நம்பாலிருக்கின்ற தெய்வப்ப
டைக்கலங்களைக் கொடுத்தருளுமென்றருளவு மாமுனிவருமுவந்து தண்டசக்
கரம், தருமவாழி, காலத்திகிரி, விஷ்ணுசக்கரம், ஐந்திராஸ்த்ரம், வச்சிராஸ்
த்ரம், சைவாஸ்த்ரம், சூலம், பிரமசிரோஸ்த்ரம், ஐஷீகாஸ்த்ரம், பிரஹ்ம
மாஸ்த்ரம், மோதகி, சிகரி, தர்மபாசம், காலபாசம், வாருணாஸ்த்ரம், சுஷ்
கம், ஆர்த்திரம், பைநாகாஸ்திரம், நாராயணாஸ்த்ரம், ஆக்னேயாஸ்த்ரம்,
வாயவ்வியாஸ்த்ரம், அயசிரோஸ்த்ரம், கிரௌஞ்சாஸ்த்ரம், விஷ்ணுசக்தி,
ருத்திரசக்தி, கங்காளம், காபாலம், கங்கணம், வைத்தியாதராஸ்த்ரம்,
காந்தர்வாஸ்த்ரம், பிரஸ்வாபனாஸ்த்ரம், சவுராஸ்த்ரம், தர்ப்பணம், சோ
ஷணம், சந்தர்ப்பணம், விலாபனம், மதனம், மோகனாஸ்த்ரம், தாமசம்,
சௌமனம், சம்வர்த்தம், மௌசலம், சத்தியாஸ்த்ரம், மாயாதராஸ்த்ரம்,
தேஜப்பிரபாஸ்த்ரம், சௌம்மியாஸ்த்ரம், துவஷ்டாஸ்த்ரம், சிதேஷு,
மானவாஸ்த்ர முதலிய படைக்கலங்களையும், சத்தியவந்தம், சத்தியகீர்
த்தி, திர்ஷ்டம், ரபசம், பிரதிகாரதரம், பிராங்முகம், அவாங்முகம், வட்

சாட்சம், விஷமம், திருடநாபம், சுனுபகம், சோதிஷம், கிருசனம், நைராசியம், விமலம், யோகந்தரம், அரித்திரம், ஸார்ச்சிசர்மாலி, திருதிர்மாலி, விர்த்திமான், ருசிரம், பிதிர்சௌமனஸம், விதூனம், மகரம், கரவீரகரம், தனம், தானியம், காமரூபம், காமருசிம், மோகம், ஆவரணம், ஜிர்ம்பகம், சர்வநாபம், சந்தானம், வரணம் முதலிய உபசங்காராஸ்த்ரங்களையு மன்புடனருளினர். பின்பு சித்தாச்சிரமமணைந்து மகருஷி வேள்விக்குத் தொடங்கலும், ஊறுசெய்வான் வந்த மாரீசன் சுபாகுமுதலிய நிருதர்களால் வேள்வி கெடாவண்ணங் கடல்வண்ணன் காத்தனன். மாமுனி யிருமூன்றுதினத்தில் யாகநிறைவேற்றி மிதிலைவேந்தன் வேள்வியை யாம் காண்குமென்றுரைத்துச் சக்கரவர்த்தி திருமகனுடன்சென் றோர்நதீ ரத்தி லன்றிரவைக்கழித்துக் கதிரவன் பரியுதயகிரிமே லேறுங்காலை யந்நதத்தைக் கடந்தேகிக் கங்கையின் றென்கரையி லன்றிரவிலுறைந்து மறுநாட்காலை யம்மாநதியைப் பின்னிட்டேகியதனுத்தரதீரத்திலிருக்கின்ற விசாலையென்ற நகரைக் குறுகலு மப்பதியினதிபதியாகியசுமதி முனிவரோ டிருவரையு மெதிர்கொண்டு வணங்கியின் றிவணுறைந் தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனன். பகவான் விசுவாமித்திரர் அடியாரை யெழுபிறப்பி லெழுதாப்பெருமானை நோக்குற்று நினதுமரபுளானான இட்சுவாகுவுக்கு அலம்புசையென்ற தெய்வகணிகாமாதுவயிற்றில் விசாலனென் றோரரசனுதித்தான். அவனாலியற்றப்பட்ட திம்மாநகரமாதலால் விசாலையெனலாயிற்று. அவ்விசாலனாற் பெறப்பட்டான் ஏமச்சந்திரன், அவனைப் பிதாவாய்க்கொண்ட சுசந்திரனுக்கு தூம்ராசுவன்தோன்றினன். அவனுக்குச் சிரஞ்சயனும், அவனுக்குச் சகதேவனும், அவனுக்குக் குசாசுவனும், அவனுக்குச்சோமதத்தனும், அவனுக்குக் காகுஸ்தனுந்தோன்றி யெண்ணிறந்த கால மரசு வீற்றிருந்தனர். அக்காகுஸ்தன் மதலையான இச்சுமதி நின்னிடத்தி லன்புற்று வேண்டுகின்றனனாகையா லிவணுறைந்து காலையேகுதுமென் றுரைத் தச்சுமதிகொண்டாட அரண்மனையிலெழுந்தருளியிருந்து கங்குலைநீத்து மிதிலையைநோக்கியேகு நெறியிடையோர் வெள்ளிடையிற் றாரகவாச்சியனது திருவடிபரிசித்தனும், கௌதமமாமுனிவர்சாபத்தா லொருவரு மறியாது மறைந்திருந்த அகலிகை பண்டை வடிவம்பெற்று நின்றாள். அக்காலை இரகுநாதன் முனிவரைநோக்கா அன்னையனைய வித்தேவி யாரென்று வினவ விசுவாமித்திரர் கௌதமமாமுனிவர் பத்தினியென்றும், இந்திரனிவளைப்புணர்ந்தானென்றும், அதை யறிந்த கௌதமர் கடலை மகிழ்ந்த வவ்விருவரையுஞ் சபித்தாரென்றும் விரித்துரைத்தனர். விமல சுந்தரத்தினம் அவ்வகலிகை தாளைவணங்கி அன்னை! மாமுனிவர் பக்கல் சார்கவென்றருள வத்தாய் கௌதமரைச்சார்ந்தாள். பின்னர் அயன்முதல் மூவருமனையார் கௌதமராச்சிரமஞ்சேறலு மம்மாமுனிவர் மகிழ்க் தெதிர்கொண டாச்சிரமத்துக் கழைத்துப்போ யாராதித்து விடையருள வம்மூவரு மவணின் றுமகன்றுசென்றா

மறையினின்றுஞ்செய்யவன் யான்முயன்ற மாதவத்தா லென்வயிற்றோன்றியிருக்கின்றனள். அந்நங்கையை மணம்புரிவான் நாராயணனையுமைத்தவாருமென்று மிதிலையென்னு மங்கை விசுவாமித்திரரைத் தூதுவிடுத்தாற்போலவவர் அயோத்திசென்று தெய்வநாயகனைக்கொணரவு மம்மிதிலைமாது இரகுநாதனைக்கண்டு வெந்தொல்லைவாராயென்று கைகளைநீட்டி யழைப்பதுபோன் றசையுங் கொடிகளையுடையதாயும், பெரியபிராட்டியாராகிய சீதாதேவி யுவந்திருந்தவா லரவிந்தமெனவும் பொலியாநிற்குங் கடிநகரிற் புகுதலு மிராசருஷியான ஜனகர் திருவுளமுவந்தெதிர்கொண்டு கைந்நீரு மடிநீரு முண்ணீருமளித் தாசனமிட்டுக் குசலமுரைத்து வீற்றிருக்குங்காலை காதிகாதல ரருகிற் றம்பியோடிருந்த நம்பியை மகாத்துமாவான அச்சனகர் கண்களிக்கக் கண்ணுற்றுக் கார்முகில் கமலம் பூத்து மண்ணுற்றதென வொளிரு மிவ்வாண்டகை யாந் தியானிக்கும் பரம்பொருளெனக் காண்கின்றேனென்று தமது திருமனத்திலெண்ணி யருந்தவரோ! இம்மைந்தரிருவரும்யாரென பகவான்வினவலும், விசுவாமித்திரர் தயரதன் காதலரென்றவர்வரலாற்றையும் புனைந்துரைத்து, நீர்புசித்துவருகின்றசங்கரன்வில்லைக் காண்பானென்றனர். ஜனகர் கார்முகத்தைக் கடிதிற் றருவித்தனர். அக்காலை கௌதமர் காதலரான சதானந்தர் விசுவாமித்திரரைநோக்கிப் பெருந்தவ கேண்மோ ஓர் மகம்புரிவான் நிலத்தைக் கலப்பையாலுழுதே மக்கொழுமுகத்தினின்று மோர்பெண்ணமுது தோன்றினள். மகாத்துமாவான இச்சனகரத்திருவையெடுத்துச் சீதையென்று திருநாமமிட்டு வளர்த்துவருகையி லம்மாதை மணம்புரியக் காதலித்துவந்தவேந்தர்க்குச் சூரனைத் தடிந்த சூரனைப்பெற்றவன் போர் வில்லை வலித்தானெவனோ வவனம்மங்கை மணவாளனென்றுரைத்தனர். அவ்வல்வில்லைத்தொடவு மாற்றலிலாரவெல்லாருமீண்டனர். இத்தாசரதி யிவ் வின்னாணேற்றுவானாயி னெமதுதவஞ்செய்த தவமென் றன்னுவேமென்றனர். விசுவாமித்திரர் சர்வஜ்ஞனது திருமுகத்தைநோக்க, அவ்விராம னவரைத்தொழுது சீதாதேவிக்குச் சூட்டவெடுக்கும் பூமாலையெனச் சிவசாபத்தை யங்கையிற்பற்றி வளைத்தலுமப்பினாக மிருதுணியாயிற்று, சிலையை வளைப்பாருமில்லை சீதைக்கு மணமுமில்லையென்று துக்கித்துக்கொண்டிருந்த சனகருடன் விசுவாமித்திரர் களித்துச் சீதைக்கு மிராமசந்திரனுக்கு நடக்கும் விவாகத்துக் கெழுகவென்று தசரத சக்கரவர்த்திக்குத் திருமுகம்விடுப்ப வச்சக்கரவர்த்திமகிழ்ந்துவரலுஞ் சனகர் புரவலர்புரவலனை யெதிர்கொண் டரண்மனை கொணர்ந்தன்புட னாராதித்தனர். பின்னர் பகவான் வசிட்டமாமுனிவர்மங்கல நன்னாளிற் றாசரதியையுஞ் சனகாத்துமஜையையு மணையிலிருத்தி மணம்புரிவித்தனர். சங்கங்களும் பேரிகளும் பல்லியங்களு நான்மறைகளுங் கடலொலிமடங்க விம்மியார்த்தன. பாற்கடற் பள்ளியினின்று நீங்கிப் பிரிந்து கூடு மவர் திறத்தை நாயடியே னுரைப்பதெவன் ? அவ்விருவருமாறியொருவருள்ளத் தொருவர் புகுந்து இரண்டுடலுக் குயிரொன்றாயினர்.

மகாத்துமாவான சனகரது ஔரஸ புத்திரியாகிய மாண்டவியையும், அ
ச்சனகருக்கிளையானான குசத்துவசனென்போனது கன்னியராகிய ஊர்
மிளை சுதகீர்த்தியென்ற விருவரையும் பரதாழ்வானும் இளையபெருமானுஞ்
சத்துருக்கினனு முறையே வேட்டனர். பின்பு கோசிகமாமுனிவரு மற்ற
ருஷிகளும் இலக்குமீகாந்தனுக் காசிசொல்லி விடைபெற்றுத் தத்தமிடஞ்
சேரவேகலுந் தசரத சக்கரவர்த்தி அயோத்திமாநக ரணைவான் சனகரி
டத்தில் விடைபெற்றுத் தனதுமக்களு மருமக்களுந் தழுவிவர வேகி நெறி
யிற்சென்றனன். அவ்வழியிற் கடையுக முடிவிற்றோன்று முருத்திரமூர்த்
தி யொத்துவரும் பரசுராமனைக்கண்டு சக்கரவர்த்தி நடுக்கமுற்றேங்கி க்ஷ
த்திரியகுல கண்டகனான கொடியோ னெனதிராமனை யென்செய்வனோ?
நானென்செய்கேனென் றிரங்கி யப்பரசுராமனைத்தொழுதிரக்கலுற்றனன்.
அவர் தமதடியில் வீழ்ந்த சக்கரவர்த்தியை நோக்காமற் கிரியினுச்சியிற்
றோன்றுஞ் சிங்கமென ரதத்தில் வீற்றிருந்த அரகோதண்ட கண்டகனைக்
கிட்டி இராம! கேட்டி தெய்வத்தச்சனாகிய விசுவகர்மாவால் யாவற்றினுஞ்
சிறந்தவை யிரண்டு கோதண்ட மியற்றப்பட்டன. அவைகளை விஷ்ணுவுஞ்
சிவனுங் கைக்கொண்டனர். சிவன் அச்சாபத்தைக்கொண்டு திரிபுரசங்
காரஞ்செய்தபின்னர்ப் பிரமாதிதேவர் விஷ்ணுவலியரோ? சிவன்வலியரோ?
என்றவையம்பற்றி யதையறியு நசையா லவ்விருவர்க்கு நாரதமுனி யுதவி
யின்றியே கலகஞ்செய் தமர்மூட்டிவிட்டனர். அவ்வரியு மரனுஞ்சினந்து
போர்புரிகையிற் சங்கமேந்தியாற் பார்வதி ரமணன் கைக்கொண்டிருந்த
கார்முகமிறலாயிற்று. அக்காலை தேவரெல்லாரு மம்மாத்தேவனைப் பிரார்
த்தித்துச் சமரத்தைநிறுத்தி விஷ்ணுவே யதிகனென்றறிந்தனர். அவ்வேலை
சனகர் மரபுளானாகிய தேவராத்திரன் சிவனிடத்தினின்று மச்சாபத்
தைப்பெற்றுப் பூசித்துவந்தனன். அவ்வூனவில்லை நீயிறுத்த தூக்கமன்று
ஸ்ரீ அரி தனதுசார்ங்கத்தை இருசிகனென்றவனிடத்திற்கொடுத்தது மவ
னெந்தையாகிய ஜமதக்கினிபாலீந்தனன். எந்தையு மெனக்குத்தந்த விச்
சிலையை நீ நாணேற்றி னின்னையொப்பா னந்நாராயணனன்றி யாருமில்லை
யென்றுரைத்து வில்லைநீட்டினர். இரகுவீரன் முறுவலெய்தி யச்சார்ங்கத்
தைக் கையிற்கொண்டு நாணேற்றித் தோளுறவாங்கிப் பரசுராமனைக் கண்
ணுற்று ஐய! தரணியாளுந்தராபதிகளை நீருருடேர்ந்து முறையின்றிக் கொன்
றீராயினும் வேதவித்தாய வும்மைக் கோறலாகா தெனதம்போ வீணாகா தி
தற்கிலக்கம்யாது? விளாவினுரையுமெனவும் ஜமதக்கினி மைந்தர்நடுங்கிச் சு
ர்வலோகத்துக்கும் நான்செல்லும்படியான தவபலத்தை கினதம்புக்கிரையா
யீந்தேனென்றுரைத்து, இராமசந்திரனைத்துதித்துப் பின்னுஞ்சொல்லுகி
ன்றனர். இரகுநாத!-முடியுடை வேந்த ரெல்லாரையும்வென் றெனதொரு
கோலாற்புரந்த விவ்வுலகைக் காசிபருக்கீந்தேனல்லோ விவட்டங்கவெனக்
கொன்னுதென்றருளித் தவஞ்செய்வான் மகேந்திரமாமலையைச் சார்ந்த
னர். இராமபத்திர னச்சார்ங்கத்தை வருணனிடத்தி லடைக்கலமாய்க்

சொலித்தனன். உருமென வுரறிவந்த பரசுராமனை யடல்கொண்ட சூரிய
னைத் தசரதசக்கரவர்த்தி தழுவி மகிழ்ந்து மிதிலையினின்றும் புறப்பட்டு
யைந்தாநாளி லயோத்திமா நகரடைந்து தனதமர்களையுஞ் சனகர் ம
க்களையு நோக்கிநோக்கித் தனதுளங்களித்து மற்றோர் தயாதனென வுடற
டித்து வாழ்நாளிற் சக்கரவர்த்தி பரதாழ்வானையழைத்து மைந்த! நின்றன்
மூதாதை நின்னைக் காணுங் கருத்துடையானதலா லவன்வரவிட்ட உதாசி
த்தனொடேகிக் கேகயம்புகுந்து மீளுவாயெனலும், பரதாழ்வான் சத்துருக்
கினனோடு பிதாவையு மிராமசந்திரனையுந் தாய்மாரையுந்தொழுது விடை
பெற்றேழுபகலில் மூதாதைமாட்டணைந்தனன். சின்னாட்சென்றபின்னர்த்
தசரதசக்கரவர்த்தி யண்டர் நாயகனுக்கு முடிசூட்டத்தொடங்கலுங் கை
கேசி சம்பராசுரயுத்தத்திற் கணவனிடத்திற் பெற்றிருந்த விருவரத்திலொ
ன்றாற் சீதைகேள்வன் வனமாளவு மற்றொன்றாற் பரதனாடாளவு மருவரு
மென் றுயிரிக்குங் கூற்றைப்போலச் சக்கரவர்த்தியைக்கேட்டாள். அவ்வ
ரசர்பெருமான்மாற்றமுரைக்கமாட்டாது மயர்ந்தாருயிருசலாடத் துன்பந்
துய்த்திருந்ததுங் கைகேசிசுமந்திரனைக்கொண் டிராமபத்திரனை அழைத்து
க்குமர! பதினான்கு நீ கானகத்துறையவும் பரதனரசாளவு நின்றுதா
தைபால்வரம்பெற்றிருக்கின்றேன். நீ யவ்வாறுபுரிகவென்றுரைத்தனள்.
சித்திரத்திலலர்ந்த செந்தாமரையொத்துப் பொலியுமுகத்தோ டிராமனச்சி
ற்றவையையு மற்றன்னைய ரிருவரையுந் தொழுது விடைபெற்றுவந்து தன
து நிழல்போற்றொடர்ந்துவரு மிதிலைநாடியுடனும் இளைய பெருமானுடனுந்
தாதைமாட்டணுகி யாங்கண்மூவரும் வனத்துக்கேகுகின்றனம், விடைதந்
தருடியென்றுரைத்துத் தொழுதனன். சக்கரவர்த்தி யாவிசோர்ந்து மைந்த!
பெண்டிரிற் கூற்றமன்ன கைகேசி வஞ்சனையால் வரங்கேட்டாள். அஃத
றியாது தந்தேனென்றேன். என்செய்கேனென் றயர்ந்து துன்பந்துய்த்து
ச் சித்திரம்போலிருந்தது மம்மூவரு மிறையைத்தொழுது, ஆங்குநின்றே
கினர். அவ்வேலை தமக்கு மேல்வரு முறுதி வேண்டாமற்றேயரு மின்ப
துன்பங்களையொக்க நோக்கு மருந்தவரு மழுதனரெனின், மற்றையோரை
ப்பேசலெவன்? மங்கையர் வளர்த்த பிள்ளைகளும், பூவைகளும், மற்றை
ஆவுமாவுமேங்கின. அரசரது குலதனமான பாவமு மம்மன்னனைமான
விம்மிவிம்மிக் குரலெடுத்தழலாயிற்று. அரகோதண்ட கண்டகன் பகைவான்
வசிட்டனைக்கண்டு தண்டமிட்டருள்பெற்றுத் தானுந்தம்பியும் வில்லும்வா
ளும் புட்டிலுந்தாங்கிச் சனககுல சுந்தரியோ டருணனெனச் சுமந்திரன்
கோல்கொண்ட தேர்மேலேறிப் பொழுது விழுங்காலைத் தமசாநிரஞ்சார்ந்
தனன். அயோத்திமாநகர்வாழ்நரெல்லாரு மொருங்குகூடிக் கானமாயினும்
இராமனுறையுமிடமே அயோத்தியெனத் துணிவுற்றடியாளை யெழுபிறப்பி
லெழுதாப்பரமனைத் தொடர்ந்துவந்து சூழ்ந்திருந்தனர். தேவதேவ னந்நி
ரத்திலிருந்த முனி வனைங்கனோ டொயாடித் தன்னைவிடாது பற்றிக்கொ
ண்டிருந்த ஜனங்களை நித்திரையமைய மதித்து தேர்மேலேறி அயோத்தி

யைநோக்கிச் சிறிதுதூரஞ்சென்று பின்பு மற்றோர் மார்க்கமாய் வனத்துக்கேகு நெறியைத் தொடர்ந்து மறுநாட் காலைக் கங்காதீரத்திற் குகப்பெருமானது திருப்பதியாகிய சிருங்கிபேரத்துக் கணித்தாக இங்குதியென்ற தருவினடியின்மூவருந்தங்கினார்கள். பாகவதோத்தமராகியகுகப்பெருமான் சுவாமிவரலைக்கேட்டுத் தமதுபெருங்கணத்துடன்வந்து திருவடியில்வீழ்ந்துச்சிமேற்கைகுவித்து நின்றளவளாவி அமுதுமுதலாயதிருவாராதனஞ்செய்யவாரம்பித்தலும், பத்தவற்சலனருளானோக்காக்குகனே! நினதன்பேபேராராதனமாகும். எம்மால் நீ வருந்தல்; முதிர்ந்தபசியால்வருந்து நம்பரிமாக்களுக்குச் சிறிது பசும்புலுதவுதியென்றருளிப் பின்னர்ச் சுமந்திரனை மாநகரனையவிடுத்துப் புலர்ந்தவுடன் தாசரதி குகப்பெருமானை யருளானோக்கி அன்ப! வடப்பயஞ் சிறிதுகொணர்கவென வவருங்கொணர்ந்தனர். அப்பயசா லிளையபெருமானுந் தானுங் குஞ்சிகளைச்சடைசெய்து வாள்விழியுட னவாயிலேறிக் கங்கையின்றென்கரைசார்ந் தோராலினடியிற்றங்கிச் சிருங்கிபேரஞ் சேரும்படி குகப்பெருமானுக்கருளி, நெறியை முன்னிச்சென்று கோலுடன் குண்டிகையுடையாராயு நீண்ட சடையாராயு மரவுரிவையி னுடையாராயு மயிர் நாலு முருவினராயு மறைநாலு நவிலு நாவினராயு முலகேழையு நீரமையுமென்று நாராயணனுந்தியன்றியே யுதவவல்லாராயும் விளங்கும் பாரத்துவாசமுனீந்திரனைப் பன்னசாலையிற்கண்டு தாசரதி யவர்திருத்தாளைத் தொழலு மாமுனிவ ராசிசொல்லி மைந்த! பூமண்டலாதிபத்தியத்தைத்தவிர்த் திந்நாளி லித்தவவேடம் பூண்டுவருவானேனென்று வினவ, திருமகள்கொழுநனுற்றவாறுணர்த்தினன். அதுகேட்டுநற்றவமுனிவர் அந்தோ இற்றதுசெயலெங்குண்டு? ஞாலமாளுதியென்று கொடுத்துப் பின்பு கானகம்பற்றென்றுரைத் தச்சக்கரவர்த்தி யெப்பரிசுயிரோடிருக்கின்றனனென்றயர்ந்து தமதாச்சிரமத்திலோருறைவிடமுங் கனியுங்காயுநல்கிப் பலமுமென் கூறி மகிழ்வுற்றனர். கங்குல்கழிந்து கதிர்நாறுமளவையில் முனி ஜனஜபரத்தனம் அவாசிக்கண்ணேக விடைபெறற் குறுகையில் பகவானப்பாரத்துவாசர் நோக்குளக்கமலக்கண்ண! கேண்மோ கங்கையொடு கரியவளுநாமகளுங்கலக்குஞ் சங்கமீதாதலின்றவமுயல்வார்க்கி∴தல்லா தினியவிடமரிது. வனத்திற்றங்கவேண்டிய வாண்டெலா மிவணுறைதியென் றன்புடனருளலுங்கருணைவள்ளல் எந்தை! தடமதி லயோத்திக் கிவ்விடஞ்சேய்மையன்று; ஈண்டு வைகுவேனாயி னடுத்தடுத்து யாவருநெருங்குவராகலா னெடுந்தூரத்திலோருறைவிடமுரைத்தருளுகென்று பிரார்த்தித்தனன். மாமுனி எண்ணி ஐய! பிறப்பிறப்பெனுந் துயர்போய் வைகுந்தஞ்சேர்ந்தவரு மீண்டும் பிறந்துறைய வருந்திபுரியுஞ் சித்திரகூடமென்பதொன்றுண்டு. ஈரைந்து காவதஞ்சென்றபிற்காண்டி. அதனிலினிது வைகுதியென்று நெறியுமுரைத் தாசியுஞ்சொல்லிவிடுப்ப வம்மூவருநெறியைக் கடந்துவந்து சிதமூலனாலும், வச்சிரமேந்தலாலும், புள்மாமேலாயிருத்தலாலும் புரந்தரனெனவும், வள்ளிபுணர்தலாலும் ஆறுமுகமெ

ன்ன வாறு மயில்மேற்கொள்ளலாலுஞ் சரவணபவனைப்போலவும், நான்முக
முகன்னுதலாலுங் கமலமேலுறலாலுங் கமலாசனனைப்போலவும், பாணி
யும் பணியும் பிறையுங் கொன்றையு மாறு மியைந்திருத்தலாற் பார்வதி
ரமணனைப்போலவும், கண்ணுக்கினிதாய்விளங்குதலாலும் எண்ணுதற்கரிய
வாய் விளங்கும் பலசிரங்களாலும் அநந்த விலக்குமி பொலிதலாலும் உல
களந்த வொருவனைப்போலவும் பொலியாநிற்குஞ் சித்திரகூடப் பருப்பதத்
தினுச்சியிற் றம்பியாலமைக்கப்பட்ட பன்னசாலையிற் றேவியுடன் கு
டிபுகுந்தனன். அதன்பின் புராணபுருஷோத்தமன் சப்தருஷிகளுக்கு மே
லாந்தரமுடைய பகவான்வான்மீகி மகருஷியையு மற்ற முனிவர்களையுங்
கண்டு சேவித்தவரோடு நல்லுரையாடிப் பிராட்டியோடு விளையாடியிருந்தன
ன். கங்காதீரத்தில் விடைபெற்றுச்சென்ற சுமந்திரன் அயோத்தியாநகரஞ்
சேர்ந்து இட்சுவாகு குலாதிபன் அடவியையடைந்தனனென்றுரைத்த மா
ற்றமென்னுங் கூற்றுவன் மூன்றுலகு மீன்றானை யீன்றவனை யீன்றமன்ன
ன் விண்ணடைதலும், பிரமன்முதலான வானோர் கூடி யெந்தை தந்தை
யந்தணனென் றெண்ணிக்கொண்டு நாரியர்துவைத் தாம்மலர்தூவி யோர் திவ்
விய விமானத்திலேற்றி மீளாதபரமபதத்திலுய்த்தனர். பின்னர்க் கேகய
தேயத்தினின்றும் பரதாழ்வான் வந்து தைலஞ்சாத்தியிருந்த தாதை திரு
மேனியையெடுத்து முறைப்படி யாவும்புரிந்தனன். பாகவதோத்தமனான
பரதாழ்வான் பின்னர் காமமிலதாயின் இராமனைக்கானுற வயோத்தியதறிப்
பனோ? தான் தனதத்தனைக்கொணர்ந்து முடிசூட்டுவான் வசிட்டருடனுந்
தாய்மார்முதலானயாவருடனுந் திருவேங்கடமாமலையோடு மேதினியா
ள் கொங்கையெனத்தோன்றுஞ் சித்திரகூடத்தையணுகித் தம்மைத்தா
முணரும்யோகியரது ஞானமுடிவிற்றோன்றும் இராமனை யம்மலையினுச்
சியிற்கண்டு தொழுது மன்னனிறந்த துணர்த்தித் திருவடியில்வீழ்ந்தழுது
ர் தாசரதி தனதுபிரிவாற்றா திவ்வுலகைவெறுத்த மன்னனுக்கேங்கினன்.
பின்பு இராமன் வசிட்டமாமுனிவராற் றேற்றப்பட்டுத் தாய்மாரை
யுஞ் சீதாபிராட்டியாரையு மற்று மங்குக்கூடிய ருஷிபத்தினிகளையு முன்
னிட்டுக்கொண்டேகிச் சித்திரகூடத்துக் கோராடைபோற் சுற்றிப்பெருகி
யொழுகு மந்தாகினிமாநதியினீராடித் தந்தைக்கெண்ணீரீந்துவந்து பன்ன
சாலையிலெழுந்தருளினன். பரதாழ்வான் தனதுமுத்தோனைத்தொழுது தி
ருவடிகளைக் கரங்களாற் பற்றிக்கொண்டு அத்த! அடியேன் வயின் அருள்
கூர்ந்து மாநகரணைந்து முடிபுனைந்தருளுதியென்று தொழுதனன். சர்வ
லோக சரண்ணியனான இராமபிரான் வனத்திற் சரித்து முத்தேவருக்கு
முடிப்பருங்கருமத்தை முற்றுவிப்பத்தொடங்கிய தனதாதி சங்கற்பத்தைத்
தவிர்த் தயோத்தி நண்ணுவனேற்றேவர்செயல் முனிவர்செயலென்னும்?
இராமசந்திரன் பதினாலாண்டளவாயினு நகரணையவொல்லேன், நீபரசா
ள்கவென்றுரைத்தலும் பரதசுவாமி தண்டமிட்டைய! யான் மாதவம்பு
ரிவேனேயன்றிப் பார்புரக்கேன். திருவடித்தலங்கள் சுவாமி யருங்காறு

மரசபுரிக, அவைகளைத் தந்தருளுதியென்று பிரார்த்தித்துப்பெற்றுத் தனதுமுடிமேன் முடிபோற் சூட்டிக்கொண்டு புனனுமுற்று நந்தியம்பதியினில் மராடிகளைச் சிங்காதனத்திருத்தி யபிடேகஞ்செய் தர்ச்சனைபுரிந் தன்பெனு மமுதூட்டிப் பாதுகமே! வையங்காத்தருள்வாயெனத்தொழு தல்லினு மெல்லினு நீரூறக் கண்ணனாகிப் பரதசுவாமி தம்பியுடன் மரவுரி தாங்கி மாதவம்புரிந்தனன்.

இரகுநாதனது பாதமன்றி யவன்பாதுகஞ் சரியா. அப்பாதுகமன்றி யந்நாதன்பதமோ நடவா. அவ்வாறத்தியந்தம் பற்றுள்ள திருவடித்தலந் தனது இறைமையைச்சத்தியசிந்தராய்ச் செய்வான், பரதாழ்வானுடன்போந்து இட்சுவாகு குலமன்னரோன அரியாதனமேவி யரசர்தொழ வீற்றிருந்து தந்தையிருக்க மகனிறந்த குற்றமுமின்றிச் செவ்விதாய் மன்னுயிரைப் புரந்ததென்ப.

குன்றமாதர்பா லண்டமாத ரமுதங்கொடுத்துத் தென்மாறுஞ் சித்திரகூடத்திலிருந்த தாரகவாச்சியன் சின்னாட்கழிந்தபின் றுணைந் தையலுந் தம்பியுந் தென்றிசைநோக்கிச்சென்று, அத்திரிமகருஷியைக்கண்டிறைஞ்சலுமவருவந்துபுல்லி யாசிகூறினர். அம்மகருஷியினது பத்தினியாராகிய அநசூயையென்பவரன்புமிகுதியால்விழிக்கு விழாவனையமைதிலிக்குக்கோலஞ்செய்வித்துக் கண்ணாரக்களித்துமாலைப்பொழுதற விருடிகளாச்சிரமங்களிற்புரியுமனபானமுதலிய காட்சிகளையும்,பட்சிசாலங்கள்விருட்சசாலங்களிலுள்ள சேக்கைகளை நன்னுதலையுமற்ற பற்பல விநோதங்களையுங் காட்டி இரகுநாதன்பக்க லனைய வனுப்பினர். பின்னான் சுருதிமூர்த்தி அத்திரிமகருஷியையும், அநசூயையாரையுந்தொழுது விடைபெற்றுச்செல்கையிலெதிர்த்தல்லல்புரிந்த விராதனைப் புவியிவிராதுசெய்து சரபங்கமகருஷியாச்சிரமத்தைக்குறுகினன். அவ்வேலை பிரமனுலேவப்பட்டுவந்துவசனித்துக்கொண்டிருந்த இந்திரன் சர்வலோகநாதனதுவரலையறிந்து சரபங்கனைநோக்கி நம்மாளுடையான் எழுந்தருளுகின்றனன், இராவணசங்காரமானபிறகுதான் நா னவனைச்சேவித்தல்வேண்டும். அவனிவண்வருமுன் னானேகுகின்றேனென் றுரைத்துப்போயினன். பின்னர்த்தாசரதி இளைய பெருமானைப்பார்த்து ஐய! சரபங்கர்மாட் டிந்திரன்வந்து மீண்டு மேலுலகஞ்செல்லுகின்றனனென் றறிகின்றேனென்றுரைத் தாச்சிரமம்புகுந்து சரபங்கனைத்தொழலு மவர்மகிழ்ந்து புல்லி யாசிசொல்லி இராம! இந்திரன் வந்து பிரமனுலகை யணைதியென் றுரைத்தனன், நோக்குப்பயன்பெற நின்னை நோக்குவதினும் பிரமனுலகுநோக்கும் தரத்ததோவென்றென்னினைதுவரவைநோக்கி யிருந்தனன். எனது மாதவங்களை நினக்கர்ப்பணஞ்செய்தேன் பெறுதியென்று கொடுத்தருளி யார்த்தியுற்றனர். சீதாமணாளன் மகருஷியைநோக்குற்று அடியேன்! இவ்வாரணியத்தில் யாங்களுறைய வொருஸ்தான நியமித்தருள வேண்டுமென்றது மருந்தவர்நோக்

இப்புராணபுருஷோத்தம! பகவான் சுதீட்சணர்பாற்சேர்வையாருலவர் வினக்கிணையந்தவுறைவிடமுனைப்பர். யானித்தனுவை விடுங்காறு நீவெனதுபக்கலிருந்தருளுதியெனப்புகன்று, பிரமமேதவிதியாலக்கினிவளர்த்து முறைப்படி யாவும்புரிந் தனிலச்சரபங்க மகருஷி பிரவேசித்துத் தேசோமயமா யெழுந்து பிரமனெதிர்கொள்ளச்சென் றுத்தமலோகமடைந்தனர். பின்னர் மூவரும் முருகும்போன்ற மொய்ம்பகையொடு சக்கரவர்த்திதிருமக்களிருவருமலைகளையு நதிகளையும பழுவங்களையும் புவிமடவாளருமையாய்ப்பெற்ற பெண்கொடியினது திருமறைச்சிலம்படிகளேறவுமென்றென்னிச் கம்பளம் விரித்தாற்போலப் பசும்புல் பரந்த நிலங்களையுங் கடந்தனர்.

பாற்கடலி லரவணையிற் றிருமகளார் கரங்களாலவருடவது பொறாது சிவந்துகாட்டுந் திருவடிகள் பரலுறுத்து மிம்மாநிலத்தெவ்வாறு நடந்தனவோவென பத்திருவடிகளினடியா ரிற்றைப்பொழுது மிரங்காநிற்பர், செய்யாளிறு பேதினியாளிடத்து மிருந்த காதலினாலோ? அடியாரிடத்துள்ளவன்பாலோ? இராமபதங்கள் வருந்தாது சரிந்தன.

பரமபதநாத னெழுந்தருளுகின்றனென்று தண்டகாவனத்திற் றங்குந்தபோதனர்யாவரு முவந்திருந்தனும் பக்தவற்சலர் சென்று அவர்களைத் தொழுந்தொறுந் தொழுந்தொறு மருந்தவர்களாசீர்சொல்லிக் குசலமுரைத் தாராதிக்குந் தாதல்லல் சொல்லலுற்றனர். இராமகேட்டி, இரக்கமன் றென்னைமயரியா வரக்கராலியாங்க ளலைப்புண்டு மாதவத்தொழுகிலேம். காயெரிபோம்பிலேம். மறைகளோதிலேம். தூமையார்க்குதவிற்றிலேம். எமதறநெறித்துறையினின்று நீங்கினேம். நீவருதலை யெதிர்பார்த்திருந்தனம். அருள்வள்ளால்! எமது தவத்தாற்றோன்றினை. யாம் நின்னபயமபயமென்றனர். அக்காலை அற்றவருமருந்து அம்மாமுனிவரைநோக்கித் தேவரீர் துன்பந்தவிருதிர். அறன்றம்பிய வரக்கரை வேரறுப்பேன். வெருவன்மினென்றருளி யவணின்றுமேகி நெறியிற்செல்லுங்காலை கருணையுருவாகிய பூமகனார் பரமபுருஷனைத்தொழுது சுவாமி! அபராதஞ்செய்தாரையல்லாரை வதைபுரியாத்தன்மத்தீர். அருந்தவர்க் கபயமருளினீர். நிரபராதிகளான அரக்கரையென்செய்வீரென்றலும் இட்சுவாகுகுலசம்பூதர் திருவாய்மலர்ந்து ஜனகநந்தினி! நின்னையாவ திவையோனையாவ தெனதுயிரையாவதுவிட் டந்தனருக்குத்தந்த வாய்மையை நிறைவேற்றுவேனென்றருளிச் சென்று சுதீட்சணமுனிவரர்பா லணைந்து, அவர் திருவடியைத்தொழுதனர். அம்முனிவருளமுவந் தாசிபுநனி இராம! நீ யிவணெய்த நாளெந்தவஞ்செய்தேனென் றினியனகழறி மகிழ்ந்தனர். காகுஸ்தர் முனிவரைத்தொழுது தேவரீர்போ லுயர்தவமுற்றிரோர் முன்னையோருள் யாருளர்? என்வயினீர்கொண்ட கருணையாற் களித்துநின்றீர். தவத்தா லுமது திருவடியைச் சேவிக்கப்பெற்றேனென்றுரைத்து வைகலுஞ் சிலவைகல்சென்றன. தசரதாத்மஜர் அம்மாமுனிவரைத்தொழுது அடிகள் இவ்வனத்தி

லெமக்கோ ருறைவிட முரைத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தலுஞ் சுதீட்சணர் சீதாநாத! இவ்வனந்தகுதியன்று; மிருகங்களா லுறுகண்டென் றுரைத்தனர். அப்போ தவ்வடவியில் வைகு மருந்தவரெல்லாரும் வந்து சுவாமியைக்கண்டு தாசரதி! நீயெமதாச்சிரமத்துக்கெழுந்தருளவேண்டும். எம்மோடு சின்னாளுறையவேண்டும். எமது பவனத்தைப் பவனம் பண்ணு தியென்னப் பலவிதமா யன்போடு வேண்டினர். பத்தவற்சல ரதற்கிணங்கிச் சுதீட்சணரைத்தொழுது விடைகேட்டலு மவர் தமது மாதவங்களை இராமபிரானுக் கர்ப்பணஞ்செய்து நெறிசெல்லவிட்டனர்.

சிறிதுசற்கருமம்புரிந்து கடைசியில் இராமார்ப்பணம், கிருஷ்ணார்ப்பணம், நாராயணப் பிரீதியென்பவற்றி லொன்றுரைத்து நீர்விடுத்தா லதன் பலன் பிரமனாலு முன்னுந்தரத்த தன்றென்பராயின், திரிமூர்த்தி சொரூபமான இராமபிரா னெதிர்தோன்றிப் பெற்றுக்கொள்ளத் தபங்களை யர்ப்பணஞ்செய்த மகருஷிகளின்மகிமையு மவர்தந் தவங்களின்பெருமையு மொருவரெண்ணு ளடங்குமே.

கயல்பொரு விழிமானுடனும், சுமித்திரை சிங்கத்துடனும் பிரணவநிலயரத்தினஞ் சுதீட்சணராச்சிரமத்தினின்றுமேகித் தம்மைப்பிரார்த்தித்த மகருஷிகளின்பன்னசாலைகளி லொருமூன் றிருமூன் றீரிரண் டிருநான்கு திங்களுறைந் தம்முனிவர்களோடு கூடித் தாம் வனத்தில் வசிக்கவேண்டிய காலங்களைப் பெரும்பாலுங் கழித்து மீண்டுஞ் சுதீட்சணர்பா லணைந்து வணங்கி முனிசிரேஷ்டரான பகவான் அகஸ்தியமாமுனிவரைச்சேவிக்கக் காதலிக்கின்றேனென்றலுஞ் சுதீட்சணர், ஆம் நீயவர்பாற்சேறறேவருக்கு மற்றவருக்கு நன்றென்றுரைத் தாசிகூறித் தமிழ்முனியாச்சிரமத்துக்கேகு நெறியுமருளினர். இராமபத்திர ராங்குநின்று மகன்று சந்தனம், சண்பகம், சாலம், ஆலம், ஏலம், தமாலம், பனசம், பாடலம், பாரிசாதம், அசுவத்தம், அசோகம், நாகம், மருதம், தென்னம், பூகம், குரவம், வேங்கை, கோங்கு, கடுக்கை, அகில், தேக்கு, செருந்தி, குருந்து, குருக்கத்தி, கூவிளை, கூமா, நாவல், செங்குமிழ், தேமாமுதலிய தருக்களடர்ந்து நிலவுறத்தழைந்து வானுறவளர்ந்து இராமபிரான் திருவடிநிழல்போற் குளிர்ந்து முல்லை, மல்லிகை, ஜாஜி, நிலத்தாமரை, மத்தம், தும்பை, கரந்தை, துழாய்முதலிய செடிகளடர்ந்து வலாயாதியும் வள்ளலெனப்பருவமின்றிப் பேசினையென்னுங் கரத்தால் நனை, பூ, காய், கனிகளைத்தந் தொளிருமாராமத்திலுப்பன் மேன்மையான ஸ்தானங்கட்கெல்லாந் தூய்மையாய் விளங்கும் குறுமுனிவராச்சிரமங்குறுகி, விந்தையெனு நாகநாகமுற நாகமெனநின்றவரும், பார்வதியைப் பரமசிவன் வேட்டகாலை யுத்தரதிசை நீசமுற அரவணிந்தசெல்வன் நோக்கி யெண்டவ! எம்மை நேரான நீயவாசிக்க ணேகவென்றருளலும், வந்துலகு சீர்பெற மலயாசலத்திலிருந்தவரும், அருந்தமிழைத் தந்தவரும், சரவணபவனிடத்து யாவையுங் கற்றுணர்ந்தவரும்,

எவ்வுயிருமுய்வான் றமது குண்டிகையினின்றுங் காவிரிமாநதியைத் தந்தவருமாகிய அம்மகருஷியினது மாணாக்கரிலொருவரைத் தாமரைக்கண்ணர்பணியா லிளையபெருமான்னோக்கி ஐய! ஐயன்வரவை மகருஷிக்குத் தெரிவியுமென் றுரைத்தலு மவர்சென்று தொழுதுணர்த்தினர். மாமுனிவ ராசனத்தினின்றுமெழுந்து விண்ணினில் மண்ணினில் இருக்கினுமிருக்குமென யாருங்கருதுங் கருத்துப்பொருளினைக் கரசரணுறுப்போடு திவ்விய மங்களமூர்த்தியா யெனதுகண்ணூர்க் காணப்பெறுகின்றனனெனக் களிப்புறு மனத்தராகி வேதவேதாந்தங்களின் ஞானமாகிய கல்வியிட்டளைத்து மறியாப் பரவஸ்து என்றேருமையாயு முனைக்குமென வுளமுவந்தாராகி யெதிர்கொண்டும் பரந்தாமர் அடி மிசைவீழ்ந் தாராவன்பிற்றொழுதனர். மாமுனிவராசிசொல்லி இராம! நீ தண்டகாவனத்திலுறைகின்றனை. இத்திசையினும் வருவாயெனக்கொண் டுவந்திருந்தேனென்று தேன்மொழிமொழிந்தோ ருறைவிடமருளி விருந்தமைத்தனர். மாமுனிவர் தாமுபாசிப்பான், உந்தியில் முந்துறவர்தோன்றுத லுதாசனனுலகைத்தந்து காத்தருள்விழு மாதிமூர்த்தி, பாகசாதனன், அலரியோன், தண்கதிரோன், மகதேவதை, குபேரன், தாதா, விதாதா, வாயு, அநந்தன், காயத்திரிதேவதை, வசுதேவதைகள், வருணன், சரவணபவன், தருமதேவதையாகிய வித்தேவர்கட்குத் தானமோர்பாசினும், எரியோம்புமிட மோர்புறத்தினும், யோகம் புரியுந்தான மோர்பக்கலினும், கலைகளோதுவிக்குங் கழக மோர்புடையினும் விளங்குகின்றதை ஜனகாத்மஜையுடனுஞ் சுமித்திரைசிங்கத்துடனுஞ் சர்வஜ்ஞர்நோக்கி யதிசயித்திருந்தனர்.

இவ்வயின் பிரமன்முதற் பத்தோடேழு சார்ந்ததேவர்க ளகஸ்திய மாமுனிவரைப் பூசிப்பான் வீற்றிருந்தனரென வுரைப்பாருமுளர். தேவர்கள் அகஸ்தியமாமுனிவரைவணங்குகின்றாரென லுரியமுறைமையோவென்று நோக்குவதுகிடக்க, சிஷியனெவ்வளவு மேம்பாடுடையானேனுந் தேசிகனவனை வணங்கலாகாதென்ப தறநூல்விதியன்றோ! அதனை மறுப்பார்யாருமில்லை. குறுமுனிவர்க்காசிரியன் முருகக்கடவுளென்பது நிர்விவாதமாயிருக்கிறது. அப்பதினேழுதேவர்களில் வள்ளிமணவாள னொருவனுமிருக்கின்றனனாகலி னவ்வாறுகூறுவதேலாதென மேலோர்பகர்வர்.

இரகுபுங்கவரவட் சின்னாட்டங்கி அகஸ்தியமாமுனிவரைத் தொழுது சுவாமி! இமையவரு நுமதருள்பெற்றினர், யானுமதருள்பெற்றேனெனப் போற்றி யான் றங்குவதற் கோர்தான முரைத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தலு மக்குறுமுனிவ ரோர்முகூர்த்தகாலங் கண்ணிமைதிறவாது மௌனமாயிருந்தெண்ணி மைந்த! நோக்கு, அதோ செய்மையிற்றோன்றுகின்ற இருப்பைத்தருக்களடர்ந்திருக்கின்ற வனத்துக்கு வடக்குட்டோன்றுகிற பெரிய வடவிருட்சத்துக் கப்புற மோர்மலையின் சாரலைக்கடந்தாற் கோதாவிரியென்னு மாநதி தீரத்திலிருக்கின்ற பஞ்சவடியி

துறைந்தா லெவற்றிற்கு நன்று. ஆங்குநோக்குக்கினியவாய சோக்குடைமிருகங்க ளுண்டென்றுரைத்துப் பரசுராமரிடத்தினின்றும் வாங்கிய சாரங்கத்தை இராமபிரான் வருணனிடத்திற் றந்தனரன்றே. அதை வருணனிடத்தினின்று மிந்திரன்பெற் றகஸ்தியமகருஷிபாற் றந்தனன். அச்சாபத்தையும், வேண்டினவர்கள் வேட்கைக்கு மேற்பட வுவந்தீயும் வள்ளலது தனம்போலென்றுங் கோல்குறையாத்தூணியும், பாணங்களும், நாந்தகமுமல்கி விடுத்தனர். காகுஸ்த ரம்மகருஷியைத் தொழு திரண்டு யோசனை தூரத்திலிருக்கின்ற பஞ்சவடியைநோக்கா வருகையிற் புகழுக்குயிராவிற்கும் ஜடாயுவைச் சந்தித்துத் தந்தையான தசரதா மீண்டுவரக் கண்டாரெனக் களித்துவந்து, சாலம், தாலம், தமாலங், கிருதமாலம், ரசமாலம், சரளம், வகுளம், திலகம், ஆமலகம், விகசம், விருசம், கேசாலம், அங்கோலம், லவங்கம், விகங்கம், கதம்பம், உதும்பரம், அசுவத்தம், கவித்தம், குரவகம், குந்தம், இந்துகம், சம்பகம், பனஸம், வேதஸம், பலாசம், பாடலம், பிரியங்கு, திர்திருணி, நியக்குரோதம், ஜம்பு, கோவிதாரம், தேவதாரம், அர்ஜுனம், நாளிகேரம், அசோகமுதலாயவிருட்சங்களொருங்கிக் கொண்டலுக்குங் கோளுக்கு மேலோங்கி யோயாதலையு மாதித்தனுச்சியில் வருங்காலைச் சிறிதுதங்கி விடாய்தீர்ந்தேகத் தகுதியெனத் தழைத்தலைக்கொண்டும், கனுவல்லி, சூதம், சம்பங்கி, முல்லை, மல்லிகை, கல்லாரம், தைகம், ஜாஜி, கேசரம், மந்தாரம், சமீராளும், சிரீஷமுதலாயகொடிகள் செடிகளடர்தலடைந்து மலர்கள் மலர்ந்தும், சிம்ஹம், வியாக்கிரம், வனவராகம், கானமகிஷம், பல்லூகம், கோலாங்கூலம், சாகாமிருகம், அரிணம், வாலதி, கவயம், விருஷபம், சிருகாலம், பலாலம்பம், சவபதம், விழிச்கு விழாவான சிருங்கமுதலாய மிருகங்கள் சஞ்சரித்தாரவாரிக்கப்பெற்றும், அம்ஸம், கரண்டம், சக்கரவாகம், கோகிலம், கேகயம், நீலகண்டம், பரத்துவாஜம், சுகம், சாரிகம், கருடன், கபோதம், சாதகம், சரபம், கண்டபேரண்டம், நாளாமுதலாய பறவைக ளொலியைக்கொண்டும், பரமபத நாதராகிய தினகரகுல ரத்தினமுறையப்பெறும் எம்பலாற் பூமாது மெய்யின் மயிர்பொடித்தாற்போலப் பசும்புலடரப்பெற்றும், பூவுக்கனியாய்ப் புலத்துக்கினிதாயகன்ற பொருடங் தைந்திணை யளாவித்தெளிந்து தண்ணென்றொழுக்கமும்பூண்டு, தெய்வப்புலமைக் கம்பநாட்டாழ்வார் கவியென ஆழமுடைத்தாய்ப்பொலியுங் கோதாவிரிமாநதியால் வளம்பெருகியுமின்றும் விளங்காநிற்கும் பஞ்சவடியைச் சார்தலுங் கோதாவிரியென்னுமாநதி இராமசந்திரனைக் குவளையென்னுங் கண்களானோக்கித் திரையென்னுங் கரங்களான் மலர்களைத்தூவி யடிபணிவதெனப்பொலிந்தது. முன்னடகச்சேக்கையினேமி வாளங்களிருத்தலு மிட்சவாகு குலரத்தின மவைகளைக்கண்டு ஜனகாத்மஜையாரது கொங்கையை நோக்கினா. பெண்ணிலை முதன்னவரும் பரமபுருஷரது தோள்கள்போன்ற மணித்தடங்களைக் கண்டனர். அன்ன நடக்கக்கண்ட வுத்தமர் சீதாபிராட்டியாரது நடை

யைநோக்கிப் புன்முறுவல்செய்தனர். சேயிழையாரு மாங்குவந்து சீதையை மிரும் போதகத்தினது நடையைப்பார்த்துப் புதிதான முறுவல்பூத்தனர் இவ்வாறு இருவருமுவந்து சமித்தினை செங்கத்தாற் சமைக்கப்பட்ட பன்ன சாலையோடியிருந்தருளினர். மானவர்செய்தமாதவமுன்னாதலின் மேனி கழ்ந்ததைக் கினைத்துநின்றனென். உயிருடன்பிறந்துறைந்து காலமோர்ந்து விளைத்து கொல்லுங் கொடிய சோயொத்த சூர்ப்பநகை இராவணனை மூல நாசமுறுவிப்பான்போந் தவ்வடவியோட வண்டகத் துறிதுயிறுறந்த ஐ யனைக்கண் டம்ம, இத்திவ்விய மங்களவுருவன் யாவனோ! மன்மதனோ என்பேனெ லவனுக்குருவமில்லை. இந்திரனென்று லாயிரநோக்கில்லை. ஈச னுக்கு மூன்றுகண்களுலவையுமல்லன். காத்தளிக்குங் கடவுளெனெ ன்கைகளிருகரங்களோடு விளங்குகின்றனன். பாலசந்திரனை யங்கமுதித்த அங்க னன்றுமொட்டியிருந்தம்புரிந் தில்லுருவம்பெற்றனன் போலாம். அச்சோ இவனதுதிருவுருக்கினை யாதுமோயது மலைமலொளி னஃதுகத்திலுறை யாது நடாகத்திலுறைகின்றது. தருதியாய்ச் சமைந்து நீண்டிருக்கின்ற காங்களுக்குத் திசையோம்பும் யானையின் கரங்கள் நிகரு பொருவாகிற் கும். வீரத்தோளுக்கு சிலாத்தினமலை யொன்றாவிடின் மேருவும் பொ ன்மலையாகலின் வேறுவமையில்லை. குன்றுபோலுற தோற்றத்தானது தோளொள்தோளினோக்கக் கண்ணினையல்ல பாரிபோ வொடிதாகும், அருக்க னனவொளிரு மிவ்வழகனது முகத்துக்கொப்பு மதியென்பனேன் மதி யெமதி; அதற்கலைகடேய்ந்து வளர்கின்றதன்றி மறுவுமுண்டன்றே. எவன் செய்ய விவ்வருமை யழகையெய்தினவன் அஃதெயமாகத்திருமேனி யலச வருந்தவமுயல்கின்றனன். நையலார்கண்டா லையுறுடையுயிருடையுமொன் றெண்ணித் தொடையமை செம்மையையனக் கடைகுழன்று சொரிந்த கரி யகுஞ்சியைச் சடைபுனைந்த விப்பரமபுருஷனது திருமேனியின் சோதி யைக் கதிரவன் காணவஞ்னதா ஞனமிலாது சேணிற் புல்லொளிசெறுத் தித் திரிகின்றனன்போலும். நீண்டிபரந்து கடைசிவந்து கருமணியினாங்கிச் செவ்வரிபரந்து கருணைக்கடல்பெருகுங் கண்ணுன் தயவுசெய்யத் தவமே த்தவமுயன்றதோவென்றெண்ணிப் பாவையுங் குறுகமிமிர்காதல்கொண்டு நெடிதுயின் றிவனைத்தைப் புல்லேனெனிற் பொன்றுவேனென்று கருதி அச்சூர்ப்பநகை தனதாக்கி யுருவந்தவிர்த்துக் கற்பகமின்றகதிருடையோ ர் வல்லி மேனி பெற்றாற்போலழகுற்றக் குயிலொடொட்டுதலையுமயிலொ டரியலையு மானொடோடர் விழியையுங் காமம்யினையும் வாசந்தேனின்மொ ழியையுங்கொண்டு நூபுரமுமேகலையு மோதியின் முரல்கின்றவண்டுகந்தே வகண்டகளைக் கண்டனஞ்செய்வா ளோர்பெண்கொடி வருகின்றனளெ னப் பூசலிட வஞ்சமகள் வஞ்சியென நஞ்சமென அண்ணல்பால்வந்து ம டமான மச்சம் பயிர்ப்புகளைத்துறக் தொழுக்கமல்லாதது செய்தலின் லட் சுமணசுவாமியால் மூக்கையுங் காதையுமிழந்து தன்பமுற் றிராவணனைக் கூவி யிராவஞ்செய்து கரன்பாலணைந் தவனடியில் வீழ்ந்துற்றவாறுணை

ர்த்தினள். அதைக்கேட்ட கரனுனிவன் தூஷணன் திரிசிரசென்போருடனும், பதினாலாயிர மகாரதிகருடனும் பொருக்கெனவெழுந்துசூரியங்களா லெழுகடலுட்கவும், வார்சிலையொலியின் உருமெலாமறுக்கங்கொள்ளவும், தெழிப்பான்மேகமெலாம்பயந்து திசாதிசையோடவும்வந்து,தமதுதிருவடிகளைப்பற்றுவாரது பிறப்பறுப்பாராகிய இராமபிரானோடமரிலமர்ந் திராமசரத்தினிடத்து விடைபெற்று நமன்றூதர் வழிகாட்டத் தென்புலஞ்சார்ந்தனன். அப்போ தென்றும் பெறாவிருந் தின்றுபெற்றோமென்று கூற்றமும்பேயுங் கழுதுமுவத்தலு மறையு மறனுஞ் சமரபூமியிற் கவந்தமு நடம்புரிந்தன. பின்பு சமர விசயரதனம் பூவினின்றும் போர்துபூவின்கட்டோன்றிய பொன்னுற்றழுவப்பெற்றுவீற்றிருந்தனா. வந்தவீரர்களில் இராமபாணத்துக் கெதிர்தோன்றாது மறைந்திருந்த அகம்பனென்போன் விரைந்தோடி இராவணனைத்தொழுது நிருதர்வேந்த! ஜனஸ்தானமதமாய்விட்டது. நான் பிழைத்தோடி வந்தேனென்றலும், இராவணனென்றுங் கொள்ளாச் சீற்றங்கொண்டனன், அக்காலை தீயெரிநரகமு நடுங்கவதன்கணெய்திய கரன்முதலாய பாவகாரிகளை யாதாரமாய்ப்பற்றுநிற்கும் பாவம் வாய்விட்டலறி நிருதரிறையே! பற்றறறே னென்செய்கேனென்றிரங்கி யிலங்கையைநோக்கியோடினுற்போலிழந்த காதையு மூக்கையுமுடைச் சூர்ப்பநகையெனப் பாவமாகிய பைங்கூழ் வளர்க்கு மேகமாகிய இராவண னடியில்வீழ்ந்து புலியிற்புரண் டோவென்றுகதறிச் சனகர்குல சுந்தரியாரது சுந்தரத்தையும், சுமித்திரை சிங்கந் தனதங்கத்தைப்பங்கப்படுத்தினதையும், சக்கரவர்த்தி திருமகனார் வலிமையையும், கரதூஷண திரிசிரசாதிய ரெல்லாருங் கும்பிக்கு நல்விருந்தானதையு முணர்த்தினள். தசக்கிரீவன் தனது கிளைகளினது சாவையுந் தங்கை யீனமடைந்ததையு மறந்து, ஜனகர் குலரத்தினத்தை மறவாதவனுகி யந்நங்கையை வஞ்சியாமுன்ன மனமென்னுஞ் சிறையில்வைத்து மயல்கொண்டுள்ளலைந்து புழுங்குவானாயினன். சீதையென்னு நாமமும் பாலியான இராவணனது சிந்தையு மொன்றாயிணங்கி நின்றமையா லப்பிராட்டியாரை மனத்தினின்று நீக்கி மற்றொன்றையுன்ன வப்பாதகனுக்கு வேறுமனமுமுண்டோ? நூல்களைக் கற்றுமென்ன? ஞானங்கொண்டாலன்றிக் காமத்தை நீக்கலாமோ? அவ்விராவணன் மிதிலைநாடியனை மறக்கு மார்க்கமின்றிக் காமங்கொண்டேதுவோன் றருத்திபோதுயிர்த் தாவிநொந் துரமுடைந் தழுங்கினன். பின்னர்த்தசக்கிரீவன் சானகியாரைக் கவருவா னுபாயமுன்னி மாயத்தில்வல்ல மாரீசனைமானுருவாக்கிவிடுத்தலு மைதிலியா ரம்மாயமானைக் கண்டு விளையாடவதைப்பிடித்துத் தருதியென் றிராகவனடிதொழுதனர். அப்பிரானவ்வுழையின்பின் சிறிதுதூரஞ்சென் றினிக்கையாற்பிடிக்கவொண்ணாதெனக்கருதி யம்பாலெய்தலுமாரீசன் ஆசீதா லட்சுமணாவென்றோலமிட்டுமானுருத்தவிர்ந்து வீழ்ந்தான். பன்னசாலையிலிருந்த ஜனகநந்தினியார்மாரீசன் குரலைக்கேட்டு இராமபிரானுக்கென்னவிடுக்கனேரிட்டதோ

வென்று கலங்கி யுற்றதறியான் தம்மைக்காத்திருந்த இளையபெருமாளையே
வுமன்னேரக்குரலெழுந்தவிசைநோக்கிச்சென்றருளினர். அவ்வேலை
யற்நோக்கியிருந்த இராவணன்றிரிதண்டமும் பூணூலுஞ்சிகையுங் காஷாய
முங்கொண்ட வோருத்தம துறவியைப்போல வஞ்சவேடம்பூண்டு பன்ன
சாலையிற்குறுகித் தனித்திருந்த மிதிலையர்கோ னன்னத்துடன் பெமொ
ழிமொழிக் தச்சந்நியாசி யுருவந்தவிர்ந்து, நீண்டுநெடுநீலம்பூண்டு குழன்று
நெரிந்து சரிந்து செறிந்து இருண்டு கடைசுருண்டு புகையும் பூவுமின்றித்
தெய்வவெறி கமழுங் கூந்தலையுடைய குயிலன்னுரையெடுத்துத் தேர்மே
லவைத்தேருங்காலை பிராட்டியார் துடித்துவிழுந்தெழுந் தெக்காலத்திலும்
யாருங்கொள்ளாததுயர்கொண்டு, மலையே, கலையே, மயிலே, குயிலே, ம
ரனே, பிடியே, களிறே, பொழிலே, அறனே, எங்கேயுமி மீருமெனதுயி
ரோ, தமியேனிலையைக் குறையாவலியுடை பெஞ்சேவகனிடத் துளாயி
னுளாயினென்றும், மாதாவினைய கோதாவிரியே! வினையேன்வினையை நீ
மூந்தியுரைத்திடுதியென்றும், வரதா! அன்புடைப்பரதா! இளையோய்! இளை
யோய்! சார்கிலிரோவென்றும் விம்மிவிம்மியேங்கவும், பாகவதோத்தமரா
ன ஜடாயுவானவ ரெதிர்தோன்றி அடஅரக்க! என்செய்தாய்? எண்ணமி
லாய், இந்நன்னுதலார்யாராகநினைந்தனை. சர்வலோகசரண்யரான இராம
பிரான்பத்தினியாரன்றோ. பெண்களின்றிலகத்தைவிட்டேகு. இல்லாவிடி
னிவ்விளையொடுங்கெட்டாய், நினதுகுலத்தைச்சுட்டாய், இன்னேபட்டாயென்
றதட்டியுரைத் தெதிர்த்துத் தசக்கிரீவனைத் துண்டத்தால்வருத்திச் சிறகாற்
புடைத்துத் தேர்ப்பாகனைமாய்த்துத் தேரையுடைத் தூறுசெய்தனர். மூல
மறக் கெடுவானுகிய அரக்கனவரைத்தாக்கவு மெருவைக்கிறையான வுத்த
மர் கருமவசத்தாற் சலித் தவனியிற் சயனங்கொண்டனர். அக்கினியையத்
தூசின்கண் முடிந்தாற்போற் பாதகன் சீதாபிராட்டியாரைக் கொண்டுபோ
ய் இலங்கையின்கண் அசோகவனத்திற் சிம்சுபாவிருட்சத்தினடியில் வீற்றி
ருக்கச்செய் தரக்கியரைச் சேமமேவினன். நம்மன்னையாரு மச்சிறையிலி
ருந்தருளினர்.

அக்கினியிலாவது சலிலத்திலாவது மகவு வீழினுடனேதானு மதில்
வீழ்ந் தக்குழந்தையையெடுக்கு மன்புள்ள தாய்போலத் தெய்வமகளிர்கள்
சிறையிலிருப்பவர்களை மீட்பான் லோகமாதாவாகிய சீதாபிராட்டியாருஞ்
சிறையிலிருந்தனரென் றறைகுவர்.

அப்பாற்கலையைத்தொடர்ந்துசென்றபெருமாளும், அவரைத்தொடர்ந்த
இளையபெருமாளும்போந்து பன்னசாலையிற்புகுந்து தேவியாரைக்காணுமற்
றிகைத் தலமந் தொருவன் வேறுபொருளிலானுகித் தான்வாழ்கிறதற்குதவும்
படி வைத்திருந்தபொருளைக் கள்வன்கொள்ளக்கண்டிருற்போல மதிமயங்
கித்திருவுளந்திரிதலு மண்ணும் விண்ணு மால்வரைகளு மலையெறி கடல்களு
ம்பின்னும் யாவையுந் தாரகவாச்சியன் சொரூபமேயென்ற வழக்காலேயோ

அவைகளுந்திரிந்தன. பூமிஜாப்பிராணரத்னம் நண்மத்தை சூடிய ஈம்பனே போலுன்மத்தங்கொண் டிளையபெருமானைநோக்கிக் குழந்தாய்! இன்னே பார், உலகத்தைமுடிக்கின்றேன். சீதையையிழந்தபின் யான்கருதுவ தெவ னென்றோங்கலுமிராமாநுஜர் தொழுது அத்த!முனியற்க. சுவாமி முனியுங் காலமிதுவோ. சிலவமையத்தில் யான்முனிந்தகாலே யெனக்கறிவுறுத்தித் த ணியச்செய்தபெருமானே!பொறுத்தல்வேண்டும். தீவினைசெய்தவொருவன் காரணமா யுலகத்தையழிப்பது தருமமன்று, பிராட்டியாளை நாடுவோம். வஞ்சனைபுரிந்தவனைக் கொல்லுவோமென் றடிதொழுதனர். அநாதிப் பகு தியினுலுண்டான பிரமிப்பினாற் றேகேந்திரியாதிகளை யாத்துமாவாக நினைக் கின்ற வறிவில்லார்க்குத் தேவமனுஷியாதி ரூபமாகவும், பரமாத்தும உரு வாக விசாரிக்கும் ஞானிகளுக்குச் சுத்தஞானசொரூபமாகவும் விளங்கும் பரமன் ஆம் அஃதுளதேயென் றிளையவருரைக்கிணங்கிச் சீற்றந்தவிர்ந்துப த்தினியாளைநினைந்து சீதா வாராய்வாராய்.எங்கேசென்றாயென்று புலம்பி யவாசிக்கணைகு நெறியி லிராவணனு லுரமடங்கித் துன்பந்துய்த்துத் தேவபிராணதுவாரவையேநோக்கி யேகுமுயிரைத் தகைந்துகொண்டிருந்த ப றவைப்பெருமானைச் சீதாநாயகர் சேய்மையிற்கண் டெமதுதேவியை யுண் டியிரைத்தின்ற அரவம்போற்கிடக்கிற வவ்வரக்கனையோரம்பாலியமன்முன் னிறுத்துவேமென்று விரைந்துசென்றனர். உத்தமரான ஜடாயு பவகுல வாரரத்தினத்தைநோக்கிக் குழந்தாய்வாராய்,தீர்க்காயுவுள்ள ராமாவாராய், எந்தாய் வாராயெனலும், பத்தவற்சலரோடி யுத்தமர்மேல்விழுந்து ஜய னைக்கென்னேர்ந்ததென்று விம்மினர். ஜடாயு சுவாமியைத்தேற்றி, இரா வணன்புரிந்த தீமையையும், தம்மா லவனழிவுற்றதையுடி பிராட்டியாளை இ லங்கைக்குக்கொண்டேகினதையுமுரைத்தலுந் தாசரதியார் திருவுளங்கலங் கியெந்தையே!சீதையேதாவது புகன்றாளோ!இராவணனெவ்வாறு கொண் டேகினன்! மீண்டுமுரைமினென்றனர். பாகவதோத்தமர்மிகவுமெலிந்து மெல்லியமொழியா லுற்றவாறுணர்த்திச் சுவாமியைக்கண்ணாரநோக்கி யவ ரது திருநாமமாகிய தாரகத்தையுச்சரித்துக் கண்மூடி யுயிர்பிரிய மற்றமுறுங் காலனம்மாளுடையாரதனைநோக்கி மிகவருந்திநைந்துபுழுங்கினர். சடாயு தேவரெதிர்கொள்ள விண்ணேறினர். தாசரதியார் தாதைக்கழுது இளையவ னே! பட்சியாயினு நம்பொருட் டுயிரைத்துறந்தனர். யாதாயினும் யாவரா யினுமென்? அன்பேதலைமையாம். அதனை யிச்சடாயுவின்கட் கண்டன மென்றுரைத்திளையபெருமானைக்கொண்டு காஷ்டங்களையடுக்கித் தாம்விதிப் படி யாவும்புரிந்துவேதமந்திரங்களையுச்சரித் தெருவைக்கிறையைத் தகனஞ் செய்து,பின்னவ்வனத்திற்சரித்த விலங்கைக்கொன்று தசையாற் பிண்டஞ் செய்து,மரகதத்தினது கொழுஞ்சோதிபரவினாற்போலப் பசும்புல்வளர்ந்தி ருந்த வோர்நல்லிடத்திற் றருப்பைபவிரித் ததனிலவ்விறைச்சிப் பிண்டத்தை ப்போட்டு நல்லுலகருளிப்போந்து, கோதாவிரிமாநதியினீராடி யிருவரும் நீர்க்கடன்செய்தருளினர். பின்னர்ச் சக்கரவர்த்தி திருமகனு ரவணின்று

மேகி மானன்றனை நாடிவனத்திற்செல்கையி லோரிடிக்குகையிலிருந்தோராக்ஷி குவிமுலையளையக் குறித்துப்போந்து சுமித்திரை சிங்கத்தை நோக்கி மேருகிரியையிழித் துயர்ந்தோள! என்பெயரயோமுகியென்ப. நின்னையன்ப விரும்புகின்றனென். என்னோடுபோதி, மலைச்சாரல்களிலு ந்திப்பக்குமணற்றடங்களிலுஞ் சுகமாய்க்காமனுமிரதியும்போல ரமித்துவிளையாடலாம். நானெதிர்தோன்றியது நினக்குப்புதையற்றனங் கிடைத்தாற்போலன்றோ? தாமதியாது சாருதியென்று பருவாய்திறந்துரைத்தனள். இளையபெருமான்வெகுண் டவ்வயோமுகியினது காதையு மூக்கையுமுலையையுங்கரிகையாலறுத்தலு மவள்கதறியோடிப்போயினள். அப்பா லவ்விருவருஞ் சிறிதுதூரஞ்சென்று, உயிர்களை வாரிவாய்ப்பெய்யுங் கவந்தனைப் பார்த்து,மகாபிராயச்சித்தத்தாலும், பிராமணசந்தர்ப்பணத்தாலும்,இராமசேவையாலுந் தீராச்சீவ இம்சையென்னும் பெருந்தோஷத்துக் கிளியலளுனாகாமலவ னிருபுயங்களையு மிரண்டுவாளாற்றுணித்தலு மவன் சிறிது ஞானங்கொண்டு வேதவேதாந்த சாரத்தினைத்தைத் துதித்து ஐய! நான் தனுவென்ற தேவபுத்திரன். முன்னொருநா ளுன் கோர ரூபங்கொண்டு தூல சிரசு மகருஷியைக்கிட்டி, ஆசியஞ்செய் தவரைவெருட்டினேன். அவரென்னைச்சினந்து நினது நல்லுருவந்தவிர்ந் திவ்விகாரரூபங்கொண்டமையா னீ யிவ்யாக்கையுடனே யிருக்கக்கடவாயென்றனர். அதன்பின் ஓர்காலத்தில் இந்திரன் வச்சிராயுதத்தை யோச்சியடித்ததனுலென்சிர முடலிலமுழ்ந்திற்று. அதுமுதலிவ்வா றிருக்கின்றனென். எனக்குவிமோசனமென்னென்று நான் ஸகஸ்ராட்சனைக் கேட்டது மவனோதியவாறு தேவரீரிருவருமெழுந்தருளினீர். என்னை யோர்குழியிற்றள்ளித் தகனஞ்செய்வீராயின் நான் சுசரீரம்பெற்று நுமக்காகவேண்டிய கருமங்கட்குச் சில வாக்குச்சகாயஞ்செய்வேன். அதை யின்னேசொல்வாயென்பீராயின் ருஷியினது சாபத்தா னல்லறிவின்றி யிருக்கின்றனெனெனலும், பத்தவற்சல ரிளையபெருமானைக்கொண் டக்கவந்தனை யோர்மலையினது சாரலின் பக்கலிலிருந்த குழியி லுரல்போலுருட்டித் தள்ளுவித்து வனகரிகளாலொடிக்கப்பட் டுலர்ந்துகிடந்த வவ்வனத்தருக்களினது கொம்புகளைக்கொண்டுவந்துசேர்த்துத் தீமூட்டித் தகனஞ்செய்வித்தருளினர். உடனே கவந்தன் தேவவுடல்பெற்று மாகத்தினின் றன்புகொண்டு சானகிகோர்தனைப்போற்றி ஐய! நுமதுவரவைநெடுநாணோக்கிக்கொண்டு சவரியிருக்கின்றனள். பம்பா சரசுக்கு மேற்பக்கத்திலிருக்கின்ற அவளாச்சிரமத்துக்கெழுந்தருளுமின். ஆங்கு மதங்கமகருஷியினது சிஷியரநேகர் தேவபூஜார்த்தமாக மலர்கொய்துவந்தனர். அக்காலை யவர்களது புண்ணியசரீரங்களினின்றும் வெயர்வுபொடித்தது. அவ்வெயர்வெலா பலவிதமான புஷ்பங்களாய்ப் பூத்திருக்கின்றன. இன்னுஞ்சில வற்புதச்செயல்களாங்குண்டு. அவற்றையெல்லாஞ் சவரியாற்றெரிந்துகொண்டு கண்டருளும். எந்தையீர்! இன்னுங்கேண்மோ, ஒருவரையொருவர் துணைக்கோட லெவ்வித

த்திலாவதொருசம்பந்தமிருத்தல்வேண்டும். இல்லாவிடினதுபயன்படாது. இப்போது சூரியன் காண்முளையான சுக்கிரீவன் தேவரீரையொத்தே யாசையு மில்லையுமிழந்து இருசியமுகபருப்பதத்திலிருக்கின்றனன். அவனை நீர்நட் டவனுக்குதவிசெய் துமக்காக வேண்டியதை யவனுலடைந்தருளும் வாலியினது வாழ்நாளுங் குறுகிவிட்டது. தாழாது செல்லுமினென்று நெறியுமுரைத்து விடையும்பெற்றுத் தன்னுலகுபுக்கான். பின்பு பலகுலஹாரத்தினந் தம்பியுடன் கவந்தன் சொற்றநெறியைத் தொடர்ந்துவரலும் பாகவதோத்தமரான சவரியம்மை யென்புமுருக வன்புகொண்டு கண்ணீ வார வுளமுருகி மெய்யிற்புளகம் பூப்ப வெதிர்கொண்டுவந்து முனிஜனஜபரத்தினத்தினது திருவடியையு மிளையபெருமாளது திருவடியையுந்தொழுது துதித்துத் தமதாச்சிரமங்கொண்டேகி யாசனமிட்டுப் பிராணநாயதனிலிருத்திக் கைந்நீரடிநீருண்ணீர்கொடுத்துப் பூசனைபுரிந்துதேவ! நான் மதங்கமகருஷியினது சிஷியர்களான பெரியோர்கட்குப் பன்னாள்கைங்கரியஞ்செய்துகொண்டிருந்தனென். தேவரீர் சித்திரகூடத்துக்கெழுந்தருளிய செய்தியைக்கேட்டபின் பவர்களெல்லாருந்தேவவிமானத்தின்மேலேறி யுத்தமலோகஞ்சென்றனர். அப்போதெனக்கென்னுறுதியென்று நான் வினவுமேகுமவர்கள் நம்மரும்பெறலடிகளிளையவருட னிவணுறுகுவா அவ்வாயாராதித்து நீ நல்லுலகத்தை யணைவாயென்றனர். அதுமுதலினிமைபார்த்துத் தேடிப் பலவித பலவர்க்கங்கள் வைத்திருக்கின்றனென். அவைகளை யருந்தியருளவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொணர்ந்து சமர்ப்பித்தனள். தேவர்கட்கமுதூட்டிய அறவாழியந்தணனார் அவ்வமுதினுமினிதாயுண்டுவந்து சவரியன்னையை யருளால்நோக்குற்று, அன்னாய்! உன்றீதின்றிநினது மாதவ நிறைவேறுகின்றதா? நல்லுணவை மிதமா யுண்கிறாயாவென்று அளவளாவி நினதுதேசிகர்களா தாச்சிரமங்க ளெவ்விடத்திருக்கின்றன. அவைகளி லற்புதச்செய்கைகள் யாவை? தனுவென்றதவர்தனுற் சிறிது கேள்வியுற்றேன். அத்தானங்களைக் காண்பிப்பாயாயின் காணவிரும்புகிறேனென்று திருவாய்மலர்ந்தருளலுஞ் சவரித்தாயார் தேவரீர் நியமனத்தைமுடியிற்கொள்கின்றனெனென்றுதொழுது மதங்கமகருஷியினதாச்சிரமமுதன் மற்றவர்களது பன்னசாலைகளையு மவைகளி னற்புதச்செய்கைகளையுங்காண்பித்துப் பின்னர்ச் சவரித்தாயார் பரமபதநாதனைத்தொழுது புராணபுருஷோத்தமனே! எனதுபுண்ணியம் பூத்ததெனவெழுந்தருளினீர். எத்தேவர்க்கும்பெறலரிய தேவரீர் திருவடிகளைப்பூசிக்கப்பெற்றேன். இனியான்கருதுங் கருமமொன்றுமில்லை. தேவரீர் திருவடிநிழலைத் தந்தருளுமென்று தொழுதக்கினிவளர்த்ததிற் றமதுடலை நீத்துத் தேவரெதிர்கொள்ள விமானமேறி யுத்தமவுலகைச் சார்ந்தனர்.

"இவ்விடைச் சவரியம்மை கனிவர்க்கங்களைச் சுவைபார்த்துவைத்திருக்கின்றனெனென்று சுவாமியினிடத்துச் சாற்றியமாற்றத்தால், அவ்வன்னையார் கனிகளினினிமையைத் தமதுநாவினறிந்து வைத்திருந்தனரென்

ஜசம்பிரதாயமாய்மொழிவர். மாந்தர்க்கரிது முத்திபெறுவதோ பத்திபுரிவ
தோவென்றாயுங்காற் பத்தியேபெரிதெனலமையும். யோகமுதலியமுய
ற்சிபுரியின் இணையில்லாப்பவான் வீடருளுவர் சரணத்திலன்புபுரியுமன்
பர்மாட்டன்புற்றுத் தாமவர்தரும்ப பாரத்தைப்பரிக்க வேண்டினமை
யின் மாந்தர்க்குப் பத்திபுரியு நெறியைக் காட்டுவதரிது. அந்த கலியாண
குண பரிபூரணரான கைவியபுருஷா அரணயனுறையர்க்கரியரேனு மடியார்
க்கெளியரானமையின் கானிலந்தோயக் காலுற முனிவராச்சிரமங்களை
நாடி நாடிச்சென்றருளினர். வேடர் பெருமானைத்தோழனென்றருளினர்.
பறவையைச் சிறுதாதையென் றுறவாடிக்கருமஞ்செய்தருளினர். இச்சவரி
யன்னைபெச்சிலைநச்சியுண்டருளினர். இராமதாஸஸ்வாமிகளின்பொருட்டு
வெறுக்கைகைமந்துமிலேச்சன்முன்சென் றருளினர். கபீர்தாஸஸ்வாமிகளுக்
காக ஆடைநெய்தருளினர். பாண்டவருக்காகத்தூதுசென் றருளினா குதிரை
ச்சேவகஞ்செய்தருளினர் கோபிமாரனைத்தில்லை யொலித்தனர். தொண்ட
ரடிப்பொடிகளுக்காகத்தேவதேவியென்ற தாசிபாற்கையாளைவிட்டிலேர்த்தித்
தூதுநடந்தருளினர். திருமழிசைப்பிரான் விடைந்தவாறெழுந்து பெயசனவெ
ழுந்தருளினர். திருக்கச்சிநம்பிகளுக்கு நன்னிரவில் கைவிளக்குப் பிடியா
நின்று நெறிவிளக்கமுன்னே நடந்தருளினர். பிரமாதந்திரேந்திராதியரா
யாட்கொள்ளுநஞ் சர்வேசர் தம்பிரந் தாரத்தியர்வர்களுக்கு ஆட்செய்
தது இம்மட்டோ? அந்தமாம் பத்திபுரிவார் மனைமாளுமை தார்நிலையுமரிது.
தவத்தா லப்பத்தியைப்பெறுமாற்செய்வதெனின் ஈறுமின்று அதனுமேடாதும்
பயனே பெரிதினும்பெரிது. சாதியாலு மொழுக்கத்தாலு மேம்பாடுடைய
ரேனும் ஆதிகேசவன்சரணத்திற் பத்திமைசெய்யிலராயின் அம்மேம்பாடெ
ல்லாம் வியர்த்தமேயாமன்றிப் பயன்படா. அந்தணர்கள் முனிவர்கள்புரி
யும்யாகம்முதலியகருமங்களிற்சிறிதுதவறுறின், பலனோர்தொழியதன்றி
க்குற்றமுங்கைகூடும். தாழுமாறாய் மெய் பத்திசெய்தவருக் கிரில்லாப்பே
றெய்தினரேயன்றி யிழிந்தவரில்வுடைத்திலென்றுமில்லை. சவரியன்னை
வேடசாதியராயினுஞ் நல்லொழுக்கமுடைமையில் சீவகருணையொண்டு மகாத்து
மாவானமதங்கமகருஷியினது மாணாக்கர்களாகியமுனிசிரேஷ்டர்களா னா
டோறும்வழிபட்டொழுகினவராகலின் சகலபுவனங்களையுந் தமதுதிருவுத
ரத்திற்கொண்டிராநின்ற வொருவனை யாராதித்துப் பிறவாப்பேறடைந்தினர்.
ஞானப்புதவரூ லம்பொதிவாயில் சாத்திப் பற்றறுத்து, யானெனதென்னு
மபிமானந்தவிர்த்து, இராகவனுக்கே யுயிர்களடிமையென் றுணர்ந்தமா
வொருமடியார்க்கு மவரடியார்க்குமவரடியார்க்கு மாளாகப்பெறுவதன்
றிப்பெறும் பெரும்பேறு வேறொன்றுளதெனக் கருதேம்.''

பின்பு ஐயன்மாரிருவருஞ்சென் றரவிந்தம், ஆம்பல், உற்பலம், குமு
தமுதலாயபூவின்சாலம்பூத்துவிளங்கியும், வளைகளினின்றிழியுந்தேனும்,
மலர்களின்பிரசமுங்கனிகளின்றவமும்பெருகி மண்டலினர்க்கீளையுண்டவர்
பெருங்களியுறலாற் றேவையோ நிதமெனவும், அன்னங்களும் பேடைகளு

நெருங்கியிருத்தலின் நாள்களுடன் பலமதிகளுதித்த வானகம்போலவும் விளங்காநிற்கும் பம்பையாஞ்சரசைச்சார்ந்து சிறிதுபொழுது தங்கி இருசியமுகபருப்பதங்குறுகினர். அப்பருப்பதத்தின்மிசையிருந்த சுக்கிரீவர் இராமலட்சுமணரைக்கண்டு, வருமவர்களாரோ? வில் வாள்முதலியவைகளைக்கொண்டிருத்தலாற் றாபதரல்லர். சடை மரவுரி தரித்திருத்தலால் க்ஷத்திரியருமல்லர். வாலியாலேவப்பட் டெம்மைக் கோறலுக்குப்போதுகின்றனரென்றச்சுற்றுத் தாரன், நீலன், நளன்முதலிய மந்திரிமாருடன் அம்மலையினது முழைஞ்சிலோடிப்புகுந்தனர். அப்போது பாகவதோத்தமரான அஞ்சனைமஞ்சர் சுக்கிரீவனைநோக்கி அரச! அஞ்சேல். யான்சென் றவர்வரலாற்றைத்தெரிந்து வருகின்றனெனென்றுரைத்துவந் தன்பினுழுருகுகின்றவுள்ளத்தராகி, ஞானமிலானொருவன்ஞானத்தைப்பெற்றானெனவும், சீவான்மா ஞானத்தாற் பரமான்மாவையுணர்ந்தாற்போலவுங் களித்தோர்நீலமலைமேருகிரியுட னடந்துவருவதையொத்துத் தம்பியுடன் போதுந் திருமகள்காந்தனைத்தொழுதுபரமபுருஷரே! தேவரீர்வரவு நன்றாகவென்று குசலமுரைத்து, தேவரீரைத்தெரிந்துகொள்ள வெனது சிந்தை யவாவுகின்றதென்று மொழிதலுஞ் சுமித்திராபுத்திரர் அனுமானைநோக்குறுப் போந்தவாறெலாம்பிறழாதுவிளம்பியருளினர். அம்மாருதிதமதுபரிசெலாம் பகவானுக்குரைத்துச் சூரியன்கான்முளை யுறையுந்தான மேவலாஞ்சார்ந்தருண்மினென்று தமதிருதோள்களி லவ்விருவரையுந்தாங்கிக்கொண்டேகிச் சுக்கிரீவர்பக்கல் விடுத்தலுஞ் சூரியபுத்திரருஞ் சூரியன்மருமானுநட்டனர். இந்திரன்கான்முளையான வாலியைக்கொன்று ஆதித்தன்காதலருக் கரசளிக்கவேண்டியது தாசரதியார் கடனென்றும், மிதிலைநாடியிருக்குமிடநாடியுரைப்பது சுக்கிரீவர்கடனென்று மொருவருக்கொருவர் எரிமுன்னுறுதிமொழி யுரைத்துக்கொளலும்,வாலிக்கும் இராவணனுக்கும், சீதாபிராட்டியாருக்கு மிடதுபுறமுற்றும் படபடவென்று துடித்தன. பின்னர் வானர வேந்தன் பிரார்த்தனைப்படி சமர விஜயரத்தினம், மராமரமேழையுந்தொளைத்துத் துந்துபியென்னு மசுரனதுடலை யிளையபெருமாள் திருவடியா லுந்தியோட்டுவித்து, வாலியைக்கொன்று அவ்வாதித்தன்காதலருக்கு முடிபுனைவித்தலுங் கார்காலங் குறுகிற்று. அக்காலை கருணைவள்ளலார், வானரப்பெருமானைநோக்கி ஐய! நீ நெடுநாளாய் நல்லுணவு மனைவியுமின்றி வருத்தமுற்றனை. கார்ப்பருவத்தி லெக்கருமங்களும் புரியவொண்ணு. ஆகலா னீயின்னே நினதுகோயிலெய்தி யில்லாளோடுகூடிச் சுகித்துக் கார்காலங்கழிந்தபின் யூகத்துடன் சாருதியென்று விடைகொடுத்து விடுத்தருளித்தையலாரதெண்ணத்துட னுந்தம்பியுடனும் வான்சிறிதெனவோங்கிய இருசியமுக மால்வரையில் வீற்றிருந்தருளினர். மாகமே தகழியாகவு முந்நீரேநெய்யாகவு மேருவே திரியாகவும் வெய்யவனேவிளக்கமாகவும் வையெடுப்பதையொத்து மழைகளெல்லா மாகத்தினெருங்கின. நஞ்சருந்திய கடவுளினதுகண்டத்தைப்போன்றும், மங்கையர தவிழ்ந்தகூந்தலையொத்

தும், வஞ்சனையுடையரக்கரது வடிவை நீக்கத்தும், அறந்தொடங்கித்தொடர்பிலாரதுமனத்தைக்கெடுத்துங் காயமிருளனும், அசனியினது நாவைப்போற்றிசைதொறு மின்னெலாம்விரிந்தன. உயர்வுதாழ்வின்றிப் பொருள்களெல்லெழிலேயம்பற்றும் பரத்தையாதுலைவுறுமுள்ளம்போன் மலையினுமரத்தினுமற்றெவ்விடத்தினு முறைதயுலாயது. வில்லினின்று வருஞ்சரம்மெனக் காயத்தினின்று மழைத்துளி வீழ்தலின் கிரிகளெல்லாந் தகர்ந்து சமரத்திற் கடகரி புரள்வபோலப் புரண்டன, வானினுண்டாருந் தனுவே கரும்புவில்லாகவு மழைத்தாரையே மன்மதனது பகழியாகவுந் துணைவரைப்பிரிந்த மகளிரைவருத்தின. பாவியான இராவணன் பெண்கட் கருங்கலமனையரைக் கொண்டேகும்வேலையி லப்பொன்னன்னார் கண்ணென மேகங்கணீரைப்பொழிந்தன. கொழுநரைப் பிரிந்தாரைப்போன்று மலரைக்கூடி மகிழ்ந்தாரைப்போன்றுங் குயில்கள் வாய்மூடி யடங்கின, மயில்கள் களித்தாடின. அப்போது பூமிஜாப்பிராணநாதர்தமதுயிரன்னாளையுன்னித் துன்பமுற் றிளையபெருமாளாற் றேற்றப்பட்டவராகியிருந்தனர். பிரிந்துறையு மகளிரையு மாடவரையும் வருத்தும் வருஷகாலநீங்கியுஞ் மஹாராஜாவராமையகண்டு பத்தவற்சலர் திருவுளத்திற் சிறிதுசினங்கொண் டிளையவரைநோக்கி ஐய! சுக்கிரீவன் நன்றி மறந்தான்போலும், நீசென்றவனுக்கு நீதியையுணர்ப்பாய்; வருவானேல் அழைத்துவருவாய், வாராவிடி னீசினங்கொள்ளற்க, அவன்சொற்றுஞ் சொற்றதக்கா யென்றருளலுந் திசையானைமற்றோர்திசைக்களிற்றின்மேற் செல்வதுபோலச் சுமித்திரா சிங்கஞ்சென்று கிட்கிந்தையடைந்துவின்னாணேற்றி டங்காரஞ்செய்தனர். அதனால்அண்டங்களெல்லாங் கிடுகிடுவென் றசைதலான, அவ்வேலை அஞ்சனைமஞ்ச ரஞ்சிப்போந்திளையவரைத்தொழுது சுவாமிமுனியற்க. எங்களிறை வருகின்றனனென் றுரைத்துவிரைந்து மஹாராஜா பள்ளியறைகுறுகித்தையலார்கண்ணென்னும் வலையிலகப்பட் டங்கமற்றவன் பூங்கணையாலெரிகின்து, மயக்கத்தின்மேல் மயக்கங்கொண்டாற்போலக் கள்ளுமுண்டு தாரைமுதலியருயிலன்னார் குழுவினுப்பணிருந்த கவியிறையையவணங்கி,எந்தையே! இரகுவீரருக்கிளையவர் நினது வாய்தலின்புறத்து வேலையினும் பெரிய சீற்றங்கொண்டு நிற்கின்றனரொன் றுரைத்தலுஞ் சுக்கிரீவர்நடுங்கி யென்செயற்பாற்று. அவரெதிர்வர நாணமு மச்சமு மடைகின்றனெ னென்றுரைத்து வாலிதாரமானதாரையைத்தாழ்ந்துகாதலி! இராமபிரானுக்கிளையோர் முன் னீசென் றவரைக் கோபந்தணியச்செய் தெனதுயிரைக் காக்கவேண்டுமென்று வேண்டினன். தாரை சேக்கையினின்று மெழுந்து சோர்ந்த கூந்தலுடனுந் துவரிழந்த விதழுடனு நித்திரைசூழ்ந்து சிவந்து வட்டங்கொண்ட நாட்டத்துடனு மொளியிழந்த முகத்துடனு மஞ்சளழிந் துகிர்களழுந்திய தனத்துடனு நெகிழ்ந்த கலையுடனும் பூட்டவிழ்ந்த கச்சுடனும் பொலிந்து, மங்கையர்குழாஞ் சூழ்தரப்போந் திளையபெருமானைவணங்கித் தேவரீர்!எங்களை யடிமைகொண்டருளவேண்டும்,தேவரீர்செய்த நன்றியை

யருக்கன்மைந்தன் மறந்தானல்லன். நெடுங்காலமாய் மங்கையர்முகத்தைக் காணாது வருந்திஞானகளின் காமமென்னுஞ் சலதியின் மூழ்கினன் வான ரசேனைகளைக் கொணர்வான் றூதர்சென்றனர். சுக்கிரீவனு நம்மைக் காணவருகின்றனனென் றுரைத்துத்தொழுதனள். அப்போ திலட்சுமண ஸ்வாமி தாரையினது கோலத்தைக் கடைக்கண்ணானோக்கி நாணமடைந் து சினந்தவிர்ந்து பூதேவியைநோக்கியிருத்தலுந் தாரை தனது குழுவுட ன் மனைக்கணேகினள். உடனே மஹாராஜா படைகளெல்லா மின் னேவரத்தக்கவென்று பணித் தனுமானை முன்னிட்டுக்கொண்டுவந் திளையபெருமானைப் பூசித் தவரோடு மிரகுநாதர் சன்னிதிவாலும் பத்த ராயி திருமுகமலர்ந் தருளோடுநோக்கிக் குசலமுரைத்தருளினர். கதிரவன் காதல னச்சந்தவிர்ந்து தேவதேவனோடு பல நல்லுரை பகர்ந்திருத்தலுமெ ழுகடலு மொன்றாய் வருவபோல, ஒடிக்கவேண்டின் மேருவையொடி க்கும் வலிமையுள்ளவாயும், இடிக்கவேண்டி னண்டமுகட்டை யிடிக்குந் திறமுடையவாயும், பிடிக்கக்கருதிற் பெருங்காற்றையுங் கூற்றையும் பிடிக்கவல்லவாயும், பருகவமையிற் கடலேழையும் வற்றச்செய்யுந் தர முடையவாயும் சேனைகள்வந்தன. இரகுநாத ரப்படைகளைக்கண்டு தேவியாரைக்கண்டாலெனக்களித்துக் கவியிறையைநோக்குமிறு ஐய! இச் சேனையாற் பாவந்தோற்றது. தருமமே வென்றதென் றுரைத்து மகிழ்ந்த ருளினர். சுக்கிரீவர் சீதாபிராட்டியாரை நாடுவான் றிசைகட்குச் சேனை களை யனுப்புந்தொழிலை மேற்கொடு விந்த னென்போனையுஞ் சந்திராதித் தர் மைந்தரான சில கவிகளையுநோக்காத் தேவராலுமுடிப்பருங்காரியங்க ளை முடிக்கவல்லவீரர்களே! நீ ரிந்திரதிசை நன்னி, பாகீரதி, சரயு, கௌ சிகி, காளிந்தி, யமுனை, சரசுவதி, சிந்து, சோணம், மந்தரம், காளமலம், பிரமமாலம், விதேகம், மாளவம், காசி, கோசலம், மாகதம், புண்டரம், வங்கம், கோசகாரபுரமுதலிய நதிகளிலுந் தேசங்களிலு மலைகளிலு மேழு கடல்களிலும் பெரும்புறக்கடற் கப்பாலிருணிலங்காறுங் காற்றென வுலாவி நான்முகனன்னையாரைத்தேடுமின். ஆங்குச்சிலவிடங்களில்மலையினும்பெரி யவசுரர்களும், இராக்கதர்களும், அதரத்திற்செவியுடைய ஜனங்களும், இ ரும்பாலாகிய முகத்தையுடைய மக்களும், ஒரோகாலுள்ள வேடர்களும், புலியின தங்கங்களைக்கொண்ட சில மானவர்களும், மனிதர்களை யுண்கிற சிலமாக்களும், அடுதல்செய்யாது மீனைத் தின்கிற சில பெயர்களும், காயத் தின்மீதுசெல்வோரது நிழலைப்பற்றி யவர்காயத்தை யுண்ணும் அசுரர்களு மநேகருண்டு. பத்திரமாய்ச்சென்று மீளத்தக்கீரென் றுரைத்துத் தலைமை யானவிந்தனுக்குதவியாய்ச் சேனைகளைக்கொடுத்து விடையுந்தந்தனுப்பிப் பின்னர், அங்கதன், அனுமான், நீலன், ஜாம்பவன், சுகோத்திரன், சராசி, சரகுன்மன், கஜன், கவாட்சன், கவயன், சுஷேணன், குஷபன், மயிந் தன், துவிதன், விஜயன், கந்தமாதனன், உல்காமுகன், அசங்கன்முதலாய மகாவீரர்களைநோக்குறு மேருகிரி யோர்சிறியபக்கெனக் காணாலுந்தம்வி

நல் வீரர்களே! கூற்றுவன் றிசையைமுன்னிச்சென்று நருமதை, தேவருவந்தாங் கோதாவிரி, கிருஷ்ணவேணி, வரதை, மேகலை, உத்கலை, உலகுக்குத் தாய்முலையன்ன காவிரி, தாமிரபர்ணி, தசார்ணவம், அவந்தி, அகவந்தி, விதர்ப்பம், வங்கம், கலிங்கம், கௌசிகம், ஆந்தரம், சோளம், பாண்டியம், கேரளம், சகியபருவதம், மலயம், மகேந்திரம், புஷ்பதகம், சூரியவான், வைத்தவான், குஞ்சரமுதலாய பருவதங்களிலு நதிகளிலுந் தேசங்களிலுந் தேவியானை நாடுமின், அக்குஞ்சரபருவதத்துக்கப்பாற் பலமலைகளையும், சில வற்புத விடங்களையுங் கடந்தால் யமபுரியும், பிதிர்லோகமுந் தோன்றும். அங்கிருந் தெற்கு மேருவெற்பின்றியும் பயங்கரமாயுமிருக்கும். அவணியிற் சென்றாலும் பெண்களிற் றிலகமன்னாளை நாடுவதன்றி ராமனை வதைபுரியாதிரென்றனாக் ததைவிக்குப் படைகளையும் விடுத்தேகுமினென்றனர். அப்பால் தாரையைத் தநயையாய்க்கொண்ட சுஷேணனையும், மரீசிப்பிரஜாபதியைப் பிதாவாய்க்கொண்ட யூகங்களையுங்கூவி வீரர்களே! சுராஷ்டிரம், பாக்லிகம், சூரம், பீமம், முருகி, ஏடி, அவந்தி, சிந்து, பாரியாத்திரம், வச்சிரபருவதம், சக்கரவாக பருவதமுதலிய விடங்களையுநாடிக் கடிதிற்சேருமினென்றுரைத்து, இரண்டிலக்கம் வானரர்களைத் துணைகொடுத்து வருணன் றிசையிற்போக்கினர். பின்பு சதவலியென்ற வலியோனையுங் கூற்றுக்குநிகர்த்த கவிவீரர்களையுமழைத்து, இமயமலை, மிலேச்சர்தேசம், புளிந்தம், சூரசேனம், பிரஸ்தலம், பரதம், குரு, மந்தரகம், காம்போஜம், யவனம், சகம், ஆரட்டகம், டங்கணம், சீனம், பரமசீனம், கீகாரம், கிரதம், சினபருவதம், தேவசகம், அப்பாலுரோதயோசனை விரிவாயிருக்கின்ற வெற்றுநிலம், அதன்பின் சிவன் மகிழுங் கைலாயம், கிரௌஞ்சம், சுபர்லோகதேயன்றதி, உத்தர குருக்ஷேத்திரம், சுவர்ணமயமான சோமகிரிமுதலாய தானங்களிலெல்லாம், மிதிலைநாடியானை நாடி வாருமினென்றுரைத்துச் சிலதானைகளையு நிதிக்கோன் றிசைக்கனுப்பினர். அவ்வேலை வெண்ணிறத்த வண்டங்களைத் தமது திருவுதரத்தில் வைத்துக்கொண்டிராநின்ற இராமசந்திரர்மகிழ்ந்து யூகவேந்தலைக்கருணைமடை திறந்தொழுகுந்திருக்கண்களானோக்கி அன்ப! நீயிவ்வுலகின் றிறத்தையெவ்வாறறிந்தனை? ஆச்சரியமென்றுரைத்திருந்தனர். சுக்கிரீவாக்கினையைச் சிரமிற்கொண்டவரவர் நான்குதிசையிலுஞ்சென்றனர். அவர்களிற் றென்றிசையைமேயினோர் திறமெடுத்துச் செப்பலுற்றனன். எம்மையாளுடைய யதுமன் சகலபுவன நாதனைத் திருவடிதொழுது மோதிரம் பெற்றுக்கொண்டிளையவரசான அங்கதனுடனு மற்ற வீரருடனுமேகிப் புகழ்பொதிந்த மெய்போலோங்கியும், மேகமாலையோடு தெய்வப்புலவர் துசொன்மாலைகளைத் தரித்துக்கொண்டிராநின்ற தாயும், தேவருவந்தாடுங் கோனேரியென்னுந் தீர்த்தமும், வானமங்கையர் விரும்பித்தோயு மருவிச்சுனைகளும், அவருசலாடு மணித்தடங்களும், மாதவத்தோருறைவிடமும், தேவர் தங்கு மிடனும்பொருந்திப்பொலிவுடையதாயும், கன்மலையாயினுஞ்சேவிக்கின்றவர்கட்கு வை

ருந்தமெனுநிரதிசயவீட்டிலலையருளுந்தன்மையால்வெள்ளிமலையும்பொன மலையும் வணங்குந் தகைமையுடையதாயும், இனி, குயின்முதலாய பறவைகள் கருடனைப்போற்றொனிக்குமொலியும், அருவிவீழ மரவமும், அரிமா கரிமாமுதலிய மிருகங்களினார்ப்பும், வானாடியரது பாட்டொலியும், வீணையொலியும், ஆயர்களது குழலொலியும், இருபிறப்பாளரோது மிருமறையொலியுமடங்க வவணெல்லாவுயிர்களும் பகரும் கோவிந்தகோவிந்தகோவிந்தவெனு நாமத்தொலியைக் கொண்டதாயும், தேவதேவனு மாதிமத்தியாந்தரகிதனு மந்தரியாமியு மயனரனுக்கரியவனு மெங்கள்குலதேவனுமான வேங்கடரமணனுக்கு வேதமெனவும், பரமபதமெனவும், பாகவதர்களது திருவுளமெனவு முவப்புண்டாக்குவதாயு மொளிராநிற்குந் திருவேங்கடமாமலையைக்குறுகிக் கண்படைத்த பயன்பெற்றுத் தண்டமிட்டம்மலைச்சாரலிற் றங்கியிருந்தனர். பின்னர் அவ்வங்கத னுமனாதியர் தங்கள்காலா லம்மலையை மிதித்தேற வஞ்சியும், ஏறினால் வீடுறுவோம், உற்றால், இராமகாரியந் தாழ்வதாகுமென் றுபயந்து மவணின் றுமேகி மிதிலைநாடியாளை யெங்குங்காணாதயர்ந்து காவிரிமாநதிபெருகலாற் செந்நெலுங்கன்னலுங் கமுகுங் கதலியுந்தெங்கும் வான்மறைய வளர்ந்து செழிப்புற்றுக் காணுமிடமெல்லாங் கண்ணுக்கினிதாய்ப் பைங்கூழடர்ந்து நதியெனக்கால்களுங் கடலெனநதிகளும்பெருகி நீர்வளம்பொருந்திக் கோசலநாடென நிலவளமிருந்து அரசனெனக் குடிகணெருங்கிப் பொலியாநிற்கும் வளவனாடடைந்து கவிச்சக்கரவர்த்தியாரது தெய்வக்கவியைக் கற்றானெனவும், தனுவுடன் றுறக்கமுற்றானெனவுங் களித்தனர்.

"முன்னொருகாலத்தில் முனீந்திரரான அகஸ்தியர் கங்கை சரயுமுதலான தீர்த்தங்களைத் தமது கமண்டலுவிற் சேர்த்துக்கொண்டு பூபிரதட்சணஞ்செய்துவந்து சையகிரியினுச்சியணைந்து கமண்டலுவை யவண்வைத்துக் கரசரணாதிகளைப் புனிதமாக்குவான் புனற்கரைசார்ந்தனர். அவ்வமயத்தில் விண்ணுளி யோர்வாயசருபமாய்வந் தச்சலபாத்திரத்தின்மிசையுற்றுக்கவிழ்த்துவிடலும், அகஸ்தியமகாமுனிவரது பத்தினியாராகிய காவிரியன்னையார் கருணைகொண்டுமன்னுயிரெல்லாம் பவக்கடலைக்கடக்கத்தெப்பமெனத் தாமோர்நதிருபமாய்ப் புவியின்கட்பிரவேசிக்க வாதரிக்கின்றனெனென்று பலவமையங்களில்மகருஷியைக்கேட் டம்மகருஷியிணங்காமையினா லற்றங் கண்ணுற்றிருந்தவராகலாற் கமண்டலு கவிழ்ந்து புனிதநீரோடியதைப் பார்த் திதுவே நல்லமையமென் றுணர்ந்து காவிரியன்னையம்புருவுகொண் டவ்வுதகத்தோடொத் தந்தர்வாகினியாய் இந்திரதிசை நோக்கிப் போந்தனர். அக்காலை அகத்தியமாமுனிவர்வந்து தீர்த்தபாத்திர முருண்டிருந்ததைக்கண்டு தேவியைக்காணாமல் விரைந்து சிறிதுதூரம்வந்து கண்டென்செய்தாயென்றலு மக்காவிரியன்னையார் முனிசிரேஷ்டரைத்தொழுது சுவாமி! தேவரீருக்குப் பெண்ணுருவத்தோடு பெண்டாயிருக்கின்றனனென் றுரைத்து விடைபெற்று அநந்தபற்பநாபனடிக்

கடி மைபூண் டறத்தாற்றிலொழுகாநின்ற வேந்தரேந்தலாகிய சேரலர்பெரு மான்சீர்த்தியெனப்பெருகி மலையினுள்ள ஆரம், அகில், கோடு, மலர், மணி, பொற்சன்னமுதலியவைகளை யீர்த்துத் துறைகடோறுங்கொழித்துப் பர மபதமென வொளியுற்றோங்கும் அரங்கமாநகரில் வேதமாம் நான்குகலச ங்கடிகழும் பிரணவாகாரமான விமானத்து ளரவணையிற் றுந் தமது திரு வுதரத்திற் கொண்டுராநின்ற புவனங்கள் செரிக்குமென்றெண்ணிக் கரு ணையால் வலயமிலங்கு மிடக்கரங் கீழ்கொடாது தென்னிலங்கைநோக்கி த் திருக்கண்வளரும் அரங்கத்தம்மானுக்குச்சாத்தியமாலைபோன்று மாதே வரும் பூதேவருங் காதல்கொண்டாடக் காவிரிமாநதி பெருகாநிற்கும்.''

அவ்வாண்டகையசொல்லேரு மம்மாநதியைத் தரிசித்தவர்ராடி யமுதி னுமினிய கனியுண்டு நீர்பருகிக் கூப்பகத்தருவின் கீழமர்ந்தாரோனவாரா மதிற்றுங்கி வாட்டந்தீர்ந்து மகாராஜாகட்டளையைமேற்கொண்டுசென்று தென்கடலைக் கண்ணுற்று அம்ம, இச்சாகரத்தை யாவர் கீந்துவர்? தமதுக ருத்துக்கிசைந்த வொருத்தமசூர்த்தியினிடத் தசஞ்சலபத்திபுரிந் தலகிற் றேன்றுஞ் சேதன மசேதனங்களெல்லா மம்மூர்த்தியினது சொரூபமே யெனக்கொண் டொழுகாது, அரியே பரவஸ்து; அரனே பரவஸ்துவென வாதாடுமவர்கள் பலக்கடலைக் கடக்கவொழியுதுபோ லுந் தாண்டவொண் ணுதொழியுமா றிவ்வாரி யகன்றிருக்கின்றது யாதுசெய்வோமென அங்கத னனுமனறியசொல்லாரு மெக்கழுற்று முன்னிகழ்ந்த இராமகதையைப்பே சிவாருகையிற சடாயுவென்ற மாறறத்தைச் சூரியனை விறகிழந்து வலிகுறை ந்தாங்குக்கிடந்த சம்பாதிகேட்டு, விரைந்தணிந்தாகி யாணரங்கோவுடர்க ளே! சடாயுவென்றனாத்தீர்கள். அவனெனக்குப் பின்வந்தவன். அவன் தீர்க்காயுளோடிருக்கின்றானென்று வினவலும், அங்கதனுரையால் அ னுமனுற்றவாரெழியாதுணர்த்தினர். சம்பாதி தம்பிகேடுக்கி லோகமா தாவை இராவணன்கொண்டுபோய், இலங்கையில் வைத்திருக்குமாற்றை வானரவீரர்க்குணர்த்துப் பாவையின்சூழ்கிச்சிறைபெற்றுப் பறவைகட்கரக புரிவானேகினன். பின்ன ரங்கதனறியர் சிந்துவைக குப்புறமயிருந் திற னின்றி மலைவுகொண்டயர்தலும், அயன் மைந்தனான சாம்பவன் மனத்தி லெண்ணி வாதாத்மஜனைநோக்கி ஐய! அண்டத்துக்கப்புறமுங் குதிகொள் ளுமிடுக்குடையீர், மேருகிரிக்கும் பெரியமெய்யுடையீர், மழைத்தாரையின திக்கிலு மேகவல்லீர். மூவுலகுங் கூடி யெதிர்த்தாலு போருபோருவெனைக் கருதாது துகளாய்ச்செய்யுந் தோள்வலியுடையீர், ஓயாதலையு மாதித்தன் முன்னர்ப் பின்னடக் தரியநூல்களைக் கற்றீர், புலிக்குத் தாமகேதுபோன்ற மங்கையரை நெஞ்சினுநோக்காத வலியுடையீர், அறத்தாறெண்ணியதனி னின்று மிறவாதொழுகுகின்றீர், தொடங்கியகருமமன்றியும் பிறவுமுடிக்க வல்லீர்; தாசரதியார்வருகையின்முந் திக்ரோசென்றீர், அவரருளும்பெற்றீர். ஆகலி னிவ்வார்கலியைத்தாண்டி யடையலர்புரம்புகுந்துதேவியாரைநாடி யுறின்றிச்சாரரீரேவல்லீர். ஐயன்முதலினாமோதிரத்தை நம்மயின் கொ

டுத்தருளினராகலின் காரியஞ்சாதிக்கத்தக்கவர் நீரேயென வவர்திருவுளம்
பற்றினாரென் றறிகின்றனென். தாழாதேகும், இலங்கையைச்சாரும்,தேவி
யாரைக்கண்டு வருமின்,எம்முயிரைத்தருமின், பொன்றாப்புகழ் கொண்மி
னெனத்துதித்தலும்,அஞ்சனைசிங்கம் இராமகைங்கரியங்கிடைத்ததென்று
மகிழ்ந்து மலையெனவளர்ந்த தோளைக்கொட்டி யண்டமுகடுறக்குதித்தார்த்
து,அங்கதன் ஜாம்பவன் நீலன்முதலாய வீரர்களைவணங்கி விடைபெற்றும
ண்ணளந்த வீசனென வுருவங்கொண்டு கருங்கடலைச் சிறியகாலெனத் த
மதுகாலாற் கடந்தெதிர்ந்த சுரசையென்னுந் தாயானைவென்று, அங்காரதா
ரையையு மிலங்காமாதேவியையுங்கொன் றிலங்கையை நண்ணி மதின்
மேலேறி மனைகளெல்லா மணிகளாகவு மரங்களெல்லாங் கற்பகமாகவு மா
மகளிரெல்லாருஞ் சிலதியராகவுந் தேவரெல்லாரு முழையராகவு மிராக்கத
ரிற் கவல்கின்றா ரொருவருமின்றிக் களியுடையாரேயாகிப் பொலிகின்றவ
ந்நகரினுட்புகுந்து,தமதுதந்தையெனவெங்குமுலாவிச்சானகியாரைக்காணா
தயர்ந்து பசுபதிஜபம்புரிமந்திரத்தை முறைப்படி தாம்ஜபித்தலும், மைம்ம
லிந்த வோர்சோலையைக்கண் டதைக்குறுகியொற்றைக்கண்ணருங்காதொ
ன்றுடையவரு மொரேகாலரு மொற்றைக்கையருங் கூனலாய்,நாய் கழு
தை குதிரை பன்றி மாடு ஆடுகளின்முகம்போன்ற முகமுடையபலரும், அம்
மிருகங்கள்போலக் கால்களுடைய சிலரும்,மூக்கு முலை காதிவைக ளறுப
ட்ட சிலரும், ஒருகால் மந்தரகிரியொத்து மற்றொருகா றூசிழைபோன்று
மொருமுலை மலையைநிகர்த்து மற்றோர் முலையுணியை யுறழ்ந்துமுள்ள பலரு
மலையெனப்பருத்த தலையையுந் தடமென வகன்ற நிதம்பத்தையு மடுக்கன்
முழைபோன்றவாயையுமுடைய பலருஞ்சூழ்திருப்ப மத்தியில் வல்லியத்
துரப்பட்டமான்பிணையெனப்பாகவதசிரேஷ்டரான விபீஷணாழ்வாரதுதவ
ப்பெண்ணான திரிசடையம்மையினதுசொல்லமுதாலும், பத்தவற்சலராகிய
இராமபிரானார் தேடாதொழியாரெனுமுறுதியாலு முயிர்விடாதிருந்த பிரம
னதன்னையை, கடற்பிறந்தகோதையை,பொற்பின் புனைசலத்தை, யாவர்க்
குஞ்செல்வத்தை,செந்தாமரைமலரில்வீற்றிருக்குஞ்செல்வியை, ஆவிக்கினி
யவமுதை,கருணைசொரூபியை, ஜனககுல சுந்தரியை, இராவணன்பற்றுமு
ன்னுடுத்த தூசுடனு மவிழ்ந்த அளகத்துடனு மாசடைந்தமெய்யுடனும்
வீற்றிருப்பக்கண்ணுற்றுத் தண்டமெனத் திருவடியில்வீழ்ந்தெழுந்து கண்
ணீர்பெருகமுடிமேற் கைகுவித்துநின்று அன்னையீர்!கேட்டருளும். யான்
பவனனுக் கஞ்சனை வயிற்றில்வந்தவன், எனது நாமம் அனுமன். இராம
தூதன், கவியிறையாகிய சுக்கிரீவராலேவப்பட்டுநும்மைநாடிப்போந்தனெ
ன். தவத்தாற்றிருவடியைச் சேவிக்கப்பெற்றனெனென்று கூறிக்கோடிசெ
ங்கதிரவொளியதாயு மிராமநாமந்தீட்டியதாயும் பொலியாநின்றகணையா
ழியைக்கொடுத்தனர். எம்பிராட்டியார்வாங்கி மலர்க்கண்ணிலொற்றிச் சிரசி
ற் கொண்டுமுலையில்வைத்துக் கணையாழி நஞ்சமனைய வஞ்சனார்வந்ததெ
னக் கண்ணீராட்டி யிறந்தவர்பிழைத்தாரெனவும், பதிகொடுத்தனைத்

தை மீளப்படைத்தார்போலவு முவந்து மாருதியைக் கருணையானோக்கி இராகுநாதரது திருச்செவியிற்சாற்றும்படி யம்மைதிலியார் பலவசனங்களைச்சாற்றித் தமதுசூடாமணியையுந்தந்தருளினர். மாருதிதொழுதுபெற்றுக்கொண்டு எம்மன்னையீர்! இத்துன்பமின்னே தவிருதிர். யாவருக்கும் பாக்கியமளிப்பதமது திருமேனியைக் காதல்கொண்டு பார்த்த விவ்விராவணனை யிருபதுகண்களையுமுடலையுங்கழுகும் காக்கையு நரியு மொன்றோடொன்று விரைந்து கன்னம்புடைக்கப் பிடுங்கித்தின்பதை நீர்பார்க்கலாம். இராகுநாதனை யெனதுதோளிலேற்றிவருகின்றனென். தாயீர்! திருவுளங்கலங் கலீரென்றுரைத்துத்தொழுது போந்து, அஞ்சனை சிங்கம் பொல்லாவரக்கனைக் கொன்றிலேன். எனதுவாலா லவன்றேர்களை யிறுக்கிக்கட்டி யுருட்டிலேன். மண்டோதரியினது மலர்க்குழலைப் பற்றிக்கொணர்ந்து சிறையில் வைக்கிலேன். எனதடிமைத்திற நன்றாகன்றென நகரத் தரக்கரோக கண்டளவறிந்து செல்வதேகருமம். அதற்கிப்பொழிலையிறுப்பதேயுபாயம், இறுத்தா லிராக்கதரெதிர்ந்துவருவர், வந்தால் வந்தவர்வந்தவர்மீளவிலாது மடித்தேனுற் றினத்தோடுதசக்கிரீவன்தோன்றுவன். தோன்றிலவனது பத்துத்தலைகளையு மெனதுகிராற்கிள்ளி யம்மனையாடி விளையாடிக்கொண்டேசெல்வேனென்று தமதுதிருவுளத்திலெண்ணி யப்பொழிலைக் காலாலுங் கையாலுமிறுத்தலும், இராவணன்றெரிந்துவெகுண்டு சூரங்கைக்கொல்லாது பிடித்துக்கொணருதிரென்று தாந்தாமாய் விடுத்த கிங்கரர்களையும் வீரரான ஜம்புமாலியையும் பஞ்சசேனாதிபதிகளையும் அட்சனையுந் தாஞ் சங்கற்பித்தவாறே விண்ணோக விடைகொடுத்தனுப்பினர். அதைக்கேட்ட தசக்கிரீவன்புழுங்கிவெயிற்றிருகிதழதுக்கி மீசைதுடிக்கக் கண்பொறியைக் காலச்சீற்றங்கொண்டு யானேசென் றக்குரங்கைக் கொல்வேனென்றெழுதலும், அவனதுமகனான இந்திரசித்திடைதடுத்து எந்தாய்! நான்சென்றவ் வானரத்தைப்பிணித்து வருகின்றனென். வருந்தலையென்றுரைத்துத் தேரேலேறிச்சேனையுடன்வந்து வானரசிரேஷ்டருடனமர்புரிந் தயனாத்திரத்தைவிடுத்தனன். அஞ்சனைமைந்தர் இராவணன்சமுகஞ்சேருவான் கருதி யப்பிரமபாசத்துக்குட்பட்டு மேகநாதனுடன் றசக்கிரீவன்பாற்சேறலுமவன் மாருதியைநோக்கி நீ யாவன்? எவனுலேவப்பட் டிக்கடிநகர்புகுந்தனை? அஞ்சாது கொடுமையியற்றினை. விளம்புவாயென்றனன். வாதாத்மஜர் தாசரதியார்தூதனென்று தமதுவரலாற்றைமொழிந் தறந்தொடர்ந்த சில நீதிவசனங்களையுரைத்தலு மிராக்கதரிறைசினந்து வாயுபுத்திரனைக்கொல்லவேவினன். அக்காலை பரமபாகவதரான விபீஷணாழ்வான் தூதனை வதைபுரியலாகாதென நீதிகூறித் தடுத்தலு மிராவணன் அஞ்சனைமைந்தரது திருவாலிற் கந்தைகளைச்சுற்றித் தைலத்திற்றோய்த்துத் தீக்கொளுவி விடுவித்தனன். அப்போது சீதாபிராட்டியாரருளா லனுமனது கூலஞ் சந்தனக்குழம்பிற்றோய்த்தாலொத்துக்குளிர்ந்தது-மாருதி மனமகிழ்ந்து, சோலையையிறுத்ததுபோதாது, ஊரையுங்கொளுத்தென்றுகட்டளையிட்டாற்போல விரா

வனன்கொள்ளியைக் கையிற்கொடுத்தானென வுள்ளத்துக்கொண்டு கொ
ளுந்திவிட்டுக் கடலைத்தாண்டிவந்து,தமதுவரவையே நோக்கியிருந்த அங்க
தாதியரைவணங்கி நிகழ்ந்தவாறுரைத் தவணின்று மெல்லாருமேகி மதுவன
ஞ்சார்ந்து தேறன்மாந்தன்மேயினர். இருசியமுகபருப்பதத்தி னிரவதிக
சௌலப்பிய சௌசீலியாதி தமதுத்தமகுணங்களாலே சர்வாத்துமாக்களி
டத்திலுந் தாமிரமித்தலின் இராமனெனத் திருநாமங்கொண்ட வெம்பெ
ருமான்,தேவியாரைநாடித் திசாதிசைசென்றவானரவீரர்களது வரவுநோக்
கி யாதித்தன் காதலருஞ் சமித்திரா சிங்கமுந் தமதுதிருவடிகளைத்தழுவ
வீற்றிருந்தருளினர்.

“கண்ணன்முதலிய திருவவதாரங்களிற் காட்டிய வற்புதச்செயல்போ
லிவ்விராமாவதாரத்தி லொன்றுங் காட்டிலராயினும், ஆன்மாக்களிடத்தி
ற் றமே ரமிக்கின்றனராகலால் இராமனெனத் திருநாமங்கொண்டனரெ
ன் றுரைப்ப திசனிகரான அகஸ்தியமாமுனிவரது மதமென வுலகஞ்
சொல்லாநின்றது.”

மதுவனத்தினறவுண்ட அங்கதன் அனுமான் ஜாம்பவன் நீலன் முத
லாய வீரரெல்லாரு மவணீத்து, இருசியமுகத்தைநோக்கி யேகலு மம்மாரு
தி யவர்கட்கு முந்திச்சென்று கண்டனென் கற்பினுக்கணியை இலங்கைந
கரில். புவனநாதரோ!துயரந்துறத்திர்,தேவரீர்தேவியென்னுமுரிமைக்குமிதி
லையர்கோன் றநயையென்னுந் தகைமைக்குந் தலைமைசான் றிற்பிறப்
பென்பதொன்றுங் கற்பென்பதொன்றும் பொறையென்பதொன்று நடம்பு
ரிய வீற்றிருக்கின்றதேவியாரைக் கண்டுசேவித்தனென்;வேதநாத! அம்மை
திலியாரது கண்ணினுமெண்ணினுமிருக்கின்றீர். அவ்வன்னையார் நும்மைப்
பிரிந்தமை யெவ்வாறடுக்கும்? எந்தாயைச் சேவிக்கவற்ற நோக்குற்று அசோ
கவனத்திற் சிம்சுபாவிருட்சத்தி னோர்கொம்பிலிருந்தனென். அவ்வேலை
யுனகாத்மஜையா ரரக்கனதுசேமத்தி லஃநாள்காறு முறைவது நற்குடியிற்
பிறந்தோர்க் கழகன்றென் றுன்னி யுயிர்துறப்பான் றமதுவேணியையத்த
ருவின் கொம்பிற்சுற்றிக் கழுத்திற் சார்த்துங்காலை நாயேன் நுந்திருநாமம்பு
கன்று பொன்னடிவணங்கி யாழிகொடுத்து, யாவையும் புகன்றேன். அப்
போது பிராட்டியார் தாமுயன்ற கருமத்தைத் தவிர்த்துத் தேவரீரைச் சே
விக்கலாமென்னுங் காதல்கொண்டு வடதிசையை யிமையாது கண்டுகொ
ண்டிருக்கின்றனர். அடியேன் தேவரீர்திருவடியைச்சார வென்னன்னையா
ரைத்தொழுதுவிடைபெறுகையி லும்வயின்கொடுக்கச் சூடாமணியைத்தந்
தெனக்கு வாளுநல்கியருளினர். இனித்தாழ்ப்பது தருமமன்று,உடனேயே
கவேண்டுமென் றுரைத்துத்தொழலும்,இளவரசான அங்கதன் ஜாம்பவன்மு
தலாயவீரரு மற்றைத்திசைகட்குச்சென்ற வானரவீரரும் வந்து தங்களிறை
யையும் ஸ்ரீயப்பதியையும் வணங்கினர். அவ்வேலை தாசரதியாரது மனக்
களிப்பை யாவரோரார். பின்ன ரெழுப்துவெள்ளஞ்சேனைகளு முன்னும்

பின்னுஞ்செல்லக் கடல்வண்ணர் சுக்கிரீவருட னல்லுரையாடுதலால் வழிநடக்கும் வருத்தமின்றித் தென்கடலின் வடகரையைச்சார்ந்து, அவ்வார்கலிக்குப் பதின்மடங்கான மான்மூர்துயரமுங் காதலுங்கொண்டு வீற்றிருந்தருளினர். அப்பா லிலங்கைமன்னன் பரிசெடுத்து விளம்புகின்றனென். திருவடிகளனலுக் காருதிசெய்த வவ்விலங்கையைத் தேவகண்டகனான இராவணன் புதுப்பித்துக்கொண் டாலோசனை மண்டபத்திலெய்திப் பவனனலகுப்பணிசெய்ய, வருணன் சிதநீர்தெளிப்ப, இந்திராதியர் குற்றேவல்புரிந்துநிற்க, நவநிதிக ளருளோக்கி யெதிர்நிற்ப, அரம்பையர் வெள்ளடையுதவ, உருப்பசி தம்பலத்தட்டமேந்த, மேனகை சாமரையிரட்ட, திசையானைகளினது மருப்பொசித்த வரைமார்பின் மாலையும் பூணுங்கலவையும் வயங்க, பனைபோன்ற கைகளிற் கேயூரகங்கணங்கள் பொலிய, மெலியுமிடையையுந் தடிக்கு மூலையையுமுடைய அன்னமன்னாரது புலவியினும் வணங்காத்தலைகளிற் சூரியர் பன்னிருவரிலிருவர் தவிர்ந்து மற்றவரொளிர்ந்தாற்போல மகுடம்விளங்கச் சிங்காதனத்தில் வீற்றிருந்து பிரகஸ்தனும், மகோதரனும், மகாபாரிசனும், வச்சிரதந்தனும், துன்முகனும், வெய்யவன் பகைஞனும், வேள்விப்பகைஞனும், தூமக்கண்ணனுமாகிய வமைச்சர்களைநோக்கி, ஓ குரங்கு கடலைத்தாண்டியவ் விவ்வூரைச் சுட்டதென்னுள்ளத்தைச் சுடாநின்றது. அவ்வானரமொன்று நமபடையின் மூன்றிலொன்றை நாசஞ்செய்தது, அக்குரங்கோ வூறின்றிச்சென்றது. நாமெல்லாரும்பார்த்தினிதயின்றிருந்தனமென்று சினமு மானமுங்கொளவுரைத்தனன். பாபக்கூறுகளான யாங்கிருந்த மந்திரியராகியபித்தர் தசக்கிரீவனையிறைஞ்சி, இறைவ! ஊர்கொளுத்திச்சென்ற குரங்கை யானே கொல்வேனென்றும், வெள்ளியங்கிரியை யீசனுடனெடுத்தார்த்த நீ மரக்கொம்பிலுறையுங் குரங்கின்வலிக்கு மஞ்சிரமும் புரிதியோ? மூவுலகாளு நினதுவலி நன்றுநன்றென்று நகைத்து மக்குரங்கையேவியமனிதர் நமதுணவன்றோ? கடிதென்னை யேவுதியேல் நான்சென்று வானரா நரரெல்லாருயிரையுமுண்டு பசிதீர்ந்து வருகின்றனெனென்று மவரவருன்னியவாறு பிதற்றினர். வாழ்நாளிழப்பானுனை இராவணன் அதுவே தனக்குறுதியெனக்கொள்ளலு மணித்திருந்த விபீஷணாழ்வான், தமையன்கெடுவானென் றச்சங்கொண்டு தசக்கிரீவனைவணங்கி அண்ணா! இம்மந்திர நின்னை வேரோடு முடிக்கும், இதையுறுதியெனக்கொள்ளேல். உலகமாதாவே நீ சிறையெடுத்த சீதை, உருத்திராமிசமே யூரைச்சுட்ட அனுமான், எக்கியபதியான நாராயணனே யவ்விராமன், தேவர்களே யாங்குக் கூடியிராநின்ற வானரர்கள் இதற்கையமில்லை. குரங்கென்று மனிதரென்று மிகழேலென்று பின்றுமன்பாலறத்தாறுரைக்கத்தொடங்கினர். அவ்வேலை சுகோட்டா லழைக்கப்படும் இராவணன் விபீஷணாழ்வானைச் சினந்துநோக்கிப் போதும்போதும், இனியொன்றும் புகலவேண்டா, நானிந்திரனும், யமனும், குபேரனும், வருணனும், வாயுவுங் குற்றேவல்புரியத் திரிலோகமுமரசுபுரிகின்றது

நின்னறிவைக்கொண்டோ? என்னுடன்தோன்றிய நீ மனிதரிடத்திலுங் குரங்கிடத்திலுமெவ்வா றச்சங்கொண்டனை? அழகிதழகிது நீ குரங்குகளின் கண்ணிற்றோன்றாது மறைந்துறைதி; அல்லது மனிசனைச் சரணமாய்ச் சாருதியென் றிகழ்ந்தனன். நீதிதொடர்ந்ததருமநெறியல்லாதுசாதிக்குரியபுன்னெறியையறியாத விபீஷணாழ்வான் தமக்கு இராவணன் தமையனேனும் பாவத்தையே வளர்க்கின்றானாகலி னவனுற வினியெத்திறத்து மொண்ணாதெனத் திருவுளத்திலெண்ணி அரக்கரனையனைநோக்கா, அத்த! உறுதியுணர்த்தினேன், உணருகிற்றிலை. எனதுபிழையைப் பொறுத்தருளுவாய், விடைபெறுகின்றனென், இனி முகத்தில்விழித்த லற்றதென்று மொழிந்து தொழுது அனலன், அனிலன், அரன், சம்பாதியென்ற வமைச்சர்நால்வருடனும் விரைந்து போந்து, அம்மந்திரக்கிழவரை நோக்குறூப் பண்டைத் தீவினையாற் பாவியொடுதோன்றினேன், அவன்கெடுவது திண்ணம். ஐம்புலனையு முட்பகையாறையு மீஷணத்திரயத்தையுந்தவிர்த்த யோகிகளது ஞானக்கண்ணுக்குமெட்டாத பரம்பொருளே யவ்விராமாவதாரமாகலினு மந்நாதனைச் சரணமடைந்து பிறவிக்கடலை நீந்துவேம். நோக்குக்குத்தோன்று வருவப்பொருள்தர்மசம்ரட்சணார்த்தங்கருணையாலுருக்கொடு தோன்றியிருக்கையி லஃதறியாது பத்திமைபுரியாதொழியுமாக்களை மேலோர்மாக்களோ டொப்பிடுவரன்றே. இறையுந்தாழாதேருதுமென்றுரைத்துப்போந்து செய்மையினின்று, கடலிலறிதுயினீங்கித் தேவர்வேண்ட வெழுந்து வீற்றிருந்தானென வானரச்சேனை நாப்பண்பொலிவானை, கார்முகி லிந்திரதனுவைத் துறந்தாற்போலு மாரந்தீர்ந்த வழகியமார்பானை, கடலைக்கடைந்த மத்திற்சுத்திய வாசுகியைக் கழற்றியதென்ன மணிவலயநீத்த சுந்தரத்தோளானை, ஆயிரம்பெயருடையமலனை, அருமறையனைத்தும் ஆராவமுதை, நித்தியனை, நிர்விகாரனை, நிரவதிகசௌலப்பிய சௌசீலியாதி குணோத்தமனைக் கண்குளிரக்கண்டு கண்ணீர்வாரத் தொழுந்தொறுந் தொழுந்தொறும் இராகவாசரணம், இராமாசரணம், நின்னடியார்க்கு மவரடியார்க்கு மவரடியார்க்கு மடியேன், சரணஞ்சரணமென்றுரைத்துச்சிமேற் குவிந்தகையராகி, சுவாமிதிருவடியையணுக வானரங்கட்குப்பயந்து நின்றனர். சரணமென்றவுரையைச் செவியிலேற்ற அருள்வள்ளலார்வானரது தலையனுப்பியவராற் பகைவனான இராவணன்றம்பியார் விபீஷணரென்று தெரிந்துகொண்டு, சுக்கிரீவாதியரைமலர்க்கண்ணானோக்கியிவ்விபீஷணனைத் துணைக்கோடலடுக்குமா! ஆய்ந்துரையினென்றலும், அவரெல்லாரும் பகைவன்றம்பியையிஃதமையத்திற் சேர்க்கவொண்ணாதென்றனர். தீனபந்து மாருதியைநோக்குற்று அன்ப! நின்கருத்தென்னென்றலும், அஞ்சனைமஞ்சர்தொழுது தேவதேவ! அவ்விபீஷணர் நின்சரணத்தை விலைகொண்ட சிந்தையுடைய வுத்தமர், தேவரீர் கருணைக் கவர்பாத்திரரென்றேயெண்ணுகின்றனென். திருவுளத்தின் குறிப்பறியேனென்று தொழுதனர். பகுத்தறிவில்லா வோர் யானை கராவாற் கதுவப்பட்டு மெய்ந்நைந்து ஆவியோ

டனும் றய்யுமாறின்றிக் கைவெடுத்து ஆதிமூலமே சரணம், பரமமே சரணமென் றோலமிடலும் விரைந்துசார்ந் திடங்கரையறைந்து தக்கஜேந்திரனைரட்சித்த சர்வேசர் சரணமடைந்தவனைக் கைவிடுவரோ. எப்பொழுதுந் தரியாது வானரவிறையைக் கண்ணுற்று ஐய! சரணமடைந்தவனைக் கடிதிற்காணும் காதலுடையேன், நீயேசென் றவனைக்கொணர்வாயெனலும், வெய்யவன் கான்முளைசென்று பாகவதசிரேஷ்டனைநோக்கிஐய! ஐயனினக்கபயமருளினர். அவர்பொற்பாதத்தைத் தொழப்போதுதியெனலும் விபீஷணாழ்வா னன்புகொண்டு மயிர்சிலிர்த்துத் துறவிசட்டுறவான ஒருவன்றேவியைப்பிரித்த பாவிக்கினையவனென் றென்றென்னையுமுறவாகக்கருதிவருகவென் றருளினரோவென்றவந்து வீழ்ந்து வீழ்ந்து தொழுதுகொண்டேவந்து ஐயன் திருவடிகளைக் குறுகிநின்றனர். நம்மையாளுடையார் அவரைக் கருணையாலொருகநோக்கி வேதமுள்ளளவும் இலங்கைக்கரசுநீயேயென்று முடிபுனைவித்ததுந் தேவரு முனிவருநன்றான்றென்று மகிழ்ந்தாடினர்.

“பாலகாண்டத்தில் வசிட்டமுனிபுத்திரராற்சண்டாளத் துவமடைந்த திரிசங்குபூபதி விசுவாமித்திர மகாருஷியைச் சரணமடைந்து நற்கதியைப் பெற்றனராகலாலும், அயோத்தியராசாட்சையும் பரமபாகவத சிகாமணியுமான அம்பரீஷர் பரிமகம்புரியத்தலைப்பட்டுப் பப்பிரதட்சணஞ் செய்து வரும்படி விடுத்த துரகத்தைத்தேடியு மகப்படாததினால் நரபசுவைக்கொண்டவ்வேள்வியை முற்றுவான்றிசிகனென்பவர்பாலணைந்து விலைகொடுத்தவரது நடுப்பிள்ளையாகிய சுனசேபனைப்பெற்றுத் தேர்மேலேற்றி யரசாவருகையி லச்சுனசேபன் புஷ்கரக்ஷேத்திரத்தின் மாதவம்வளர்த்துக்கொண்டிருந்ததனது மாதுலராகிய விசுவாமித்திரமகருஷிமாட்டணுகித்தனக்குறுதியுற்றதையுரைத்துச்சரணஞ்செய்தமையால் வேள்வித்தலையூபத்திலணைந்துமுயிரிழவாது தீர்க்காயுவையடைந்தனனாகலாலும், பரதாழ்வான் அரசுபுரிய மனமிலராகித் தேவாதொழுஞ்சித்திரகூடம்வந்து தாசரதியானைச் சரணமடைந்து பாதுகைகளைப்பெற்றுத் தமது மனோரதத்தை நிறைவுசெய்துகொண்டனராகலாலும், தண்டகாவனத்திலுறைந்த முனிவரெல்லாஞ் சுவாமியைச் சரணமடைந்து இராக்கதர்களாற் றாமடைந்த துன்பநீங்கிக் களிப்படைந்தனராகலாலும், வானரரிறையான் வெய்யவன்சேய் இரகுநாதனைச் சரணமடைந் தில்லையு மரசையும்பெற்றுக் களித்தனராகலாலும் இலங்காபுரியி லசோகவனத்திற் பிராட்டியார் வீற்றிருக்கையி லரக்கியரெல்லாருந்தெழித்தபசாரப்படுங்காலை யுத்தமியான திரிசடை யவ்வரக்கியரை நோக்கிஇராவணனிறவாதொழிவானல்லன். இராமபிரானுமோவெற்றியடைவாராகலா னுஞ்சீதையைச்சரணமடைவோமென் றுரைத்தனளாகலாலும் தமையனால் முனியப்பட்ட விபீஷணாழ்வான்பிரானைச் சரணஞ்செய்து இலங்காதிபத்தியத்தையுஞ் சிரஞ்சீவித்துவத்தையு மொப்பிலாப்பேற்றையும் பெற்றனராகலாலும் பின்னு மற்றவரு மிவ்வாறே சரணஞ்செய் தவரவர்

தமதிஷ்டத்தை யடைந்திருக்கின்றனராகலாலும், இவ்வுலகின்கணுன்ற அ
றிவுடையோ ரொப்பற்ற ஆதிபகவனைத் தவிராதுதாழாதுசரணாகதம் புரிய
வேண்டுமென்று மில்லாவிடிற் சமுசார துக்கசாகரத்தினின்றுங் கரையே
ற வேறுநெறியின்றென்றும், ஸ்ரீமத் ராமாயணஞ் சரணாகத சாஸ்திர
மென்றும், விபுதர் நாளும்போற்றி யிறைஞ்சுந் திருவேங்கடமாமலையி லெ
ங்கள் குலதேவனது சந்நிதியிற் சதுமுகனாற் சமர்ப்பிக்கப்பட்டு, சகல
புவனங்களையுந்தந்து புரந்தரிக்கு மத்தேவனுக்குத் திருவாராதனமாகுங்
காலங்களை மூவுலகுமறிந்து சேவிக்கும்படி கணீர்கணீரென்று சாற்று
மெம்மையாளுடைய கண்டாவதார சருவசுதந்தரசுவாமிகள் சாதித்தன
ரென்று தோலாநாவின்மேலோரறைவர்''

இராமபத்திரர் இலங்கையைச்சார வேலையில் வேலையியற்றுவான் ச
முத்திரராஜனைநோக்கி மூன்றுநா ளுபவாசமிருந் தக்கடலிறைவ னருள்
பெற்றுச் சேதுகட்டி வானரப்படையுடன்சென் றிலங்காபுரியின் புறத்தி
றுத்தங்கதனைக்கூய், வீர! இராவணன்பாலணைந்து தேவியை விடுதியோ!
பத்துத்தலைகளுஞ்சிந்தப் போர்புரிதியோ? என்றுரைத் தவன் றருமொழி
யைத் தருகென விடுத்தருளினர். அவ்விளவரசுதசுக்கிரீவன்மாட் டணுகியு
ரைத்தலு மத்தூர்த்தனிணங்காமை கண்டுமீண்டும்போந் திராகவபிரானைத
தொழுதுதேவதேவ! அவ்விராவணன் திக்குவிஜயம் புரியுங்காற் றென்புல
ஞ்சென் றெரியுமிழ் நரகங்களைக் கண்டவனாகலின், அவற்றிற்சேரப் பய
முற்றுத்தேவரீரம்புக்கிரையாகி நற்கதிபெறுமாறு கருதுகின்றனனென்றன
ன். அப்போ திறையினதருளால்'வானரவீரரெல்லாரு மிலங்கையினதகழி
யைத்தூர்த்து மதிலைத்தகர்த் தூறுசெய்தலு மிராக்கதப்படைஞர்வெகுண்டு
அமர்புரிந்தனர்.கொடையைமேற்கொண்டோரதுபுகழெனமற்கடயூகமோ
ங்கலும் படவாமுகாக்கினிபோலச் சீற்றங்கொண்டுவந்த கும்பகர்ணன்,அதி
காயன், படைத்தலைவர், மகரக்கண்ணன், நாகாஸ்திரத்திலும் பிரமாஸ்திர
த்திலும் வல்லுவனான இந்திரஜித்து மூலப்படைமுதலிய விராக்கத
ரெல்லாரும், சுக்கிரீவர், அனுமான், அங்கதன்முதலாய வீரர்களது கால்
கைகளென்னுங்கூற்றாலுஞ் சக்கரவர்த்தி திருமகனாரிருவ ரம்பெனு
நமனாலு மருந்தப்பட்டனர். அதைக்கேட்ட இராவணன் உருத்திரங்கொ
ண்டு நரர் வானரரெல்லாரையும் யானே கொல்வேனென்றெழுந்து தேர்
மேலேறித் தாசரதியார்முன்றோன்றிச் சமரம்புரிந்தனன். இரகுவீரர்முறு
வல்கொண்டு கோதண்டத்தை நாணேற்றி டங்காரஞ்செய்து தோளுறவா
ங்கி யெரியைக் கால்கின்ற பாணங்களை விடுத்தலு மவைகள்சென் றிராவ
ணனைவருத்தி யவனது நால்வகைச்சேனையையுமொழித் தேறிய தேரையு
மழித்துப் பிடித்தவில்லையும் பொடித்தன. அவ்விராவண னெதிர்செய்யுந
தருக்கிலனாகித் திகைத்துநின்று பிடித்த காமுட்டியுமின்றதுணியைக் கை
விடாதிருந்தமையா லதிற்சாயகமோதிக்கொண்டே நின்றனன். அவ்வேலை
யுரமுடைத்த தயக்கிரீவன் இராமன் அறமூர்த்தி, தருமயுத்தம் புரிவனென்

றேறினை கிராயுதனுகிய வெண்மை பிச்சாங்கள் கொலுகின்றனவேயெ
னறனை விடக்காவனவெனக் கீ லிருந்த சாவத்தை விடவெடுத்தனன்
ஸ்வாமியினது பழியுமாவதுசோதனே! அறம் விரும்பாதார் செயலீதாமெ
ன வலியுந் தேகமிறந்து புவியையே நோக்கியிருந்த வீரா தந்தையினைக்
கருணைக்கடல் கண்ணுற்று அரசே! நின்னனிகமெல்லாம் அழிந்தனவா ய
வமதிப்போனதாயுனென்னவும், அதிதி யாராதனஞ்செய்யாததிறவேன
வும், அறத்தாறிலனறிப புறத்தாறத்[illegible] தனமெனவும், வனவ
ாகக ஆனயினைபோன துளாமெனவுமுலமினமியாழிந்தனை! கிராயுதனு
கிய கினைனக்கொலை மதியேன அடிசேல, கீலைனகரடைந்து,போயபுரி
நக கிரமந்தவிர்ந்து, படைகட மகனாகை, மறுநாளைநீயுவாயெனறனுப
கடடழிந்த இராவணனை அரணமனைசார்ந்து, வீடடாகிரந்து, இராகுநாதா
வலியையும், சொருபத்தையும், கணையையு நோலந்து மறயாருக்
கோபந்தொழிலே மேறகொணடு, யமனுக்கு கலவிருந்தாருமான மறுநா
டேரிவாந்து பவருவ ஊராநாதாககு முனபோந்து பிரேக்கு மனநிந்த தமபு
மாரிபெயதனனை! அசசாவங்களைவலாந தூயாளுறையனைத தூாகதநெற
வன வைதசொறபோனாயினே! இந்திரனைவனுபப [illegible] இரகதனை மேற
கொணடருளிய இரகுவீரா கோதணடத்தைத தோளுறவாங்கி கணைகளை
விடுப்ப, வியெங்கள் [illegible] இராவணனது தலை சலமா கணைபோறவெறு
வைதத கிரங்களையறுததுவீழததவுநது சாவக னோயாதுமுனைதனை! அ
தைககணட இந்திரன சாரதியான மாதலியுனாதியையாறு சமாவிழுயா
தா பிரமாஸதிரததைததொடுத்துப பாபியினுயிருணடே கிருபாயை
தேவ, அதநெயவககணை படவாருகாகிலிடயாலபயானிரதுவெனறுகொ
டியோன துாதனைகளிறயுயிவாயும், லோகமாதாவிடததுக கொணடிருநத
துராசையையும்போககியினவூ ஸ்ரீயபபதியையனவேயிவ யாயதனைதயடைந்த
து, போமகளைக கலைமகளை புகழமகளைத தழுவியதசகண்டியனை பூமகளை
யணையக கருதித தவழும யாழு மாழுவகட வீழந்து, பூமகளையே மார
புறததழுவினனே! இராவணனுனை இராவண னிராவணமானவுள ன இலங
கை யிராவணனுசெயதது அதைநோககி சகலபுவனங்களு மாரவெயை
மனைவழுதநி மகிழவுறறன! இராமபததிரா தணடகாரணணிய வாசி
னாகிய மகாதவமாகளை யிடரினின்று நீககிறுமெனறமிழநது விபீஷ
ணுழவாவனநோககி அனபமைதவிவைககொணாதியெனவெலாசசனுறபிரா
டியானைததொழுதுளாத தவவனயையாககு கீராடஎமுதலிய வலக
ரஞசெயவிததுச சிவிகைமே லெழுநதருளசசெயதுகொணடு, இடகவாகு
குலவிரதினதினது சகநிதியிறசோததனா! ஜனகாதமசையா ஐயாநி
ருவடியைததொழுது தாயைநோககாநினறனா! சாவஜ்ஞர் பிராடடியானா
நோககி மைதிலீ! நினதுகோலததா லீ சிறையிலிருநதவளா யுணாததுகிற
றிலையாதலி னென்மனை மையுறுகினறதெனறு சுவிருசொனனைதததும், ச
கல புவனஙகளையு மீனற ககமனனையாா தமது காநதனைநோககி யெனது

கற்பையுணர்த்துகின்றனென்! அறிமினென்றுரைத் தெரிவளர்த் தனிற் செம்முளரிக் கானத்திற்புகும் பொன்னெனெனமெனமூழ்கினர்! அக்காலேமிதிலேநாடியாரது கற்புத்தீச்சுட வக்கினிதேவன் பொறுதவனுகித் தேவியாரைக்கமலம்போன்ற தனதுகைகளாலேந்திவந்து தாசரதியார்திருவடியின் பக்கல்விடுத்தனன்! அவ்வேலே சதுர்முகப்பிரமனும், திரிநேத்திரனுன சிவனும், ஸஹஸ்ராட்சனுய தேவேந்திரனும், குபேரனும், வருணனும், வாயுவும், யமனும், அக்கினியுமான தேவரெல்லாருங்கூடித் தாசரதியாரையெந் தாயையிகழாதங்கீகரித்தருளுமென்றுரைத்துவின்னவரெல்லாருமேகினர்; பின்னர்த் தாசரதியார் விரைவில் அயோத்திமாநகரணையவேண்டுமெனத் திருவுளம்பற்றினர். அஃதறிந்து விபீஷணழ்வான்கொணர்ந்த புஷ்பகத்தின்மீது கவிப்படைகளும், சுக்கிரீவாதியரும், விபீஷணழ்வானுந் தமதுதிருவடியைத்தழுவத் திராத்தம்பியுடனுந் தையலாருடனும் ஸ்ரீராமபிரானெழுந்தருளியமரர்தொழு மயோத்திமாநகரைநண்ண வேகுகையிற் கருணைவள்ளலார் பிராட்டியாரைப்பாரா அருந்ததிக்குச் சிலமருளிய திருவே! இராவணன்புரிந்த போர்க்களத்தைப் பாராயென்றுரைத் தப்பாற்சென்று கடலிற் சேதுவைக்காட்டி மங்கைமார்களிற் றிலகமே! கங்கை, சரயு, யமுனை, கோதாவிரி, காளிந்தி, சோணபத்திரை, நருமதை, சிந்து, காவேரிமுதலாய நதிகளி னீராடலாலு நீங்காத பாபமுடையோர் நின்பொருட்டியற்றிய விச்சேதுவைச் சேவிப்பாராயின் அன்றேயவர் புன்மைநீங்கித் தேவர்தொழுந் தேவராவர்! ஆவினையும், அருமறை யந்தணரையும், பாவையரையும், பாலரையும், தம்மைச் சரணமென்றடைந்தவரையும், தாய்தந்தையரையு மிகழ்ந்தவரும், செய்ந்நன்றியைமறந்த பூரியரு மிச்சேதுவைச் சேவிப்பாராயின் அம்மகாபாதக நீங்கிப் புண்ணியராவார் ஐயமில்லையென்று ரைத்து, அங்கு மகாதேவனெனக்குப் பிரசாதம் பண்ணினரென்று மொழிந்தருளினர்.

"மகாதேவன் பிரசாதம்பண்ணினரென்றேதப்பட் டுள்ளவாக்கியத்துக்கு, இராவணசங்காரம்புரிவான் எத்தேவதேவர்க்குந்தேவாகிய தாசரதியார்பரமசிவனைப்பூசிக்க வவரருள்செய்தனரெனவும், சிந்துவிலணையியற்றுவான் சமுத்திரராசனைவழிபாடேற்றதனுலவரருள்செய்தனரெனவு மிரண்டுவிதமாயுரையுரைப்பர் அவ்விரண்டில் சம்புவை யிரகுநாத ராராதித்தனரென்பதைக்கொளின், அதுமுந்தியேசொல்லப்படவேண்டியதென்றும், சிறுபொருளையும் விரித்துரைக்கும் வான்மீகிபகவான்விரித்துப் புகலாதொழியாரென்றும், அன்றியுஞ் சேதுமகாத்மியம், பதுமமுதலிய புராணங்கள் தாசரதியாரிலங்கைக்கேகுமுன் சிவப்பிரதிஷ்டைசெய்தனரென்றும், இராவணவதஞ்செய்துமீளுங்காலே செய்தனரென்றும், இவ்விரண்டுமென்றி அயோத்திமாநகரணைந்தரசுபுரிகையில்சுவாமி அசுவமேதம்புரியமுயல்கையில்முனிகணங்கள் இராவணசங்காரத்தா லினக்குண்டான பிரமகத்திதோஷத்தைச்சிவாராதனஞ்செய்து நிவர்த்தித்துக்கொண்டு மகமியற்றுவாயென்றுரைப்ப வதைக்கேட்டுச்சர்வதேவதாசொரூபர்அயோத்தியினின்றும்வ

ந்து பிரதிஷ்டைசெய்தமீண்டனரென்று மொருவழிப்படாது பலவாறுப் புலம்பின்றனவென்றும், கற்பக்கோடாது மவதாரங்களுண்டாதலா லக்கற்ப பேதத்தாற் புராணங்களினுமவைகளும் வேறுபாடுற்றதென்று முனைப்பின் வேதமுதல்யாவும் வீபு மம்மகாகற்பத்திற் புராணங்கள் மாத்திரம் சேஷமாயிற்கமாட்டாவாகலா லவ்வாறுரைப்பது பொருந்தாதென்றும், பரம்பொருளான ஸ்ரீமந்நாராயணன் இராமனெனத் திருநாமங்கொண்டு மனிதவுருக்கொண்டமையின் தசரதா முனிவர்முதலாயினோர் வணங்கினரன்றோ சங்கரனைப் பூசிக்க வேண்டியதென் றேதுவாரிலதென்றும்,வருணன் பிரஸாதம்பண்ணினனென்று புலவல் வாதத்துக்குட்படவில்லையென்று மதிலுரைத்துவர்."

அப்பால் விபீஷணர் சரணமடைந்த தானமுதலியவைகளைத் தாசரதியார்பிராட்டியாருக்குக் காட்டிக்கொண்டு கிட்கிந்தையை நண்ணுகையிற் பிரமனன்னையா ரிராகவபிரானைத்தொழுது சுவாமி! இச்சேனை நாப்பண் மகளிரது துணையின்றி நான் தமியளாயிருக்க நாணமுறுகின்றேனென்றதுஞ் சந்நிதி வருவனோக்கிக்கொண்டே நின்ற மாருதி இராமபத்திரரது திருவுளக்குறிப்போர்ந்து கிட்கிந்தைபுகுந்து தாரைமுதலாய அன்னமன்னாரனைவரையுங்கொணர்ந்து புட்பகத்திலேற்றினர் பின்பு புஷ்பகமவணின்று மனோவேகமென விரைந்து கங்கையைச்சார்ந்து மாங்குத் தாசகவாச்சிரமவாசனையேநோக்குற்றிருந்த குகப்பெருமான் பிரானது சீர்பாதத்தைத்தொழுதனர். பந்தவற்சலர் அருளாற் குகப்பெருமானைநோக்கி யவனாவியானத்திலேற்றிக்கொண்டு பகவான்பரத்துவாசராச்சிரமத்தைக் குறுகுங்காலைபுஷ்பகத்தினின்று மிறங்கித்தையலாருடனுந் திருத்தம்பியுடனும் பரத்துவாசமகருஷியை யன்புடன்தொழுதனர,மகருஷி யாசிசொல்லிச் சுவாமிக்கு விருந்துசெய்யத்தொடங்கினர். கருதிமூர்த்தி மாருதியை நோக்குரே அன்ப! நான் வனத்திலுறையவேண்டியகால மின்றோடுமுற்றினமையின் பரதன் மனந்தளர்ந்து எவன்புரிவனோ. நீயிணைவிற்சென்று நானுனைப்போதுகின்றனனென்றுரைத்து தவன்கருத் துணர்ந்து மீளுவாயென்று விடைகொடுத்தலும், அஞ்சனைமஞ்சரிறைஞ்சியேகினர். அன்பே யோருருக்கொண்டதெனப் பொலியாநின்ற பரதாழ்வானது சரிதையைத் தறிக்கலுற்றனென். தடம்புனல்சூழ்ந்த தண்டலைநாட்டின் கணிருந்து வனமுதலுங் கந்தமுங் காயுங் கனியு மல்லது மற்றொன்றையுமருந்தாராகித் தாசரதிபொய்புரையார், வருவர்வருவரென்றுதென்றிசையைநோக்கி பூசலாடுமியிருடையாராகிற்றிருந்த பரதாழ்வான் ஈரேழாண்டி னிறுதியின்றென்றறிந்து காதர்வருதல் காணாமையி னக்கினிவளர்த்ததனின் மூழ்குவான்றாமுக்தம்பியு மவ்வக்கினி குண்டத்தை வலம்வருகையில் சுவாமியேவலால் விரைந்து சென்ற அஞ்சனாசிங்கங் கைகுவித்துக்கொண்டென்னையாளுடைப் பரத! தாசரதியார்வந்தனர், முனிஜனஜபராமர்வந்தனர், பத்தவற்சலர்வந்தனர், பசுபதிஜபராமர்வந்தனரென்றோதிக்கொண்டே கிட்டி

யெரியைக் கைகளாற் கரியாக்கிப் பரதாழ்வானைத்தொழுது சுவாமி! விருந்தமைக்கும் பரத்துவாச முனிவரதுவேண்டுகோளைக் கடக்கவொண்ணுமையனுங்கிருக்கின்றனர். நாளைவருவனென்றுணர்த்தனர். பரதாழ்வான் இறந்தவன் பிழைத்தானென வகமகிழ்ந்து பிரானருட் கடலின்மூழ்கியிருத்தலுந் தாசரதியார் விருந்துண்டு பரத்துவாசனைத்தொழுது புஷ்பகமேறி நந்திக்கிராமம்வந்தருளினர். அன்புடைப்பரதர் சுவாமியையுந் தேவியையுந் தொழுதுதொழுது களிகூர்தலு மிராமசந்திரர் தம்பியை மார்பிலணைத்துத்தழுவி வசிட்டர்முதலிய மாமுனிவரையுந் தாய்மாரையு மிறைஞ்சினர். பின்பு அருந்ததி காந்தர் கண்ணுற்றுவைத்த நல்லோரையில் இராமபத்திரர் அலங்காரங்கொண்ட அயோத்திமாநகரணைந்து தூரியந்துவைக்க, தேவர் பூமாரிபெய்ய, அரசரிறைஞ்சியேத்த, முனிவராசிகூற, மாகத ரிசைபாட, மங்கையர்வாழ்த்தெடுப்ப, பரதாழ்வான் வெண்குடைநிழற்ற, இளையவரிருவருங் கவரிவீச, என்னையாளுடையதிருவடிகள்திருவடி தாங்கத்தேவியாருடன்மனுநாண்முதற் பொலியாநின்ற சிங்கஞ்சுமந்தமணியணைமிசை வீற்றிருந்து மௌலிபுனைந்துகொண்டு வேதியர்க்கன்னமுஞ்சொன்னமுமணியுந் தூசுமாவுநல்கினர். பின்பு சின்னாட்சென்று கார்முகில் கமலம்பூத்ததென விளங்காநிற்குந் திருமேனியுடையகண்ணர் மங்கலகீதம்பாடச் சங்கினங் குமுறப் பல்லியமுழங்க மயிலன்னார் நடம்பயில வரியாதனத்திற்சனககுல சுந்தரியுட னெழுந்தருளியிருந்து, வானரவிறை யிளவரசு அநுமன் நீலன் ஜாம்பவன்முதலானோர்க்கும் குகப்பெருமானுக்கும் விபீஷணாழ்வானுக்கு மற்றைப் பூமண்டலாதிபர்கட்குங் கரியும்பரியும் வெறுக்கைகளுநல்கி விடையுமருளினர். அவரவர் கோதண்டபாணியாருளை முடியிற்சூடித் தத்தம் பதிசார்ந்துவாழ்ந்தனர். மண்ணகமும் விண்ணகமுந் துயர்நீங்கித் தொழுதேத்த நீலமால்வரை செந்தாமரைக் காடீன்றிருந்தாங்கு சிங்காதனத்தில் வீற்றிருந்து நிரவதிக சௌலப்பிய சௌசீலியாதிகுண வுத்தமராசாண்டு வருகையிற் கருணைசொரூபியை நோக்குறுச்சுந்தரீ? நீகருவுற்றிருக்கின்றது கண்டுமெகிழ்ந்தனென், நீ யாதரிப்பதுயாது? கூறினிரப்புவனென்றருளினர். ஜனகாத்மஜை ஐயனையிறைஞ்சி, சுவாமி! கங்காதீரத்தில்வசியாநின்ற முனிவர்களைச்சேவித்து நோக்குடை வணங்களையுநோக்க வெனதுமனமவாவுகின்றதென்றோதினர். சர்வஜ்ஞர் அதைக்கேட்டு நன்றென்றுவந்திருக்குங்காலை, அரக்கனகத்தோராண்டுறைந்தமிதிலைநாடியையமானவீன நேருமென்றோராது பின்னும் பாரியாயிராமபிரான்கொண்டனர். அஃதை ஓர்தலைமைக்கிழிபென வுலகோதாநின்றதென்பதைச்சுவாமிகேட்டு இளையவரைநோக்கிச் சீதையைத் தேர்மேலேற்றிக் கங்கையினக்கரையில்விடுத்து மீளுவாயென்றலு மவர் துன்புற் றுவிளைந்து மெய்தளர்ந்து, ஆள்வினையாண்மையிற் றிறம்பனன்றன்றென்றுன்னுந் திருவடியைத்தொழுதுபோந்து பிராட்டியாரையிறைஞ்சி அன்னாய்! கங்காதீரத்தை நமக்குக்காட்டிப் போதும்படி சுவாமியினதுநியமனத்தைச்சுமந்துபோந்தனெனென்றனர்.

லோகமாதா வுரைக்கேட்டுத் திருவுளமுவந்து அக்கங்காதீரத்திலிராமன்ற ருஷிபத்தினிகட்குத்தவள ளுடையாபரணங்களை யெடுத்துக்கொண்டுவந்து தேர்மேலெழுந்தருளலும், லட்சுமணஸ்வாமியருளாற் சுமந்திரன்றடந் தேரைச்செலுத்தியப்பக்கிரியையடைவித்தனர். பிராட்டியாரு மிளையபெருமாளு மாவாயிலேறிக் கங்கையைக்கடந்து சிறிதுதூரஞ்செல்லலையிற் சுமந்திரா மஞ்சர் அந்தோவென்றுகதறித்தேவியாரைப்பார்த் தென்னன்னையீர்! நும்மைமெய்ம்பிராணிவனத்திட்டென்னைப்போதும்படியாணையருளியிருக்கின்றனர். யாதுசெய்வோமென்றிரங்கித்தொழுது தமியராய் மீண்டனர். பின்பு பிராட்டியார் ஏனிவ்வகையிற்சிறையிலிருந்து துன்பமுற்றதுபோதாதென்றிவ்வனத்திற மகியளாய் விடுத்துத் துயர்விளைவித்த விதியே!விதியே! என்றேங்கலும் பகவான்யான் மீமைகருஷியின்னுமையார் தாய்வன்னிசையானைக் கண்டிரங்கி யம்மாதயாபார்க்கடிதழுவித்தொழுது எங்கை! விளைவதோ? மன்னனையோ? ஒரு தரியமேனியாளொருத்தி யாங்குக்கண்ணீர்பெருக்கலங்குகின்றன ளென்று கேட்டனர். மாமுனிவரெழுந்து இருருடன்வர் துலவின்றுணையசுகமாக அரசனிவருக்கலமே பின்னை சனகன்றனையென்றுந் தாசரதிதாரமென்றுமிளையவன் வனத்தில்விட்டேனெனென்றும் யோகத்தாலறிந்தனன். நீ யிங்ஙுகின்றவமுறுவதிற்பயனென்ன? தவம்வளர்கருமங்கைய ரெனதாச்சிரமத்துப்பக்கலுண்டு. அவரோடுங்கூடி யிருக்கலாம் யாரரயென்றழைத்துக்கொண்டு தமதாச்சிரமத்தைக்குறுகவு மாங்கிருந்த தவப்பெண்கடிருமகளாரைக்கொண்டாடி யாராதித்தனர். அவ்வாறுதாயார் வால்மீகிமகருஷியா லாராதிக்கப்பட்டிருந்தனர். அருவிபாய்கின்ற கண்ணுடனும்புண்ணுயுழிகின்ற மனமுடனும் மீண்ட விளையபெருமாள் சுமந்திருடனயோத்தியையெய்தி ஐயனைத்தொழுதுவனத்திலுந் தாசரதியார் தேவியையுன்னிவருந்தமுட்டிருந்தனர். அக்காலையப்படைந்த விப்பிரனொருவனும் வன்பத்தினியுந் தா மருமையாய்ப்பெற்றடுத்த சிறுவனிறந்ததுமவர்கள் தளர்ந்தாற்றாராகியமரித்தமகனை மாபிலணைத்துக்கொண்டு, இரகுநாதர் கோயிற்கடைவாயிலையணி மகவைவைத்தமதுமடியில்வைத்துக்கொண்டு, குழந்தாய்! குழந்தாய்! எம்மைமக்கைவிட்டேயினி யாமுன்னைப்பிரியேம்பிரியேம். நின்னைப்போலவன்னெஞ்சமுடையேமல்லம். மைந்த! நின்றோழருடன்கூடி விளையாடியுடம்பலசியுறங்குகின்றனையோ? இஃதென்னபேருறக்கம்? எழுவாய் எழுவாய். அருமைமகனே! நினதுதோளின் முப்புரிநூல்விளங்கவும் வாயின் மெனஞ்சிபொலியவு நுதலிற்கட்டிபொலியவுங் காலைகளில் வளையொளிரவும் நீ மறையோதிவரக் காணப்பெற்றிலெம். தந்தைதாயிருக்கத் தகயரிறப்ப தின்றுகாறுமில்லை, யாமோநெறியினின்று நீங்கினமில்லை. காக்குமன்னன் தவறாலேயேயாமகவையிழந்தனம். இராமபிரானுக்குப் பழிவைத்திறத்துமென்றிரங்கினர். தாசரதியாரச்சொற்கேட்டு,தேவிபிரிவாலுண்டான புண்ணில் வேலுமைழந்தாலெனப்புழுங்குங்காலை, உற்றிடத்ததவும் பெற்றிய நாரதபகவானெழுந்தருளினர். ஸ்வாமி யவர்திருவடிகளைத்

தொழுதார்ச்சித் தாதனமருளிக் குசலமுரைத்தலும், அம்மாமுனிவர்சீதாகா தரைக் கண்ணுற்று இராம!நீவேதியன்மகனுக்குத் துயர்கின்றனை. நின்னாட்டில் முறைபிறழ்ந்து பெற்றோரிருக்கப் புதல்வனிறந்தவாறுரைக்கின்றனன் கேண்மோ. ஆதிபகவனதுமுகத்தினின்று பிராமணரும்,ஆகத்தினின்றரசரும், ஊருவினின்று வைசியரும், அருமறையுமறியா வடியினின்று சூத்திரருந்தோன்றினர். அவ்வருணத்தாரிற் றேவரை நிகரான பூதேவரது தன்மம்வேதமோதல், ஓதுவித்தல், மகமுதலியகருமங்களியற்றல், இயற்றுவித்தல், தானங்கோடல், கொடுத்தலென்பனவாம். ஓதலு மியற்றலு மீதலு மிடைநிற்கின்ற விரண்டுவருணத்தாருக் குரியனவாம். அம்முதலோருக் கேவல்புரிவதே சூத்திரரதுதொழிலாம். சூத்திரனுக்கு வேதமோதன்முதலாய கருமானுஷ்டானச் செயல்களும் பிரமசரியங்கிருகஸ்தம் வானப்பிரஸ்த சந்நியாசமென்ற ஆச்சிரமபேதங்களுமில்லை. ஏனெனில் சந்நியாசமென்ற பதத்துக்குக் கருமங்களை விடுத்தலென்பதே வுரையாகும். கொற்றவேந்தே! கேட்டி கருமத்துக்குரியனல்லாத சூத்திரன் சந்நியாசாச்சிரமத்தைப்பற்றுவனே லவனெக்கருமத்தை விட்டவனெனப்படுவன். முறையினின்று நீங்கித் தவவேடம்பூண்டு முத்திறத்தாரும் பூசிக்குஞ் சந்நியாசியென்றும், முத்திமார்க்கந் தெரிவிக்குந் தேசிகனென்றும், நான்காம்வருணத்தானொருவனேல் நபும்ஸகன் ஸ்திரீசங்கமத்தை வேரோடுமுனிந்தேனென்று வீரவிரதம் பூணுவதையும், குருடனொருவன் மற்றோர்குருடனுக்குச் செல்லும்வழியைக் காட்டுகின்றனனென்று கிளத்துவதையும் போலுமன்றே. இராம!நீதியினின்றும் வழுவினவரைத்தண்டியாதவரசனாட்டிற்கிரமங்களெல்லாங்குன்றி யக்கிரமமேமிகுந்து மழைபெய்யா தொழிவதாகும். நான்காம்வருணத்தானொருவன் உக்கிரமான தவம்புரியு மக்கிரமத்தால் வேதியன் மைந்தன் விண்ணேறினனென்றுரைத்தனர். அதைச்செவியிலேற்ற அயோத்தியர்பெருமான் இளையபெருமானைநோக்கி ஐய! நீபோய் மறையவரையு மவர்பாரியையுந்தேற்றிக் குழந்தையைத் தைலத்தோணியி லிடுவித்தியென்றருளி யுடனே புஷ்பகத்தின்மேலேறிக் குடதிசையும்வடதிசையுங் குணதிசையுநாடித் தவம்புரிவானைக் காணாது தென்றிசையைமேவிப் புண்டரீகம்பூத் தன்னம் வைகுமோர் தடத்தகத்துக் கான்மேலாய்த் தலைகீழாய்த் தொங்குகின்ற வொருவனைக்கண்டந்நாதர்நின் றிங்குத்தவம்புரியுநீயாவன்?நின்வருணம்யாது? பொய்யாதுரைத்தியென்றருளினர்.சிறைவாவலெனத்தூங்குவோ னம்மொழியைக்கேட்டுத்தேவா! நான்சூத்திரயோனியில் வந்தவன். எனதுபெயர் சம்புவன் சரீரத்தோடு சுவர்க்கமுறுவானித்தவம் புரிகின்றனெனென்றலும், இராமசந்திரர் தமதுடைவாளையுருவி யச்சம்புவனை யிருதுணிசெய்தருளினர். அப்போதே நித்திரைசெய்தெழுந்தவனைப்போற் பார்ப்பான்புதல்வ னெழுந்தனன். இராமபத்திரர் அயோத்திகண்ணிவீற்றிருந்தனர். வான்மீகிபகவானதாச்சிரமத்திலிருந்தபூமகளார்குசன், லவனென்று விரண்டுதிருமைந்தர்களைப்பெற்றனர். அம்மகருஷி யன்போடு

மெடுத்தவளர்த் துபாயனஞ்செய்வித்துக் கலைகள் பயில்வித்துத் தானுற்ற இராமாயணங்கற்பித்துப்பிராட்டியாருடன் அம்மைந்தனை யிராமபத்திரர்பா லழைத்துவந்துவிடுத்தலுஞ் சுவாமி தமதுசரிதையைக் குசலவர் கானம் பண்ணக் கேட்டுத்திருவுளமுவந்தனர். புருந்தவில்லினின்றும் பிறந்தகுத்து க்குவிருப்பிபெரு மகனிர்போல ஈாதரைப் பாற்கடலிலனையான் சீதாபிரா ட்டியார் புவியிலுட்புகுந்தருளினர். பின்பு சீதாமணுளர்தேவியார்பிரிவா லுண்டான துயரத்தை பொருவாறு சித்தரகிற்றிருக்கும்வேலை காலனென வன் தவவேடம்பூண டுயுத்தத்தில் யாவராலும்வெல்லவொண்ணுதாகலின், அயோத்தியெனத் திருநாமங்கொண்ட நகரையணுகி, இரகுநாயகரதுகோ யிலடையாயிலாசகுறுகி, சௌமித்திரனைநோக்குற்று, அயனுலேவப்பட்ட வனுகி, ஐயனைக்காணவந்தனென். எனதுவரவைத் தெரிவியுமென வவர் சென்று சாதரிட்டுரைத்தலு மிராமபத்திராம்முனிவை யிவணழைத்து வருவாயெனறருளினா. இளையவர் பிரமதூதனைக்கொண்டேகலும் விமலக ரிருத இரத்தின மய்யருந்தவிசையாராதித்து முனிசிரேஷ்டரே! விரிஞ்ச ன்யாக்கியம் யாது? அதனைப்போர்தனைபற்றி யச்சமடையாதுரையுமெ ன்றனர். முனியுருக்கொண்ட காலன் தேவதேவனைப்பார்த்து நானந்தகன் இங்கடைந்திந்து ரன்னினேன். சதுர்முகன் யசனத்தை நான்புகலுங்கா லை பிறர்யாரு மணித்திருக்கலாகாது. மத்தியில் யாவரேனுமவன் வருவனே னி லவனைத் தேயீர் சங்கரிக்கவேண்டுமென் றுயைத்தனன். சுவாமி அங்ங னமேயிருவுளங்கொண்டுசௌமித்திரைப்புத்திரனாக விருவ! துவாரபாலகனாத் ங்கிருக்கும்வாயிலைக்காக்க. ஒருமுகூர்த்தங்காறு மிருதல்யாரு மியட்போ தயவாழ்க்கையன்றனுந் தருமன் பிரானைநோக்குற்று, தேயீர் அறத்தைநிலைபு நச்செய்யா வையெயிற்றிருவவதரித்து யளிக்கின்றதாய் கடிராப்பியில்சங்கற் பஞ்செய்தகால மிறுதியடைந்ததென்றும், பரமபதத்தெழுந்தருளியெம் மையக்காத்தருளவேண்டுமென்றும், இன்னமு மயோத்தியிலிருந்தவனியை யலங்கரிக்கத் திருவுளம்பற்றினலவ்வாறே புரிந்தருளுகவென்று மொழிந்து, திருவுளக்குறிப்பறிந்து போதியென்று பிதாமகனென்னையேவினனென்று கிளத்தினன். இராமசந்திரா ஆம்; அது நாமுமுன்னியதே; பரமபதத்துக் கு வருகின்றனமென்றுரைக்குங்காலை துருவாசமாமுனிவரெழுந்தருளி இல க்குவ! என்வரவை யிராகவபிரானுக்குக்கடிதிலுரையென்றனர். சௌமித் திர ரம்முனிவனைத்தொழுது தேயீர்கருதிய கருமத்தைமொழிந்தருளின் யானதைச் சென்னியிற்கொண்டு புரிகின்றனன். இரகுநாதரோர்விஷயத் தைப்பற்றி யோர்முகூர்த்தகாலமாலோசித்துக்கொண்டு, தமியராயெழுந்த ருளி யிருக்கின்றனரென்றோதினர். அப்போது முனிவுடையம்முனிவர் நீ யின்னே இராமபத்திரர்மாட்டணுகி யுரையாவிடின் நின்னையுநின்குலத்தை யு முலகத்தையுஞ் சுட்டுவிடுவேனென்று கோபித்தலுஞ் சௌமித்திரர் ந மதுகுலத்துடனுலகங்கெடுவதினு மிராகவபிரானாற்றமியேனிறுதி யுறுவது நன்றென்று தமதுதிருவுளத்துக்கொண்டுபோக் கையனைத்தொழுது அரு

வாசமாமுனிவர்கோயிலின் வாயிலாரொன்றுகிளத்தினர். இராமசந்திரர்நம
னுக்குவிடைகொடுத்தனுப்பித்துருவாசமாமுனிவனையெதிர்கொண்டுதொழு
தாசனமருளியருச்சனைபுரிந்துதேவரீரிவட்போதஅடுத்தவினையாது? உரைத்
தருளுமெனவம்மாமுனிவர் ஆயிரமாண்டுணவின்றி யோர்மாதவம் புரிந்த
னென். அதுமுடிந்தவின்று போனகம்வேண்டிநின்மாட்டணுகினெனென்
றனர். பத்தவற்சலர்திருவுளமுகந்தருளிமுனிவருக் கமுதினுமினிய வமுது
கொடுத்துச் செல்லவிடுத்தவையில்வந்து பகவான்வசிட்டர்முதலாய சான்
றோரைநோக்குற்றுச்சுமித்திரைசான்முனையினது பிழையையுந்தமது வஞ்
சினத்தையுமுரைத்தென்செயற்பாற்றென்று வருத்தமுறலும், இளையபெரு
மாள் பவகுலஹர நாதனைவலம்வந்து சேவித்தஞ்சலிசெய்துநின்று சுவாமி
தேவரீ ரடியேன்பொருட்டாற் றிருவுளங்கலங்கவடுக்காது. நான் விண்ண
டைகின்றனெனென்று மொழிந்து சரயுமாநதியையணைந்து நீராடிப் புரஞ
ரஜபமந்திரமும், பிரமாதியருக்குந் தாரகமுமான இராமநாமத்தை யிருத
யத்துளெண்ணி யொருமுகூர்த்தம் யோகத்திலிருந்து தேவரெல்லாருமெதி
ர்கொள்ளப் பரமபதநண்ணி யாங்குறையாநின்ற நித்திய சூரியர்களுக்குப்
புவனநாதர் வரவையுணர்த்தித் தாஞ் சொசொரூபமடைந்திருந்தனர். ப
த்தவற்சலர் சுமித்திராபுத்திரர் சென்றவாறறிந்தேங்கி யிளையவனைப்பிரிந்து
நான்தரிப்பனோ! பரத! நீ முடிபுனைந்துகொண்டரசாள்வாய். நானின்னே
யிளையவனைத் தொடர்ந்தேகுகின்றனெனென்று திருவாய்மலர்ந்தருளலும்
பரதாழ்வான்தொழுது சுவாமி! என்னைக்கைவிட அடியேன்வயிற் றவறு
ண்டோ. இந்திரன்முதலியவிறையவர் பதத்தைமதிப்பேனோ. தேவரீர் திரு
வடியினதுநிழலிலமர்தலையேகாதலிப்பேன். குசலவருக்குக்கோசலத்தையு
முத்தரகோசலத்தையுந்தந்து முடிபுனைவித்தருளுமென்றும், மதுராபுரியில
ரசுபுரியுஞ் சத்துருக்கினனஞ்செயலைக்கேட்பனோ லேங்குவனாகலின் றூத
னையனுப்பி யவனைவரவழைப்பது தருமமென்றுங்கைகூப்பினர். பரந்தாமர்
அது உசிதமென்றுகொண்டு சத்துருக்கினர்பாற்றூதனையேவ வவர்சென்று
மதுராபுரிநண்ணிப் பரதாழ்வார்கிளையவனைத்தொழுது நிகழ்ந்தவாறுரைத்
தனு மச்சத்துருக்கினர் தமதுபொருளுக்கு மோலிபுனைவித்துப்போந்துதா
சரதியார்தாளைத்தொழுதுபற்றெலாமொழித்துத்தேவர்திருவடியைப்பற்றிப்
போந்தனெனென்றனர். அவ்வேலை அயோத்தியாபுரியாரும், கோசலநாட்
டாரும் சுக்கிரீவர் அனுமன் அங்கதன் ஜாம்பவன்முதலானவரும், விபீஷ
ணாழ்வான்முதலியவருங் கடிதிலணைந்து பவகுலஹர நாதனைத்தொழுதன்
புகொண்டு மயிர்பொடிப்ப நாக்குழறக் கைகுவித்துச் சுவாமி பிறப்பிறப்
பெனுங் கடலிலாழ்ந்து கரையேறும்வழியின்றி வருந்தும் அடியேங்கள்
தேவரீர் திருவடியென்னு மரக்கலத்தைப் பெற்றோமென்று மகிழ்ந்திருக்கி
ன்றனம். எங்களைக் கைவிடாது குறிக்கொண்டருளுமென்று சரணாகதஞ்
செய்தனர். அப்போ திந்திரனவையிற் பொலியாநின்ற பிரகற்பதியென
வும், பிரமனெனவும் வீற்றிருந்த பகவான் வசிட்டமாமுனிவர் சுவாமியை

நோக்குமிராம! நினது சரணத்தைச் சரணமடைவதன்றி மன்னுயிர்க்குறுதி மற்றுண்டோ? சமுசார துக்கசாகரத்தினின்றுங் கரையேறுதலுற்றுவாரன்றி நின்னைச் சரணமடையாது வீடுற்றவர் யாவர்? எத்தேவரையருச்சித்தாலுஞ் சமஸ்ததேவதாசொரூபமான நின்னையேயருச்சித்ததாகுமன்றே. சரணஞ்செய்யுமிவர்களை யிரட்சித்தல் நினக்கேகடனென்றுகிளத்திமோனமாயிருந்தனர். அதைத்திருவுளம்பற்றிய தசரதராமர் விபீஷணாழ்வானைநோக்கி ஐய! இப்பூமியுடன் வேதமுள்ளளவு நீயிலங்கையிலரசுபுரிகவென்றும், இக்ஷ்வாகுராஜன்முதலெமதுகுலத்தார்க்குத்திருவாராதனமான அரங்கனை, ஆதியை, அரவணைச்செல்வனை, அமலனை, அரியை, அச்சுதனையர்ச்சித்துவாழ்கவென்றுங்கொடுத்து விடையுமருளிக் கருணைக்கடலஞ்சனைமஞ்சனை, கடல்கடந்த காலனை, இலங்கையைச்செற்றவனை, சீதாசோகவிநாசனனை, நவவியாகரண பண்டிதனை, உத்தமனை, தமது தூதனைநோக்கி அன்ப! நீயிப்புவியையலங்கரித்திருந்தெனதுசரிதையை வடிப்போர்களையுங்கேட்போர்களையும் பாடுவோர்களையு மடியார்களையுங் காத்தளித்தியென்றுரைத்து, ஜாம்பவன் முதலிய பலவீரர்களை நோக்கித்தக்கதுமொழிந்து, சுக்கிரீவர்முதலிய வானரர்களையு மற்றெல்லாரையும்பார்த்தென்னோடும் போதுவீரென்றருளி, கோசலத்தில் குசவதியில் குசனையும், உத்தரகோசலத்தில் சிரப்பதியென்றநகரில் லவனையு மிருத்தி முடிபுனைவித்து மறுநாட்காலை புயனாதர் பகவான்வசிட்டரால் மகாப்பிரஸ்தான விதிகளைமுடித்து, வேதங்களை யுச்சரித்துக்கொண்டு ஸ்ரீதேவி பூதேவி யிருபுடைசூழ, வேதம்வேதியருக்கொடுபோத, தம்பியிருவரு மணுகிச்செல்ல, சாயகாந்தகமுதலிய தெய்வப்படைகள் புருஷரூபங்கொண்டு சூழ்தர, சுக்கிரீவராதி வானரப்படைகள்கடல்போற்பொங்கிப் போத, கோசலநாடர்களும், ஆமுதலாயவைகளும், பறவைகளும், ஊர்வனவும் விடாதுதொடர வொன்றரை யோசனைதூரஞ் சரயுமாநதி தீரத்தைத்தொடர்ந்துசென்று, சுவர்க்கத்துவாரமென்ற ஸ்தலத்தையணைதலும், விதிசிவேந்திராதிதேவர் அந்தரத்தணித் துந்துபிமுழக்கி மலர்மாரிபெய்து எந்தாய் வாராய், எம்மையாளுடையாய் வாராய், அண்டங்கள்யாவுமுண்டுமிழ்ந்தாய் வாராய், நாராயணனே வாராயென்று துதித்துக்கைகுவித்துநின்றனர். அக்காலை இராகவபிரானுர் சாதுக்கண்மனமெனத்தெளிந்தொழுகுகின்றசரயுமாநதியின்மூழ்கி நீலமேகசாமளமூர்த்தியாய்ச் செந்தாமரையைப்பழிக்குந் திருவடியையுடையராய்ச் சதுர்புசராய்க் கருணைபொழியுங் கண்ணராய்ச் சங்குசக்கர கதாதரராய்க் கண்ணுக்கினியராய்க் கிரீடகேயூர குண்டலஹாரராய்க் கௌத்துவமணிமார்பராய்த்தோன்றலு மப்பிரமருத்திரேந்திராதியர் பண்டைவண்ணமா யண்டசத்தறிதுயிலய்யனை வணங்கப்பெற்றோமென்று தொழுதுதொழுது களிதுளங்கினர். பரமன் பிரமனைநோக்கி யெம்மைத் தொடர்ந்துபோந்த சீவர்கட்கெல்லாமொருத்தமவுலக மமைவிப்பாயென்றருளினர். அவ்வருளைச்சுமந்த கமலாசனன் சர்வஞ்ஞரைத்தொழு தெனதுலகத்துக்குமேலும், பிரதிசயவீடாகிய

தேவரீர்வைகுண்டத்துக்குக்கீழுஞ் சந்தானலோகமென் றொன்றற்புதச்செயல்களோடு சிருஷ்டித்திருக்கின்றனென். அது தேவரீர் சரணத்தைத்தொடர்ந்துவந்த சேதனர்களெல்லாரு மதனிலுறைவதொன்றாம், தேவரீர் திருவவதாரமானஇராமபத்தியினிச்செய்வோரு மப்புண்ணியலோகத்தையே யடைவதொன்றுமோதலுமுவந்து ஸ்ரீயப்பதி தமது பரமபதநண்ணி நித்தியசூரிகளாகியசோதிகள் நாப்பண் சோதியரசென வீற்றிருத்தலாயினர். ஸ்ரீ அரியுடன்சரயுமாநதியிலிறங்கிய வானரங்களெல்லாந் தத்தந் தேவாமிசமாயின. வானரவிறையான சுக்கிரீவருஞ் சூரியமண்டலமடைந்தனர். தாவரசங்கமங்களுடன் மற்றையோருஞ்சந்தானலோகத்தைச்சார்ந்தனரென்பர்.

"பாவபுண்ணியங்களை யோராது, வஞ்சமகற்றாது, சாதுசங்கமஞ்செய்யாது, வேசையர் மனமென வொருவழிநில்லாது,ஞானங்கொள்ளாது,அடியார்களடியி லருத்திபுரியாது, தீவினையேபுரிந் தகங்காரங்கொண்டொழுகு மடநெஞ்சே! அரகோதண்ட கண்டகராகிய நம் அரும்பெறலடிகள்,பிராட்டியாருடன் காலாற்கடந்தகாட்டிலாவது, கிருமியுமுஜ்ஜீவித்த கோசலநாட்டிலாவது, அக்காலத்திற்கல்லாய்ப்புல்லாய்த் தோன்றாததினாலன்றோ பிணிபசியிர்திரியமெனுஞ்சுறவெறிய, சமுசாரமெனுங் கராங்கதுவ வினையெனுஞ்சுழல்சுற்றியமுத்த,இப்பிறப்பெனு மாழியிலாழ்ந்துவருந்தி வாடுகின்றனை. இனியேனும் மயக்கந்தீர்ந் துண்மையையுணர்ந்து இராகவபிரானைச் சரணமடைந்துய்வாயாக."

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளே சரணம்.

---

## மரபுகிளத்தல்.

எம்மையாளுடையிரகுநாதர் தன்னடிச்சோதிக் கெழுந்தருளியபின்னர்க் குசனென்பவர்மன்னர்க்குமன்னராய் வீற்றிருந்து தமதுமைந்தரான அதிதியென்பவருக்குமுடியளித்து வானேகினர்.பின்பு அவ்வதிதியும்,நிஷதனும்,அனலனும்,நபசுஎன்பவரும்,புண்டரீகனும்,க்ஷேமதனுவாவும், தேவானிகனும், அகீனகுவும், குருவும், பாரியாத்திரனும்,பலனும், சலனும்,உற்கனும்,வச்சிரநாபனும்,சங்கணனும், வியுஷிதாசுவனும்,விலசுவஹனும், முனிசிரேஷ்டரான யாக்கியவல்கிய மாமுனிவரிடத்தினின்றும் யோகத்தைக் கற்றுணர்ந்த இரணியநாபனும், புஷியனும், துருவசந்தியும், சுதரிசனனும், அக்கினிவருணனும், சீக்கிரகனும் உலகாண்டனர். அவர் நெடுமரபிற்றோன்றியமருவென்பவர் வேந்தரேந்தலாய் வீற்றிருந்து தமதுபுதல்வரான பிரசுசுகரென்பவருக்கரசிந் தவரிமயமலையின்பக்கலிருக்கின்ற கலாபமென்றவோர்கிராமத்தில் யார்க்குந்தெரியா தின்னமு மாதவம்புரிந்துகொண்டிருக்கின்றனர். பகவனதுமுகத்தினின்றுந் திருவடியினின்றும்போந்த இரண்டுவருணத்தாரன்றி க்ஷத்திரியரும் வைசியரு மிக்கலியுகத்தி லில்லையாதலின், இனிவரும் கிருதயுகத்தில் க்ஷத்திரியசாதியாருற்பத்திக் கம்மருவென்பவரே மூலபுருஷராவார். அப்பிரசு சுகரென்பவருக்குப் பின்சுசந்தியும், அ

மர்ஷணும், சகஸ்வானும், விசுவபலனும், பிரதக்பலனும், போகதிருணனும், உருவிதனும், வச்சப்பிரீதனும், பிரதிவியோமனும், மனுவும், நிசிகவும், வாக்மினிபதியும், சகதேவனும், பிரகதசுவனும், பாதுமனும், பிரதிகசுவனும், சுப்பிரதீகனும், மெருதேவனும், சுதட்சனும், இரட்சகனும், அந்தாட்சகனும், சுதப்ஸுவும், அமித்திரசிதுவும், பிரகத்துவாசியும், பேரிகைவும், தனஞ்சயனும், இரணஞ்சயனும், சிரஞ்சயனும், சக்கியனும், சுத்தாதரனும், பிரசேனசிதுவும், க்ஷுத்திரகனும், இரணகனும், சுரதனும், சுமித்திரனும், மற்றுஞ் சில வுத்தமமன்னர்களுந் தேவர்தொழும் அயோத்திமாநகரில்வீற்றிருந்து திரிலோகத்தையு மாண்டருளினர்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளே சரணம்.

---

## உருத்திரயாமள அயோத்தியாகாண்ட
## ஹரகௌரீ சம்வாதம்
## முதலத்தியாயம்

கைலையெனுமால்வரை கோடி சந்திரருதித்தாற்போ லொளியுடையதாயும், அழியா மெய்ஞ்ஞான யோங்கியும் அசையா நிலையுடையதாயு மெண்டிசையினு மிருளினைக்கெடிப் பொலியாநிற்கும், தூய்மையையணைச்சேர்ந்தோர் தூய்மையராவதுபோ லிருட்கடுகவெனத் தோன்று மேகங்க ளம்மலையைச்சேர்தலாற் பாபமாக்கா துருவத்துக்கொப்பாகாது சந்திரன்போல சந்தரமாய்விளங்காநிற்கும். தேவரும்முனிவரும் தும்பியும் வண்டும்பறந்திசைபாட வானுலகத்திற் றழைத்திராநின்ற தருக்களினது கோடுகளைப் பனைக்கையாலொடித்து மடப்பிடிக்குூலவிபூட்டலைத்திரத்துக் கூடல்புரியுங்களிறுகள் இந்திரனுக் கைராவதம் பலவெனத்தோன்றும். அக்கைலையின்சாரலிலோங்காநிற்கு மரங்களின்மலரைத் தும்பிவருந்து யாண்பூத்த மீனைப் புதிய தேனுதவும்பூவெனக்கருதி யதன்மாட்டணைய, சந்திரனுட்கறுட்டைத் தன்னினமென மான்சாராநிற்கும். இவ்வாறெழிலகொண்டு வேதசிரமென விளங்கு மலையினுச்சியில் தம்மடியார்களிருதயத்தைச் சுகஸ்தானமாய்க்கொண்டுறையும் பாதங்கள் செந்தாமரையைநிகர்ப்ப, திருமேனி படிகமலையையேய்ப்ப, மற்றோர்மகேருபவன்தோன்றினலன்றி வேறோடா றுதல்விழியை வெண்படத்தான் மறைத்தொத்து, நெற்றியிற்றிருநீறுவிளங்க வீற்றிராநின்ற பரமசிவனை, விடையூருஞ்செல்வனை, அரவணியு மற்புதனை, கரங்கைநிறைந்த பொற்சடையுடை நின்மலக்கொழுந்தை, உலகீன்ற உமையம்மை வலம்வந்துதொழுதுபுகழ்ந்து பாகவதோத்தம! சகலசாஸ்திரங்களையும் புராணங்களையுந் தமியள்வயிற் கருணைபுரிந்தருளச் செவியாரப்பருகியுவகைவந்தனென். புவியின்கட் சேமையுடையதாயும், நான்மறையால் வழுத்தப்பட்டதாயும், திவ்வியதேசங்களுள் சிறப்புற்றதாயுங் கிளராநிற்கும் அ

யோத்திமாநகரினது மாண்பைக்கேட்க வருத்தியுறுகின்றனென். தேவரீர்
முகமா யப்புண்ணியக்ஷேத்திரத்தின் மான்மியத்தைச் சிரவணஞ்செய்
வான் பலவிடங்களினின்று முனிவர்கள்போந்து புடைசூழ்ந்திருக்கின்ற
னர். மகாதேவ! அத்திவ்வியதேசத்தினுற்பத்தியையும், சொரூபத்தையும்,
அதனைச்சார்ந்த தீர்த்தங்களின் மகிமையையு மொழிந்தருளுகவென்றடிதா
ழ்தலும், அச்சதாசிவன் ஸ்ரீ அயோத்தியின்மகிமையை வினவிய பிராட்டி
மாட்டன்புற்று ரமணீ! ஸ்ரீ அரிக்கு ரம்மியஸ்தானமாய் விளங்காநிற்கும்
அயோத்திமாநகர முங்களெல்லாருக்கு மங்களத்தையு மானந்தத்தையுங்
கொடுக்கட்டும்,காயாம்பூவண்ணனும்,கமலக்கண்ணனும், சந்திரவதனனும்,
சுந்தரத்தோளனும், பங்கயப்பதத்தனும், அருமறைமுதல்வனுமான இராம
னை நமஸ்கரிக்கிறேன். நித்தியனும்,நிர்மலனும், பரமாத்துமாவுமான இராம
பத்திரனை வணங்குகின்றனென். சகலஜகத்துக்காரணனும்,சர்வாந்தரியாமி
யும்,சச்சிதானந்த சொரூபனுமான இரகுநாதனைச் சேவிக்கின்றனெனெ
ன்றுபராவிநின்றுதேவியைக் கண்ணுற்று, கள்ளொழுகுங் காவியெனக் கரு
ணைபொழிகண்மானே! சிருஷ்டிகாலத்திலேயே யுண்டாகி மங்களத்தைத்
தருவதாய், புனிதமாய், தலங்களெல்லாவற்றினுஞ்சிறந்ததா யொளிராநிற்
கும் ஸ்ரீஅயோத்திமாநகரின்மாண்பைமொழிகின்றனென்.நினதுமக்களோ
டுங்கேண்மோ. பிதாமகனுக்குப் பிரதமபுத்திரனான சுவாயம்புமனுவோர்கால
த்திற் சத்தியலோகஞ்சார்ந்து, நான்முகனைத்தாழ்ந்து குவிந்தகோகனகம்
போன்ற கையனாய்நிற்றலும்,அம்மலரோன்மனுவைக் கண்ணுற்று வாராய்
குழந்தாய்! நீ யிவட்போதப்புரிந்தகருமம் யாதென்றுவினவினன். மனுச்
சக்கரவர்த்தி யதைக்கேட்டுஉலகீன்றாய்! தேவரீர்பணித்தவாறு பிரஜாவிரு
த்தியும்பரிபாலனமுஞ்செய்துவருகின்றனென்.நான்வசிப்பதற்குப்பூவிலோ
ரினிதானஸ்தானங்கற்பித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அம்
மொழியைச் செவியிலேற்ற தாதா மனுவுடனேகிக் கனகத்தாலாகிய ஆறிர
ண்டரண்சூழ்ந்ததாயும், திக்காதிப ரொண்மரொனச் சண்டன்,பிரசண்டன்,
பத்திரன்,சுபத்திரன், ஜயன்,விஜயன்,தாதா,விதாதாவென்பவர்களாற்காக்
கப்படாநின்றவேதமனைய நான்குவாயில்களுற்றதாயும்,நித்தியசங்கற்ப சித்
தங்களானநடைவாவிகள், தடாகங்கள்,உய்யானங்கள்செறிந்ததாயும்,இரு
மறையோதையும்,கீதநாதமும்,பாடலோசையும்விம்மியெழத்திகழாநிற்கும்
ஸ்ரீவைகுண்டநண்ணி, ஐயிருநூறு தூணங்களுடையதாய், நவரத்தினகசித
மாய், அநேகவிதவலங்காரமுடையதாயொளிரும்ஆநந்தமயமென்னுமண்ட
பத்திற்பிரகாசமான வாயிரம்பணங்களோடு விளங்கு மரவணைமிசை, அந
ந்த கருடவிஷ்வக்ஸேனாதி நித்தியசூரிகள்சேவியனாய், வேதங்களாலும் இ
ன்னபடியென் றுணரவொண்ணாதபெற்றியனாய், அநந்த கல்யாணகுணபரி
பூர்ணனாய், சர்வஜ்ஞனாய், சர்வாந்தரியாமியாய் வீற்றிராநின்ற ஸ்ரீமந்நா
ராயணனை, கருணாசொரூபியும், சுவாமியி னதவதாரங்கடோறு மனுரூப
மான அவதாரியும் பிரபன்னர்கட்குப் புருஷகாரியுமான பெரியபிராட்டி

யாரோடு தொழுது வழுத்தித் தேவதேவாதிப! சுவாயம்பு மனுவுக்கு வாச யோக்கியமான வோருறைவிட நேமித்தருளவேண்டுமென்று பிரார்த்தித் தனர், பிரளயகாலத்தில் உருத்திரரூபியாய், யாவரையும் யாவற்றையு மரி க்குந்தன்மையா லரியெனத்திருநாமங்கொண்ட அப்பரந்தாமன் தனதுந்தி வந்தவனைப்பாரா, தாதா இவ்வைகுண்டத்து நாப்பண் விசித்திரமாய்விளங் காநின்ற ஸ்ரீ அயோத்தியைத் தந்தனம், அதைக்கொண்டேகி யவனியிலற் புதமான வோரகத்திற்பிரதிஷ்டைசெய்து மனுவை யதனிலிருத்துவாயெ ன்றருள்புரிந்தனன். மனுவுமன்னோன் தந்தையும்உலகுக்குத்தந்தையுந்தாயு மானோனதுபூங்கழலைப்பராய்த்தாழ்ந்து ஸ்ரீ அயோத்தியை யெழுந்தருளச் செய்துகொண்டு தெய்வத்தச்சனோடும், பெரியோராகிய பகவான் வசிட்ட முனிவரோடும் தரைசார்ந்து பூமகளுக்குத்திலகந்திட்டிநாற்போலவுநெற்றிச் சுட்டிசூட்டினாற்போலவும் ஸ்தாபனஞ்செய்து, கருங்கடல்காலெனப் பெரி தானகிடங்கும், அண்டப்பித்தி சிறுகுற்றிச்சுவரெனச்சொன்னத்தா லுன் னதமாயமதிலும், மண்ணளந்தபெருமான் விண்ணளக்கவெடுத்த காலின் மேலுயர்ந்த வாயில்களும், பொன்மலை புற்றுமெனவுயரியகோபுரங்களுமா டங்களு மண்டபங்களுமரங்குகளு மட்டாளங்களும் வேதிகைகளுஞ் சாலை களுஞ் சதுக்கங்களு நால்வகைப்பொன்னாலும் நவமணியாலுமியற்றிக்கொ டிகளுட்டிப் பிச்சமுந்தொங்கலுநாற்றித் தோரணங்கட்டியலங்கரித்து,மனு ச்சக்கரவர்த்திக்கு முடிபுனைவித்து, அப்பிரமன் றனதுலகுசார்ந்தனன். கயல்விழி! ஸ்ரீவைகுண்டத்தினின்றுங் கொணர்ந்து ஸ்தாபனஞ்செய்த ஸ்ரீ அயோத்திமாநகரம், மேதினியின்மேவாது சுதரிசனமெனும் ஸ்ரீவிஷ்ணு சக்கரத்தின்மேன் மேவாநின்றது. ஆதிபகவனுடைய அவதாரமாகிய மச் சாகாரமாய்க் குணகுடதிசையி லநேகயோசனைநீண்டும், சரயுமாநதிதெ ன்கரைமுத்தற் றமசாதீரம்வரையி லகன்று மோங்காநின்றது. குடதிசையிற் கர்க்கதமென்னுநதியும் பிரமத்திரவமென்றும் வசிட்டையென்று மிராமக ங்கையென்றுமோதுஞ் சரயுமாநதியும்பெருகி யொழுகக்கொண்டது. புண் ணியமுந் தவமுந்திரண்டா லென்ன வொளிராநின்றது. தேவர்களெல்லாரா லும் போற்றிசெய்யப்படாநின்றது. அச்சுதனுக் கானந்தங்கொடுக்கு மந்த ப்புரமெனலாயது. குபேரனென வநேகவைசியமாந்தர் வசித்தலி னளகா புரியை நிகர்த்தது. இந்திரனையெதிரு மிறையவருறைதலிற் சுவர்க்கம் போன்றது. பிரமனை நிகருமந்தணர் தங்குதலிற் சத்தியலோகத்தை நேரா னது. நித்தியசூரிகளைநேரும் பாகவதசிரேஷ்டர்க ளருத்தியோடிருக்கின்ற மையின் ஸ்ரீவைகுண்டத்தையொத்தது. அடைந்தவர் துக்கந்தவிர்ந்து, ஆ ராவன்புகொண் டின்புறுந்தன்மையாலப்பிராகிருதமான பரமபதத்தைநே ரானது. பிரஹ்மஹத்திமுதலாய மகாபாதகங்களாலு மெதிர்க்கவொண்ணு தாகலின் ஸ்ரீஅயோத்தியென்றுஞ், சாகேதமென்றும், சத்தியமென்றும், விமலையென்றுந் திருநாமங்கொண்டது. பாதலம், மகாதலம், தலாதலம், இ ரஸாதலம், சுதலம், விதலம், அதலம், பூலோகம், புவர்லோகம், சுவர்லோ

கம், மகாலோகம், சனலோகம், தபோலோகம், சத்தியலோகமென்ற பொ ழில்களை யங்கங்களாகக்கொண்ட விராட்டுருபியான ஸ்ரீமந்நாராயணனுக்கு அவந்திகைதிருப்பதமெனவும், காஞ்சியிடையெனவும், துவாரகையுந்தியெ னவும், மாயை மருமமெனவும், மதுரை கண்டமெனவும்,காசி நாசியென வும், அயோத்தி திருமுகமெனவுமொழிப. அயோத்தியென்ற நாமத்தில் அகாரத்தை வாசுதேவனாகவும், யகாரத்தைப் பிரமனாகவும், உகாரத்தை ஈனாகவு முனிசுவரர்க டியானித்தகலா தாங்குறையா நின்றனரென்றனர்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளேசரணம்.

## இரண்டாமத்தியாயம்.

நவமணிகுயின்ற பொற்சிலம் படியுடை மலைமகள் படிகமலையென வீ ற்றிருந்தசிவபெருமானைவணங்கி, தேவதேவ! மகாதேவ! ஸ்ரீஅயோத்திமா நகரைத்தரிசிப்போர்க்குப்பலம்யாது? ஆங்குப்புரியவேண்டியகருமம்யாது? மொழிந்தருளுகவெனப் பிரார்த்திக்கப் பரமசிவன் பாரா, பத்தியிற்பதித்த முத்தையு முருந்தையுமொத்த மொய்ந்நகைக்குயிலே! அருமறைவழுத்தும் அயோத்திமாநகரின்மகிமையைக்கேளாநின்ற நின்னைநிகர்வார்யார்?சீமாட் டிகேட்டி ஸ்ரீசாகேதஞ்செல்லவேண்டுமென்று ஒருவனெண்ணுவனே லக் கணத்திலேயே அவனுடையமகாபாதகங்க ளாதவனைக்கண்டபனிபோலா கிப் புண்ணியனவன், எழுபுரியி லேமாப்புடைத்தாய்முதலாநகரை மகிழுந் தாரகவாச்சியனைக் கண்களிப்பச்சேவிப்ப வருத்தியுற்றுநடப்பனேல் நடக். குமொவ்வோரடிக்கு மசுவமேதபலமுறுவன், பித்து,ஊமை, குருடு, செவி டு, மலடு, முடம், கூன்முதலாய நோயுடையோர் விமலையைத் தரிசிப்பா ராயி னவர் புன்மைநீங்கிப் புனிதராவர். சாகேதத்தைநோக்கிச்செல்வோ ன் அனுமானைத்தியானித்துத்தாரகமாகிய இராமநாமத்தையுச்சரித்து வே ததுல்லியமான இராமாயணத்தையு மோட்சப்பிரதமான ஸ்ரீபாகவதத்தை யுங்கானஞ்செய்து ஸ்ரீஹரியினதவதாரங்களின் குணநுபவஞ்செய்துகொ ண்டுசென்றணைந்து தேகாபிமானம்விட்டுத் தண்டமெனத்தண்டஞ்சமர்ப் பிக்குமுத்தம னவனியிலரசர்போற்ற வாழ்ந்திருந்திறுதிக்காலத்தி லந்தகன் கைப்படா துத்தமலோகமடைவன். திரிவேணி சங்கமமாகும் பிரயாகையி லாயிரமாண்டு வசித்தா லெய்தும்பயனை அயோத்தியில் திரிதினமுறைத லிற்பெறுவன். பரிசுத்தனாகி யுபவாசத்தோடு நியமம்பூண்டு கைகூப்பி ஸ்ரீ ராமராமராமாவென் றுச்சரித்துக்கொண்டு சத்தியமாநகரை யொருமுறை வலம்வருவனே லவன் நாவலந்தீவைப் பிரதட்சிணஞ்செய்தபலன் கொள்வ ன். தேவர்கட்கெல்லா மாதிபகவன் பரமாத்துமாவான நாராயணனேபோ ல க்ஷேத்திரங்களுக்கெல்லா முதன்மையாய அயோத்தியிற் ருரகநாமந் தருநாவனாய், இராமபிரானைத்தியானிக்குஞ் சிந்தையனாய்ப் பன்னிரண்டு பகல்வைகுவனேலவன்றவிராது பிறவாப்பேறெய்துவன். பரதேய்த்தோரு

மாங்கிருந்தபடியே அயோத்தியைநோக்கிக் காலையினுமாலையினுநமஸ்கரிப்பராயி னப்பயனையேயெய்துவர். ஸ்ரீஅயோத்தியைச் சேவிக்கச்செல்வோரை நீராட்டி யமுதூட்டி,நடந்துவந்த வாட்டம் வாட்டி யாதரிப்போன் றேவர்களா லாதரிக்கப்படுவன். மத்தியானகாலத்தி னல்லமுதுகொடுத் துண்ணீர்நல்கி யுற்றிடத்துதவும் பொருளுதவி யனுப்புவோன் கையில் சிராத்தஞ்செய்து ஸ்ரீவிஷ்ணுபகவான்பாதத்திற் பிண்டதருப்பணஞ் செய்த பலனுறுவன். பிணிமூப் பிவைகளான் மெய்யின் மெலிவடைந்து யாத்திரைசெய்யவொண்ணா தயருமவருக்கு வாகனங் கொடுத்தனுப்புவனே லிந்திரனென யானைமேற்கொள்வன்,குடையுங்குண்டிகையு மாடையுமீவோன் சத்திரமுஞ்சாலையு மமைத்தபல னடைவன். வழித்துணையின்றி மலைவடையுமவனுக்குத் துணைகூட்டியனுப்புவனேல் பழிபிறங்காப்பண்புடைமக்களைப்பெற்றுவாழ்வன். வழிசென்றவருத்தமாறக் கால்கைபிடித் துபசரிப்போன் பிரயாகையில்க்ஷவரஞ்செய்துகொண்ட புண்ணியமடைவன். அயோத்தியென்ற திருநாமத்தை யுரைப்போரை யாதரிப்போன் சகலகாமியங்களையு முறுவன். உலகிற் புமானெனத்தோன்றினவன் அயோத்திமாநகரைச் சேவித்துப்பிறந்தபேற்றையு மினிப்பிறவாப்பேற்றையுமெய்தவேண்டும் தான்சென்று சேவியாவிடினுஞ் செல்வோர்க் குதவிபுரியவேண்டுமென்றனர்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளே சரணம்.

---

## மூன்று மத்தியாயம்.

இலவுங் கோபமு நிகரிதழினியோய்! அசுவமேதமுதலிய மகங்கள்புரிவதினுந் தீர்த்தயாத்திரைசெய்வது மிகச்சிறந்ததெனலாம். ஆகலான் ஒருவன் சரயுமாநதியைத் தரிசிப்பனேற் சகலபாவங்களினின்று நீங்குவன். புனர்பூசநாளி லேகாதசியி லம்மாநதியினீராடி,தீர்த்தசிராத்தஞ்செய்து தருப்பணஞ்செய்வனே லவன்மரபினோ ருத்தமவுலகைச் சார்வர். அச்சரயுதீரத்தில் இராமப்பிரீதியாக வேதியருக்குச் சுவர்ணதானஞ்செய்வனே லவன் குபேரனெனவாழ்வன். பூமுதலியவைக ளல்குவனேற் பூபதியாய்ப்பிறந்து வாழ்வன். உபநயனஞ்செய்விப்பனேல் வருபிறவியில் யாவரும்போற்று மறையவர்மரபிற் றோன்றுவன். ஸ்ரீமத்ராமாயணம் ஸ்ரீமத்பாகவதமுதலிய புஸ்தகதானஞ்செய்வனேல் மகாபண்டிதனாகிப் போதமடைவன். ஓரந்தணற்கொருபொழுதன்னங் கொடுப்பனேற் கங்காதீரத்திலுங் காவேரிதீரத்திலும் ஸகஸ்ரப்பிராமணபோஜனஞ்செய்வித்த புண்ணியமடைவன். கௌரீ! சரயுவே பெண்ணுருவத்தோடு தசரதசக்கரவர்த்தியார்க்குக் கட்புலனாகித் தன துற்பத்தியையுரைத்திருக்கின்றனள். அதைச்செப்புகின்றனென் கேட்பாயாக. சிருஷ்டி ஸ்திதி சங்காரமென்ற முத்தொழிலை லீலையாய்க்கொண்ட பரமன் உலகுய்வான் இராமாவதாரஞ்செய்து வளர்ந்து, வேதமும்வேதபா

ரகரும் வானவருந் தலையெடுக்கத்தலையெடுத்து, செங்கீரையாடி, சப்பாணி கொட்டி,முலை தோன்றாச் சிறுமியர்பொய்த லிழைத்தசிற்றிலழித்துச் சிறுபறைகொட்டிச் சிறுதேருருட்டித் தம்பியருடன் விளையாட்டயருங்காலை யானிமாதத்திற் பூர்ணசந்திரநாளிற் றசரதசக்கரவர்த்தியார் சரயுமாநதியைச்சார்ந்து புனலாடிச் செய்கடன்களை முடித்துக்கொண்டிருப்ப, இராமபிரானஃதறிந்து நந்தாதைபாற் சேருவோமென்று விருஷஸ்கந்தனென்றதோழன்றோளிலெழுந்தருளிப் பரிஜனங்கள்சூழச் சென்றணைதலுஞ்சக்கரவர்த்தியாரெதிரோடிவந்து கட்டியணைத் துச்சிமோந்து குழந்தாய்! சரயுமாநதிக்குத் தண்டஞ் சமர்ப்பி, மக்கட்பொருளை நல்குவளென்றனர். இரகுபுங்கவர் தாதைசொற்கொண்டு தாழ்தலு மச்சரயு முண்டகமேமுகமா, குவளையேகண்ணு, குமுதமேவாயா, வள்ளையேகாதா, சைவலமே கூந்தலா, புளினமே முலையா, சங்குடையலையே சங்கலம்புகையா, கொடியேயிடையா, காலேகாலா, நுரையேவெண்கலையா, பல்வகைமலரே மேகலையாக்கொண்டு திவ்வியரூபத்தோடு கலகலென்றுசிலம்புசிலம்பவந்து தாரகவாச்சியரையெடுத்துப் பான்முலைபெருக மார்பிலணைத்துமுத்தமிட்டுத்திருத்தோளிலோ ராரவாரஞ்சாத்திக் களிப்பெய்தித் தன்னைவணங்கிநின்ற புரவலரைக்கண்ணுற்று மன்னர்மன்ன! ஐயனிராமனை நீர்பெற்ற பொருளென்று கொள்ளற்க, பிரமனையீன்ற பரம்பொருளென்றுகொள்ளுக, தேவரு முனிவருஞ்செய்த மாதவத்தா லும்மிடத்தி லவதரித்திருக்கின்றது, உம்மைநிகர்வாருலகில் யாவரொன்றலுஞ் சக்கரவர்த்தியார் அம்மாதைப்பார்த்து அம்மையீர்! நீரெவணின் றெப்பொழுது யாராலிப்புவியில்வந்தீர் மொழிந்தருளுகவெனலுஞ் சரயு சக்கரவர்த்தியாரே! கேளும். முக்தியளிக்குமுகுந்தனுடைய வுந்தியினின்றுங் கமலாசனன்றோன்றி யாயிரந்தேவ யாண்டுதவஞ்செய்தனன். வேதவேத்தியனை ஸ்ரீமந்நாராயணனெழுந்தருளி மாதவம்புரிந்தமகனைப்புல்லிக்களியாலானந்தக்கண்ணீர்விடுத்து, இருக்கையையும் படைப்புத்தொழிலையு மருளிப்போதலும், சதுர்முக னவ்வானந்த நீரைத் தனது கரங்களிலேற்று மனத்தாற் சரஸொன்றியற்றிச் சலிலத்தையதனில்விடுத்தச்சுதனருளியவாறுதொழிலை மேற்கொண்டிருந்தனன். மனுவின்மகனு நினதுகுல மூலபுருஷனுமான இட்சுவாகு செங்கோல்செலுத்திவருங்காலைதேசிகராகிய பகவான் வசிட்டபகவானை வணங்கி அடிகள்! இப்பதிக்கணித்தா யோர் மாநதிபெருகிச்செல்ல விரும்புகின்றனெனென்றனன். அப்பண்ணவர் நன்றென்றுவந்து சத்தியலோகஞ்சார்ந்து தாதையையர்ச்சித்து நிகழ்ந்ததையுணர்த்தலும், பூவிலோன்புதல்வரைநோக்கா,மைந்த! பகவானது நேத்திரத்தினின்றும் பெருகிய ஆனந்தக்கண்ணீரை மானஸஸரசில் விடுத்திருக்கின்றனென். அதைக்கொண்டேகெனவருளினன்.அவ்வருள்பெற்ற அருந்ததி கணவருவப்புற்றுப்போந்து மானஸஸரசுக் காவலனை புஜகேசியென்பவனைத்துதித்துச் சரோருக னறைந்தவாற்றையறைந்தகன்றனர். புஜகேசியா லேகென் றேவப்பட்ட நான் சச்சிதானந்தசொ

ரூபமான ஸ்ரீராமபிரானுனைச்சேவிக்கலாம், அவர்திருமேனியைப்பரிசிக்க லாமென்றுவந்து வசிட்டபகவான் பின்னேபோந்தனென். ஸ்ரீசர்வேசுரன துதிருநயனங்களினின்றுந்தோன்றி,மானஸஸரசிற்றங்கிப் பகவான்வசிட்டமாமுனிவரா ஸ்ரீராமசந்திரனைச் சேவிக்கலாமென்று நான்வந்தமையாற் சரயுவென்றும், வசிட்டையென்றும், இராமகங்கையென்று மென்னைமுநிஞர்சொல்லுவர். குருதிகொப்புளிக்கும் வேலுடைமன்னர்மன்ன! நானெடு நாளாய் இராமபத்திரனைத் தரிசிக்கவருத்தியுற்றவளாகலா லிப்பெண்ணுருக்கொண்டுவந்தனெனென்றுரைத்து, இக்ஷ்வாகுகுலதீபத்தைத்தசரதர் தோளில்விடுத்துச்சலரூபமானாள். வாள்விழி! பின்னர்ச்சக்கரவர்த்தியாரக மகிழ்ந்துகோயிலெய்தினர்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளேசரணம்.

---

## நான்காமத்தியாயம்.

உடுப்பூத்த பிறையெனத் திலசமொளிர் நுதல்விளக்கே! வானதிபெருகவும், வானுளோர் நாளும்விரும்பியாடுஞ் சரயுமாநதியினு ளெண்ணிலாப் புண்ணியதீர்த்தங்களுண்டு. அவைகளைப் பகருகின்றனென்கேள், சகஸ்திர தாரையென்ற தீர்த்தத்தினின்றுங் குணதிசையில் அறுநூற்றுமுப்பத்தாறு வில்லளவகன்று, சுவர்க்கத்துவாரமென்றோர் தீர்த்தமிருக்கின்றது. அதை நேருமுத்தமதீர்த்த மெங்குமில்லை. மகாபாபியாயினுந் தன்னிற்புனலாடுவனே லவனைச சுவர்க்கத்திற் குடியேற்றுவிக்கும் பெற்றியால்,அதுசுவர்க்கத்துவாரமெனப்பெயர்பெறும். திரிலோகத்திலுமுள்ள சகலதீர்த்தங்களுநங்கையொன்ன நாளும் வைகறைவந்து சுவர்க்கவாயிலிற் றீர்த்தமாடிப்போதலினத்தீர்த்தங்களெல்லாந் தம்மிடத்து ஸ்நானந்தானஞ் செய்வோர்களைப் பாவங்களினின்றுநீக்கிப் புனிதமாய்ப்பொலிகின்றன. அன்னவூர்திமுதலியதேவரெல்லாருங் கணப்பொழுதும் விலகாது தாரகத்தை யுச்சரித்துக் கொண்டு, துறக்க வாயிலிலுறையாநின்றனர். அத்துவாரத்தி லொருவிநாடிபுரியுமத்தியயனந் தியானம் வேள்வி தவம் யோகமுதலியவைகளுக்கு மற்றக்ஷேத்திரத்திற் கருப்பவாசஞ்செய் தியற்றினுமெய்தும் பலஞ் சாருமாகலின் சப்தருஷிகளோடு மாமுனிவர்களும், அந்தணர்களு மற்றவர்களுந் தத்தமக்குரிய கன்மங்களை யாங்குவீழ்ந்துபுரிகின்றனர். சந்திரனனவன் அயோத்தியின் மகிமையையறிந்து விரதத்தோடுவந் திராமகங்கையின் மஞ்சனமாடி விமலையை வலம்வந்து சேவித்து, சுவர்க்கத்துவாரம் வந்து பகவானைத்தியானித்துத் தவம்புரிய எம்பெருமானெதிர்தோன்றலும், உடுபதி யந்நாதனைவணங்கி யஞ்சலிசெய்துநின்று சர்வலோக சரண்ணிய! என்பொருட்டுக் கருணையாலெழுந்தருளியபடியாற் சந்திர ஹரியென்று நீ திருநாமம்பெற் றிவணுறைந்து நின்னைச் சேவிப்போர்கருத்து முற்றக் காமுறுமவற்றைத் தந்தருளவேண்டுமென்று பிரார்த்தித் தச்சுதப்

பிரானை யவட் பிரதிஷ்டைசெய்து பூசித்தேகினன். அதன்பின் யமன்வந்து சாகேதத்தைச்சேவித்துச் சுவர்க்கத்துவாரம்வந்து, தீர்த்தமகிமையைக் கண்டு சின்னுட்டங்கிநாராயணனைத் தியானித்தனன். அப்பகவானெதிர் தோன்றலும், அச்சமன்வணங்கி யானந்தங்கொண்டு பச்சைமலைபோன் மேனி யச்சுதா! அமரரேறே!போற்றி; திலமுந் தைலமும்போலவு மலருமணமும்போலவும் பொன்னு மொளியும் போலவுஞ் சேதனு சேதனங்களோடு முறைகின்றவாசுதேவா! போற்றி; பொன்னி னின்றும் பிரித்த பொற் கலனைப்போலப் பிரம ருத்திரேந்திராதியரை நின்னுள்ளே தோற்றுவித்து ஆட்கொள்ளு முகுந்தா!போற்றி; யாவரும் யாவையுமுய்யக் கங்கையைக்கான்ற சரணத்தையனே! போற்றி; பிரமனையுந்திய வுந்திப் பரமனே!போற்றி; திருமகளாருறையு மார்பா! போற்றி; கருணையாறே மூருங் கண்ணு! போற்றியெனவழுத்தி யானந்தங்கொண்டு நடனஞ்செய்தனன். அப்போ தடியார்க்கெளியனுகிய பகவான், அவனைநோக்கி நின் கருத்தென்னென்றலுங் கூற்றுவன் றண்டமிட்டுக் கைகுவித்துநின்று சுவாமி! வேண்டுவ தொன்றுமில்லேன். நினதுசீர்பாதத்தை மறவாதபேற்றைத்தந்தருளவேண்டும். அன்றியுந் தரும ஹரியென்றுபெயர்கொண் டிவணிருந்து நின்னைச் சேவிப்போர்களுக்கு நல்லுல கருளவேண்டுமென்று பிரார்த்தித்துச் சுருதிமூர்த்தியைப் பிரதிட்டைசெய் தாராதித்தேகினன். ஆடிமாத சுக்கிலபட்ச வேகாதசியிற்றுறக்க வாயிலிற் புனலாடித் தரும ஹரியை ஒருவன்சேவிப்பனேற் சண்டனுல் வாதைபடான். பார்வதீ! சுவர்க்கத்துவாரத்தி லிறக்கு மீயெறும்பாதிகளெல்லாம் ஸ்ரீவைகுண்டமெய்தும், தீவினையாற் பிணிவந்து நெருக்கப் பெண்டிர் பிள்ளை சுற்றத்தார் ஓவென்று கதற, உட்குழிந்த கண்ணையும், பற்றேன்றத் திறந்தவாயையுங் காண்போரஞ்ச வினிப்பிறக்க வீட்டிலிறப்பதினு மெத்தேயத்திற்றேன்றியிருந்தாலும்வந்து சுவர்க்கத்துவாரத்தி லுயிர்விடுவனேல் ஸ்ரீவாசுதேவன் றிருவடிநிழலி லமர்வன். அத்துறக்கவாயிலின் மரிப்பதற் குத்திராயணந் தட்சிணுயனமென்ற காலபேதம்வேண்டா. பரமபதமடையு மவனே யதனில் மெய்விடுவானுவன். மேருகிரிபோன்ற பாவ மிகுதியுடையானேனுஞ் சுவர்க்கத்துவாரத்தில் க்ஷவரஞ்செய்துகொண்டு தீர்த்தமாடித் தென்புலக்கடனுற்றித் தானதருமங்களைச் செய்து சந்திரஹரியையுந் தருமஹரியையு மென்னையுஞ்சேவிப்பனேற் புண்ணியனுகி மகங்கள்புரிந்தவருறுமுலகெய்துவனென்றேதினர்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளே சரணம்.

---

## ஐந்தாமத்தியாயம்.

இமஞ்சூழ்ந்த பவளமலையொத்த வண்ணலை உமாதேவி பணிந்து தேவதேவரீர் சுவர்க்கத் துவாரத்திலிருக்க நிமித்தம்யாது? புகன்றருளுக

வெனக் கண்ணுதல் ஹரீகதாகர்நசிலையைக் கண்ணுற்று, வில்லனையபுருவ மின்கொடியே! இரகுநாதர் வைகுண்டத்துக் கெழுந்தருளியபோது அயோத்திவாண ரெல்லாருக்குமோட்சமருளிக் குசலவதியென்றோர்பதி நிர்மாணஞ்செய் ததனிற்புதல்வனாகிய குசனுக்கு முடிசூட்டி யருளிப்போயினர். குசனரசுசெய்யுங்காலை தெய்வத்தன்மைவாய்ந்த அயோத்திமாநகர மங்கையுருக்கொண் டிரவிற் குசலவதிசென் றரண்மனையிற் குசபூபன்கண் வளரு மாடமணுகி நிற்றலும், நம்மையாளுடையநாயகிமைந்த னயோத்தியாளை நோக்குறு மண்ணுலகாளோ? விண்ணுலகாளோ எழுதரிய மேனியாளே! நீயார்? இவண்வந்த பரிசென்ன, கடிதிற் பகருதி; யானோ இரகு குலத்திற்றோன்றினவன், பகைவருக்கன்றி பரத்தையருக்கு மார்புகொடேனென்றனன். அயோத்தியாளரசன் றன்மைகண்டு மகிழ்ந்து, அயிலுடை மன்னர் மன்ன! நான் வேறொருத்தியுமல்லேன். என்பெயர் அயோத்தி, நின்பாலோர் குறையிரப்பவந்தனென். தாதாதாதையான நின்றந்தையார் நின்னையிப்பதியிலிருத்தி யென்னிடத்திலிருந்த சராசரங்களுக்கு வீடருளிப் பரமபதமேவினர். அந்நாண்முதலென்னையாளு மரசன்முத லொருவருமின்றிப்பூணிழந்தபூவையெனப்பொலிவிழந்திருக்கின்றனென். மனுமுதலான வெண்ணிறந்த விறையவர்களின்புற்று வீற்றிருக்க நிகரில்லா நகராயிருந்தநான் மாக்கள் வசிக்கும்வனமாயிருக்கின்றனென். மனுவினால் ஸ்ரீவைகுண்டத்தினின்றுங் கொண்டுவரப்பட்டேன். அவர் மரபிலுதித்த நீயிருக்க நான்றுயருறத்தகுமே? ஐய! என்னிடத்துவந்து நின்னையரென வுலகாளுதியென்றனள். குசபூப னதைக்கேட்டு, தேவீ! நின்னிடத்துத் தோன்றி வசித்தபுண்ணியத்தாற் சேதனாசேதனங்களெல்லா முத்தியடைந்தன. உலகாதருடைய திருவுளத்துக்குமாறாய் நானிப்பதியை நீங்கிவருவது முறையன்றெனலும், அயோத்தியெனு நங்கை, வேந்தே! நீயிங்ஙனுரைப்ப தறமன்று. நினதாசிரியர் அமைச்சர்முதலியவர்களோ டாராய்ந்திசைந்தவாறு புரிதியென்றகன்றனள். கங்குல்கழிந்தபின் குசபார்த்திபன் மந்திரிகளிடத்தி லாலோசித்துக் குசலவதியாம்புரியை மறையோர்கட்குத் தானங்கொடுத் தயோத்திநண்ணிவாழ்ந்தனன். நேரிழாய்! ஓர்நாள் குசன் நட்பர்களோடுநாவாயேறிச் சரயுமாநதியில்விளையாடுங்காலை கையிலணிந்திருந்தகங்கணங்கழன்று நதியில்வீழ்ந்தது. குமுதனென்றசர்ப்பராஜனு மவன்றங்கை குமுதவதியென்பவளு நெடுநாளாய் வசிட்டையிற் சஞ்சரித்துக் கொண் டிருந்தார்கள். அக்குமுதவதி நீர்விளையாடலாடு மரசனைக்கண்டு மோகங்கொண்டு, அந்தோ சிங்கவேறுபோன்ற விவ்வாண்டகை தோளைத் தழுவப்பெறுவனே? என்செய்கேனென்று நின்றுகொண்டிருந்து வீழ்ந்த வக்கங்கணத்தைக் கொண்டகன்றனள். குசன் தீரஞ்சார்ந்து விஜய கங்கணத்தைக் காணாதயர்ந்தனன். சங்கரீ! அகத்தியமுனிவரா விராமபிரானுக்குக் கொடுக்கப்பட்டு, சுவாமியினிடத்தினின் றாசீர்வாதத்துடன் பெற்ற கங்கணமதாகலின் றராபதி மிகத்துக்கித்துக் கார்முகம்வாங்கி, நாணேற்

றி,உருமெனடங்காரஞ்செய்து, பொறியைக்காலுகின்ற வெரிவாளியை வாங்கினன்.சரயு அதைக்கண்டுவெருஉக்கொண்டோடிவந்து, இறையே! என்னை முனியாதை. என்னிடத்தில் வசிக்குங்குமுதவதியென்கிற நாககன்னிகைகினது கங்கணத்தைக்கரம்படுத்திக்கொண் டிருக்கின்றனளென்றனள். குச னந்நாக கன்னிகையைமுனிந்து,கலுழபாணத்தை நாணிற்பூட்டலும், சர்ப்பராசன் சகோதரியோடுசென்று குசனை வந்தனஞ்செய்து, கங்கணத்தைக்கொடுத்து, நாதா! எனதிளையாளிழைத்த பிழையைப் பொறுத்தருளுகவென்று தாழ்ந்து பிரார்த்தித்தனன். சாம்பவீ! குமுத னெனதுபத்தருட் சிறந்தவனல்லனோ? அவனுறு துயரை நீக்குவான், நானவட்சென்றனன் குச னென்னைப் பிரதட்சிணஞ்செய்து தண்டமிட்டுத் துதித்துத் தேவரீரெழுந்தருளிய விதமென்ன? மொழிந்தருளுகவென்று பிரார்த்தித்தனன். நானவனைப்பார்த்து, வேந்தே! எனதடியனாகிய குமுதனைக்காயாதி. அவன்றங்கை குமுதவதியை நீ மணந்து நீடூழிகாலம் வாழுதி, வேண்டியவரன்களைப் பெறுதியென்றனென். குசனுவந் தென்னைநோக்கித் தேவரீர் பணித்தவாறு செய்கின்றனென். நாகத்தின்பொருட் டெனக்கெதிர்தோன்றியபடியால் நாகேசுவரனென்று திருநாமங்கொண் டிச்சுவர்க்கத் துவாரத்திலெழுந்தருளி யிருக்கவேண்டுமென்று பிரார்த்தித் தென்னைப் பிரதிஷ்டைசெய் தருச்சித்து, யாத்திரை வருவோர்க ளென்னைச் சேவிக்கவேண்டுமென்று மொழிந்து குமுதவதியுடன் கோயிலெய்தினன். நாகராஜனும் என்னையருச்சித்து மனைக்கணேகினன். அன்றுமுத லிங்கிருக்கின்றனென். யாத்திரைசெய்வோ ரென்னை யருச்சிக்காவிடின் முழுப்பேறடையாரென்றோதி, அயோத்தியா பீடத்தின்மகிமையைச் செப்புவான் றொடங்கினர்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளேசரணம்.

---

## ஆறுமத்தியாயம்.

ஆமிழையு மெள்ளையு மெள்ளுமூக்குடையமாதே! சுவர்க்கத்துவாரத்துக்குத் தெனாதுதிசையில் அயோத்தியா பீடமென்றொரு ஸ்தானம் ஒரு கோசவிஸ்தாரம் ரமணீயமாயிருக்கின்றது. அதனுப்ப னாயிரம்ஸ்தம்பங்களோடு நவரத்தினகசிதமாயொளிரு மண்டபத்தி லரியாதனத்தி லிராமசந்திரர்வீற்றிருந்து, பகவான் வசிட்டாதிமகருஷிகளோடும், சுமந்திராதிமந்திரியரோடுந் திரிலோகத்தையுமாண் டருளினராகலின்,யாத்திரைசெய்வோன் யாவற்றினும் புனிதமுள்ளவந்நிலத்தைத்தரிசித்துப் பிரதட்சிணஞ்செய்துதண்டமிட் டாங்கிராகவபிரானைப் பயபத்தியோடு பூசிக்கவேண்டும். அப்பீடத்துக்கு வலதுபக்கத்திற் புண்ணியத்தையுருக்கிச் சிறைப்படுத்தினாற்போ லிராமபத்திரருடைய தந்ததாவளகுண்ட மொன்றிருக்கின்றது. அதனிற் சானகிகாந்தர் காலையிற்றிருத்தம்பியருட னாளும்வந்து தந்தசுத்திசெய்தருளினராகலி னதனள வுத்தமதீர்த்த மெங்குமில்லை, அதன் மாண்

பைச்செப்புகின்றனென் கேள். அவந்திகாபுரியிற் கௌண்டின்னியகோத்திரத்திற்றோன்றியவோரந்தணன் யாத்திரைவந்துதந்ததாவளகுண்டத்தின் கொழுங்கரையிற்றனதாசனமாகிய மான்றோல்முதலியவைகளைவைத்துவிட்டத்தடாகத்தின்மூழ்கினன். அப்போது வாயுவினாலச்சருமமத்தோயத்திற்றோய்ந்தது. தோயவே யத்தோலுடைய வுடலுடைச் சீவன் தேவசரீரம் பெற்றுவிமானமேறி யப்ஸரசுக்கள் சாமரையிரட்டவும், ஆலவட்டம் வீசவுங் கிளர்ந்தனனென்று மொழிந்தனர். அவ்வேலையம்பாள் அரவணியணியுமரனைநோக்கா, நாதா! மறையவன் மானுரி தந்ததாவளதீர்த்தத்தில்விழவுமப்புருடன் தோன்றியவாறெங்ஙன்? புகன்றருளுகவென்று தாழ்ந்தனள். அமலர்வார்முலை! கேட்டி; விமானமேறிச்சென்ற வவன் புஷ்கரக்ஷேத்திரத்தில் வைசியவருணத்திற்றோன்றிச் செல்வமிகுதியாற் செருக்கடைந்து நன்றீது தீதென் றோராதழியும் புலனுண்ணும் போகத்தையேபெருக்கி விலைமகளுக்கு விலைப்பட்டொழுகுங்காலை யோர்நா ளவ்வேசியினுடைய பூந்தோட்டத்து மல்லிகை, முல்லை, ஜாதிமுதலாய பூஞ்செடிகளுக்கு நீர் பாய்ச்சினன். அச்சலில மவன்முளைத்திருந்த திருத்துழாய் மூலத்திலுஞ் சார்ந்தது, நம்மாதிபகவனுக்குப் பிரியமான துளவத்துக்குநீர்விடவேண்டுமென் றவ னினையாவிடினுங் கையுதகம்பாய்ந்த வறப்பயனான் மறுபிறவியி விழிபிறப்பிற் பிறவாது பற்றற்றவரும் விழையு முழையாயுதித்தனன் அக்கலையின் சருமம் பிராமணோத்தமனுக் காசனமான புண்ணியத்தால் ஸ்ரீசாகேதம்வந்து தந்ததாவளகுண்டத்தில் மூழ்கியது. அதனாலச்சீவன் திவ்வியசரீரமடைந்து வானவரெதிர்கொள்ள விண்ணுலகெய்தினன். சித்திரைமாதஞ் சுக்கிலபட்ச நவமிதிதியி லந்தத் தந்ததாவளதடாகத்தி னீராடன்முதலிய கருமங்களைப்புரியி னென் றநந்தமாய் வளருமென்று கிளத்தினர். அவ்வேலை அம்பிகை நாயகனைநோக்கி, தேவா! இவ்வருஞ்செய லெங்குண்டென்று குழையசைய, அளகத்தளியெழுந் திசைபாடச்சிரக்கம்பனஞ்செய்து, மகிழ்ந்துஅயோத்தியி லநுமனாதிவானரர்களுடைய இருக்கை இருக்கின்றனவென்றோதுகின்றனரே. அந்தஸ்தானங்களெல்லாவற்றையும் புகலவேண்டுமெனலும், சந்திரசேகரர்கண்ணுறுத்தேவீ! கேட்பாய். இராமதூதனும், சீதாசோகவிநாசனனும், சோகவனநாசனனும், அட்சனையனைத்தவனும், இலங்காபுரியை யெரிவாய்மடுத்தவனுமான வாதாத்துமசன்ஸ்ரீ சாகேதத்தைக் காத்துக்கொண்டு கோட்டையின் கீழ்வாயிலிலிருக்கின்றனன். ஆங்கு அனுமத்குண்டமென் றோர் தீர்த்தமிருக்கின்றது. அவ்வநுமானுக் கணித்திற் கவியிறையான சுக்கிரீவன் அங்கதன் இருவருடைய ஸ்தானமிருக்கின்றன. தெற்கு வாயிலில் நளன், நீலன், கவாட்சன், கந்தமாதனன்முதலிய சிலரிருக்கை யிருக்கின்றன. மேற்குவாயிலில் ரிஷபன், பனசன், சதவலிமுதலியோ ருறைவிடமிருக்கின்றன. துர்க்கேசுவரனென்ற நாமத்துடன் நானு மவணிருக்கின்றனென். வடக்குவாய்தலில் மயிந்தன், துவிந்தன்முதலாய வானரரும், பாகவத சிரோரத்தினமான

விபீஷணுழ்வானும், நமதுபுதல்வனுன ஐங்கரனுமிருக்கின்றனர். அவ்விபீஷணனன்மனையாளாகிய சரமாவென்பவள் அவன்வலதுபுறத்திலயோத்தியாளுக்குச் செவிலித்தாய்போலக் காத்துக்கொண்டிருக்கின்றனள். ஆங்கோர் புறத்திற் கஜேந்திர னிமைக்காது விமலையைக் காத்துக்கொண் டிருக்கின்றனன். கஜேந்திரகுண்டமென வாவியொன்றுண்டு. மற்ற சாம்புவன் முதலாயவீரர்கடானமதன்புறங்களிலிருக்கின்றன. பொற்றொடீ!மங்களவாரத்தி லவ்வநுமானைச்சேவிப்பவ னிஷ்டங்களையடைவன். சாகேதஞ்சாருவோன் சரயுமாநதியினீராடி, அஞ்சனைசிங்கத்தையர்ச்சித் தருள்பெற்று, முடியிற்குவித்த கையனுகி, ஸ்ரீராமராமராமாவென்னுநாவினனுகிமாசிலா மனத்தினனுகிப் பதியினுட்புகுந்து இரத்தினமண்டபஞ் சாரவேண்டும்.

ஸ்ரீராமதாசர்கள்திருவடிகளேசரணம்.

---

## ஏழாமத்தியாயம்.

வள்ளை, கத்திரிகை, மயிர் வினைக்கருவியெனப் பொலிசாதுடைக் காதலீ! இரத்தினமண்டபஞ்சேர்ந்து தண்டமிட்டுக் கோசலை மதலையை, செங்கட்கருமுகிலை, கருமணியை, அற்றவர்கட் கருமருந்தை, என்னுடைய வின்னமுதை, இராகவபிரானைச் சனககுல வமுதோடு பூசித்துக் கவிகைகவிக்கும் பரதாழ்வானையும், கவரிவீசு மிளையவரிருவரையும்,வேதங்களுந் தாங்காதயரு மடியிணையைத்தாங்கு மஞ்சனைமஞ்சனையுஞ் சேவிக்கவேண்டும். பின்ன ரச்சந்நிதியி லிருபுடையிருக்கும் பகவான்வசிட்ட வாமதேவஜாபாலி காசிப மார்க்கண்டேயர்முதலாய மகருஷிகளையும் திருஷ்டிசயந்தன், விசயன், சுராஷ்டரன், ராஷ்டிரவர்த்தகன், அசோகன், தர்மபாலன், சுமந்திரன்முதலாய வமைச்சர்களையும் வணங்கவேண்டும், அஜசங்கரோந்திராதி தேவரெல்லாரு மிராமபத்திரனைச் சேவித்துக்கொண்டாங்குறைகின்றனராகலின் அவர்களையுந் தியானிக்கவேண்டும், அந்த ரத்தினமண்டபத்துக் குதிசியிற் கனகமண்டபமிருக்கின்றது. அதன்கணனுகிக் கருணுசொரூபியும், பிரமனன்னையுமான வைதேகியானை வழிபாடுற்றுச் சேவிக்கவேண்டும். பின்னர் உரோமசர்மாவென்ற ருஷியினுடைய விருக்கையினின் றைஞ்ஞூறு வில்லளவுவரையிலுங் கணேசஸ்தானத்தினின் றுயிரத்தெட்டு வில்லளவுவரையிலும் வசிட்டஸ்தானத்தினின்று நூறுவில்லளவுவரையிலுந் தாரகவாச்சியருடைய ஜனனஸ்தானமென்று சதுர்முகனுற் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆங்கேகி யங்கம் படியிற்படியப் பணிந்து,அஷ்டகோணம்ஸ்தாபித்து,இராமஷடட்சரத்தை யுச்சரித்து,எழுதாக்கிளவிக்கிங்கிணியொளிரு மாந்தளிரனைய சரணங்களும்,கஞ்சமனைய கரங்களும், கருணைக்கடல்பெருகுங் கண்களும், சந்திரவதனமும், சுந்தரத்தோள்களும் விளங்கக் கருளுயிற்றின் குழவியெனத் திகழுந் திருமேனியுடையவராய்த் தாரகவாச்சியப்பரமனைக் கோசலைக்குறங்கின்மீதாவது, மாணிக்

கத்தொட்டிலின்மீதாவது எழுந்தருளியிருப்பதாகத்தியானித்தருச்சிக்கவேண்டும். ஜனனபூமியைத்தரிசித்தவளவி லவனவன்கொண்டபத்தியினளவாயுளமுருகிப்புளகம்போர்த்து நடனம்புரிவன். ஜனன ஸ்தலத்தைச் சேவித்தவன் பின்பு ஜனனஸ்தலம்பெறான். இராமனென்ற திருநாமங்கொண்டபொருமானுடைய வடியாருக்கு மவரடியாருக்கு மவரடியாருக்கு மடியாரொப்பிலாப்பேறெய்துவரொன்னி னந்நாதரை ஜனனபூமியிற் சேவித்தவனுறும்பதத்தைக்கருதுவதெளிதே. சித்திரைமாதஞ் சுக்கிலபட்சநவமியில் விரதமிருந்துஜனனஸ்தானத்தைச் சேவிப்பது மிகநன்று. ஜமதங்கிமைந்தனாகியபரசுராமன் அரசர்களைக்கொன்ற பாபத்தையும், பலதேவன் சூதனைக்கொன்ற பாவத்தையும் ஜனனஸ்தானத்தைச்சேவித்தே நிவர்த்திகொண்டனர். சித்திரைமாதத்திற் புனர்பூசநாளில் சுக்கிலபட்சத்தி னவமிதிதியிலென்னையாளுடைய வண்ணல், ஆதி, அநாதி, ஆதிமத்தியாந்தரகிதர், சர்வலோக சரண்ணியர், சர்வாந்தர்யாமி திருவவதாரஞ் செய்தனராகலினத்தினமெனச் சுகிருத நாள் வேறொன்றில்லையென் றோதினர். உம்பருய்ய ஆறுமுகனைத் தந்தபிராட்டி சிவனைத்தாழ்ந்து நவமிதினத்தில் விரதமிருக்க வேண்டுமென்றருளினீரே. அவ்விரத மெவ்வாறு செய்யவேண்டியது புகன்றருளுகவெனலும், அரவணியு மற்புதர்நோக்குற்றுக் கேண்மோ. ஒருவன் ஸ்ரீராம நவமியிற் காலையிலெழுந்து எம்போலியோருக்குந் தாரகமானநாமத்தையுச்சரித்துப் புண்ணியதீர்த்தமாடிப் புனிதனாகி யுபவாசமிருந் திராமபிரானைச்சேவித்துத் தாசர்களோடுகூடித் தோல்,தொளை, நரம்பு, கஞ்சம், மிடறு ஆகிய வைங்கருவிகளைமுழக்கி, இனிமையாய் நாமகீர்த்தனஞ்செய்து, தசமியி லந்தணர்களுக்கமுதினுமினியவன்னமாடைமுதலியவைக ளிராமார்ப்பணமாக நல்கி, மண்ணை மண்ணாகவும், பெண்ணைப் பேயாகவும், பொன்னை யோடாகவும், இரத்தினத்தைக் கல்லாகவும்,குடும்பவாழ்க்கையைத் துக்கசாகரமாகவுங்கொண்டறுத்து, அறியாதார்பித்தரெனவும், அறிந்தவர்சித்தரெனவுமொழுகு மிராமதாசர்கட் கமுதுசெய்வித்து மிச்சிலையுண்ணவேண்டும். பூண்முலை! ஸ்ரீராமநவமியிற்றினையளவுதருமஞ் செய்வனேலது பொன்மலை சிறிதெனவளரும். அத்தினத்திற்பெறுவாருளராயின் அருமையான உயிரையு மிராமார்ப்பணஞ்செய்யலாம். நவமியிற்றேவரெல்லாருஞ் சாகேதம்வந்து சரயுவினீராடிச் சுவாமியினது திருவவதார இடனைச்சேவித்துத் தமதுலகுபுகுந்து நவமியுற்சவஞ்செய்கின்றனர். புனர்பூசநாளி னவமியில் விரதம்பூண்டு தாரகவாச்சியருக் குற்சவஞ் செய்விப்பனே லவனுமன்றி, அவன் சுற்றத்தாரு நண்பரு மிணையில்லாப் பேறெய்துவர்.

ஸ்ரீராமதாசர்கள்திருவடிகளேசரணம்.

## எட்டாமத்தியாயம்.

பம்பூத்த கம்மென மலராற் பொலிந் தளிமுர லளகக்கொடியே! இதிகாச சம்பந்தமான வோர்கதை சொல்லுகின்றனன் கேட்பாயாக. மருகாந்தாரமென்னுந்தேயத்தில், லும்பகனென்ற வாணிபனும், சங்குவென்ற சேணியனும், துண்டகனென்ற கண்ணுளனும், ஐந்துகாவந்துவென்ற வலையனும், தர்மகாவந்துவென்ற குயவனு மைந்து கிராமங்களிலிருந்தனர். அவ்வாணிப னெண்ணெயில் வஞ்சஞ்செய்து விற்க, அதனாற் சனங்கள் பிணியடைந் தயர்ந்தனர். தந்துவாய னவன்பின்வர் தவனுடைய வில்லாளைத் தனக்குரியளாக்கிக் கொண்டு குற்றம் விளைத்தனன். நாடகன் வில்லம்பேந்தி யாறலைத் தக்காருகனே டுறைந்தனன். வலைஞனுங்குலாலனு மெல்லிற் றமது தொழில் புரிவோர்போ னடித்துக்காட்டி, ஆதித்தன் குடகடல் குளித்தபி னெழுந்து களவுத்தொழில்புரிந்தக்கதிரவன் குணகடலி லெழவே சாதித்தொழில் புரிவாரெனமேவி நாளு நடந்து வந்தனர். அகத்துறையு மைவரையொத்து நிலத்துக்குக் கொடுமைபுரியு மக்கிழ்மக்களைப் புரவல னந்நாட்டினின்றும் புறத்தகற்றினன். பஞ்சமா பாதகங்களைப்போல்வா ரைவரும் அடவியடைந்து சிநேகிதர்களாகித் தமது காலின்முள்ளேறினு லுறுந்துன்பையறிந்துஞ் சீவ இமிசை செய்யாதொழியாது, படைகளைக்கொண் டங்கநடுங்க வுயிர்ப்புனல் வார வுயிர் சோரச்சீவன்களைக்கொன்று, பூமியிலோடதிக ளநேகமிருக்க மலத்தையேநாடியுண்ணும் பன்றியைப்போலப் புலாலையுண்டு மினியகுழல்களிருக்க வவற்றைநோக்காது வேப்பந்தழையையேயருந்து மொட்டகம்போற் கட்பருகியு மிருட்டறையில் வேற்றுப்பிணத்தைத் தழுவுகிறதற்குநேரானதென்றோராது, வேசிகளையணைந்தும்,களவுசெய்தும், பாவங்களையே பெருக்கிவருங்காலை, ஸ்ரீராம நவமியுற்சவத்துக்கு விமலைசாரப் பலதேயங்களினின்றும் மாந்தர்கள் தொகுதிதொகுதியா யிராமநாம கீர்த்தனபரர்களாய்ச்சென்றனர். அவர்களில் இந்திரப்பிரஸ்தத்தினின்றும் வருஞ்சிலரையத்தூர்த்த ரைவருங்கண்டு வழிபறிக்கலாமென்றெண்ணிக் கூடி நீங்களார்? எங்கிருந்துபோதுகின்றீர். வருமிடம் யாதென்றுவினவலும், அவ்விந்திரப்பிரஸ்தத்தவர் புகலக்கேட்டு, யாங்களு மயோத்திக்குச் செல்லுகின்றனம். துணையின்றி யிவட்டாழ்ந்திருந்தனம். எங்களுக்கு வழித்துணையாயினீர். தாமதியாது செல்வோமென்று புகன்றுசென் றடித்துப்பறிக்க வற்றம்பெறாது, அயோத்தியிற் பெருங்கூட்டங் கூடுமாகலி னாங்கு நிச்சய நமக்குப்பிழைப்புண்டென்று களித்து, யாத்திரைசெல்வோருடனளவளாவி ஸ்ரீஅயோத்தியைச்சார்ந்தனர். சேறலும் அநுமானுடைய வாளை சுமந்தொழுகுஞ்சிலவானரவீரர்கள் தீத்தொழிலாரைக்கண்டுபாவிகாள்! உற்சவஞ்சேவிக்கப்போதுகின்றவர்களை வருத்தவோ? ஈங்குவருகின்றீரென்றுசினந்து மரங்களைப்பிடுங்கி யோச்சிவெருட்டினர். தீவினையோர் பயமுற்றோடலு மவண்வந்த அசிதரென்ற மகருஷி யிடைதடுத்து வானரசிரேஷ்டர்களே!

முனியாதிர். கொடுமைசூழ்வோரைவரும் அயோத்தியைத் தரிசித்துவிட்டார்கள். இனிக் கொடுந்தொழிலே யுன்னவுமாட்டார்கள். நகரினுட்சென்று ஜனனஸ்தானத்தைச் சேவித்தும் புண்ணியர்களாகட்டும். வீரர்களே! மாறுபுரியவேண்டாவென்றோதினர். கவிகள் முனிசொற்கொண்டகறலும் தீயவினையாள ரசிதமாமுனியைத்தொழுது, சுவாமி! பாவபண்டாரம்போன்ற நாங்களுய்யுமா றருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அம்மாமுனி கருணைகொண்டு, ஐவர்களே! சரயுதிரஞ்சார்ந்து சவரஞ்செய்துகொண்டு சுவர்க்கத்துவாரத்திலு நீராடி ஹரிபகவானைச்சேவித்துப்பின்னர்க்கோட்டைவாயில்சார்ந்து அநுமானைப் பூசித் தாணைபெற்று நகருட்புகுந்து விதிப்படி ஜனனஸ்தானத்தைச் சேவியுங்கோள். புன்மைநீங்கிப் புனிதராவீர். என்னுமையால் அயோத்தியாளு நுமக்கெதிர்தோன்றுவளென் றுரைத்தேகினர். கொடுந்தொ ழிலோர் மகிழ்ந்து வசிட்டை நண்ணி முனியறைந்தவாறு புரிந் தநுமானைச்சேவித்துப் புரியினுட் புக்கனர்.

ஸ்ரீராமதாசர்கள்திருவடிகளேசரணம்.

---

## ஒன்பதாமத்தியாயம்.

குவளையுங் குமுதமும் பூத்தகலாமதித் திருமுகத்தன்னமே! அவ்வைவர் புகுதவே, அசிதமுனியருளியவாறு அயோத்தியாள் வேயுறழ்தோளிற் சங்குசக்கரக்குறிபொலிய, விற்போன்ற நுதலிற் பிறையின்மேற் சுவர்ணரேகைபோன்று திருநாமம்விளங்க, ஆடுகின்ற தோகையினு மழகுடையாளாய் நின்று மருகாந்தாரத்தோளை நோக்குற்று நீங்கள் தீவினையினின்று விடுபட்டீர்கள், அஞ்சவேண்டா. சென்று இராமபத்திரனைச் சேவியுங்கோளென்றறைந்து மறைந்தனள். பின் பவர்விதிப்படி சுவாமியைச்சேவித்து முத்திவழிகாட்டு மோராசிரியனை யாசரித்துத்தோளிற் கோதண்டபாணக்குறியணிந் திராகவபிரானதடியார்க்கேயடியோமென்ற மெய்ஞ்ஞானங்கொண்டு, நந்தவனம் வளர்த்தலும், திருமாலைகட்டலும், திருவிளக்கெரிக்கையும், திருவலகுசேர்த்தலும், தொண்டர்க்குத்தொண்டுசெய்தலுமான கைங்கரியபரராயிருந்தனர். சின்னாள்கழிந்து துண்டகன்மரித்தலுந் தேவர்கள் திவ்வியவிமானத்துடன் வந்தனர். யமதூதரும் பாசமுதலிய படைகளுடன் வந்து நாடகியைப் பிடித்தனர். அதுகண்டு காலனையுதைத்த ஐயன்கூறான அஞ்சனைசிங்கம் வெகுண்டு, அந்தகனுட்களைப் பிடித்துக் கசக்கிப்பிழிந்து சிலரை வாலாலிறுக்கிப் பம்பரமெனச்சுழற்றி மரங்களையு மலைகளையுங்கொண்டு புடைத்துப் புண்ணீர்வார வூறுசெய்து விடுத்தனர். பின்பு தேவர்கள் துண்டகனை விமானத்தின்மீதேற்றிச் சாந்தானலோகஞ் சேர்த்தனர். அருவிபோலச் செந்நீர்பெருகச்செய்யவிரவிபோன்றமெய்யினராகிய யமகிங்கரரிருளுலகஞ்சேர்ந் தவனூர்திபோலவே கருமையாய மெய்யையும், படவாமுகாக்கினியென வெரியுங் கண்ணை

யும், செக்கர்வானைநிகர்த்த குஞ்சியையும், முழையிலிரண்டுபிறையைப்பதித்துக் கோடையிடியைக் கட்டிஞற்போ லெயிறுவிளங்கவுரறும் வாயையுங்கொண்டு, சூலமுந் தண்டமும் பிடித்து வீற்றிருந்த மகிடவாகனனை வணங்கி நிகழ்ந்தவாறுரைப் புண்களைக்காட்டி முறையிட்டனர். அவ்வேலை நமனஞ்சிக் கிங்கரரைநோக்கி மூடர்களே! மருகாந்தார தேயத்தோர் மகாபாதகராயினும், ஸ்ரீஅயோத்தியைச்சேவித்தபின் பவரிடதநிற் பாவமேது? வீடுபெறுவதன்றி நம்மாற் பற்றப்பட் டிவ்வுலகு சாருந்தரத்தரோ? அயோத்தியாபுரியினு ணீங்கள்ளேகுந் தரத்தரோ? சிதடர்களே! "இழிந்த பொருள்களை யுடைப்பிற்போடு" என்று நிகழ்ந்துளைவசன முலகிலுண்டு, அவ்வாறுர்கலியில் மற்கடங்களாற் போடப்பட்ட மரங்களு மலைகளுஞ் சேதுவாகிச் சர்வலோக சரண்ணியனுடைய சரணங்க ளடக்கப்பெற்றமையா லச்சேது தன்னைச்சேவிப்பவர்களைப் பிரமகத்திமுதலாய பாதகங்களினின்று நீக்கித் தேவர்தொழுந் தேவராக்கிப் பிரமருத்திரேந்திராதியர் சேவிதமாய்விளங்காநின்றதென்று லப்பரந்தாமன் பிறந்துவளர்ந் தளப்பருங் காலந் திருவோடு வீற்றிருந் தரசாளப்பெற்ற வச்சாகேதத்தைச் சேய்மையிற்கண்டவுடனே சேவித்துக் காலான்மிதிக்க வஞ்சியொதுங்கி வரவேண்டியதைத் தவிர்த் தென்செய்தீர்? நீங்கள்புரியுங் குற்றமென்னையன்றே சாரும். என்செய்கேனென்று வருந்திச் சத்தியைத்தொழுது குற்றநிவர்த்தி செய்து வருவோம்வம்மினென் றப்படர்களுடன் நமசாதிரஞ்சார்ந்து, கருமேதிவாகனத்தினின்று மிறங்கி, அயோத்தியைச்சேவித்துக் கைகூப்பிக் கொண்டுவந்து சரயுவிற் றீர்த்தமாடித் தெய்வத்திருமணணிந் திரா■ நாமஜபஞ்செய்து விமலையைநோக்கி யஞ்சலிசெய்து நின்று, ஸ்ரீவைகுண்டமான அயோத்தியே! ஸ்ரீராமபுரியே! விமலர்கள்விரும்பும் விமலையே! சேவிக்கின்றனென். வேதவேத்தியனுக் கிரம்மியஸ்தானமான நின்னைநமஸ்கரிக்கின்றனென். தேவாமிசமான மனுமுத லரசர்களாண்ட வுன்னைவணங்குகின்றனென். முனிவர்கள் திரிமூர்த்தியுருவயாகத் தியானிக்குநின்னைத்தொழுகின்றனென். விதிசிவேந்திராதியர்க்குஞ் சேவியளாய நின்னடியை முடியிற் சூட்டுகின்றனெனென்று போற்றலும், அயோத்தியாள் மகிழ்ந்தெழுந்தருளித் தருமனே! நின்கருத்தியாது? வேண்டிய வரனைப்பெறுவாயென்றனள், பாசக்கையன்வணங்கித் தாயே! அறிவழிந்தெனது தூதரிழைத்த பிழையைப் பொறுத்தருளலும், இராமகங்கையி னீராடிநாளு முன்னைச்சேவிக்க வெனக்கோருறைவிடமுந் தரவேண்டுமென்றனன். அதுகேட்ட அயோத்தியாள், யமுனைசகோதரனே! நினதுதூதர் பிழையை யுளத்திற்கொண்டேனில்லை. கோப்பிரதாரத்துக்குச் சமீபத்திலிருக்கின்ற கண்டகமென்னும் ஸ்தானத்தில் நீவாசஞ்செய்க. அதற்கு யமஸ்தலமென்று பெயருண்டாகுக. ஆங்கனுன்னைச்சேவிப்போரும், என்னை நினைப்போரும், போற்றுவோரும், எனதுமகிமையைக் கேட்போரும், என்னைத்தரிசிப்போரும் வாழ்நாளிறுதியி னின்னால் வாதைபடாதொழிகவென்

றருளிப்போயினனென்றுகிளத்தினர். உலகுபோற்றுநாயகியதுகேட்டு அற புதமற்புதமெனச் சம்புவை ஆதியில் மணந்துழியுற்ற மகிழ்வுற்றுப் புரா ணம்பகனையனைவணங்கிச் சுவாமி! பரமாத்துமருக்குப் பின்வந்த பரதாழ் வானுதியர் தோன்றிய ஸ்தானங்களைக்கேட்க வாசையுறுகின்றனெனென லு நீறணியு நின்மலர்நோக்குற்றறைகின்றனர்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளேசரணம்.

---

## பத்தாமத்தியாயம்.

கமுகெனச் சங்கெனப்பொலி கழுத்துடைய காதலோய்! கேட்பாய். சு வாமியின் திருவவதாரவிடனுக்கு வடக்கு இருபத்துநான்கு வில்லளவுக்கப் புறங் கைகேசிகோயிலிற் பரதாழ்வானுதித்தனன். அக்கோயிலுக்கு முப்ப து வில்லளவுத்தூரத்தில் ஞானமுடையசுமித்திரைமனையில் இளையவன் இ ளையவனுடன்றோன்றினன். அதன் புறத்து ரத்தினங்களாலாகிய தருமஸ்தா னம், தேவஸ்தானம், ஹரிஸ்தானம, சீதாபிராட்டியார் பாகசாலை யிருக்கி ன்றன. அச்சாலையைச் சேவிப்போனகத்தில் அன்னபூரணை மகிழ்ந்து நட னம்புரியாநிற்பள் மற்றைத்தானங்களைச்சேவிப்பனோற் பிணியாற்பீடிக்கப் படாது வாழ்வன். பிறந்தும் பிறவாக கோதண்டபாணி திருவவதரித்ததான த்துக்கெரித்திசையிற் சீதா கூபமென்றும், ஞானகூபமென்றும பெயருடை ய வோர் கிணறிருக்கின்றது. அதன் உதகத்தை யுண்ணுவனே லவன் குரு வையொத்த ஞானவானுவன், பகவான் வசிட்டர், வாமதேவர்முதலாய மகரு ஷியரெல்லாரும் போதம் போதப்பெருகுமென் றக்கூவலினீரையே பருகு கின்றனர். அதன்பக்கல் சுக்கிரீவகுண்டமும், பாகவதசிரேஷ்டனுய விபீஷ ணுழ்வான்குண்டமுமிருக்கின்றன. அவ்வாழ்வானிலஞ்சி யவன் திருமனத தைப்போலவே தெளிந்திருக்கின்றது. அனுமத்குண்டத்தண்டையில் ரகு மகாராஜனுக்குப்பயந்து குபேரன் பொன்சொரிந்தபொக்கிஷசாலையிருக்கி ன்றதென்றனர். அவ்வேலை சங்கரி புராரியைத்தொழுது ஐய! இரகுபூப திக்குக் குபேரன் பயந்தவாற்றைப் புகன்றருளவேண்டுமெனச் சம்பு தேவி யைநோக்கிக், குருதிதோய்ந்தவாளைவரிபரந்தகணமானே! நரபதியாகிய இரகு நாலிரண்டுதிசையினுஞ் செருவென்று விசுவஜித்தென்ற யாகம்புரிந் து கையிற்பொருளின்றியிருந்தனன். அவ்வேலை கவசரென்றவந்தணர் தம து குரவனுக்குத்தாந் தக்ஷிணைசொடுக்கிறதாய் நேர்ந்த, பதினன்குகோடி ப்பொன்னைப்பெறுவான் ரகுபூபன்வயின் வந்துணர்த்தலும், பொருளில்லா மன்னன் வேதியனைநோக்கி ஐய! இது வெனக்கொருபொருளோ? சிறு பொழுதிங்கிருந்தருளுதி. தந்தனெனென்றுரைத்து நிதிக்கிழவனோடமாபு ரிவான் சமரவேடம்பூண்டனன். பூணலுரகவாகனன் பகவான் நாரதமாமு னிவரால்ணர்ந் தந்நிதிச் சாலையில் நிதிகளை நிரப்பிவைத்தனன். அதிப னவ்வெறுக்கைகளையத்தொழுகுலத்தோருக்குக் கொடுத்தனுப்பினன். அச்

சாலையைப் பிரதட்சிணஞ்செய்து சேவிப்பனே லென்ருேழனெனவாழ்வன். அந்நிதிச்சாலைக்கவாசியிற் சர்வதேவதா சொரூபமான இராமசந்திரரெரியோம்பிய வக்கினீ குண்டமும், நவரத்தினங்களாலாகிய வேதிகையுமிருக்கின்றன. அவண் வேதசாஸ்திரங்களுணர்ந் தொழுக்கத்திற்சிறந்த வறுதொழிலோ ரநேகராங்குத் தங்காநின்றனர். மறையவன் அவணெரியைப் பூசிப்பனேல் மகாமகங்கள்செய்த பயனடைவன். அதனணித்து வசிட்டையுந் திலோதகியென்ற நதியுங் கலக்குஞ் சங்கமமிருக்கின்றது. திலம்போற் கருமையான தீர்த்தமாயிருத்தலாற் றிலோதகியெனலாயிற்று. கரிபரிமுதலிய மாக்களுண்ணவு மாடவு மிளையபெருமா டமதுபாணத்தினு னிலமகள் முதுகைக்கீண் டுண்டாக்கிய தந்நதி. அச்சங்கமத்தினீராடி நீர்க்கடன், தானஞ்செய்யவேண்டும். அச்சங்கமத்தருகின் முத்தொழிலை லீலையாய்க்கொண்ட பரமாத்துமர் சானகியாரோடு விளையாடிய உத்தியானமொன்று, பாடலம், பனசம், பாரிஜாதம், தேமா, தெங்கு, வாழை, வேங்கை, கோங்கு, பூகம், நாகமுதலாய தருக்களடர்ந்து, விண்ணுற நிவந்து, நாளோடு வேற்றுமைதெரியாது மலர்கள் மலர்ந்து, காலமின்றிக் கனிந்து, தடாகமுஞ் செய்குன்று மாடமு நிலாமுற்றமும், வேதிகையும்பொருந்தி, இந்திரனுடைய நந்தனமெனவும், குபேரனுடைய சைத்திரரதமெனவும் விளங்காநின்றது. அதன்மாட்டுச் சீதாகுண்டமென் ருேர்தீர்த்தமிருக்கின்றது. அது மாந்தரது பாதகங்களைப்போக்கச் சர்வஞ்ஞராலேயே யருளப்பட்டிருக்கின்றது. அதனிற் றீர்த்தமாடி யவ்வுய்யானத்திற் சானகியாரையுமவர்காந்தரையும் வழிபாடுறவேண்டும். துடியிடை! அக்குண்டத்தைப்பற்றிய வோர்காதையிருக்கின்றது. புகல்கின்றனென்கேள். வேதசாஸ்திரங்களையுணர்ந்த பிரமதத்தனென்பவ ஞேர்மகம்புரிந்தனன். அப்போது நல்லாகார நித்திரையில்லாமன் மெய்யிற் சிறிது சோர்வடைந்து மந்திரலோபஞ்செய்தனன். அதுகண்டு வேள்வித்தலை வந்திருந்த அதிதர் பிரமதத்தனை யூமையாகவென்று சபித்தனர். பிராமண னவ்வமரரைவணங்கிப் பிரார்த்தித்தலு மவ்வண்ட ரயோத்திசேர்ந்து சீதாபிராட்டியார் தீர்த்தத்தினீராடி யூமைதவிர்கென்றுபோயினர். பிரமதத்தன் விமலைவந் தத்தீர்த்தத்தின் மூழ்கலு முன்போல வேதசாஸ்திரங்க டருநாவினனுனன். அத்தடாகத்துக்குக் குடதிசையிற் சித்தபீடமென்ருென்றிருக்கின்றது. அதனெதிரிலிருக்கின்ற சரசில் ஒருவன் ஸ்நானஞ்செய் தாவின்பாலா லப்பீடத்தை மஞ்சனமாட்டி யருச்சித்து ஜபந் தபந் தியானமுதலியவைகளைச்செய்வனேலப்போதே பயனடைவன். தாரகமாகிய இராம நாமத்தை ஜபிப்பனேல் மோட்ச மடைவன்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளேசரணம்.

அணியணிந்த பசுங்காம்பையும், திங்களையும் புனைதோளி! சித்த பீடத்துக்குச் சமீபத்தில் கர்ஜ குண்டமெனவும், வித்தியாகுண்டமெனவு மிரண்டுகுண்டமிருக்கின்றன. அவற்றி னீராடினூற் கல்விபெருகும். தின வெடுத் தூனீர்சொரியுந் தீப்பிணிகளெல்லாந்தீரும். அவ்வித்தியாகுண்டத் துக்கு வருணதிசையி லெண்ணிறந்த மான்களும், பூஞ்செடிகளும், நானாவித ப்பூங்கொடிகளு மல்கிய வோர் விலங்கலிருக்கின்றது. இராமபத்திரர் வை தேகியாரோடுப்பரிகையில் விளையாடுங்காலை யென்னையாளுடைய வந்நாய கியார்கோதண்டபாணியானைத்தொழுது, நாதரோ! நுந்தோளெனத்தோன் று மக்கிரியின்மேலேறிவிளையாட விரும்புகின்றனென். அடிகளுக்குத்திரு வுளமானூ லெழுந்தருளவேண்டுமெனப் பிரார்த்தித்தனர். அதைச்செவியி லேற்ற வேதவேதாந்த சாரர் பெரியதிருவடிகளை நினைத்தலு மக்கலுழ னூழி திரியுங்காலத்து மூலவாக்கிரியு மூலைய, திசையானை கண்கள் விழி யாது சிம்புளிக்க, உலகேழையுமூடுஞ் சிறைகால்வழங்கச் சந்நிதிவந்து தொ ன்னாள் பிரிந்த துயர்தீரக்கண்டு, வனமாலை புரளத் தொழுதுதொழுது வாய்புதைத்து நின்றனன். இரகுநாத ரவ்வாழ்வானை நோக்காக் கரு ளனே! நஞ்சீதைவிளையாட அளகாபுரியிலிருக்கு மணியோங்கலைக் கொ ண்ர்கவெனலும், பெரியதிருவடிகள்சென் றரதனவெற்பைக் கொடுவந் தெம் பிரானுடைய வாணைபெற்று, அக்குன்றின்மேல்வைத்து நிலமொன்ற வழு த்திப்போயினன். பின்பு ஜனககுலக்கொடியுடனர் தசரத குலதீபம் வேதசி கரத்தினும், எம்மனோர் அறிவின்மிசையினுந் தெரிந்து மின்னபடியென்று தெரியாமலும்விளங்குவதுபோ னவமணியாலாகிய வவ்வடுக்கலினும்பரேறி மாணிக்கப்பாறையிற் சரிக்கும்போது தெரிந்தும், மரகதப்பாறையிற் றெரி யாமலும் விளையாடியருளினர். கஞ்சமனைய அவர் கழல்கடோயப்பெற்ற அம்மணிவரையைச் சேவிப்பரேல் விண்டொட ரம்மலையளவு பாவமுடை யாரோனு மது நீங்கித் தூயோராவர். அவ்வரையைக் காவல்செய்துகொ ண்டு யானைமுக னவணிருக்கின்றனன். அம்மலைச்சாரலிற் கணேசதீர்த்த மிருக்கின்றது, அதனினீராடி யொற்றைக்கொம்பனைச்சேவிக்கவேண்டும். அக்கணேசன்பக்கல் தசரதகுண்டம், கோசலைகுண்டம், சுமித்திராகுண் டம், யோகினிகுண்டம், ஊர்வசிகுண்டமன்றி, மகபரமென்றும், துர்பரமெ ன்றுஞ்சொல்லப்படுமோர்சரசுமிருக்கின்றது. அவற்றிற்றீர்த்தமாடித் தரு ப்பணஞ்செய்யவேண்டும். தேன்மொழி! ஊர்வசி குண்டத்தின் மகிமையை ச்செப்புகின்றனென் கேண்மோ. இமயகிரிச்சாரலில் வைப்பியனென்ற மாமுனி யக்கினி நாப்பணிருந் தருந்தவம் புரிந்தனன். புலவர் பெருமா னது பொருது தெய்வநாடியரில் உருப்பசியை யழைத்துப் பெண்ணமு தே! வைப்பியன்பாற்சென்று தவத்தைக்கெடுத்துமீளுவாயென்றனன், மா ரனை யாட்கொள்ளுமவள் பணிவரைசார்ந்து முனிவனுக்கெதிர் வல்லிபோ னுடங்கி அம்மாமுனி தன்னை நோக்குவனுயின் தான் புவியைப்பார்த் தும், நோக்காவிடின் முனவனைப்பார்த்தும், புன்முறுவல்கொண்டு, உத்தரா

சங்கத்தை வாங்கிப் போர்ப்பாள்போ லடிக்கடி தடங்கொங்கையைக்காட்டி, மதனனைத்தூதனுப்பிப் பெருவிரலா னிலத்தைககிளைத்து நாணிநின்றனள். அவ்வாறுநின்ற உருப்பசியை, குழையோடலர்ந்தமுளரிமுகத்தாளை, முத்தோடலர்ந்த குமுதவாயாளை, தனதனுடைய தனமெலாங்கொடுத்தாலும் விலைநேராத் தொய்யிற்றனத்தாளை, மாதவருமாலுற்று வீழ்ந்துசுழலு முந்திச்சுழியாளை, புகையுண்டெனிற்றீயுண்டென்பதுபோலநிலாகியவளையைத் தாங்குவதற் கொன்றில்லாவிடி னவைநில்லாவென்றவனுயானத்தா லுண்டெனலடுக்கு மிடையாளை, நனிதவச்சிறியகருமணி விரவிய பொற்றட்டமென அண்டர்விரும்பு நிதம்பத்தாளை, அரம்பையினழகையழித்த குறங்காளை, கல்லும் புல்லுங் கண்டிருகும் பெண்கனியைக்கண்டு குன்றுபோலசையா மனமுடைய மைப்பிய மாமுனிமுனியாப்பொருள்கண்டுழிநேயம் பற்றும் பொதுமகளே! சுந்தரமென ரூபங்கொண்ட தருக்காற் காமவேரறுத்தவனென்றோரா தென்னிடத்தி னீபிழைத்தனை. இன்னே விகாரவடிவமடைவாயென்றனன். இராமசரமொக்கு மச்சாபத்தாற் பூமகளெனப்பொலிந்த தேவமாது பேயுமிகழற்கொத்த மெய்யடைந்து கலங்கித் துக்கித் தம்முனிவரனைவணங்கி வழுத்தி ஐயனே! யான்செய்பிழையைப்பொறுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனள். கறுவையுங் காமத்தையுந் தவிர்த்துக் கருணைகொண்ட மாமுனி கண்ணுற்றுப் பேதையே! அயோத்தியிற் புண்ணியாத்துமாவான தசரதர் குண்டத்துக் கணித்தா யோர்சரசிருக்கின்றது. அது மகா புண்ணியகரமானது. நீசென் றதின்மஞ்சனமாடிக் கனகமண்டபமடைந்து லோகமாதாவான ஜானகிபிராட்டியாரைத் தரிசிப்பாயாயின் முன்போ னல்லுருப்பெறுவாய். இனி யவ்வாவிக்கு ஊர்வசிகுண்டமெனப் பெயர் வழங்குகவென் றருளினன். பின்பு அக்கடவுட்பொதுமகள் சாகேதஞ்சேர்ந்து தீர்த்தமாடி நம்மன்னையாரைச் சேவித்துத் திருவினுமுருவ மிக்காளாயினள்! தேவி! அப்பங்கத்தின் மூழ்குவோர் நல்லங்கமடைவர்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளேசரணம்.

---

## பன்னிரண்டா மத்தியாயம்.

சாந்தணிந்த செப்பெனவும், கலசமெனவும், இளநீரெனவும், சூதெனவும், தும்பிக்கோடெனவும், சக்கரவாகமெனவும்பொலிந்து கச்சணிந்து பூண்கொண்டு புடைபரந்து விம்மியெழுந் தனமுடைக்கொடியே! அவ்வுருப்பசிகுண்டத்துக்குக் கிழக்குப் பிரகற்பதி குண்டமிருக்கின்றது. அவ்விடத்திற் றேவகுருவானவர் பரமாத்துமஞகிய நாராயணனுக்குத்திருவுளமுகப்பாக வெண்ணிறந்த மகங்கள்செய்தனர். கிருமியானுலுங் குருவாரத்தி லவ்வாவியிற்றோயு மேல்வருபிறப்பி லுத்தமமான பிராமணத்திருவுருவடையும். கிரகங்களாற் பீடிக்கப்படுவோ னதனின்மூழ்கி நூலோரைப் பூசித்துப்பொ

ன்னுலாயினும்,வெள்ளியினுலாயினுங் குருவைப்போலுருவஞ்செய்து தான ஞ்செய்வனேலப்பீடித்தலினின்று நீங்குவன். வியாழகுண்டத்துக்குச் சமீபத்தில் ருக்குமிணிகுண்டமிருக்கின்றதென்றனர். சாம்பவி மழுவாளியைத் தொழுது, ஐய! உருக்குமிணிபிராட்டியாரும் லோகமாதாவின் அவதாரமன்றோ? சர்வஜ்ஞனுன நாராயணனுடைய அம்சாவதாரமானகண்ணபிரானுக்குத் தேவியாரன்றோ? மதுரையிலெழுந்தருளியிருந்த அவ்வன்னையார் திருநாமத்தா லயோத்தியிற் குண்டமுண்டாக வேதுவென்ன? மொழிந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தலும், கங்காதரர் நோக்குருமலைவல்லி! முன்னோர்காலத்திற் கிருஷ்ணபரமாத்துமா தமது முந்திய அவதாரஸ்தலத்தைக் கண்டருளவேண்டுமென்று திருவுளங்கொள்ள ருக்குமிணி, சத்தியபாமையென்ற மனைவியார்களுடன் விமலை சார்ந்து பொன்னையு மணியையுந் திரையாற் கொழுங்கரைவீசும் வசிட்டைமாநதி தீரத்திற் றிங்களுரிஞ்சுமாடத்திலோர்திங்க ளெழுந்தருளியிருந்தனர். அக்காலை ருக்குமிணியன்னையாரோர்வாவியுண்டாக்கியருளினர். கபடநாடக சூத்திரதாரியார் திருவுளம்பற்றி,நீராடுவோன் பாபங்களைப்போக்கும்படி யத்தீர்த்தத்துக்கு வரன்கொடுத்து, மகாத்துமிய முண்டுபண்ணினராகலி னதனினீராடி யல்லீலாவிநோதரையும் ருக்குமிணி பிராட்டியாரையுந் தியானித்துத் தானதருமங்கள் செய்பவன் காமியங்களையடைவன். ருக்குமிணிகுண்டத்துக்குச் குபேரதிசையில் க்ஷீரோதகமென்றொரு தீர்த்தமிருக்கின்றது. அதுமிகுதியும் புண்ணியகரமுள்ளது. தசரதசக்கரவர்த்தியாரறுபதினாயிரம் வற்சரம்வரையு மகவின்றிவருந்தி மகஞ்செய்தலு மோமகுண்டத்தினின்றுந் தீக்கடவுள்பாயசங் கொணர்ந்தனன். ரிஷிய சிருங்கமாமுனியருளா னரேசுவரராகிய அச்சக்கரவர்த்தியார் பாயசத்தைவாங்கித் தேவிமார் மூவருக்குங் கொடுத்தனர். கொடுக்குங்காலை யவ்வமுதினின்றுஞ் சிறிதுபால் சிதறி யோர்தடாகமாயிற்று. அதனில் ஸ்நானஞ்செய்து நீர்பருகுவாளேல் மலடியாயினும், பூத்தலொழிந்தவளாயினு முத்தமபுத்திரனைப்பெறுவள். அப்பாற்றீர்த்தத்துக்கு மேலைத்திசையிற் றசரதசக்கரவர்த்தியாராற் பிரதிஷ்டைசெய்யப்பட்டு க்ஷீரேசுரனென்ற நாமத்துட னிருக்கின்றனென். அத்தீர்த்தத்தின்மூழ்குவோரென்னையாராதித்துச் சேவிக்கவேண்டும். எனது ஸ்தானத்துக்கு நிருதிதிசையில் தனட்சயமென்றோர் தீர்த்தமிருக்கின்றது. அது ராஜருஷியாகிய அரிச்சந்திரபூபதி நாளின் மிக்க தனமிருந்தவிடம். மகாபதுமன், பதுமன், சங்கன், மகரன், கருசபன், முகுந்தன், குந்தன், நீலன், கருவனென்ற நிதியதிபர் ஸ்தானமாங்கணிருக்கின்றன. அவ்வரிச்சந்திரன் உத்தமருளுத்தமன், பாகவதசிகாமணி; சந்திரஹரிசரணத்தி லாராவன்புள்ளவனுதலால்அரிச்சந்திரனென்றுநாமங்கொண்டனன். அந்நல்லோனுடையசெய்கையை யாவருக்கும் புலனுறுத்துவான்பகவான் விசுவாமித்திரரோர்வினயஞ்செய்து கோசலநாட்டைக் கவர்ந்துகொண்டு, அந்நவநிதிச்சாலையைக்காப்பத் தனட்சயனென்ற அசுரனையேவினர். அரிச்சந்திரன் காசிமாநகரத்

திற் பார்ப்பானிடத்துப் பெண்டிரை விற்றுப் புலையனிடத்துத் தானடிமைப்பட்டு மீண்டரசடைந்த வேலை,அத்தனட்சயனென்ற அசுரன்பகவான்விசுவாமித்திரரைத்தொழுது, அடிகளே! நுமதாணையைச்சுமந் தின்றுகாறு நிதிச்சாலையைக் காத்திருந்தனென். என்னைப் பாதுகாக்கவேண்டுமென்றிரப்ப, அருந்தவ னருள்கொண்டு நினதுமனத்துக் கியைந்ததைக்கேட்பாய், தருதுமென்றனர். தனட்சயன்றாழ்ந்து, ஐய! முந்தை நான் குபேரனுக்குக் குற்றேவல் புரிந்துகொண்டிருந்தனென். ஓர்நா ணிதிக்கிழவன் அரம்பையைப் புல்லக்காமுற்றுத் தூதுவிடுத் தவளையழைத் தரங்கின் சாளரங்கடோறுந் தும்புருபோற் றும்பிபாடத் தொங்கலூற்றி, பனிநீர்தெளித்து, உம்பர்ப்பூம்பந்தர் வேய்ந்து,கலவிச்சித்திரங்களைச்சுவரிற்றீட்டி, தீயுடைத்தீபம்வெய்யவென்றிரத்தினதீபம்வைத்த, பாற்கடல்போலம்சதூளியாலான சேக்கைவிரித்து, யோசனைபத்து மணநாறுங்கலவையும், அடைகாயும்,அமுதினுமினிதருந்தும்பொருள்களும் வைத்து, அலங்காரஞ்செய்து, தென்றல்வீசு நிலாமுற்றத்தி லணிகொண்டு, பணியடங்கப்பரந்தவப்பூணல்குலை முந்தமிடுவான்போலப் பூணமுலை குழையப்புல்லி,இரத்தினஆர முத்தாரமுதலியவைகளைத் திருத்துவான்போலக் கச்சவிழ்த்துப் பயோதரங்களைப்பற்றி, இடை கண்ணுக்குப்புலப்படாதெனினுங் கரத்தாற்றொடப்படாதாவென் றறிவான் போல மேகலைசூழ்ந்த கலையைநீக்கி, கைகோத்துலாவி, பரிகாச வார்த்தைசொல்லி யவளுடைய வெதிர் மாற்றமான சொற்றேனைப்பருகி யினிதாய் விளையாடிக்கொண்டிருந்தனன். அதுகண்டு நானவ்விருவருமறியா திளகியமனத்தோ டொருசா ரிருந்து பார்த்துக்கொண்டிருந்தனென். ஆடன்முற்றியவிளைய மலரணைக்கேகும்வேலை யரன்றோழனென்னைக்கண்டு ஏட! மூட! ஸ்திரீபுமான்கள்கூடி யிருத்தலைக்காண நாணாது சித்திரம்போ னோக்கியிருந்த நீயின்னே அசுரனாதியென்றனன். அன்றுமுத லினிக்கடைபடு சரீரியாயிருக்கின்றனென். இதுதீர்ந்து முன்போற் றேவசரீரமடைய வருளுவீரொன்று பிரார்த்தித்தனன். காதிகாதலர் நகைத்து, தனட்சயா! நின்செயல் நன்றுநன்று. கலவியைப்புரியாநின்று விளையாடுவோரைக் கூசாது பார்க்கத்தலைப்பட்டவன் நீயன்றி யின்றுகாறு மொருவனுமில்லை. பித்தா! சின்னாள்கழிந்தபின் அரிச்சந்திரன் விண்ணுளவேகுவன். அதன்பினவனிதிச்சாலை தாமரைகழுமிய தடாகமாகும். அன்றுகாறு மிவணீ காந்திருந்ததனினீராடுவையேற்றேவசரீரம்பெறுவாய். அவ்வாவிக்குத்தனட்சய தீர்த்தமென்று பெயர் வழங்குகவென் றருளிப்போயினர். அசுரனுங்கிருந்து நிதிச்சாலை தீர்த்தமாயினபின் நீராடித் தேவனானான். அதனுண்மூழ்கித் திருமகளாரையு நின்னையு மாராதிப்பனே லவன் காமுறுமவைகளை யடைவன். அதற்கணித்தில் விஷ்ணு ஹரிபகவான் ஸ்தானமிருக்கின்றது. அதன்பெருமையைச் செப்புகின்றனெனென் றெடுத்துக்கொண்டனர்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளேசரணம்.

ஆலிலை,பலகை,தட்டம்,கண்ணடியென வொளிர்வயிறுடைக்கிளியே! விஷ்ணு சர்மாவென் ஞெருவேதியன் வேதசாஸ்திர சம்பன்னனாகி ஸ்ரீ ஹரி பக்தனாகித் தீர்த்தயாத்திரை செய்துவருங்காலை, சத்தியைச்சார்ந்து இராமகங்கையின் மகிமையையு மவ்வயோத்தியின் பெருமையையுங் கண் டாங்குநின்று மகலவுள்ளமிலானாகிக் காயும், கனியும்,கிழங்கும், சருகு முண்டு தவநோற்றனன். அவ்வாறவன் முப்பதினாயிரமியாண்டு நோற்கவே யோர் பொலங்குன்றின்மேன் மின்னுடைய கருமுகில் கமலக்காடுபூத்து, செங்கதிரும் வெண்கதிருமேந்திவருவபோலக் கொங்கலர் குழலுடன் கருள ன்மிசை ஸ்ரீமந்நாராயணனெழுந்தருளுதலும், செந்திவளர்ப்போன் கண்டு விழுந்து துளவத்தாளைத்தொழுது, பாடி, ஆடி, அரனய னாதியர்க்கு முண ர்வரியபரனே! படிறனாகிய வென்பொருட்டுக் கருணையாலெழுந்தருளி னை. சேவிக்கின்றனென் கருமணிவண்ணா! கமலக்கண்ணா! வேதமுமறி யா நினதுபொன்னடியைவணங்குகின்றனெனென்று பழிச்சிக் கரங்கூப்பி நின்றனன். நம்மையாளுடையருள்வள்ளல் விஷ்ணுசர்மாவைக் கண்ணுறா, பிராமணோத்தம! நினது தவங்கண்டு மகிழ்ந்தனம், நீவேண்டியதைத் தரு துமென்றருளலும், பார்ப்பான் தற்பரனைவணங்கி வேதநாதா! நினது சர ணத்தை மறவாதபே றெனக்களிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க, அங்ஙனமாகுகவென்று சுருதிமூர்த்தி யருளிப்போயினன். பின்பு விஷ் ணுசன்மா வப்பகவானைப் பிரதிஷ்டைசெய்து நெடுங்கால மவணிருந்து முத்தியடைந்தனன். அவ்விஷ்ணுசன்மாவாற் பிரதிஷ்டைசெய்யப்பட் டமையின், பகவானுக்கு விஷ்ணு ஹரியெனப்பெயராயிற்று. அவ்விஷ்ணு ஹரிஸ்தானத்துக் கீசானதிக்கில் வசிட்டகுண்டமிருக்கின்றது. அதனி டை நீராடிக் கற்புடையருந்ததியோடு வசிட்டமாமுனிவனையும், வாமதே வனையுந் தரிசிப்பனே னம்பரம்பொருளை யறியும் ஞானமடைவன். அவ் வசிட்டவாவிக் கணித்திற் பகவான் சுதரிசன வாழ்வானு லுண்டுபண் ணிய சக்கரதீர்த்த மிருக்கின்றது. அதின் மூழ்குவனேற் பருவகாலங்களி லிரத்தினாகரத்தில் ஸ்நானஞ்செய்த பலனடைவன். அத்தீர்த்தத்துக்கு வா யுதிசையிற் பிரமகுண்ட மிருக்கின்றது. முன்னோர்காலத்திற் பிதாமக ர யோத்திவந்து வசிட்டையினீராடி, ஜனனஸ்தானத்தைச்சேவித் தகலவு ளமிலராகி,அவட் சின்னாட்டங்கி,தீர்த்தமொன்றுண்டாக்கி நாராயணப்பிரீ தியாகப் பலவேள்விகளைச்செய்து தமதுலகுக்கேகினர். அப்பிரமகுண்டத் திலொருவன் மஞ்சனமாடிப் பிராஹ்மணபூஜைசெய்வனே லந்தியகாலத்தி ற் சத்தியலோக மடைவன். அப்படிகேருக் கெழுநூறு வில்லளவில் ருணவி மோசன தீர்த்தமிருக்கின்றது. ரோமசருமனென்றமுனி யா திரைவந்த க்குளனின்மூழ்கி ருணபாதக தோஷத்தினி று நீங்கினன். அவ்வாறே நீ ராடிய வநேக ரப்பாதகத்தினின்று நீங்கினராதலால், அதுருணவிமோ சன தீர்த்தமெனலாயிற்று. அதற்குக் குணதிசையி லிருபதுவில்லளவுத் தூரத்திற் பாபவிமோசன தீர்த்தமிருக்கின்றது. பார்வதி! பாஞ்சாலதேச

த்தில் நரகரியென்றவிப்பிரனொருவனிருந்தனன். அவன் அசடர்களுடைய கூட்டுறவினால் மகாபாதகங்களைச் செய்துவந்தனன். அத்தேயத்தோரிற்சிலரயோத்திக்கேகலு மவர்பினவ்வந்தணன் றான்புரிந்துகொண்டிருந்த வேசியோடுகூடி விளையாடல்புரிந்துகொண் டயோத்திவந்தனன். வந்தவுடனேயொருவன் றனது பிள்ளைமையிற்செய்த விழிவானகாரியங்களை, முதிர்ந்தபின் புணர்ந்து நாணுமாபோ னரகரி ஞானமடைந்து, அச்சோகருமத்தாற்றோன்றித் தோன்றி மறையு மெய்யை நானென்றுமுயிரோடு தொடர்பில்லாத பொருள்களை யெனதென்றுங்கொண் டந்தர்த மன்னுயிர்களுடைய கன்மத்தாற்றோன்றிய யாக்கைகளை யம்மையெனவும், அப்பனெனவும், பெண்டி ரெனவும், பிள்ளையெனவு முறவாடி யொழுகினேனே. சான்றோர்முன் கூசாதெவ்வா றெய்துவனென வெட்கமுற்று, அகப்பற்றும், புறப்பற்று மறுத்து மெய்யுணர்ந் தப்பாபவிமோசன தீரத்தில் வசித்து, ஸ்ரீஹரிபத்திமைசெய்து முத்திபெற்றனன். அக்குண்டத்துக்கு நூறு வில்லளவுத்தூரத்தில் வசிட்டையிலுள்ள சகஸ்ரதாரையென்ற வொப்பிலாத்தீர்த்த மிருக்கின்றது. அதன்வரலாற்றைச் செப்புகின்றனென் கேண்மோ. இட்சுவாகு குலதீப மரசாண்டுவருங்காலை யெம்மன்னையாராகிய வைதேகியார் புவியுட்புக்க பின்பு, காலன் தவனென இரகுநாதர்பா லணைந்தனன். சர்வ சுவாமி யவனைக்கண்டு குசலமுரைத்து, வந்தவாறேதெனலும், யமன் சீதாமனோகரரைநோக்கி நான் வார்த்தைசொல்லி முடிக்குங்காறுமிங்கு யாரும் புகுதல் தவிரவேண்டும். எவனாவதுவருவனேல் தந்தையீர்! நீரவனை வதஞ்செய்யவேண்டுமென்றனன். வேதமுடிவாயுள்ளோர் நன்றென்று திருவுளம்பற்றலும், பாசக்கையன்றொழுது சர்வஜ்ஞரோ! பூமியிற்றிருவவதரித்து வசிக்கிறதாய்ச் சங்கற்பித்தகால மிறுதிகொண்டது. பரமபதம் தேவரீர் வருதலை வேண்டியிருக்கின்றது. அஜசங்கரோந்திராதி தேவரெல்லாரும் நுமது திருவடியைச்சேவிக்க வருத்தியுற்றிருக்கின்றனர். திருவுள மெங்ஙனமோவெனத் தாழுங்காலை, பகவான் துருவாசமாமுனி கோயிலின் கடைவாயினண்ணி யிளையவனைநோக்கி நம்வரவை ஐயருக்கறிவியென்றனர். சுமித்திராபுத்திர ரம்முனிவருரையைக் கடக்கவஞ்சிச்சென்று தமதத்தருக்குணர்த்தினர். அதைக்கேட்டு வைகுண்டநாதர் நமனுக்கு விடைகொடுத் தனுப்பிவந்து, துருவாசரை யடிபணிந் தமுதூட்டி விடுத்துத் தமது சங்கற்பத்தை நினைத்து வருத்தமுற்றனர். இளையபெருமாளஃதுணர்ந்து பரமபதநாதனை வணங்கிச்சரயுமாநதிவந்து ஓமென்னுமோரெழுத்தையுளத்திற்கொண் டதனிலயரான இராமபிரானைத்தியானித் தாயிரம்பணமுடியுடைய அநந்தாழ்வானாகத்தோன்றி, இந்திராதிய ரெதிர்கொள்ள ஸ்ரீவைகுண்டநண்ணியருளினர். இராமகங்கையினின் றெழுங்காலை யாயிரஞ்சிரக்களினின்று தாரையாய்த் தீர்த்தமொழுகியபடியா லவ்விடன் சகஸ்ரதாரையெனலாயிற்று. அத்தீர்த்தத்தினுடைய மகிமையை யவ்

வாங்தரு முடிவுறச்சொல்லார். ஸ்நான தானஞ்செய்வதற் கல்லாது புண்ணியஸ்தானம்வேறரிது.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளேசரணம்.

---

## பதினான்காமத்தியாயம்.

கூதாளி,நந்தி,நீர்ச்சுழியென விளங்கு முந்தியுடைய அன்னமே!நாமுன்னோதிய வித்தியாகுண்டத்துக்குத் தென்றிசையில் வைதரணியென்றொரு தீர்த்தமிருக்கின்றது. அதற்கணித்திற் கோஷராக்கமென்றொரு வாவியுளது, அதன்மகிமையைக்கேள். செங்கதிரவன்மரபிற்பிறந்த கோஷனென் றோர்பூபதி மதனனினு முருவ மிக்கானாயிருந்தனன். முற்பிறப்பின் தீவினையா லவன் கைவிரல்களி னகக்கண்களினின்றும் கிருமிகள் சரிந்துகொண்டிருந்தன. உலகமெல்லாந் தனதாணையே பரவவாண்ட வவனப்பிணிதிருமாறு காணாதயர்ந்துவருந்தி, புழுக்கள் புழுங்குமென்ற கருணையாற் பொறுக்கவொண்ணாத்தினவு மாறுமாறென்றும் புரியாது, விதியையுன்னியிருந்தனன். அக்காலே அரிமா கரிமாமுதலிய மிருகங்கள்வந்து பைங்கூழையு மாராமங்களையு முனிவராச்சிரமங்களையு மழிக்கின்றனவென் றொற்றர்சொல்ல,அக்கோஷனுணர்ந்து நகர்ப்புறம்புசென் றம்மாக்களை வதஞ்செய்தலு மொற்றையாழித்தேரோ னுச்சியணைந்தனன். தராபதியுருப்பத்தா விளைப்புற்றுவந்து சரயுமாநதிக்கரையில் வையத்துக்கோர் கவிகைகவித்தாற்போ லோங்கிய வோராலின்கீ ழமர்ந்து வேடைதவிர்ந் தெழுந்து மகரமாதத்திற் கங்கையெனத்தெளிந்து குளிர்ந்துமலருடைய வோர்பொய்கையைக்கண்டு மெய்வெப்பம்போக்குவான் குளித்தனன்.உடனே யவன்விரல்களினின்று மென்பிலா வுயிர்கள் வாராதொழிந்தன. புரவலன் கரையேறியஃதுணர்ந்துமகிழ்ந் தித்தீர்த்தமோ? யாதோ? என் றீவினையைப்போக்கியது. அறியேனென் றவ்வாவியைநோக்கிக்கைகூப்பிநின்றனன். அப்போழ்து சூரியனப்பூபாலனுக்கெதிர்தோன்றி, அரச! நீயென்மரபுளானுமன்றி யாவற்றினுஞ்சிறந்த ஜீவகருணையைக் கொண்டமையாற் பிணியினின்று நின்னை நீக்குவானெண்ணினேன். அதனால் நீ யிவட்சார்ந்திப்புனிதநீராடினை. புனிதனாயினை. இன்னுங்கேட்டி, எனதுமண்டலத்தி னுப்பனுறையும் ஸ்ரீமந்நாராயணனுக் கந்தப்புரமென விளங்கு மிவ்வயோத்தியிற் சின்னாள்வசித்தனென். அக்காலே யென்னாலிக்குளனேற்படுத்தப்பட்டது. தீராத்தொழுநோ யுடையவனேனு மிதினீராடியென்னை நமஸ்கரிப்பனே லத்தீவினைதீர்ந்து புண்ணியசரீரியாவன். இனி நின்பேரா லித்தீர்த்தம்விளங்கட்டுமென் றருளிப்போயினன். மருந்துமுதலிய வற்றால்தீரா எவ்விதப்பிணியாளனும்பானுசப்தமியென்னும் புண்ணியதினத்திலாவது, ஆதிவாரத்திலாவது ஸ்நானஞ்செய்து நவக்கிரகபதியாகிய சூரியனைப்பூசித்துப் பிராமணதிருப்திசெய்வனே லப்பிணியினின்று நீங்குவன்.

அவ்வாவிக் கண்மையில் ரதிகுண்டமென்றும், கந்தருவகுண்டமென்றும், குசுமாயுதகுண்டமென்று மூன்றுகுண்டமிருக்கின்றன. அவைகளினீராடவேண்டும். அக்குசுமாயுதத்துக்கு மேற்றிசையின் மந்தரேசுவரமென்ற தீர்த்தமிருக்கின்றது. அதன் மேல்கரையில் மந்தரேசுவரனென்ற நாமத்துடன் லிங்கரூபமாய் நானிருக்கின்றனென். அதனினீராடி யென்னைப் பூசிக்கவேண்டும். அந்தலிங்கம்போன்ற சுந்தரமானதும், வரங்கொடுக்கத்தக்கதும் வேறொன்றுமில்லை. அம்மந்தரேசுவரன் கோயிலுக்கு வடக்கணுள்ள சீதளையையும், வந்திதேவியையும் பூசிக்கவேண்டும். அரசனாற்கோபிக்கப்பட்டவன், தண்டிக்கப்பட்டவன், பூதபிசாசுகளாலச்சமடைந்தவன்முதலானோ ரவ்வந்திதேவியை நினைத்தந்தணர்க்குணாத் தருவனே லவற்றினின்றும் விடுபடுவன். அவ்வந்திதேவிபக்கற் சுடகியென்றொரு தேவியிருக்கின்றனள். சந்தேகப்பொருளைத் தெரிந்துகொள்ள விரும்புவோனவள்பாற்சென்று, கையைநொடித் தொலியுண்டாக்கிப் பூசிப்பனேற் குறிகளாலுணர்த்துவள். அவளா லிந்திரனுடைய குண்டமொன்றுகாக்கப்படுகின்றது. ஆயிரங்கண்ணான் விருத்திராசுரனென்பவனைச் சங்கரித்தனன். அத்தோஷத்தா லவன்பீடிக்கப்பட்டவனாகி யெத்தலங்களுக்குஞ்சென்று யாவையும்புரிந்து குற்றநிவர்த்தி யாகாமைகண்டு, ஸ்ரீஅயோத்திசார்ந்து இராமகங்கையினீராடித் திருவவதார இடனைச்சேவித்துப் பாதகத்தைத்தவிர்த்துத் தனதுபெயரால் தீர்த்தமொன் றுண்டுபண்ணி யதற்குச் சிறப்புண்டாக்கித் துறக்கமுற்றனன். அதன்கணீராடினோற் பிரமகத்தி முதலாய தோஷநிவர்த்தியாகும். இந்திரதீர்த்தத்துக் கணித்தாய்க் கோப்பிரதாரமென்றதீர்த்தமிருக்கின்றது. அதன்கணீராடிக் கொம்புகுளம்புநெற்றி முதலியவங்கங்களிற் பொன்னணிகளாலொப்பனைசெய்து பாத்திரத்துடன் கோதானஞ்செய்யவேண்டும். பவானி!முன்னொருகாலை அசுரர்கள்கூடிவந்து விபுதரோடுமலைந்தனர். அத்தேவரொதிர்க்கமிடுக்கிலராகியடியுண்டு,தளர்ந்துத்தரியம்விழவோடிவந்து,கமலாசனனைத்தாழ்ந்து, அசுரர்களாலுறைவிடந்துறந்துவந்தனமென்று குறையிரந்தனர். வேதனா ரவ்வும்பரைநோக்குற்றுத் தனிமுதல்வனாகிய சக்கராயுதனைப்பூசித்துவலிபெற்று, தைத்தியரை வென்றுவாழுங்கோளென்னலும்,அக்கடவுளரஞ்சலிசெய்து, புவனங்களையீன்றதேவா!எங்கிருந்துபகவானையருச்சிப்போம். எங்கள்செயலைமாற்றலரறிந்தாற்புடைப்பரோ. என்செய்துமென்றனர். நாமகள்காந்தர்புத்தேளிரை நோக்கிக் கலங்கலீர். சமரத்தில் யாவராலும் வெல்லவொண்ணாததுபற்றி ஸ்ரீ அயோத்தியெனத்திருநாமங்கொண்ட சாகேதஞ்சார்ந்து ஹரியை யர்ச்சியுங்கோள். கருணைக்கடலெதிர்தோன்றி வரனளிக்கும். உரமடைந்து தானவரை மடிக்கலாமென்று விடுத்தனர். விண்ணவரெல்லாரும் விமலையிற் கோப்பிரதாரமடைந்து சக்கரக்கடவுளைப்பிரதிஷ்டைசெய் துபசரித்தனர். அயோத்தியடைந்து மவ்விண்ணவரிற்சிலர் பயநீங்காது,இரகசியமாய்ப்பூசித்தனர். அச்சுதப்பிரானவர்களுக் கெதிர்தோன்றித்தானவரைவெல்ல வலிய

ருளிப்போயினர். தேவரெல்லாருமேகிமலையினும்பெரியயாக்கையுடையார் களாகிய வவுணரைக்கோறல்செய்துலகைக்காக்கைக்கொண்டனர். உருவெ னவருவெனநின்ற பகவானைச் சக்கரதாரியாய், வெளிப்படையாகவு மிரக சியமாகவும் அமரர்பூசித்தகாரணத்தாற் சக்கர ஹரியென்றும், குபுத ஹரி யென்றுந் திருநாமங்கொண் டவணிருக்கின்றனர். பகைஞரால்நேரும்நலி வுதீரவேண்டுநர் கோப்பிரதாரத்தினீராடி அவ்வரிப்பிரான்களைச்சேவிக்க வேண்டுமென்றருளினர்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளேசரணம்.

---

## பதினைந்தாமத்தியாயம்.

அங்ஙனஞ்சாற்றிய அந்திவண்ண வண்ணலைப் பருவதராசனீன்ற மரகதவல்லிதொழுது நாதரோ! இளையபெருமாள் சேடரூபமா யெழுந்தருளிய பின்னர் நஞ்சருவசுவாமி யெவ்வாறு தன்னடிச்சோதிக்கெழுந்தருளினர். அதைக்கேட்க விரும்புகின்றனெனெனலும், கூற்றையுதைத்த கொன்றைசூடி அஞ்ஞான்று பிரமன் உலகளந்தகழலை விளக்கிவிட்ட நன்னீர் ததும்ப, யானைக்குமுன்னடந் தாவுக்குப்பின்னடந்த சீர்பாதத்தி லருச்சனன்சாத்தியமலர்கள்சரிய, அரவம் படமெடுத்தாட முடியசைத்து நன்று நன்று, தொட்டாலன்றிக் கண்ணுக்குக் கதுவாவிடை யுடைக்கொடியே! நற்காதையைக்கேட்டனை. கேள் தாரகவாச்சிய ரிளையவர்சென்ற செய்தியைக்கேட் டென்றுமறுகாத வுள்ளமனுங்கி, இலக்குவனைப்பிரிந்து கணப்பொழுதுந் தரிப்பனே. நானவனை யின்னே தொடர்கின்றனெனென்று குசலவதி சிரப்பதியென்ற நகர்களிற் குசலவருக்கு மகுடம் புனைவித்தருளித் தம்பியிருவருட னெழுந்தருளத்தொடங்குங்காலை, சுக்கிரீவன், அநுமன், அங்கதன், விபீஷணுழ்வான்முதலாய வெல்லாரும்வந்து நாதனைத் தொழுதனர். ஐயர் தமதடியார்களைநோக்கித் தக்கது மொழிந்தருளலும், அயோத்திமாநகராருங் கோசலைநாட்டாருந் திரண்டுவந்து சருவஞ்ஞனைச் சரணஞ்செய்து, சகலபுவனநாதரோ! நுமதுதிருவடியை மறந்தறியோம். இப்போது கருணைசெய்யாதேகி னெவ்வாறுய்வோம். எழுகடல் வற்றினும் வற்றாத பவக்கடலு ளாழ்ந்திருக்கின்றனெம்; நுமதுசீர்பாதப் புணையல்லது துணையில்லையென்று தாழ்ந்தனர். பரமாத்துமரதைச் செவியிலேற்றிரக்கங்கொண்டு சராசரங்களெல்லா மெம்முடன் போதலாமென்றருளி, மகாப்பிரஸ்தான விதிகளைமுடித்துத் தாமருளியவேதத்தை யுச்சரித்துக் கொண்டு, தம்பியருடனும், சுக்கிரீவாதி வானரங்களுடனும், உலகிலுள்ள சராசரங்களுடனுஞ் சுவர்க்கத்துவாரமணுகித் தம்பியருந் தாமு மூழ்கிச் சதுர்ப்புஜராய், சங்குசக்கரகதாதரராய், பீதாம்பரதாரியராய், இலக்குமி சமேதராய்த்தோன்றலும், சதுர்முகன்முதலாய யாங்களெல்லாருங்கூடித் துந்துபிமுழக்கித் தொழுதுதொழுது துதித்தனெம். சிரஞ்சீவியாகிய அ

னுமான், ஜாம்பவன், விபீஷணன்முதலாய சிலர்தவிர, மற்றவானரரிராம
கங்கையின் மூழ்கித் தத்தம் வானவுரு வொன்றினர். பின்றொடர்ந்து
வந்து நின்ற சேதனகோடிகளெல்லாங் கண்ணீர்மல்க, இராகவரோ! புவ
னநாதரே! பேரருளாளரோ!நீரின்மூழ்கிய நம்மைக் காண்கிலெம். ஸ்ரீயப்ப
தியைப்பார்க்கின்றனெம். எங்களிடத் தருள்புரிந்து சீதாசமேதராய் அ
யோத்தியிலெழுந்தருளி யிருந்தபடி சேவைசாதித்தருள வேண்டுமென்று
கைகூப்பிநின்று பிரார்த்தித்தன. அப்போ தென்னையாளுடைய பிரான்
கழலணிந்த செம்மனைமலரை நிகர்த்தகழலராய், கோதண்டபாணியராய்,சூ
ரியன்வசிக்க வோருருற்றுற்போன்ற கிரீடதாரியராய், தம்பியர் சேவிய
ராய், மின்னொளிர் கார்மேகமெனச சீதாசமேதராய்விளங்கினர். புல்லெ
றும்பாதி சீவகோடிகளெல்லாங் கண்ணாரச்சேவித்துத் தொழுதுதொழுது
எங்களமுதே! ஆரருட்சோதியே! அருமறைக்கரிய பரமே! முனிஜன ஜப
திபமே! சச்சிதானந்தசொரூபமே! எங்களுக்கெவ்வுலகருளினு மவ்வுலகினு
மித்திருக்கோலத்தோடெழுந்தருளியிருந்து சேவைசாதித்தருளவேண்டும்
நுமது சீர்பாதசேவையே காதலிக்கின்றனெ மென்று தொழுதன. அவ்
வேலைபரந்தாமர் உந்திவந்தவனைநோக்கா, இச்சராசரங்களுக் கோருத்தம
வுலகு சமைவிப்பாயெனலும், அவர்தாழ்ந் தெனதுலகத்துக்குமேற் சாந்தா
னவுலகமென்றொன்று சிருட்டித்திருக்கின்றனெனென்று வணங்கினர். அ
தைச் செவியிலேற்ற சுருதிமூர்த்தி சேதனர்களைக் கண்ணுற்று நீங்
கள் விழைந்தவாறு நம்மையுதவினமென்றலுஞ் சரயுதீரத்திற் கண்களினி
ன்றுங் கடல்பெருக முடிமேற்குவித்த கையனாகி, பரவசனாகி யிமையாது
சேவித்துக்கொண்டிருந்த நவவியாகரணி, ஓநாதா! மறைமுதலி! என்னை
யாண்ட கோவே! கைவிடாதருளுதியென் றடிமிசைவீழ்ந்தனன். பிரபன்
னர்கட்குப்புருஷகாரம்புரி பூமகளார் தாசரதியாரைவணங்கிவிழைந்தவாறு
வாதாத்மஜனுக் கருள்புரியவேண்டுமென்றனர். சுவாமி யன்பேதிரண்
டுருவங்கொண்டாற்போன்ற அனுமானைப்பார்த்து, ஐய! நின்னன்புக்கோ
ரளவில்லை. ஓரமிசத்தாற் சாந்தானலோகஞ் சாருவாயென்றருளிக் கோ
தண்டந்தவிர்த்துச் சார்ங்கங்கொண்டு பெரியதிருவடிகளி னெருத்தின்மி
சை ஸ்ரீவைகுண்டமணைந்தோரமிசத்தாற் சாந்தானலோகத்திற் பரதாழ்
வான் குடைநிழற்ற, இளையவரிருவருஞ் சாமரைவீச, ஈறிலாமாருதி யிணை
யடிதாங்க வீற்றிருக்கின்றனர். மற்றைச்சராசரங்களெல்லாஞ் சுவர்க்கத்
துவாரத்தின் மூழ்கி விமானமேறிச் சாந்தானலோகமடைந்து, பரமாத்து
மனைச்சேவித்துக் களித்தன. இவ்வாறு சேதனகோடிகளெல்லாம் யாதொ
ருமுயற்சியுமின்றி வீடெய்தினமை தாரகவாச்சியர் தமதுபதத்தையெய்தி
யவன்றேயன்றி, மற்றெக்காலத்திலுமின்று. ஆனால் ருக்குமாங்கத பூப
னரசுபுரிந்தகாலை யுலகிலுள்ளோர் மிருகங்களுடன்மீளாவீடெய்தினரொன்
றோதினர். சாம்பவி யச்சரிதையைக்கேட்டு மிகமகிழ்ந்து நீலகண்டனை
நோக்கி, சுவாமி! அவ்வரசனுளில் விலங்குகளெல்லா மப்பிராகிருத

மான நிரதிசயவின்பவீடடைய வேதுவென்ன? மொழிந்தருளவேண்டு மெனக் கபாலியார் ருக்குமாங்கதன் சரிதையை நடத்தலுற்றனர்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளே சரணம்.

---

## பதிஞறாமத்தியாயம்.

பரமசிவன் தேவியைநோக்கிப், பணியையும், தேர்த்தட்டையுங் காய்ந்து, பூண்கொண்டொளிரு மல்குன்மானே? கேட்டி, சூரியகுலத்திலுதித்த ருக்குமாங்கதன் சருவசாஸ்திர சம்பன்னனாகி, விஷ்ணுபத்திமையிற் சிறந்தவனாகி ஞாலமுழுமையு மாண்டுவருங்காலே, சரயுமாநதிதீரத்தி லிந்திரனுடைய நந்தனத்தினு நந்தச்சிறந்த நந்தவனமொன் றுண்டாக்கி, மலர்களையெடுத்து, முதற்பெருங்கடவுளாகிய ஸ்ரீவிஷ்ணுபகவானை யாராதித்துவந்தனன். ஓர்காலத்தில் ஆயிரங்கண்ணன் அவைக்களனில்வீற்றிருந் தாங்குக்கூடியதும்புரு, பகவான்நாரதர், வசிட்டர், வாமதேவர், விசுவாமித்திரர், அத்திரி, காசிபர், பரத்துவாஜர், அகஸ்தியர், சுதீட்சணர்முதலாய முனிவர்களைநோக்கி, இப்போது நிலவுலகில் அரசர்களிற் கல்விப்பெருக்க முடையானாய், சீலனாய், நீதியுடையானாய், ஞானவானாய், பகவத்பக்தியுடையானாய், ஜீவகாருண்ணியனாய் யாவனிருக்கின்றனனென் று வினவினன். பிரகற்பதியை நிகர்க்கும் பகவான் வசிட்டர், யாக்கை நோக்கினானைநோக்கி, இட்சுவாகு மரபில்வந்த ருக்குமாங்கதனை நரேசுவரனெனலாம். அவனையன்றி வேறொருவனுளனெனநின்முன்பகரற்பாலனல்லனென்றனர். விசுவாமித்திரர் ருக்குமாங்கதனினுஞ்சிறந்தவனுண்டென்றனர். ஐராணிமணாளனவ்விருவர் வான் பகவான்நாரதரையேவலு மம்மாமுனிவர்தரைசார்ந்து, மற்றமன்னர்களுடைய திறனறிந்து ருக்குமாங்கதன்வயிற் சென்றனர். அவ்வுத்தமனெதிர்வந்து தொழுது கொண்டாடியேகியாசனத்திலிருத்திக்கைந்நீ ரடிநீருண்ணீர்கொடுத்துக் கலவைபூசித் தாமஞ்சாத்தி யருச்சித்துக்குசலமுரைத்தனன்; யாழ்முனிவர்மகிழ்ந்து கொற்றவனுக்காசிசொல்லிவிடைபெற்றுத்தோளுண்ட தொடையலே யாழிடைப்பிணித்து வலாரிபால்வந் துருக்குமாங்கதனைப்போல்வா னொருவனையுங் காண்கிலேமென்றனர். ஆகண்டலன் பகவான் நாரதனைநோக்கித் தேவர் வீணையிற் றொங்குகின்ற தொங்கலேது? இதுபுதிதாயிருக்கின்றதெனலும், அம்மாமுனிவர்நோக்கா ஐய! ருக்குமாங்கதபூபதியினதுபூந்தோட்டத்தின்பூமாலே யிஃதாம், நினக்கேதகுமென்றளித்தனர். முகிலூர்தி மாலையைவாங்கி நந்நந்தனத்து வீயினுஞ்சிறந்ததிஃதென் றிறும்பூதெய்திச் சில தேவரைநோக்கி நீங்கள் பாரணைந்துருக்குமாங்கதனுடைய வுய்யானத்தி னுறைவிதமலர்களை நாளுங்கொணர்வீரொன்றனை புரிய, அத்தேவ ரவ்வாணையைச் சுமந் தொழுகிவந்தனர். அச்சுதனர்ச்சனைக்கு மலர்கள் நாண்முறையிற்குறைவதுகண்டு, ருக்குமாங்கதன் காவலனைநோக்கிக் காவலரைக்கவருங் கள்வனைக் கண்டுபிடியுமென்று கண்டித்

தனன், அக்காக்காப்போ ரரசனுணையை மேற்கொண் டிரவினும், பகலினு மிமையாது சோலையைக்காத்தும், விமானத்தின்மேலிவர்ந்துபோகு மண் டனைக்கண்டிலர். காவலாளர் வருத்தமுற்று ராமவென்னு மிரண்டெழுத் தை யுச்சரிக்காதவரிருதயமெனவிருண்ட வோரிரவிலுலர்ந்த கத்தரிச்செடி முதலியவைகளைக் கொளுத்தி யாராமமுழுதும் விளக்கமாக்கிக் களவுசெய் குநரை நோக்கியிருந்தனர், புத்தேளிர் அஃதுணராது தினம்போ லந்தவழி யாய்த் தண்டலைவந் தலர்கொய்து விமானத்தைக் கடாவினர், வழுது ணஞ்செடியின் புகைகதுவியகுற்றத்தாற் றேவவிமானமேற்செல்ல வலி யின்றிநின்றது. சுவர்க்கத்தோர் தாந் தனியே செல்லவும் வலியின்றிப் புகையாற்றமக்கெய்திய வசையையுங் காயத்தையுநோக்கிநின்றனர். விடி யல்காண்டலு மக்காக்காவலாள ரம்மேலோரைக்கண் டவரிருகரமும் பி ன்னுறவிறுக்கிப் பிணித்துப் பறித்தமலருட னிருபனெதிர்கொணர்ந்து நிறுவினர். உருக்குமாங்கதன் அவ்வாதித்தரைக் கண்ணுற்றுக் கட்டவி ழ்த்து நீயிராரொன்றுவினவலும், உற்றபெற்றி யெல்லாவற்றையுங்கரக் காதுணர்த்தினர். புரவலர்பெருமா னப்புலவரைத்தொழுது ஐய! நீவிர் பொழில் காவலராலுற்ற குற்றத்தைப் பொறுத்தருளவேண்டுமென் றுபச ரித்து, நாளும் வந்து மலர்களைக்கொய்தேகலாம். எனதுயிரு நுமதேயெ ன்று வணங்கினன். விபுதர்பார்த்து மன்னர்மன்ன! சுடப்படு சிங்கச்செ டியின் றூமத்தாற்றிறலுந் தேசுமிழந்து மேற்செல்லவொண்ணு திருக்கின் றனம். ஏகாதசிவிரதமிருப்போரைக்கொண் டந்நோன்பா லவரெய்தும் பலத்திற் சிறிதுதவச் செய்தியேல் யாம் வானஞ்செல்வோமென்றனர். நரப தியதனைக்கேட்டு ஏகாதசிநோன்பு நோற்போ ரொருவரைக்கொணரும்படி யொற்றரையேவலு மவர்நாடி அரிதினத்தில் மாமியாரால் முனியப்பட்டு வ ருத்தமுற்றியாதையுமருந்தாதிருந்து மறுநாட்காலையிற்கணவனுரைக்கிணங் கிப்புற்கையருந்திய வுடையொலிப்பாளொருத்தியன்றியேகாதசிவிரதமிரு ந்தோ ரொருவருமில்லையென்று வந்தோதினர். புங்கவரதுகேட் டரிதின மென்றறியா துபவாசமுற்றுளாயினும் பலனடைந்தவளே. ஐயமில்லையெ ன்று களித்தி யவ்வண்ணத்தியினிடத்துச் சிறிதுபயன்பெற் றண்டரேகி னர். பின் பண்ணவ லாச்சரியமெய்தி விதிப்படி யேகாதசி விரதமிருந்தா லெய்தும்பயன்யாதோ? அந்நோன்பின்முறையை யருளுவார் யாரோ? எ ன்று சிந்திக்குங்காலை, கருணைகொண்டு, ஜனக, சனந்தன, சனத்குமார, சனச்சுசாசன ராங் கெழுந்தருளினர். வேந்த னவர்வருதலுணர்ந்து நகர்ப் புறம்பணைந் தம்மகாயோகிகளைப் பிரதட்சிணஞ்செய்து, தண்டமிட்டுக் கோயில்கொண்டேகி, ஆசனத்திலிருத்தி, அருச்சித்துவாய்புதைத்துநின்று, குசலமுரைத்து, அடிகள்! ஏகாதசிவிரதத்தின் மகிமையென்ன? அவ்விர தத்தை யனுஷ்டிக்கவேண்டிய விதமென்ன? மொழிந்தருளவேண்டுமென் று பிரார்த்தித்தனன். யோகிகளரசனைநோக்கா, மன்ன! ஸ்ரீ ஹரிவாசரத் தின்மாண் பொருவர்சொல்லிற் சுருங்குமே. வேதஞ்சொல்லிய தவ்

வேகாதசிவிரதமேயன்றி வேறொருநோன்பன்று; வீட்டுலகுபெறுவோர் களாலல்லாது மற்றயாவராலுமந்நோன் பாதரிக்கப்படமாட்டாது. நினதுகுலஞ்செய்த புண்ணியத்தா லேகாதசிவிரதத்தி லருத்தியுற்றனையென்றுவாழ்த்தி விரதத்தின்முறையை யுணர்த்திப்போயினர். பின்னரரசனமைச்சனை நோக்கி,நமதுநாட்டிலுள்ளோரெல்லாருந் தசமியிலொருபொழுதுண்டு, சந்தனம்,நறுமலர் அடைகாய்,மெல்லியர்மென்றோண்முதலியவைகளையுன்னாதேகாதசியிற் சூரியனெழுதற்குமுன்னெழுந்து புனிதநீராடித் தத்தம்வருணத்திற்குரிய நித்தியவிதிகளைமுடித்துக்கொண்டு,ஸ்ரீஹரிபாதோதகமன்றிநீரும்பருகாதுபவாசமிருந்து, ஆதிபகவனைத்தியானித்து வழிபாடுற்றுப்பாகவதர்களோடுகூடி ஸ்ரீஹரிசங்கீர்த்தனஞ்செய் தன்றிரவிற்கண்படாது,மறுநாளாகிய துவாதசியி லந்தணருக்கமுதளித்துத்தொண்டர்களுடன் பாரணைசெய்து,பின்புபுனல்பருகாமலும், கண்டுயிலாமலும், அரிகதாவமுதைப்பருகி யற்றைப்பகலைக்கழித்தல்வேண்டும்.உருவறியாவிளங்குழவிக்கும்,தெய்வத்தன்மையான ஆனுக்குமுண்ணீரு நல்கவொண்ணாதென்னின்,மற்றையோரைப் பற்றிப்பேசுவதெவன்? இத்தினைய தினவிரதத்தைத் தவிராது யாவரும் புரியும்படி முரசறைகவென்றறைந்தமந்திரியனைவிடுத்து, விதிப்படிதான் விரதமிருந்துவரலும், கடல்சூழ்ந்த ஞாலத்திலுள்ளோர் யாவரு மன்னனாணையை மேற்கொண்டு, பக்தியோடு நோன்புகொண்டாடினர். அரசனெப்படியோ வப்படியே பிரஜைகளுமென்றுசொல்லுஞ் சொற்பயனை ருக்குமாங்கதனாளிற்றான் கண்டனம். அக்காலை மு[illegible]நோன்பின் மாண்பாலவரவர்விழைந்தவற்றையடைந்து, வாழ்நாளிறுதியில் விபுதரெதிர்கொள்ள ஸ்ரீவைகுண்டமேவினர். யமபுரியெய்தினோ ரொருவருமில்லை, கிங்கரருயிர் கவருந்தொழிலைமறந்தனர். கூற்றுவன் உத்தியோகத்தையிழந்தவாண்மகனெனவும், நச்சுப்பற்றவிர்ந்த அரவமெனவுமடங்கித் தனதாதிபத்தியம் பெறுமாறு காணாதுவருந்தி,சத்தியலோகஞ்சார்ந்து, தாதாவைத்தாழ்ந் துருக்குமாங்கதனாற்றானரசிழந்த அரசனையொத்து மெலிவடைந்திருப்பதை யுணர்த்திக் குறையிரத்தலும், உலகீன்றோரருள்கொண்டு, சூழ்ந்து, தந்ததம் முட்டாமுமோகிக்கத்தக்ககட்டெழிலுள்ள வோர்மோகினியைச்சிருஷ்டித்துப்பெண்கொடியே! நீபூதலமுற்று ருக்குமாங்கதனையணைந்து, நினதுமொழியை யவன்றலைமேற்கொண்டு நடக்கும்படிசெய்து தினத்தினைய விரதத்தைப் பங்கப்படுத்தி வாடிபோடியென்றனர். அப்பிசாசு பாசக்கையன் கொண்டாடக் கடலாடையாள்வயின் வந்து நளனைச்சாரக் கண்ணுற்றிருந்த கலியைப்போல உத்தமனைக்கூட வமையநோக்கியிருந்தது. அவ்வேலை ருக்குமாங்கதன் நகர்ப்புறம் பங்காந்துவருமருணனுடையவாயிற் றேற்றுளி துளிக்கு மோர்பொழிலில் விருப்புற்றிருந்தனன். மோகினியஃதுணர்ந்து அந்திவந்தணுகுமெல்லை யத்தண்டலைவந்தோர்தருவின்கீழ் நாணமுற்றவள் போல முகங்கோட்டி நின்றனள். அவ்வாறு நின்ற வுயிர்பெற்ற வோவியம்போன்ற வுருவத்தாளை, கேட்டவளவிற் களிப்புநல்கும் வசனத்தாளை,

ஓர்நோக்காற் காமநோய்தந்து மற்றோர்நோக்கா லப்பிணியைத்தீர்க்குங்கண்ணுளே,நினைந்தபோதிலு மயிர்தூறுமதரத்தாளே, நாலும்படநாகமெனப்பொன்மணிவட்டவணியணிந்தபின்னலாளே,கவிச்சக்கரவர்த்தியாரது தெய்வக்கவியெனச் சிறிதுதெரிந்தும்தெரியாமலுங் கச்சணிந்து விளங்குங் கொம்மைக்குயத்தாளே,மலையருவியென வம்மலைமேற்றுலங்கு முத்தாரத்தாளே,தடத்தினின்றெழுந் திருமுகையேந்திய முளரிநாளமெனத்திகழு மயிரொழுக்கிளே,கொடியோனாகியமீன்கொடியோன்வீற்றிருந்துசோலோச்சுமல்குற்பீடத்தாளே, விழிக்குவிழாவாயினளே, நஞ்சமனைய வஞ்சமகளே, வஞ்சமோரா மன்னன்கண்டு, கரையெறி கடலென வறிவெறி காதல்கொண்டு, குழையோடலர்ந்தகொம்பாமென வத்தருவின்புடைநிற்கும் பெண்ணமுதம் பூமாதோ?புனமயிலோ? கொங்கைகொண்ட பூங்குயிலோ? பொற்கொடியோ? அமுதோ? அதன்சுவையோ?. அழகினழகோ? காமக்கனியோ? என்றவப்பயனோ? உயிரோ? கண்ணோ? என்னையாளவந்த பெண்ணோ?ஆரோவென்று மனமுருகிக்கிட்டிப் பெண்ணரசே! நினதுபெயரேது? ஊரேது? உறவேவர்? ஓதென்றேதலு மக்கள்விபெயருமூருமுறவுமறியேன், கங்கையாற்றின்கொழுங்கரையிற்கண்ணுவரென்றமுனியாச்சிரமத்திற் குழவிமுதற்றிருவலகுசேர்த்தல்,மெழுக்கிடல்முதலியகுற்றேவல்புரிந்திருந்தனென். அம்மாமுனியெனக்கொன்றும்புகலாதியோகத்திலமர்ந்துவிண்ணேகினர். அறியாப்பேதையானயான்மான்,மயில், குயில்,அன்னமுதலியவைகளோடு விளையாடியபடியேயிவட்சேர்ந்தனென்.இனிவிதியென்னை யெவன்செய்யுமோவென்று சொல்லித் தேம்பினள். காவல னச்சிறுக்கிசொற்கேட்டுப் பெண்ணிற்றிலகமே! துயருறேல். எனதாதிபத்தியமெல்லா நினதே. நான் நினது மனக்குறிப்பறிந் தேவல்புரிவேன், காமனும்ரதியும்போலக் களித்துவாழ்வோம் போதுதியெனலும், வஞ்சகி யம்மொழிக் கிணங்காதவள்போ லகறலுற்றனள். பூபாலன் அந்தோ அன்னமன்ன ளகல்வளே லெவ்வாறுய்வவேனென்று கரைந்து விரைந் தவள்வேணியைப்பற்றித் தொடர்ந்தனன். அத்தெரிவை புருவத்தைவளைத் தெரியெழநோக்கிக் கைம்மறித்துச் சினக்குறிப்புக்காட்டி,இறைவ!நற்குடியிற்பிறந்த நினக்கிஃதழகன்று.சடையைவிடுதி, நான் கங்காதீரஞ்செல்கின்றனெனென்றனள். வேந்தன்மானேகேள், விலங்குகள் சஞ்சரிக்கும் வனத்திறூடு நின்னைத் தமியளாய்விடுவது தருமமன்று, அன்றியுங் காமனென்பவனுடைய வலியைக்கடக்க வேறுவகையறியேன். நின்னிதழ்த்தந் தென்னுயிரைத் தருவாயென்றிரந்தனன் கூடலைவேண்டிவந்த தீயாளிரங்கிப் புரவலன்றோளைத் தழுவலும், கொற்றவன்மகிழ்ந்து புல்லி யவண்முகத்தைக்காட்டி யப்போதுதித்த சந்திரனைப் பழித்தும், அவ்வதனங்குளிர்ந்த சந்திரனென்று வந்தசக்கரவாகத்தைப் பயோதரத்தைக்காட்டி யிகழ்ந்தும், அணிகொண்டவள ரல்கு லாம்படநாகமென வோடிவந்தமயிலைச் சாயலைக்காட்டி வெருட்டியும், நூபுரவொலியைக்கேட்டுத் தன்னினமெனக்கருதிப் போந்தவன்னத்தை நடையைக்

காட்டி யிழிவுபடுத்தியு மவளைக்கொண்டாடி, விளையாடி, மனைக்கட்கொண்டேகிப் பாயலணைந்து, சிலம்புகல்லென்று சிலம்ப, கலன்கள் கலகலவென்றொலிக்க, திண்புயங்கொண்ட தார்வண்டும் புரிகுழல்வண்டும் பொம்மென்றெழுந்துபுதுமணம்புணரவிளநலநுகருங்காலை, வஞ்சகிகரங்களா லரசரேற்றையணைத்துக் கொவ்வையிதழ்தந்து முத்தமிட்டு வேந்தர்வேந்தே! என்றுமென்சொல்வழி நிற்கின்றனெனென் றுணைசொல்லுதியேனினதுகருத்துக்கிசைந்திருப்பேன். இல்லாவிடின் விடைதந்தருளுதி; செல்லுகின்றனெனென்றனள். பார்த்திப னவ்வா றுறுதிமொழிதந்து பெருங்களிச்சலதியின்மூழ்கிவைகுறுங்காலை, சில்பகல்கழிந்தன,பின்பொரிரவிற் கண்படணையிற் றுயிலினைவிளைப்பாள் தாம்பூலங்கொடுத்தலும், பூபால னதைவாங்கினன், அக்காலை யமைச்சராணையினால் நாளைத்தினந் தசமியாகலா னேகவாரபோசனம்; மறுநாளேகாதசியிலுபவாசம்,அரிதரிசனம்,நாமசங்கீர்த்தனம்; துவாதசியிற் பாரணைசெய்யவேண்டுமெனக் கோடைமேகவசனியெனவள்ளுவன்கடையாமத்தில்முரசறைந்தனன். அவ்வொலிசெவியிற்சார்தலு மனுவழிவந்தோ னவ்வடைகாயையெறிந்து, சேக்கையினின்று மெழுந்தனன்,மோகினியுமுடனெழுந் தென்னுயிரன்னநாதனே!எவணேகுகின்றனை?நான் கூடலை விருமபுகின்றனெனென,ருக்குமாங்கதன்நோக்கிப் பெண்ணரசே! விரததின மும்மைவரையினு நின்னோடு கிளவியுங்கிளத்தேன் விடியலாயிற்று, நீராடச் சரயுமாநதிக்குச் செல்லுகின்றனெனென்றனன். விரதபங்கஞ்செய்வதேகருமமாக்கொடுவந்தயத்நீத்தொழிலாள் அரச! என்னைக்கூடாது செல்லக்கூடாது. நான்விதிக்கும் பரிசெல்லாஞ்செய்கின்றேனென்று சொன்னமொழியை நினைவிற்கொள்ளவேண்டும். தாம்பூலதாரணைசெய்யவேண்டுமெனலு முத்தமன், பெண்ணே! எனது கண்ணை வேண்டினு மீவேன். ஆவியைக்கேட்கினு மின்னே நினதே. விரதத்துக்கடாத வொன்றையு மொழிந்திடேல், நீ மற்றெதுமொழியினும் புரிவேனென்று முன்னையினு மதிகமுமிரந்தனன்,' அம்மோகினி கொற்றவனைநோக்கி விரதபங்கமான விடயந்தவிர நான்சொல்வ தெவ்விதக் கொடியதாயினு மியற்றுவேனென் றுறுதிமொழி சொல்கெனச் சொல்லிப் பெற்றுக்கொண்டு, தீயினுஞ் சிறந்தகொடியாள் ஏவமும்பாவமும் பாராதறமுமெண்ணா தரசனைநோக்கிப் பெரும! மைந்தனுய தருமாங்கதனையின்னலின்றி யீன்றாள்பிடித்துக்கொள்ள, நீ சுரிகைகொண்டு கழுத்தரிந்து தலையை யென்னிடங்கொடுத்தியே னின்றுநோன்புக்கீனமானதொன்றுமியற்றேன். இதைத்தவிர்த்து வேறொன் றுவினவுதியென் னுதியேலேகாதசிவிரதத்தைவிடுதியென்றோதுவதேயன்றி வேறொன் றுமொழியேனென் றிறுத்தனள். வேந்தன்வருந்தித் தனது மனையாளையும, புதல்வனையுமழைத்துக் கள்விக்குத் தான்கொடுத்த வாய்மையையும், இப்போ தவள்செயலையுமுரைத்தனன். மைந்தனுகிய தருமாங்கதன் பிதாவைத் தொழுது, சுவாமி! துன்புறவேண்டா, பேய் நமது, நாய் நமது, கழுகு நமது, சுடுகாடுநமது,

சுற்றத்தார் நமதென வழியுஞ்சரீரத்தை நான் மதிப்பேனோ? இப்பொழுதே யென்றலையையரிந் திவ்வனைக்குக்கொடுத்து விரதத்தை விடாதருளென்றலும், உருக்குமாங்கதன் தருமாங்கதன் கால்களை யவனையீன்றாள் தனதுகுறங்கினிடுக்கிக் கையாற் கரங்களைப்பற்றிக்கொள்ளத் தலையைப்பிடித்துக் கூர்ங்கருவிகொண்டுகழுத்தரியமுயன்றனன், பிரமருத்திரேந்திராதியமரரெல்லாரு மிறும்பூதெய்தியர்தரம்புகுந்துநின்று உத்தம! வதைபுரியற்க; நின்னிற் சிறந்தவரொருவருமில்லை. இது நினதுசெயலை யுலகறிவான் யாம்சூழ்ந்தவினையமேயன்றிவேறென்றன்று. தருமாங்கதன் ஊறின்றியெழுகவென்றருளினர். அரச னவ்வும்பரைத்தொழுதுதுதித்துக் காதலனையணைத்து, ஐய! நின்னையென்பொருட்டுதவினையாகலாற்கடவுளர்களைச்சேவிக்கப்பெற்றனெனென்று களித்தனன். அம்மோகினிசரோருகரைவணங்கித்தேவா! எனக்குறுதியென்னென்றனள். சொன்மகள்கொழுநர் துவாதசியிற்பகணித்திரை செய்வனேலவனேகாதசி விரதத்தாலுறும்பேற்றிற்பதிறறிலொருகூறுநீயடைந்து வாழ்வாயென்றருளிப்போயினர். புவிக்குத் தூமகேது வன்னமோகினியு மகன்றனள். ருக்குமாங்கதன் பின் னெடுங்கால மிந்திரனென வீற்றிருந்து ஸ்ரீபரவாசுதேவன்றிருவடியி லமர்ந்தனன். துடியிடை! தாரகவாச்சியர் தன்னுடைச்சோதிக்கெழுந்தருளியவற்றைஞான் றென்றிற்று றுயிர்களெல்லாம்வினைதவிர்ந் துத்தமலோகமடைந்தன. உருக்குமாங்கதனென்ற புண்ணியனால் ஸ்ரீஹரிதினத்தின்மகிமையயறிந்து விரதமிருத்தலாற் சீவகோடிகளென்றுமுலவா விண்பெதஞ் சாருகின்றனவென்று மொழிந்திருந்தனர். பார்வதி யொப்பிலாவுகப்பெய்தி, நீலகண்டரைத்தொழுது சுவாமி! அயோத்தியில் வேறு தீர்த்தங்கள் அற்புதச்செயல்களுள்ளனவே லவற்றையெல்லா மோதியருளவேண்டுமெனப் பரமசிவன் அம்பிகையை நோக்கா, வார்முலை! கேட்டி, முன்னர் நாமோதிய சூரியகுண்டத்துக்குமேற்றிசையில் துர்க்காகுண்டமும், அதற்குச் சமீபத்திலுள்ள நாகர்கிரமமென்பதில் நாகர்குண்டமும், நாராயணமென்பதில் நாராயணகுண்டமுமிருக்கின்றன. அவைகளினீராடி வில்வஹரியைச்சேவிக்கவேண்டும். வில்வனென்றகந்தருவனாற்பூசிக்கப்பட்டமையால் அப்பெருமானார்வில்வஹரியெனலாயினர். அப்போதுசங்கரிசம்புவைவணங்கிவில்வன்ஹரியைப் பூசித்தகாரணமென்ன? அருளுகவென வறைவாராயினர். மானே! கேள்வில்வனென்றவோர்காந்தருவன் தன்னிலுமுருவமிக்காரொருவருமில்லையென்று செருக்குக்கொண்டுமெய்யும்மிகையென்றெழுகுமுனிவர்களையுமற்றையோர்களையுமவரவர்நடப்பதுபோலநடந்து, பேசுவதுபோலப்பேசிப் பலவிதமாய்ப்பழித் தசிபுரிந் தவமானஞ்செய் ததனாற்களிகொண்டுவந்தனன். அக்காலைநெறியிற்செல்லும் பகவான்நாரதமாமுனியையவ்வில்வன்கண் டெருமைக்கடாவெனக் கனைத்துக்கொண்டோடிப்பரிகாசஞ்செய்தனன். அம்மாமுனிவர்முனிந்து வில்வா! எருமைப்போத்துப்போற் கனைத்தமையா லவ்வுருவேகொள்வாயென்றுசபித்தலும், கந்தருவனடுங்கிப்

பகவான்நாரதரைச்சேவித்துச் சுவாமி! பொறுத்தருளவேண்டுமென்றுபிரார்த்தித்தனன். மகருஷியிரக்கங்கொண்டுவில்வா! நான்சபித்தபின் யென்செயற்பாற்று; நீசாகேதநன்னிச்சுருதிமூர்த்தி இராமாவதாரஞ்செய்யுங்காறுங் காத்திருந்தந்நாதரைச் சேவிப்பாயாயின்முன்போலநல்யாக்கைபெறுவாயென்றனர். கந்தருவன் முனிவரைத்தொழுது, பகவானே! நானயோத்திசெல்லுமளவுமேதியினுருவென்னையணையாதிருக்கும்படி யருள்புரியவேண்டுமென்றுபிரார்த்தித்தலு முனிவர் நன்றென்றுபோயினர். வில்வன்கடிதில்விமலை சார்ந்துசரயுவின்மூழ்கி யந்நாராயணகுண்டத்துக்கணித்தாய் ஸ்ரீஹரிப்பிரதிட்டைசெய் தாராதித்தனன். பின்பு மகருஷி சாபத்தா லவன் காலனூர்தியென வுருவங்கொண்டு, நாடோறும் வசிட்டையினீராடி, ஸ்ரீஹரியைப் பிரதட்சிணஞ்செய்து, முன்கா லிரண்டையுமடக்கிக் கொம்புடைத்தலை புவியிற்றோய நமக்கரித்து, காட்டின்மேய்ந்துநீர்பருகி, ஹரிசந்நிதியில்வந்து மேகம் பூமியிற்படிந்ததெனப் படிந்துவந்தனன். சிலகாலங்கழிந்தபின்னர் ஞானநாயகர் திருவவதாரஞ்செய்தருளினர். விலவன் பிறப்பிலியாரது திருவவதாரச்செயலைக்கேட் டவ்வுருத்தவிர்ந்து நல்லுருவணுகிச் சுவாமியைச்சேவித்துத் தன்னுலகு புகுந்தனன்.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளே சரணம்.

---

## பதினேழாமத்தியாயம்.

அரம்பையெனக் கடகரியின் கையெனவிளங்குங் குறங்குடைக்குயிலே!கேள், அந்நாராயணகுண்டத்துக்குக் கீழ்ப்புறத்தில் வான்மீகி தீர்த்தமிருக்கின்றது. முன்னொருஞான்று டிண்டியென்ற வேடனொருவன் இமயமலையின் சாரலினின்று பலவிலங்குகளைத் தொடர்ந்தபடியே சரயுதீரஞ்சார்ந்தாங்குள்ளமகருஷிகளையும், இருமறைக்கிழவர்களையும்பார்த் தானந்தமெய்தி உயிர்க்கொலையென்னுந்தீத்தொழிலைவிட்டுத்தவஞ்செய்வான்கருதியம்மகருஷிதீர்த்தத்துக் கணித்திருந்து தாரகமந்திரத்தை யுச்சரித்து நெடும்பகலிருந்தனன். அவன்யாக்கைபுறந்தோன்றாதுபுற்றும்,செடிகளுமூடிக் கொண்டன.பின்பு இரகுநாதர்திருவவதாரஞ்செய்துதோழர்களோடுகூடிச் சரயுதீரம்வந் தப்புற்றின்புடை யோர்சோலாற் குத்தினர், .குத்தலும் டிண்டியோகம்விட்டுப் புற்றைத் தள்ளியெழுந்து புனிற்றிளங்கருஞாயிறெனவிளங்கு மிராமசந்திரரைத் தொழுது அருள்நாயக! ஞானநாயக! முற்பிறப்பின்றவத்தாற் றேவர் திருவடியைச் சேவிக்கப்பெற்றனென். இனி யிந்நிலவுலகில் யான்வேண்டுவதொன்றில்லை. வானுலகு செல்லுகின்றனென். விடைதந்தருளுகவெனப் பிரார்த்தித்துத் தேவவுடல்பெற்று விமானமேறிச் சென்றனன். ரமணீ! சரயுதீரத்தின் மகிமையை யின்னுங்கேள். டிண்டி தவம்புரிந்தவிடனுக்குக் குணதிசையில் பகவான் ரிஷ்ய் சிருங்கர் சாந்தையெனும் பத்தினியுடன் தவஞ்செய்கின்றனர், இராமகங்கை

யினீராடி யவரைச்சேவித்தால் ஞானமுண்டாகும், அம்மாமுனிவ ராச்சிர மத்துக்கணித்திற்புண்ணியஹரிகுண்டமொன்றுளது. அதனிடைநீராடவே ண்டும்,அதற்குச்சிறிதுதூரத்திற் புலவர்போற்று நந்திக்கிராமமிருக்கின்றது. தேவி! பிறவாயாக்கைப்பெரியோர் சிற்றன்னைசொற்கொண்டு வனநண்ணிய பின்,தேவர்தொழும்பரதாழ்வான் கேகயத்தினின்றும்வந்து சித்திரகூடஞ் சார்ந்து, தாசரதியாரைச்சேவித்து மராடியைப் பெற்றுவந் தந்நந்திக்கிராம த்தில் நவமணியால் மண்டபமிருமித்துச்சிங்கஞ்சுமந்தமணியணைமிசைவை த்து, பட்டாபிடேகஞ்செய்து, பாரளந்தபாதத்தைப் பரிக்குமரவடியே! பா ரியைக்காத்தருள்வாயென்றுதொழுது,அரசியல்நடத்தச் சுமந்திரனையேவி ச்சுவாமியைப்போலச் சடாதரராய், மரவுரியாடையராய்,நீருருக்கண்ணரா ய்த் தாரகமான இராமநாமம்பன்னலோடு, இரகுநாதர்போதுங்காலமாகிய பதினன்குவருடங்களிற்கழிந்தநாளையுமிருந்தநாளையுமெண்ணுமவராய்த்தெ ன்றிசைநோக்கியிருந்தனர், ஆகலா னதனையொக்கும் புண்ணியஸ்தல மற் றொன்றில்லை. அக்கிராமத்தி லொருவனொருபகல்வசிப்பனேல், ஆயிரமனு வந்தரங்காசியிலும், பன்னிரண்டு மாகமாசம் பிரயாகையிலும் வசித்தலி னெய்தும்பயனுறுவன். ஆங்குப்பரதகுண்டம், சத்துருக்கினகுண்டம்,கயா குண்டமென்ற தீர்த்தங்களிருக்கின்றன. அவற்றினீராடி நந்தேவனோடு பர தாழ்வானைச் சேவிக்கவேண்டும்; இரகுநாதர் இராவணசங்காரஞ்செய்து நந்திக்கிராமமடைந்து, சடாசோதனைசெய்துகொண்டு, மஞ்சனமாடிய தீர்த்தமொன்று சடாகுண்டமென்ற வபிதானத்துடனிருக்கின்றது. அதிற் புனலாடி இராமசந்திரனைச் சேவிக்கவேண்டும். அவ்வாவிக்குக் குணதி சையிற் பிசாசவிமோசன தீர்த்தமும், மானசமென்றொரு தீர்த்தமுமிரு க்கின்றன. அவற்றினீராடி யந்நந்திக்கிராமத்தைக் காத்துக்கொண் டப்பிசாசவாவிக் கருகிலிருக்கின்ற காளியைப்போற்றல்வேண்டும். அக்கா ளியினுறையுளுக்குத் தென்புடையில் மாண்டவியென்னு மகருஷியாச்சிர மத்தினின்றுந் தோன்றிய தமஸாநதி பெருகிக்கொண்டிருக்கின்றது. அ தனிருகரையிலும் வண்டினம்பாட, மயில்களாட, குயில்கள்கூவ, தண் டலைசெறிந்து, கௌதமர் சியவனர்முதலிய மகருஷிகளாச்சிரமங்களனேரு ங்கியிருக்கின்றன. அதன்கணீராடிப் பிதிரர் தருப்பணஞ்செய்யவேண்டும். அந்நதிக்கு வடபுறத்தும், அயோத்திக்கணித்தும், பைரவனச்சாகேதத் தைக் காத்துக்கொண்டிருக்கின்றனன். அவனுக் கயலில் ரமணஸ்தா னமொன்றுண்டு. அதற்குமேலைத்திசையிற் கிருதாசிதீர்த்தமிருக்கின் றது. அதன்மூலனைபக்கேட்டி, இமயகிரியின்சாரலில் வாசுவென்றீ மக ருஷி தவஞ்செய்துகொண்டிருந்தனன். அவன் நோன்பைக்கெடுப்பான் இந்திரன் கிருதாசியென்ற அப்சரசைவிடுத்தலு மவ ளம்மாமுனிபக்கற் சென் றவன்வசமாகும் வகையெல்லாம் புரிந்தனள். புலப்பகைவென்ற முனியவனைநோக்கா, ஏடி! பெண்பேயே! தவச்செயலுடைய வென்னி டத்தவச்செயலுடைய நீ யாது கருதிவந்தனை? பயோதரத்தை யிறைச்

சிதுற்ற மேடெனவும், பருத்த சிலந்தியெனவும், அல்குலை யுள்ளே சிவந்தி
ருத்தலாலும், நீர்வடிதலாலும், நாற்றமிகுதலாலும் புண்ணெனவும், காமுகர்
தங்கள் காமத்தைப்போக்கும்பெருவழியெனவும், கொண்டொழுகுநான் நி
ன்னையோர்பொருளாய் மதிப்பெனோ? ஒருயோனியையிச்சித் தங்கமெலாம்
யோனியடைந்து பழியெய்தியுங் காமத்தைநீக்காது, புலோமிசை புலர்வ
ளை லவளதுசிலம்படியில்வீழ்ந்து, தோளிலுதையுண்டு, நாணமில்லாதுமீ
ண்டும் பற்காட்டி யிரந்துநிற்குந்தானென வென்னையுங்கருதி நின்னையேவி
னனே.அழகிதழகிதென் றுவெருட்டினன், கிருதாசிபிழைத்தோமென்றுத
ன்னுலகுசெல்லாமற் சிறிதகன்று, யாவருள்ளினு முறையுமாரனென்பவனி
ல்லையோ? அவன்வலிதா னம்மாமுனியினிடந்துச்செல்லவில்லையோ? என்
னைக்கண்டு நெஞ்சிளகாத வம்முனி பெருமுனியே. "மாதமொழில்கண்டு ம
னமகிழாதபே ரில்லை"என்னும் பழமொழி யின்றோடு தவிர்ந்ததுபோலும்
இம்முனியை வெற்றிகொள்ளா திறையவன்பாற்சேற னன்றன்றென்றுன்
னியருந்தவன்வரு மமையநோக்கியவனோர்தடாகத்தின்கூலத்திலிருந்தன
ள். சிறிதுகடிகைகழிந்தபினந்நதியிற்சந்திசெய்வானம்மாமுனியாங்குவரு
தலைக்கிருதாசிகண்டு வாளைவாங்கிப் பொற்சன்னம்விரவிய தொத்துத்தேம
ல்பரந்து கண்டவர் கண்ணைக்கவரு நகில்புடைதெரியவாங்கி,உத்தராசங்கம்
போர்த்து,இளவாழைத்தண்டுபோலவிளங்குமூருதோன்றித்தோன்றிமறை
யும்படியலையாற் கலைவிலகப்புனலிலுட்கார்ந்து, மாசுபோக்குவாள்போற்சுச்
சைக்கசக்கிக்கொண்டிருந்தனள். அவ்வாசுமுனிவந் தவ்வாவியிலிறங்கிப் பு
னலாடி நித்தியவிதிகளை முடிக்குங்காலை, அப்பேதைதுறந்தோனைநோக்கிச்
சுவாமி! தேவரீரைப்பிரியமனமிலா திருக்கின்றனனென்று தொழுதனள்.
தாபதன் சினந்தவளைநோக்கி நாயினுங் கடையாளே! புலவர்கோமான் பு
ணர்ப்பினால் வந்தனையென்று முன்னே நின்னை முனியாது விடுத்தனென்
அஃதுணராதுநீநான்செய்கடனுற்றும் வேலை யென்னோடுரையாடத் துணி
ந்தமையி னீயின்னே யாருஞ் சீச்சியென்ன நீசரூபங் கொள்வாயென்ற
னன். அவ்வேழைநடுங்கி யுயர்ந்தோனைவணங்கிச் சுவாமி! பொறுத்தருள
வேண்டுமென்றுபிரார்த்தித்தனள். அருளுடைய வருந்தவனோக்கிக் கொடி
யவளே! அயோத்திநண்ணி ரமணஸ்தானத்துக்குப் பாங்க ரோருத்தம
தீர்த்தமிருக்கின்றது. அதன்கண்மூழ்கி வேதவேதாந்தசாரரான பகவானு
டைய ஜனனஸ்தானத்தைத் தரிசிப்பாயாயிற் பண்டைவடிவம் பெறுவா
யென் றருளினன். கிருதாசி யந்நீசரூபத்தோடு விரைவில் விமலையனை
ந்து, அத்தீர்த்தத்தின்மூழ்கி திருவவதாரவிடனைச்சேவித்து முன்னிலு மதி
கவழகு பெற்றனளாகலின்;அது கிருதாசிதீர்த்தமெனலாயிற்று. அத்தடா
கத்தில் மகளிராயினு மைந்தராயினு மூழ்குவரோ லப்பிறப்பிலேயே வேள்வி
ழையு மழகுபெறுவர். அத்தீர்த்தத்துக்கு மேற்றிசையிற் சிறிதுசேய்மையி
ற் சரயுவும்,கர்க்கரமுங்கலக்குஞ் சங்கமமுளதாகலி னதனினீராடிப் பிதிர்
களை யாராதிக்கவேண்டும். அச்சங்கமத்தின் பக்கற் சம்புவென்றொரு தீர்த்

தமிருக்கின்றது. அதன் மாண்பைக்கேள், தேவசர்மாவென்றொரு வேதியன் தவத்தாற் சுட்ட பொன்போன்ற மேனியனுயினு முற்பிறப்பின் றீவினையாற் பிணிகொண்டலந்துவந் தச்சம்புதீர்த்தத்தினீராடி, அதன்கரையிலோ ராச்சிரமமியற்றிக்கொண்டு சிறிதுநாள் வசித்தலு மந்நோய்தீர்ந்து சூரியன்போலப் பொலிந்தனன். அச்சம்பு தீர்த்தத்துக் கணித்தாய் அகஸ்திய சரசொன்றுள்ளது. முன்னொ ளக்கும்பயோனிவந்து அயோத்தியைச்சேவித் தகலவுளமிலா தோர்சரசும்,பன்னசாலையுமுண்டாக்கி வசித்தனராகலி னத்தீர்த்தத்தின்மூழ்கி யவ்வாச்சிரமத்தைவலம்வந்து சேவித்தால் நமதுபரம்பொருளையறியு ஞானமுண்டாகும். அக்குறுமுனியாச்சிரமத்துக் கணித்திற்பராசரமுனியாச்சிரமமும், அநந்த ஸ்ரீகுண்டமும், மகாலட்சுமி சந்நிதியுஞ் சொப்பனேசுவரியென்ற தேவிசந்நிதியுமிருக்கின்றன அத்தீர்த்தத்தின்மூழ்கிப் பெரியபிராட்டியாரைச் சேவித்துச் சுமங்கலிகளுக்காடையாபரண மொருவ னல்குவனே லொப்பிலாச்செல்வ மெய்துவன். அச்சொப்பனேசுவரியைப் பூசித்து வணங்குவனே லவனறிய விரும்புமையப்பொருளை யத்தேவிகனுவி லுணர்த்துவள், அத்தேவி ஸ்தானத்துக்குக் கீட்டிசையிற் குடிலநதி கலக்கும் வரசிரோதசுவென்கின்ற தடாகமொன்றிருக்கின்றது. அதில் ஸ்நானதான தருப்பணஞ்செய்யவேண்டும் அத்தடாகத்துக் கணித்தான சரயுவின் கரையிற் குப்ஜாதீர்த்தமொன் றிருக்கின்றது. அதன் மகிமையைச் சாற்றுகின்றனெனென்று தொடங்கினர்.

ஸ்ரீராமதாசர்கள்திருவடிகளேசரணம்.

---

## பதினெட்டாமத்தியாயம்.

மதியஞ்சூடியபவளக்கடிகைகிளைத்தசெம்முளரியெனத்திகழடியோய்! சம்பகமென்றொருபட்டணத்திற் காவலனெனப் பெயர்பெற்ற வேதியன் கலைகளுணர்ந்தவைகூறுநல்லொழுக்கமுடையானுயிருந்தனன். அவன்றன்னிடத்துச் சாத்திரம்படித்துவந்த கண்டுவனென்பவனுடையசெவ்விகண்டு, மனமுவந்து, தனதுசெல்வப்புதல்வியைநீருடனவனுக்குநல்கினன். அம்மாணுக்கன்மணம்புரிந்துகொண்டு வாழுநாளிற் பார்ப்பினி கர்ப்பிணியாயெட்டுக்கோணலோ டோர்சிசுவையுயிர்த்தனள். அவ்விளங்குழவிவளர்ந்து பருவமடைந்துமுப்புரிநூலணிந்துகொண்டு யமுனைதீரஞ்சேர்ந் திந்தியங்களை யடக்கித்தவம்புரிகையில், அக்காலை அயோத்தியில் வீற்றிருந்தமாந்தாதாவென்ற மன்னனுக்குப்பல பெண்கள் பிறந்திருந்தார்கள். அவர்களெல்லாரும் யமுனைசார்ந்து புனல்குடைந்து கரைசாரும்வேலையந்நதிதீரத்திற் சூரியன்போன்றொளிவிட்டுநோற்குமஷ்ட வக்கிரனைப்பார்த்துக்காதலித்துக்கிட்டிவணங்கிச் சுவாமி! எங்களெல்லோரையுமணத்திரென்று வலியவரித்துநின்றனர். தவத்தோனதற்கிணங்கி மகிழ்ந்தம்பெணவொளிருங்கண்ணீர்! அதோருத்தியானத்திலிருக்கின்ற வாச்சிரமத்துக்கேகலாம். போதுவீரென்

ருசனத்தினின்று மெழுந்தனன். அத்தோகையெல்லாரும் அஷ்டகோ
ணத்தைநோக்கி நகைசெய்திகழ்ந்து மாமுனிவரே! நீர் வீற்றிருந்தமையா
லுமது கோணலையறியாதுவரித்தனம். இப்போது யாங்களொல்லேம். அ
டிகள் கோணலுக்குத்தக்க கூனியொருத்தியை நாடிக்கொண்மினென்று
பரிகாசமா யுரைத்தேகினர். அஷ்டவக்கிரன் முனிந்து மாதர்களை நோக்
கா மங்கையர்களே! இன்னே நீவிர் கூனிகளாகுகவென்று சபித்தனன்.
பூமகளினுஞ்சிறந்தவழகுடைய வம்மாதர் கூனலடைந்து தந்தாதைமாட்ட
ணுகி யுற்றபெற்றியுரைத்துப் பெற்ற கூனலைக்காட்டி யேங்கினர். தராபதி
மறுகித் தேறிப் புதல்வியருடன்வந்து சரயுமாநதிக் கரையிலிருக்கின்ற
அநாதியான வோர் தீர்த்தத்திற் புனலாடச்செய்தனன். அம்மடந்தையர்
மூழ்கி யெழலுங் கூனிமிர்ந்தழகுவாய்த் தனராசலி னஃது குப்ஜா தீர்த்த
மெனலாயிற்று. அதனினீராடு மவர்க்கங்கபங்கமென்றுமுளதாகாது. அக்
குடிலநதிக் கீசானதிசையில் மகஸ்தானமென்றோர் ஸ்தலமிருக்கின்றது.
தசரதசக்கரவர்த்தியா ரவ்விடத்திற் பலவேள்விகள்செய்தனர். அம்மகஸ்
தானத்துக் கெதிரில் இராமரேகையென்றொரு தீர்த்தமுளது. அதன்கட்
புனல்குடைந்து தானம், தருப்பணம், மறையவர் பூசை முதலானவையுஞ்
செய்யவேண்டும். ஸ்ரீராமநவமியி லிராமரேகையினீராடித் திருவவதாரத
லத்தைச்சேவிப்பனேலவனூறுமாக மாதம்பிரயாகையிற்றீர்த்தமாடியபேற
டைவன். ஆடுகின்ற மயிலினு மழகியவன்னமே! யாண்டுதோறும் ஸ்ரீராம
நவமியிற் சரயுவிற்றீர்த்தமாடிக் கரதாளம்புடையாநின்று இராமநாம சங்கீர்
த்தனஞ்செய்துகொண்டு ஸ்ரீஅயோத்தியைப் பிரதட்சிணஞ்செய்து, ஜன
னஸ்தானத்தைச்சேவிக்காதவர் ஈரேழுலகிலறிந்த மேலோரிலொருவருள
ரெனச்சொல்லேம். ரமணீ! சாகரங்களிற் சிறந்தது பாற்கடலே; நதிகளி
லுயர்ந்தன பகவான்பாதோதகமும், இராமகங்கையுமே; வனங்களிற் சிற
ந்தது நைம்மிசாரண்ணியமே; நாடுகளின் மேன்மைபெற்றது கோசலநா
டே; நகரங்களின் மேன்மைபெற்றவை நினைத்தவளவின் முத்தியளிக்கும்
அயோத்தியா, மதுரா, மாயா, காசி, காஞ்சி, அவந்திகா, துவாரகாவென்ற
புரிகளே; அவ்வேழினு முதன்மைபெற்ற தச்சாகேத க்ஷேத்திரமே; முனி
வர்களிற்சிறந்தவர் இராமகாதைசொன்ன வான்மீகியாரே சாத்திரங்களிற்
சிறந்தவை வேதங்களே; அவ்வேதங்களிற் சிறந்தது சாமமே; இதிகாசங்க
ளிலுயர்ந்தது சிறையிருந்தாளேற்றஞ் சொல்வதாகிய இராமாயணமே; மூ
வாறுபுராணங்களிற் சிறந்தவை சாத்துவிகபுராண மோராறுமே; அவ்வாற
னுட்சிறந்தது தத்துவஞ்சொல்லும் விஷ்ணுபுராணமே; விரதங்களிற்சிறந்
தது ஏகாதசியே; தானங்களிலுத்தமமானது அன்னதானமே; நாமங்களிற்
சிறந்தது எம்மனோர்க்குந் தாரகமான இராமநாமமே; பத்தியிற் சிறந்தது
இராமபத்தியே; அவ்வாறு ஸ்தலபுராணங்களிற் சிறந்த ஸ்ரீ அயோத்தியின்
இம்மான்மியத்தைப் பத்தின்மையோடு வினவியநின்பொருட்டு மொழிந்து,
நின்னுடைய கைப்பற்றிய வற்றைஞான்றினு மிற்றைப்பொழுது பெரிது

வந்தேமென்றருளி, ஸ்ரீராம, ராம, ராமாவென் றுச்சரித்திருந்தனர், அக்காலைச் சங்கரபகவானுடைய சந்நிதியிலிருந்து புராணங்கேட்டமுற்றத் துறந்த மாமுனிவர்களெல்லாரு மெழுந்து சம்புவைவலம்வந்து, தண்டமிட்டுக்கைகூப்பிநின்று தேவதேவ ! சாகேதமான்மியத்தைக்கேட்டு, நிகரில்லாமகிழ்வெய்துகின்றனெம். தாரகமந்திரத்தை யுச்சரித்து இராமபிரானைத்தியானிக்குநும்மையன்றி,அம்மந்திரமதுரத்தையுணர்ந்தவரும், அந்நாதா சரிதையைச்செப்ப வல்லவரு மற்றொருவர் யாருளர்? காசி க்ஷேத்திரத்திலிறக்குமவர்கள் செவியிலிராம நாமத்தையோதி வீடருளுமாபோ லிரந்தவெங்கட்கயோத்தியின் மகிமையையருளி யாநந்தமென்னும் வீட்டை யருளிய கருணைக்கடலே ! என்று துதித்துத் தொழுது தத்தம் பன்னசாலை சாரவேகினர். புராணஞ்சொன்ன ஐயர், சிரவணஞ்செய்த தேவியார் உளமடங்கா வுவப்பெய்தித் தமது திருவடியைத்தொழுதுமருங்குவீற்றிருப்ப, பிரமதகணங்களுங் கணநாதனு மேவல்புரிந்துநிற்ப, தும்புருநாரதரிசை பாட, இந்திரன்முதலிய விண்ணவர்கள் சேவிப்பக் கடைவிழிவழிக்கருணையா றொழுகவிட்டு வீற்றிராநின்றனர்.

## அயோத்திமாநகரமான்மியம்.

முற்றுப்பெற்றது

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளேசரணம்.

MAH MAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS 41